
## கருணை இல்லம் கோகுலம்

ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி, நல்வாழ்வு, சிறந்த எதிர்காலம் ஏற்படுத்திக்கொடுக்கும் கருணை இல்லம் கோகுலம், பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்கள் திருமண நாள், அன்புக்குரியவர்களின் நினைவு தினம் போன்ற எந்தவொரு விசேட நிகழ்வுகளுக்காகவும் இச்சிறியோரின் ஒரு நாளுக்கான பராமரிப்புச் செலவு தொகை 65,000 ரூபாவை வழங்கி உதவலாம்.



**நிதியை வைப்பிலிட வங்கி விபரம்:**
Commercial Bank A/C No : 1050669901 Office : Sri Sri Radhakirshna Temple.
A/C Name :- ISKCON,Shitf Code CCEYLKLX No : 188, Newchetty Street, Colombo-13
Gokulam No : 607 A, Negombo Road Mobola, Wattala. Phone : 0112433325 , Email: iskcon@slt.lk



# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2023 ஜுலை 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை | July 02 Sunday, 2023

24 பக்கங்கள் | 100/-

வரு.75 இல. 26

www.vaaramanjari.lk








**03** வலுவான பா.ஜ.க. அரசை தோற்கடிக்க விரிவான வலை பின்னும் இந்திய எதிர்க்கட்சிகள்

**04** புதிய அரசியல் கலாசாரத்தை ஆரம்பிக்க சரியான தருணம் இதுவே





**18** பட்டப்பகலில் சிறைச்சாலை அதிகாரியின் உடையில் தப்பியோடிய கைதி!!




## செப்டெம்பரில் நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு விடும்

### அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட ஜனாதிபதி அழைப்பு



செப்டெம்பர் மாதமளவில் நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு விடும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் தமிழ், சிங்களம், முஸ்லிம் உள்ளிட்ட மூவின மக்களும் தமது நாடு வங்குரோத்து நிலையில் இருப்பதை விரும்புவதில்லை என்றும் இலங்கை பிரஜைகள் என்ற அடிப்படையில் வங்குரோத்து என்ற பெயரை நீக்க அனைவரும் ஒன்றுபட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற 06

### 57 மில். வங்கி வாடிக்கையாளர்களை

## அரசுக்கு எதிராக திசை திருப்ப முயன்ற எதிரணியின் முயற்சிகள் படுதோல்வி

### பாராளுமன்றில் பிரதமர் தினேஷ் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்கத்திற்கு எதிராக திசை திருப்புவதற்கு எதிர்க்கட்சி மேற்கொண்ட அனைத்து பிரயத்தனங்களும் தோல்வியடைந்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக சர்வதேச நாணய நிதியம் மற்றும் தேசிய 06

## ஸ்ரீலங்கன் விமான சேவையில் சுமார் 6,000 பேர் தொழில் இழக்கும் நிலை

### நிறுவனத்தை மறுசீரமைப்புக்குட்படுத்துவது அவசியம்



ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை விரைந்து மறுசீரமைக்க தவறினால் அந்த நிறுவனத்தின் ஊழியர்கள் 6000 பேர் தொழிலை இழக்க நேரிடும் என துறைமுகம் மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தொடர்ச்சியாக நட்டமீட்டிவரும் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை அரசாங்கத்தினால் தொடர்ந்தும் நடத்திச் செல்ல முடியாதெனவும், மக்கள் பணத்தை வீணடிக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை மறுசீரமைக்கும் பணிகளுக்கு சர்வதேச நிதி செயற்பாடுகள் தொடர்பில் நிபுணத்துவம் 06

# தேசிய கடன் மறுசீரமைப்பு திட்டம் 122 வாக்குகளால் நிறைவேற்றம்

### ஆதரவாக 122 வாக்குகள்; எதிராக 62 வாக்குகள்; 60 மேலதிக வாக்குகளால் திட்டம் நிறைவேற்றம் வாக்கெடுப்பில் 40 எம்.பி.க்கள் பங்கேற்கவில்லை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்தின் தேசிய கடன் மறுசீரமைப்பு திட்டம் சபையில் நேற்று 122 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக122 வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 60 மேலதிக வாக்குகளால் மறுசீரமைப்பு திட்டம் நிறைவேற்றப் பட்டது.

பல்வேறு தரப்பினரதும் சர்ச்சைகள், விமர்சனங்கள் மற்றும் கருத்துக்களுக்கு இலக்கான மேற்படி தேசிய கடன் மறுசீரமைப்புத் திட்டம் நேற்றுக்காலை சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க ஆளும் கட்சியின் சார்பில் விவாதத்தை ஆரம்பித்து வைத்து சபையில் உரையாற்றினார்.

நேற்றைய தினம் முழு நாள் விவாதமாக இந்த விவாதம் சபையில் இடம் பெற்றதுடன் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியினர் பலரும் விவாதத்தில் உரையாற்றினர்.

அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்புத் திட்டம் தொடர்பான தீர்மானம் அமைச்சரவையில் கடந்த 06




கதிர்காம உற்சவத்தையொட்டி பெரஹறா நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படம்.

### தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில்

## மௌனம் சாதிக்கும் எம்பிக்கள் இராஜினாமா செய்ய வேண்டும்



தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கருத்து வெளியிடாத எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலிருந்து 06

## விஜயகலா உடல்நிலை தேறி வீடு திரும்பினார்

### சிலாபம் வைத்தியசாலை தகவல் தெரிவிப்பு



யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனின் உடல்நிலையில் முன்னேற்றம் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 06

### கொழும்பு, பேஸ்லைன் வீதியில்

## சட்டவிரோத கட்டுமானங்களை அகற்ற மஹாசங்கத்தினர் இணக்கம்

தேசிய பொருளாதாரத்தின் நலனுக்கான மாற்று வேலைத் திட்டத்துக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் சட்டவிரோத கட்டட நிர்மாணங்களை அகற்றுவதற்கு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது, மகாசங்கத்தினர் தங்களது உடன்பாட்டை வெளிப்படுத்தினர். கொழும்பு பேஸ்லைன் வீதியில் ஒறுகொடவத்தையில் அனுமதியின்றி நிர்மாணிக்கப்பட்டுள்ள ஸ்ரீ சம்புத்தாலோக விகாரையை 06

## EPF பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய விரைவில் சட்டம்

### 09 வீத குறைந்தபட்ச வட்டியை உறுதி செய்ய சட்டத்தில் திருத்தம்



### அமைச்சர் மனுஷ நாணயக்கார உறுதி

தேசிய கடன் மறுசீரமைப்பின் மூலம் ஊழியர்களின் சேமலாப நிதிக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும், சேமலாப நிதிக்கு குறைந்தபட்ச வட்டி 09 சதவீதமாக வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலும், விரைவில் பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படுமென 06

## சுவீடனில் எரிக்கப்பட்ட புனித சமய நூல்

### இலங்கை கடும் கண்டனம்

உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்களால் ஈத் அல் அதா கொண்டாடப்பட்டபோது சுவீடனில் உள்ள பள்ளிவாசலுக்கு வெளியே இஸ்லாத்தின் புனித நூலான புனித குர்ஆன் எரிக்கப்பட்டதை இலங்கை கண்டித்துள்ளது. 06

### எங்கள் கருத்து

## இலங்கைக்கு அனுகூலத்தை தரும் சிறப்பான வெளியுறவுக் கொள்கை

எந்தவொரு தேசமும் உலகநாடுகளின் ஒத்துழைப்பும் ஆதரவுமின்றி தனித்துநின்று இயங்க முடியாது. நாடொன்று அவ்வாறு தனித்து விடப்படுமானால், அந்நாட்டினால் வளர்ச்சியடைய இயலாது. அதன் பொருளாதாரமும் குன்றிப் போகும்.

இலங்கையும் கடந்தகால வரலாற்றில் உலகுடன் இசைந்து செல்ல இயலாதவாறு தனித்து நின்ற அனுபவங்கள் அதிகம் உள்ளன. முப்பது வருட கால யுத்தமே இதற்கான காரணமெனச் சொல்லப்பட்டாலும், உண்மை அதுமாத்திரமல்ல.

சிறுபான்மையினரின் இனப்பிரச்சினைக்கு அரசியல்ரீதியில் தீர்வு காண இயலாத நாடு என்ற களங்கம் எமது நாட்டின் மீது படிந்திருந்தது முதலாவது காரணம். அதேசமயம் வெளியுறவு அணுகுமுறைகளை சமயோசிதமாகக் கடைப்பிடிக்காதமை மற்றொரு காரணம்.

இவ்வாறான காரணங்களால் உலகப் பொதுமன்றமான ஐக்கிய நாடுகள் சபையுடனும், மேற்குலகுடனும் மாத்திரமன்றி எமது அயல்நாடான இந்தியாவுடனும் கடந்த காலத்தில் தொடர்ச்சியான நல்லுறவை இலங்கை கொண்டிருக்கவில்லை என்பது துரதிருஷ்டமானதாகும்.

முப்பது வருடம் நீடித்த யுத்தம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட மனிதஉரிமைக் குற்றச்சாட்டுகள் காரணமாகவே சர்வதேசத்துடன் எமது நாடு நெருக்கமான உறவைப் பேண முடியாமல் போனதென்பது ஒருபுறமிருந்தாலும், 06

## சிகரெட் விலைகளில் அதிரடி அதிகரிப்பு

### நேற்று முதல் அமுலுக்கு வந்தது



அனைத்து விதமான சிகரெட்டுகளின் விலைகளும் நேற்று (01) முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன. கலால் வரி அதிகரிப்புடன் சிகரெட்டின் விலை இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை புகையிலை நிறுவனம் தெரிவித்துள்ளது. 06


## எரிபொருள் விலைகளில் நேற்று முதல் மாற்றம்

### பெற்றோல் ரூ.10 ஆல் அதிகரித்தது டீசல் ரூ.02 குறைப்பு




இலங்கை பெற்றோலிய கூட்டுத்தானம் நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொண்டுள்ளது. இதற்கமைய, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 06

## ஹஜ் கடமையின் போது இலங்கை ஹாஜி மரணம்



இலங்கை ஹஜ் பயணக் குழுவுடன் இணைந்து இம்முறை ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்காவுக்குச் சென்ற இலங்கை ஹஜ் யாத்திரிகர் அல்ஹாஜ் அப்துல் மஜீத் மொஹமட் நிஜாம், ஜம்ரத்திலிருந்து வந்து கொண்டிருந்த போது கடந்த வியாழக்கிழமை மாரடைப்பால் 06

### நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது

## மின்சாரக் கட்டணம் 14.2% ஆல் குறைப்பு

### வீட்டு மின் பாவனையில் 30 அலகு வரை 65% குறைப்பு



மின்சார கட்டணம் 14.2 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. நேற்று 01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்கட்டணத்தை குறைக்க தீர்மானித்ததாக அறிவித்துள்ளது. 06

### முல்லைத்தீவு, கொக்கிளாய் மனித எச்சங்கள் விவகாரம்

## அகழ்வுப் பணிகளை 06 ஆம் திகதி மேற்கொள்ள நீதிமன்றம் உத்தரவு

### எச்சங்களை அழிவடையாமல் பாதுகாக்கவும் உத்தரவு

**மாங்குளம் குறூப் நிருபர்**



முல்லைத்தீவில் மனித எச்சங்கள் காணப்பட்ட பகுதியில் எதிர்வரும் 06ஆம் திகதி வியாழக்கிழமை அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளுமாறு 06

## மதுபானங்களின் விலையும் அதிகரிப்பு

அனைத்து விதமான மதுவரி வீதங்களும் நேற்றுமுதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சர் என்ற ரீதியில் வழங்கிய உத்தரவின் பேரில் இந்த வரித் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதேவேளை, இந்த வரித் திருத்தத்தின் மூலம் அனைத்து 06

# தில்லைநாதன் என்னும் ஊடகப் பயணம்

மூத்த ஊடகர் தில்லைநாதன் அண்ணர் கடந்த 29ஆம் திகதி தனது எழுபத்து மூன்றாவது அகவையைக் கொண்டாடினார்.

ஊடகத்துறையில் தனது பதினெட்டாவது வயதில் பேனாவைப் பிடித்த அவர் ஊடகப் பணியில் பொன் விழாவைத் தாண்டியவராவார்.

1968இல் கண்டியிலிருந்து வந்த செய்தி இதழின் யாழ். மாவட்ட நிருபராக இதழியற்துறையில் இணைந்த இவர் 1969 இல் ஈழநாடு இதழின் நெல்லியடி நிருபராக நியமனம் பெற்றார்.





இவருடன் வாழ்வது இன்றைய ஊடகர்களுக்குப் பெருமைதரும் செய்தியாகும்.

1972இல் தினகரனில் உடுப்பிட்டி நிருபராக இணைந்த தில்லைநாதன் தமிழர் ஐக்கிய முன்னணியின் தோற்றம், இலங்கை அரசின் இரண்டாவது குடியரசு அரசமைப்பாலும் பல்கலைக்கழகத் தரப்படுத்தலாலும் வடக்கிற்கு வந்த அமைச்சர்களுக்கு இடம் பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், ஹர்த்தால்கள் போன்றவற்றின் காலத்துச் செய்திகளின் உறவினர்.

சைக்கிள் என்ற வாகனத்தை தமது போக்குவரத்து வளமாகக் கொண்டு பருத்தித்துறை நீதிமன்றம் முதல் அரசியல் மேடைகள் என வடமராட்சிப் பகுதிச் செய்திகளை இலங்கை முழுவதும் வாழ்ந்த வாசகர்களுக்கு அன்றாடம் தவறாமல் வழங்கிவந்தவர் தில்லை அண்ணர்.

வடக்கில் அக்காலத்தில் பிரபலம் பெற்ற கமலம் கொலைவழக்கு, கம்பர் மலை முக்கொலை வழக்கு போன்றனவற்றை செய்தியாக வழங்கியவர்.

ஊடக நிறுவனத்தில் பணியாற்றும் ஊடகர்கள் அதன்மீது எவ்வளவு பற்றும் பொறுப்புணர்வும் கொண்டுள்ளார்கள் என்பது அன்றுதொட்டு இன்றும் நீண்டது என்பதை இந்தச் சம்பவம் இன்றைய ஊடகங்களுக்கும் உணர்த்தும் ஒன்றாகும்.

1983 க்குப் பின்னர் தினகரனுக்கு மீண்டும் அதன் அச்சுவேலி நிருபராகவும் பின்னர் நல்லூர் நிருபராகவும் பணியாற்றியிருந்தார். தினகரன் பத்திரிகையில் அவர் எழுதிய செய்திகளாலேயே மக்களிடம் அதிகம் நன்மதிப்பையும் வரவேற்பையும் பெற்றவர்.

தொண்டமானாறு நூலக படுகொலை,செல்வச் சந்நிதி தேர் எரிப்பு, வடமராட்சி லிபரேசன் ஒப்பரேசன் என்பவற்றினூடாக தமது ஊடகப் பயணத்தைக் கடந்தவர் அவர்.



1997 முதல் 2009 வரை யாழ். நிருபராகப் பணியாற்றிய தில்லை கிருஷாந்தி கொலைவழக்கு விசாரணை, யாழ். உள்ளூராட்சித் தேர்தல், பொங்குதமிழ் நிகழ்வுகள் என்பவற்றின் 'பிசியான' நிருபராகப் பணியாற்றியவர்.

போர்க்காலச் சூழ்நிலையில் பருத்தித்துறையிலிருந்து வல்லைவெளி தாண்டி சைக்கிளில் சென்று உதயன் அலுவலகத்தில் செய்தி கொடுத்த அனுபவங்களை ஓர் ஊடகனின் ஊரடங்குப் பயணமாக எழுதலாம்.

இலங்கை வானொலியின் பருத்தித்துறை நிருபராக 1981இல் இணைந்த அவர் ஏனைய மின்னூடகங்களிலும் நிருபராக பணியாற்றினார்.

தில்லைநாதன் அண்ணர் பற்றி நான் குறிப்பிடவேண்டிய சிறு குறிப்புடன் அவரை வாழ்த்துவது எனது கடமையாகிறது.

அவர் வீரகேசரி, உதயன் போன்ற பத்திரிகைகளிலும் நிருபராக பணியாற்றியவர்.

இளம் ஊடகர்களை ஊக்குவித்து உற்சாகமளிக்கும் பண்பு தில்லை அண்ணருக்குரியது. பொருத்தமான ஆலோசனைகளை அவர் தக்க நேரங்களில் தயக்கமின்றி வழங்குவார்.

நான் ஊரில் தினபதி,சிந்தாமணி, ஈழநாடு இதழ்களின் நிருபராகவிருந்த காலத்தில் புலோலியிலிருந்து அடிக்கடி எனது வீட்டுக்கு வருவார். குறிப்பாக நெல்லியடி, கரவெட்டி, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் முக்கியமான சம்பவங்கள் ஏதும் இடம்பெற்றால் என்னுடன் சேர்ந்து போக அவர் வருவது வழக்கம். எனது தமையனார் அமரர் சுபேந்திரன் காலத்திலிருந்தே இந்தப்பழக்கமிருந்தது.

எனக்கு அடிக்கடி ஆலோசனை சொல்லும் ஊடகர்களாக தில்லை அண்ணரையும், தினகரன் ஈழநாடு ஆகியவற்றின் பருத்தித்துறை நிருபரான திருச்செல்வம் அண்ணரையும் நான் இந்த நாளில் குறிப்பிடவேண்டும். புலோலிக்குப் போனால் நான் அந்த இருவரையும் சந்திப்பதும், செய்திகள் பரிமாறுவதும் அந்தப் பொன்னான ஊடக நாட்களின் அழகு என்பேன்.

1984 இல் தொண்டைமானாறு சனசமூக நிலையத்தில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவத்தின்போது அங்கு சென்று செய்தி விபரத்தை அறிய அப்போது ஊடகத்துறைக்குப் புதியவனான நான் நெல்லியடியிலிருந்து புறப்பட முயன்றபோது 'அப்படியெல்லாம் அங்கு போய்ச் செய்தி எடுக்கவேண்டும் என்று அவசியமில்லை. நாங்கள் அறிந்தவற்றை மட்டும் கொடுப்போம். பாதுகாப்புப்படையினர் சொல்வதை வைத்து அவர்கள் செய்தி போடுவார்கள். இப்படி எல்லாம் அவசரப்படாதேயும்' என்று அக்காலத்தில் எனக்கு ஆலோசனை வழங்கியவர் அவர்.

இவ்வளவு ஆண்டுகளிலும் அவர் இப்படி எத்தனை சவால்களை எதிர்கொண்டு தமது ஊடகப் பொன்விழாவைத் தாண்டியுள்ளார் என்பது ஊடகத்துறையைச் சேர்ந்த அனைவரும் பெருமை கொள்ளவேண்டிய ஒன்றே என அவரது இந்த அகவையில் நினைந்து அவரை வாழ்த்துகிறேன்.

**எஸ்.எம்.வரதராஜன்.**

# 19ஆவது புதிய விமானப்படை தளபதியாக எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ

எயார் வைஸ் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, ஏயார் மார்ஷலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 19வது புதிய விமானப்படை தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

1969ம் ஆண்டு ஜனவரி 29ம் திகதி கம்பஹா மாவட்டத்தின் இஹலகம பிரதேசத்தில் பிறந்த எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ கம்பஹா பராக்கிரம வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் பண்டாரவத்த, மற்றும் பண்டாரநாயக்க கல்லூரியிலும் கல்விப் பயணத்தை தொடர்ந்து அவர் இடைநிலை கல்வியினை கொழும்பு ஆனந்தா கல்லூரியில் தொடர்ந்தார். நாட்டுக்காக தனது அர்ப்பணிப்பான சேவையை வழங்க அவர் 1988ம் ஆண்டு அக்டோபர் 06ம் திகதி சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 06வது கடேட் உள்வாங்கலில் கடேட் அதிகாரியாக இணைந்தார்.

கொத்தலாவல பல்கலைக்கழகத்தில் அடிப்படை போர்ப்பயிற்சி மற்றும் பட்டப்படிப்பை நிறைவு செய்த அவர் அனுராதபுர விமானப் படை தளத்தின் இல 01 விமானிகளுக்கான பயிற்சி படைப்பிரிவில் அடிப்படை விமானி பயிற்சிநெறியை நிறைவுசெய்து 33வது கடேட் பயிற்சிநெறியில் சிறந்த விமானியாக தெரிவானார். பின்னர் அவர் இரத்மலான விமானப்படை தளத்தில் இல 2 படைப்பிரிவில் உயர்நிலை விமானி பயிற்சிகளை மேற்கொண்டார்.

1990 அக்டோபர் 05ம் திகதி இரத்மலானை கொத்தலாவல பாதுகாப்பு கல்விபீடத்தில் பொதுக் கடமைகளுக்கான விமானிகள் கிளையில் விமான அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.



1997ஆம் ஆண்டு புகாரா விமானத்தின் மூலம் இரவு நேர தாக்குதலை நிகழ்த்தி தன்னை ஒரு தலை சிறந்த விமானியாக நிரூபித்தார். இதன் மூலம் அவசர சூழ்நிலையை சிறப்பாக கையாண்டமைக்காக பல்வேறு பாராட்டுகளையும் பெற்றார். மார்ட்டின் பேக்கர் விமான நிறுவனத்தினால் கௌரவமான அங்கீகாரமும் அவருக்கு வழங்கப்பட்டது

எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ அவருடைய சேவைக் காலத்தில் பங்களாதேஷ் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரியில் கனிஷ்ட கட்டளை மற்றும் பணியாளர் பயிற்சி நெறியையும், பாகிஸ்தானில் விமான பாதுகாப்பு பயிற்சியினையும்,


ஐக்கிய அமெரிக்காவில் மேம்பட்ட பாதுகாப்பு ஒத்துழைப்பு பயிற்சியினையும் நிறைவு செய்து, கல்வித்துறையில் சேர்ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மேலாண்மையில் பாதுகாப்பு ஆய்வுகளில் அறிவியல் பிரிவில் முதுகலை பட்டமும் பெறறேவர்.

அவருடைய சேவைக்காக மதிப்புமிக்க "ரணசூர பதக்கத்தினை" மூன்று முறை பெற்றார். அத்தோடு" விசிட்ட சேவா விபூஷன", பதக்கம் "உத்தம சேவா"பதக்கம் ஆகியவற்றையும் பெற்றுள்ளார்.

எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, 2011 முதல் 2012 வரை ஹிங்குராங்கொட விமானப்படை தளத்திற்கு கட்டளை அதிகாரியாக பொறுப்பேற்றார். 2012 முதல் 2014 வரை ரஷ்ய இலங்கைத் தூதரகத்தின் மதிப்புமிக்க இலங்கை பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டதன் மூலம் தனது வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க சாதனையை படைத்தார்.

### நளீமிய்யாவின் பொன்விழாவை முன்னிட்டு;

# 'றாபிதா அந்நளீமிய்யீன்' பழைய மாணவர் அமைப்பின் ஒன்றுகூடல்







**இன்றும் நாளையும் நளீமிய்யா கலாபீட வளாகத்தில்**

ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் பொன்விழா நிகழ்வுகளின் மற்றொரு பிரதான அங்கமாக அதன் பழைய மாணவர் அமைப்பான 'றாபிதா அந் நளீமிய்யீன்' பழைய மாணவர் ஒன்றுகூடலும் 9ஆவது பொதுக்கூட்டமும் இன்று (2) ஞாயிற்றுக்கிழமை மற்றும் நாளை 3ஆம் திகதிகளில் ஜாமிஆ நளீமிய்யா கலாபீட வளாகத்தில் இடம்பெறவுள்ளன.

இரண்டு நாட்கள் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வுகளில் இஸ்லாமிய

அழைப்புப் பணி, சமூக வாழ்வு, வேற்றுமைக்கிடையில் ஒற்றுமை, சமாதான சகவாழ்வு, சமூக மற்றும் கல்வித் துறைப் பங்களிப்பு, தேசிய நலன் ஆகியவற்றில் நளீமீக்களின் பங்களிப்பு ஆகிய தலைப்புகளில் கலந்துரையாடல்கள் இடம் பெறவுள்ளன. அன்றைய தினம் மாலை பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், கலை கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக றாபிதாவின் பொதுச்செயலாளர் அஷ்ஷெய்க் இல்ஹாம் முபாரிஸ் (நளீமி) தெரிவித்தார்.

இரண்டாம் நாள் நிகழ்வாக றாபிதாவின் பழைய மாணவர் அமைப்பினது 09 ஆவது பொதுக் கூட்டம் இடம்பெறவுள்ளதோடு, அடுத்த மூன்று வருடங்களுக்கான மத்திய செயற்குழு, பிராந்திய செயற்குழுவும் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

றாபிதாவின் தலைவர் சட்டத்தரணி அஷ்ஷெய்க் தாஜுதீன் சாகிர் (நளீமி) தலைமையில் இடம்பெறவுள்ள அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக நளீமிய்யா கலாபீட பரிபாலன சபைத்தலைவர் யாகூத் நளீம், கௌரவ அதிதியாக கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் (நளீமி), விசேட அதிதியாக தென் கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் அஷ்ஷெய்க் அஹ்மத் மஸாஹிர் (நளீமி) ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந் நிகழ்வுகளில் நாடளாவிய ரீதியிலுள்ள நளீமியாவின் பட்டதாரிகள் உட்பட பழைய மாணவர்களும் கலந்துகொள்ளவுள்ளமை விசேட அம்சமாகும்.

(அஜ்வாத் பாஸி)

# திருகோணமலையில் ஒன்பது பாடசாலைகளுக்கு ஒரே நாளில் வழங்கப்பட்ட "வி.என். மதிஅழகன் சொல்லும் செய்திகள்"

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வி.என். மதிஅழகன் எழுதிய ஊடகத்துறை மாணவர்களுக்கான உசாத்துணை நூற் பிரதிகள் திருகோணமலை நகரில் உள்ள ஒன்பது பாடசாலைகளுக்கு ஒரே நாளில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மெதடிஸ்த மகளிர் கல்லூரி, சிறீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, சென்ற்.மேரிஸ் கல்லூரி, சென்ற். யோசப் கல்லூரி, விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், சென்ற்.பிரான்சிஸ் ஸேவியர் மகாவித்தியாலயம், விவேகானந்த கல்லூரி, விபுலானந்த கல்லூரி அலுவலகங்களில்

"வி.என். மதிஅழகன் சொல்லும் செய்திகள்" நூற் பிரதிகள் கடந்த திங்கட்கிழமை அதிபர்கள் வசம் கைளிக்கப்பட்டன.

கனேடிய ஒலி, ஒளிபரப்பாளர் ஏ.ரி.பி. ரஞ்சித்குமார், காப்புறுதி உத்தியோகத்தர் ராஜி லிங்கன் ஆகியோர் இதற்கான அனுசரணை வழங்கினர்.

பொறியியலாளர் திவ்வியாங்கி, ஊடக ஆசிரியர் யசோதினி ஆகியோர் பாடசாலைகளுக்கு நேரில் சென்று பிரதிகளை வழங்கினர்.

இந்துக் கல்லூரி,திருகோணமலை பொது நூலகம் என்பனவற்றுக்கும் பிரதிகள் கையளிக்கப்பட்டன. "வி.என். மதிஅழகன் சொல்லும் செய்திகள்" நூலை யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஊடக கற்கை பட்டதாரி மாணவர்களுக்கான ஒரு உசாத்துணை நூலாக கடந்த வருடம் அங்கீகரித்தது.

பாடசாலை மட்டத்திலும் ஊடகக் கற்கை நெறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவற்றிற்கும் பிரதிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் ஊடகக் கற்கை பிரிவின் தலைவரும், தற்போதைய கலைப் பீடாதிபதியுமான பேராசிரியர் எஸ்.ரகுராம் மதிஅழகனை கேட்டிருந்தார்.









நூலின் நான்காம் பதிப்பு தற்போது நாட்டில் உள்ள பல்வேறு பாடசாலைகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.



அகில இலங்கை இன நல்லுறவு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சாம ஸ்ரீ கௌரவ விருது வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் "ஒக்கிட்" கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்றது. இவ் விழாவில் முன்னாள் ஜனாதிபதியின் இந்து மத விவகார இணைப்பாளர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் போஷகராக நியமிக்கப்பட்டு அதற்கான நியமன பத்திரம் வழங்கி கௌரவிக்கப்படுவதை காணலாம். (படப்பிடிப்பு : கொழும்பு வடக்கு தினகரன் நிருபர்)

# வலுவான பா.ஜ.க. அரசை தோற்கடிக்க விரிவான வலை பின்னும் இந்திய எதிர்க்கட்சிகள்



இந்திய தேசிய அரசியலும் இலங்கை தேசிய அரசியலைப் போலத்தான். இந்திய தேசிய அரசியலில் தனிக்கட்சி ஆட்சியமைப்பது சாத்தியமற்ற ஒன்றாகிவிட்டது. இந்திரா காந்தியின் பின்னர் மத்திய அரசு அமைப்பது, கூட்டணி அமைத்துத்தான் என்பது வழமையாகிவிட்டது. 1977 இல் இந்தியா தலைமையிலான காங்கிரசை வீழ்த்த காந்தியவாதியான ஜெயபிரகாஷ் நாராயணன் ஒரு விரிவான கூட்டணி அமைத்தார். இந்திராகாந்தியை எதிர்த்த ஸ்தாபன காங்கிரஸ், வாஜ்பேயின் ஜனசாங் உட்பட பல கட்சிகள் ஒன்றிணைந்தன. ஜனதா மோர்ச்சா, இந்திய தேசியவாத காங்கிரஸ், சோஷலிச கட்சி, பாரதிய லோகதள், ஜகஜீவன் ராமின் ஜனநாயக காங்கிரஸ் என்பன இணைந்ததே ஜனதா கட்சி.





## கட்சிகளுக்கு இடையே முரண்பாடுகள் இருந்தாலும் பா.ஜ.க.வை முன்நிறுத்தி ஒன்றுபடுவோம் என்கிறார் காங்கிரஸ் கபில் சிபல்

இந்திய சுதந்திரத்தின் பின்னர் அமைக்கப்பட்ட முதல் மெகா கூட்டணி இதுவே. 1977 பொதுத் தேர்தலில் ஜனதா கட்சி அமோக வெற்றி பெற்றது. காங்கிரஸ் முதல் தடவையாக தோல்வியைத் தழுவியதோடு இந்திரா காந்தியே தன் தொகுதியில் தோற்றுப் போனார்.

அதன் பின்னர் 1989 இல் ஏழு கட்சிகள் இணைந்து பொதுத் தேர்தலில் போட்டியிட்டன. வி.பி.சிங் பிரதமரானார். பின்னர் 13 கட்சிகள் இணைந்து தேவகௌடா தலைமையில் டில்லியில் ஆட்சி அமைத்தன. தேசிய ஜனநாயகக் கூட்டணியை அமைத்தவர் வாஜ்பாய். தற்போது ஆட்சியில் உள்ள பா.ஜ.கவும் கூட்டணி அமைத்தே ஆட்சியைப் பிடித்தது.

இலங்கையில் பொதுஜன பெரமுன கூட்டணி அமைத்து தேர்தலுக்கு முகம் கொடுத்தாலும் அக்கட்சி, கூட்டணி பலம் இல்லாமலேயே பாராளுமன்றத்தில் அதிக பெரும்பான்மை பெற்றதைப் போலவே, பா.ஜ.க.வும் 542 ஆசனங்களைக் கொண்ட லோக்சபாவில் 303 பெரும்பான்மை பெற்றது. கூட்டணி கட்சிகளுடன் இணைந்ததாக அதன் பாராளுமன்ற பலம் 353. சரியாகச் சொன்னால் பா.ஜ.க. அரசு பலத்தை கையில் வைத்திருக்கிறது. தேசிய கட்சியான காங்கிரசோ, 52 ஆசனங்களையே பாராளுமன்றத்தில் வைத்துள்ளது.

ஆர்.எஸ்.எஸ்.கொள்கைகளையே பா.ஜ.க. ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருவதாகவும் 'இந்து, இந்தியா, இந்தி' என்பதே அவர்கள் கொள்கை என்றும் சிறுபான்மையினர், சிறுபான்மை மதங்கள் மற்றும் உயர்சாதியினரல்லாதோர் பற்றி பா.ஜ.க.வுக்கு எந்த அக்கறையும் இல்லை என்பதுமே இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியினரின் முக்கிய குற்றச்சாட்டாகும்.

இதேசமயம், வருமான வரித் துறை, அமுலாக்கல்துறை, மத்திய உளவுத்துறை ஆகிய மத்திய அரசின் முக்கிய நிறுவனங்களை பா.ஜ.க. தன் கைப்பாவைகளாக்கி, தனக்கு எதிரான கட்சிகளுக்கு, பா.ஜ.க. ஆட்சி செய்யாத மாநில அரசுகளுக்கு எதிராகவும் பயன்படுத்துகிறது என்ற குற்றச்சாட்டு எதிர்க்கட்சிகளால் அழுத்தமாகப் பதிவு செய்யப்பட்டு வருகிறது. மற்றொரு குற்றச்சாட்டு தான் மாநில அரசுகளுக்கு இடையூறு செய்யும் வகையில் மாநில ஆளுநர்களை மோடி அரசு பயன்படுத்துகிறது என்பதாகும்.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் எடப்பாடியாரும் ஓ.பன்னீர் செல்வமும் இரண்டு கோஷ்டிகளாக பிரிந்து செயல்பட்டபோது எடப்பாடியாரை வழிக்குக் கொண்டுவர, தமிழக தலைமைச் செயலகத்தின் தலைமைச் செயலாளரின் அலுவலக அறையிலேயே முதல்வர் எடப்பாடி அறியாமல் அமுலாக்கல் துறை அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தினர். புதுச்சேரியில் காங்கிரஸ் முதல்வராக நாராயணசாமி பதவி வகித்தபோது ஆளுநராக விளங்கிய கிரன்பேடி, எல்லா வகையிலும் அவரை இயங்கவிடாமல் முட்டுக் கட்டைகளைப் போட்டார். பாண்டிச்சேரி முதல்வரும் அமைச்சர்களும் ஆளுநர் மாளிகைக்கு எதிரே தர்ணா செய்யும் அளவுக்கு கிரண்பேடியின் தொல்லைகள் தீவிரமடைந்திருந்தன.

தற்போது அங்கே பா.ஜ.க. ஆதரவு பெற்ற ரெங்கசாமியின் ஆட்சி நடைபெறுவதால் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் அவருக்கு தொல்லை கொடுப்பதில்லை.

புதுடில்லியை ஆள்பவர் அரவிந்த் கெஜ்ரிவால். அவரது அரசுக்கு அமுலாக்கல்துறை திடீர் சோதனை, மத்திய உளவுத்துறையின் பாய்ச்சல் என எல்லா தொல்லைகளும் நீடிக்கின்றன. புதுடில்லி நிர்வாகத்தை நடத்துவதற்கு டில்லி ஆளுநர் அதிகாரிகளை நியமித்ததை எதிர்த்து கெஜ்ரிவால் உச்சநீதிமன்றம் சென்று ஆளுநருக்கு அந்த அதிகாரம் இல்லை என்ற தனக்கு சார்பான தீர்ப்பைப் பெற்றார். உடனே மத்திய அரசுக்கு அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரத்தை பெற்றுத் தரும் ஒரு அவசர கட்டளைச் சட்டத்தை இயற்றி அமுல்படுத்தியிருக்கிறது பா.ஜ.க. அரசு. மம்தா பெனர்ஜியின் வங்காள அரசுக்கு எதிராகவும் தனக்குக் கீழ் உள்ள நிறுவனங்களை மத்திய அரசு ஏவி விடத்தான் செய்கிறது.

மத்திய அரசுக்கு எதிராகவும், விமர்சித்தும் தமிழக முதல்வர் பேசி வருவதோடு கடந்த 23ஆம் திகதி பீஹார் பாட்ணாவில் நடைபெற்ற எதிர்க்கட்சிகள் மாநாட்டிலும் கலந்து கொண்டார். இதையடுத்தே, எடப்பாடி காலத்தில் அ.தி.மு.க. அமைச்சராக விளங்கிய செந்தில் பாலாஜி மீது அமுலாக்கல்துறை பதிவு செய்த ஒரு முறைப்பாட்டை தற்போது தூசுதட்டி எடுத்து அவரை கைது செய்திருக்கிறது. அவர் இப்போது தி.மு.க. அமைச்சர்.

செந்தில் பாலாஜிக்கு இதய குழாங்களில் அடைப்பு இருப்பது தெரியவந்தபோதும் அவரை தமது பொறுப்பில் எடுத்து விசாரணை செய்வதிலேயே அமுலாக்கல்துறை உறுதியாக இருந்தது. அவர் அறுவை சிகிச்சைக்காக காவேரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டபோது அதற்கு எதிராகவும் நீதிமன்றம் சென்றது அமுலாக்கல்துறை. ஆனால் பா.ஜ.க. ஆனாலும் எந்த மாநிலத்திலும் அமுலாக்கல்துறையோ, வருமானத் துறையோ அரசியல் பிரமுகர்கள் மீது கை வைப்பதில்லை.

செந்தில் பாலாஜி மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னர் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழக முதல்வருக்கு எழுதிய கடிதத்தில், கைதான பின்னர் பதவியில் நீடிப்பது முறையல்ல என்றும் எனவே அவரை பதவி நீக்கம் செய்யும்படியும் கேட்டிருந்தார். அதற்கு பதிலளித்த முதல்வர் ஸ்டாலின், அவ்வாறு உத்தரவிட ஆளுநருக்கு அதிகாரம் இல்லை என்றும், அமித்ஷா உட்பட எந்தெந்த பா.ஜ.க. பிரமுகர்களுக்கு எதிராக வழக்குகள் உள்ளன என்பதைக் குறிப்பிட்டு அவர்கள் எந்த அடிப்படையில் பதவிகளில் நீடிக்கிறார்கள் என்று கேள்வியும் எழுப்பி இருந்தார்.

கடந்த 29ஆம் திகதி காலையில் பா.ஜ.க. அரசின் மீது ஸ்டாலின் காட்டமான விமர்சனமொன்றை முன்வைத்திருந்தார். அன்று இரவே ஆளுநர் மாளிகையில் இருந்து ஒரு கடிதம் முதல்வருக்கு வந்தது. அதில் செந்தில் பாலாஜி தான் பதவி நீக்கம் செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்திய அரசியலமைப்பின் பிரகாரம், மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாநில முதல்வருக்கே அமைச்சர்களை நியமிக்கும், பதவி நீக்கும் அதிகாரம் உள்ளது. அதை நிறைவேற்றி வைப்பதே ஆளுநரின் பணி. அந்த வகையில் அரசியலமைப்பு சட்டத்தை மீறி ஆளுநர் செயல்பட்டிருப்பதாகவே அரசியலமைப்பு சட்டம் தெரிந்தவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக கருத்து தெரிவித்த முதல்வர் ஸ்டாலின், ஆளுநருக்கு அமைச்சரவை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் கிடையாது என்பதால் இதைத் தீர்ப்பதற்காக நீதிமன்றத்தை நாடவுள்ளதாகத் தெரிவித்தார்.

ஆனால், முதல்வர் நீதிமன்றம் செல்வேன் எனத் தெரிவித்து ஐந்து மணிநேரம் கடந்ததும் காட்சி மாறியது. ஆளுநர் மாளிகையில் இருந்து வெளியான அறிவித்தலில், செந்தில் பாலாஜியை அமைச்சர்

**அருள் சத்தியநாதன்**

பதவியில் இருந்து நீக்கும் உத்தரவு இடைநிறுத்தி வைப்பதாகவும், மத்திய உள்துறை அமைச்சர் (அமித்ஷா) அவ்வாறு அறிவுறுத்தியதாகவும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதோடு மத்திய அரசின் சட்ட அறிஞரோடு தான் இது தொடர்பாக கலந்தாய்வு செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். ஆளுநர் ஏன் இவ்வாறு முன்னுக்குப் பின் முரணாக நடந்து கொள்கிறார் என்பது புரியவில்லை.

தான் ஆட்சி செய்யாத மாநிலங்களில் மத்திய பா.ஜ.க. அரசு தலையீடு செய்கிறது; முட்டுக்கட்டைகளை போடுகிறது என்பது உண்மையானாலும். இதற்கு வழிகாட்டியாக இருந்ததே காங்கிரஸ்தான் என்பதை மறந்துவிட முடியாது. மாநில அரசுகளை கலைப்பதற்கு தன் அதிகாரத்தை கண்டபடி பிரயோகித்தவர் இந்திராகாந்தி. சட்ட ஒழுங்கு சரியில்லை என்ற ஒரு அறிக்கையை மாநில ஆளுநரிடமிருந்து பெற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் தி.மு.க, அ.தி.மு.க. ஆட்சிகளை மாறி, மாறி கலைத்தவரே இந்திராகாந்தி.

எம்.ஜி.ஆருக்கு சார்பாக கருணாநிதி அரசை கலைத்தார். கருணாநிதியுடன் நேசம் கொண்டதும் எம்.ஜி.ஆர். ஆட்சியைக் கலைத்தார். ஜெயலலிதாவை சமாதானப்படுத்த கலைஞர் ஆட்சியை பா.ஜ.க. கலைத்தது. பின்னர் ஜெயலலிதா, ஆட்சியும் அவ்வாறே கலைக்கப்பட்டது. ஒரு ஆளுநர் அறிக்கையினால் அரசுகள் கலைக்கப்படுவது மக்களின் ஆணைக்கு எதிரானது என்று எழும்பிய எதிர்ப்பால் அந்த அதிகாரத்தில் தற்போது திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. பயங்கரவாதம், தேசிய ஒற்றுமைக்கு பங்கம் ஆகிய முக்கியமான காரணங்களின் பேரில் மட்டுமே ஒரு மாநில ஆட்சியை தற்போது கலைக்க முடியும். முன்னர் காங்கிரஸ் அல்லாத மாநிலங்களிலும் தற்போது பா.ஜ.க. ஆளாத மாநிலங்களிலும் ஆட்சி கலைக்கப்படாமல் தொடர்கிறது என்றால் அதற்கு இச்சட்டத் திருத்தமே காரணம். இதனால்தான் மாநில ஆட்சிகளுக்கு குடைச்சல் கொடுப்பதை ஒரு ஆயுதமாக மத்திய அரசு கையில் எடுத்திருக்கிறது. காங்கிரஸ் மத்தியில் ஆட்சிக்கு வந்தாலும் இதைத்தான் செய்யும்.

இத்தகைய பின்னணியில் தான் கடந்த மாதம் 23ஆம் திகதி பீஹாரின் பாட்ணா தலைநகரில் ஜனதாதள் கட்சித் தலைவரும் பீஹார் முதல்வருமான நிதிஷ்குமார் ஒழுங்கு செய்த எதிர்க்கட்சிகளின் ஒன்று கூடலில் 17 பா.ஜ.க. எதிர்ப்புக் கட்சிகள் பங்கு கொண்டன.

வங்காள முதல்வர் மம்தா பெனர்ஜி, ஆம் ஆத்மி தலைவரும் டில்லி முதல்வருமான அரவிந்த் கெஜ்ரிவால், தி.மு.க.வின் மு.க.ஸ்டாலின், ராஷ்டிர ஜனதாதள் லாலு யாதவ், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், முன்னாள் மஹாராஷ்டிர முதல்வர் உத்தவ் தாக்கரே, சமாஜவாதியின் தலைவர் அகிலேஷ் யாதவ், கம்யூனிஸ்ட் கட்சியின் சீதாராம் எச்சூரி, டீ.ராஜா, காங்கிரசின் மல்லிகார்ஜூன கார்கே, ராகுல்காந்தி, காஷ்மீர் முன்னாள் முதல்வர் மெஹ்பூபா முக்தி உட்பட 32 தலைவர்கள் இந்த ஆப்பேக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக் கட்சிகள் தம் மத்தியில் பல பிரச்சினைகள் மற்றும் முரண்பாடுகளை கொண்டிருந்தாலும் இந்துத்துவ கொள்கையை தன் தாரக மந்திரமாகக் கொண்டிருக்கும் பா.ஜ.க.வும், அதன் செல்வாக்கு மிக்க வசீகரத் தலைவருமான நரேந்திர மோடியும் தற்போதுவரை அசைக்க முடியாத மேரு மலையாகவே எதிர்க்கட்சிகளுக்கு காட்சி அளிப்பதாகவே கொள்ள வேண்டும். இவ்வருட இறுதியில் அயோத்தியில் பா.ஜ.க.வின் கனவும் அதன் பிரம்மாஸ்திரமாகவும் கருதப்படும் பிரமாண்டமான இராமர் கோவிலும் திறந்து வைக்கப்படவுள்ளது. ராமர் நேரில் வந்தால் எத்தகைய பக்திப் பரவசமும்கோலாகலமும்நிலவுமோ அந்த அளவுக்கு திறப்பு விழா இருக்கும் என்பதில் ஐயமில்லை.

வட இந்தியாவின் கோடிக்கணக்கான மிகச் சாதாரண இந்துமக்களை அப்படியே வசப்படுத்தும் வகையில் இவ்விழா அமையப் போகிறது. பா.ஜ.க. தனது ஒன்பதாண்டு ஆட்சியில் சாதித்திருக்கும் பொருளாதார வளர்ச்சி பற்றி அவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டியதில்லை. ராமர் கோவிலே அவர்களுக்கு போதும். புனிதப் பசுமைப் பற்றி பேசியே பா.ஜ.க.வினால் வட மாநிலங்களில் வாக்கு சேகரிக்க முடியும்!

அதே சமயம் பா.ஜ.க.வுக்கு பின்னடைவுகளை ஏற்படுத்தும் பல விஷயங்கள் உள்ளன.

(20 ஆம் பக்கம் பார்க்க)

AUTOWHEEL
FAMILY RESTAURANT IS NOW OPEN
AA CEYLON Estd. 1904
"Friday Special Buriyani
RS. 455/- PER PACK
During Weekends
Lamprais Available
Rs.865.00 per pack
Order Now.
VISIT
Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Marker Mawatha Colombo 03
Tele. No: 0774369013 (Krishon)





எதிர்க்கட்சியில் உள்ள சிலரும், வேறு சிலரும் நாட்டை விற்பதாக குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர். எனவே நாங்கள் பெற்ற ஒவ்வொரு வெற்றியையும் சுட்டிக்காட்டி, அந்த வெற்றி நாட்டை விற்கிறதா என்று அவர்களிடம் கேட்கிறேன். எண்ணெய் விலை குறைந்தால் நாடு விற்கப்படுமா? மேற்குலகில் மட்டுமல்லாது கீழைத்தேய நாடுகளான ஜப்பான், கொரியா, சீனா போன்ற வெளிநாட்டுப் பொருளாதாரங்களையும் நாங்கள் கையாள்கிறோம்.

# புதிய அரசியல் கலாசாரத்தை ஆரம்பிக்க சரியான தருணம் இதுவே



பிரான்ஸின் பரிஸ் நகரில் நடைபெற்ற புதிய உலகளாவிய நிதி ஒப்பந்தத்துக்கான மாநாட்டிற்கு இணையாக இடம்பெற்ற FRANCE 24 தொலைக்காட்சியின் நேர்காணல் நிகழ்ச்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர் வழங்கிய பதில்களும்.....

1500 வருடங்களாக சீனர்கள் இங்கு இருக்கிறார்கள். இதுவரை எந்தவொரு இராணுவத் தளமும் இல்லை. ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் பல ஊகங்கள் உள்ளன. சைனா மெர்ச்சண்ட் நிறுவனத்திடம் இந்த துறைமுகத்தைக் கொடுத்துள்ளோம். ஆனால் அதன் பாதுகாப்பு இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

**கேள்வி :– உங்களது நாடு மிகவும் நெருக்கடியான நிலையில் இருக்கின்ற போதே நீங்கள் ஜனாதிபதியாக பதவியேற்றீர்கள். சுதந்திரத்தின் பின்னர் நாடு முகம்கொடுத்த மிக மோசமான நெருக்கடியினால் பொதுமக்கள் வீதிகளில் இறங்கினர். கடன்களை மீளச் செலுத்தும் செயற்பாட்டை இலங்கை கைவிட்டுள்ளது. அதுதொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் மார்ச் மாதமளவில் ஒப்பந்தம் ஒன்றும் செய்துக்கொள்ளப்பட்டது. உலக வங்கியின் அடுத்த நிறைவேற்று பணிப்பாளர்களின் கூட்டத்தின் போது நலன்புரி மற்றும் வரவுச் செலவுக்கான உதவித் தொகையாக 700 மில்லியன் டொலர்களை வழங்க அனுமதியளிக்க ஏற்பாடுகளை செய்திருப்பதாக றொய்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. அது நடக்குமென உறுதியாக கூற முடியுமா?**

**பதில் –** நாம் உலக வங்கியிடமிருந்து நிதியை எதிர்பார்த்துள்ளோம். தற்போது நாம் அனைத்து செயற்பாடுகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில் உலக வங்கியின் உதவியை பெற தகுதி பெற்றுள்ளோம். அது தற்போதைய தருணத்தில் அவசியமான தொகையாகும். பொருளாதாரத்தை பலப்படுத்தவும் இது உதவும்.

**கேள்வி : நீங்கள் 700 டொலர் மில்லியனை எதிர்பார்க்கிறீர்களாக? அதனை விடவும் கூடிய தொகையை எதிர்பார்க்கிறீர்களா?**

**பதில் –** அதனை விடவும் அதிகமாக கிடைக்கும் என நம்புகிறேன். அவ்வாறு நடக்குமெனில் அதனை புறக்கணிக்கப் போவதில்லை.

**கேள்வி : பரிஸ் போன்ற வேறு இடங்களுக்கான விஜயங்களின் போதும் நீங்கள் பங்குபற்றும் நிகழ்வுகளின் போதும் கடன் விவகாரம் முக்கியமானதாக விளங்கும். அவசரமான நிதிசார் தீர்வே உங்களுக்கு அவசியமாக இருக்கிறது. இலங்கையின் வெளிநாடுகளிடமிருந்தான கடன் 42 பில்லியனாகக் காணப்படுகின்றது. அவ்வாறான கடன் வழங்குநர்களுடனான பேச்சுக்களில் முன்னேற்றம் இருக்கிறதா? பரிஸ் மற்றும் சீனா போன்ற கடன் வழங்குநர்களுடனான நடவடிக்கையில் முன்னேற்றம் காணப்படுகிறதா?**

**பதில் –** பல்வேறு குழுக்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றோம். நிதி ஆலோசனைகள் மற்றும் சொத்து முகாமைத்துவ நிறுவனமான Lazard உடனான ஒப்பந்தம் ஒன்றும் உள்ளது. எமது கடன் மறுசீரமைப்புத் திட்டம் ஜூன் (28) புதன்கிழமை அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்டது. வார இறுதியில் அதனை நிறைவேற்ற முடியுமென நம்புகிறேன். அதன் பின்னர் எமது கடன் வழங்குநர்களுடனான அடுத்தகட்ட பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்போம்.

**கேள்வி : உங்களிடத்தில் எவ்வாறான திட்டமிடல் காணப்படுகின்றது? கடன் செலுத்துவதை காலம் தாழ்த்துவது அல்லது கடன்களை குறைப்பது இவை இரண்டும் இணைந்த திட்டத்தையா வைத்துள்ளீர்கள்?**

**பதில் –** மீளச் செலுத்துவதற்கான காலத்தை அதிகமாக வழங்குவது கடினமானதாகும். அதேபோல் நாம் செலுத்த வேண்டிய தொகையில் ஓரளவு குறைக்கப்படும் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது. அது தொடர்பிலான பேச்சுக்களை ஆரம்பித்துள்ளோம். ஞாயிறு அல்லது திங்கட்கிழமைகளில் அது குறித்த இறுதி வரைவு எமக்கு கிடைக்கும் என நம்புகிறேன்.

**கேள்வி : அப்படியெனில் சீனா மற்றும் ஏனைய கடன் வழங்குநர்களுடனான பேச்சுக்களில் முன்னேற்றம் தெரிகிறதா?**

**பதில் –** நிதி ஆலோசனை மற்றும் சொத்து முகாமைத்துவ நிறுவனமான Lazard உள்ளிட்ட சீனாவின் அனைத்து கடன் வழங்குநர்களுடனும் இலங்கை பேச்சுவார்த்தையில் ஈடுபடும். எமது அனைத்து கடன் வழங்குநர்களுடனும் சீனாவும் கலந்தாலோசித்துள்ளது. சீனா பொது அமர்வுகளில் பங்குபற்றாவிட்டாலும், அனைத்து கூட்டங்களிலும் பங்கெடுத்திருந்தது. அனைத்து தகவல்களையும் சீனாவுடன் பரிமாற்றிக்கொண்டுள்ளோம். சீனாவும் தகவல்களை பரிமாற்றிக்கொண்டுள்ளது. அதனால் பொது மேடையில் இல்லாவிட்டாலும் பங்குதாரர் என்ற வகையில் தகவல்கள் பரிமாற்றிக்கொள்ளப்படும் அனைத்து தகவல்களையும் சீனா அறிந்துகொண்டுள்ளது.

**கேள்வி: மேற்கத்திய கடன் வழங்குநர்கள் மற்றும் சீனாவுடன் சாம்பியா, பரிஸில் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்தது. அந்த நிலைமைகள் ஒவ்வொன்றும் வேறுபட்டவையென நான் அறிவேன். இருப்பினும் சாம்பியா எட்டியுள்ள இணக்கப்பாடு உங்களது நாட்டிற்கு நல்லதொரு முன்னுதாரணமாக அமையாதா? உண்மையில் சீனா மற்றும் ஏனைய கடன் வழங்குநர்களுடன் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக்கொள்ளும் இயலுமை காணப்படுகின்றதா?**

**பதில் –** சாம்பிய ஒப்பந்தம் இந்த வாரத்தில் அறிவிக்கப்பட்டது. சாம்பியாவுடனான விடயத்தை நிவர்த்திக்க சீனாவுக்கு இயலுமை கிட்டியுள்ளமை சிறந்தது. நான் சீன பிரதமரின் உரையை கேட்டேன். அதனால் சீனாவின் நிலைப்பாட்டை புரிந்துகொள்ள முடிந்தது. சீனா முதல் முறையாக முழுமையான கடன் மறுசீரமைப்பு விவகாரம் தொடர்பிலான நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளமை முன்னேற்றகரமான நிலைமையாகும்,.

**கேள்வி : சீனாவைப் பற்றிப் பேசும் போது, இலங்கையில் சீனா நிலைகொண்டிருப்பது குறித்து பல்வேறு கருத்துக்கள் வெளியாகியுள்ளன. குறிப்பாக அமெரிக்க பத்திரிகைகள் இலங்கையில் இராணுவ பிரசன்னம் இருக்கலாம் என செய்திகளை வெளியிட்டுள்ளன. இது உண்மையா? எதிர்காலத்தில் அப்படி ஒன்று நடக்காது என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?**

**பதில் –** சுமார் 1500 வருடங்களாக சீனர்கள் இங்கு இருக்கிறார்கள். இதுவரை எந்தவொரு இராணுவத் தளமும் இல்லை. ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் பல ஊகங்கள் உள்ளன. சைனா மெர்ச்சண்ட் நிறுவனத்திடம் இந்த துறைமுகத்தைக் கொடுத்துள்ளோம். ஆனால் அதன் பாதுகாப்பு இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. தெற்கு கடற்படை படையணி, ஹம்பாந்தோட்டைக்கு மாற்றப்படுகிறது. ஹம்பாந்தோட்டை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நாங்கள் ஒரு படைப்பிரிவை நிறுத்தியுள்ளோம். ஆனால் அங்கு சீன இராணுவம் இல்லை. இதே நிறுவனம் கொழும்புத் துறைமுகம் மற்றும் தெற்கு துறைமுகத்தில் ஒரு முனையத்தையும் நடத்தி வருகிறது. ஒவ்வொரு நாட்டின் போர்க்கப்பல்களும் அங்கிருந்துதான் வருகின்றன. இப்போது கொழும்பில் நடத்தும் முனையம் பற்றி யாரும் குறை கூறுவதில்லை. அவர்கள் ஹம்பாந்தோட்டை நிர்வாக முனையம் மற்றும் துறைமுகம் பற்றி மட்டுமே முறையிடுகின்றனர்.

**கேள்வி: பாரம்பரிய அரசியலில் ஈடுபட்டுள்ள சிலர் பொருளாதார மீட்சிக்கு இடையூறாக செயற்படுவதாகவும், நாட்டை விற்பதாகக் கூறி தவறான தகவல்களைப் பரப்பி மக்களைத் தவறாக வழிநடத்துவதாகவும் அண்மையில் தெரிவித்திருந்தீர்கள். இதன் மூலம் நீங்கள் சொல்வது என்ன?**

**பதில் –** நம் நாட்டை விற்கிறோம் என்று சொல்பவர்கள் இருந்திருக்கின்றனர்.

**கேள்வி: அவர்கள் யார்?**

**பதில் –** எதிர்க்கட்சியில் உள்ள சிலரும், வேறு சிலரும் அந்தக் குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர். எனவே நாங்கள் பெற்ற ஒவ்வொரு வெற்றியையும் சுட்டிக்காட்டி, அந்த வெற்றி நாட்டை விற்கிறதா என்று அவர்களிடம் கேட்கிறேன். எண்ணெய் விலை குறைந்தால் நாடு விற்கப்படுமா? மேற்குலகில் மட்டுமல்லாது கீழைத்தேய நாடுகளான ஜப்பான், கொரியா, சீனா போன்ற வெளிநாட்டுப் பொருளாதாரங்களையும் நாங்கள் கையாள்கிறோம். அவர்களுடன் இணைந்து பணியாற்றுவதால் நம் நாட்டை விற்பதாக அர்த்தமில்லை. இலங்கை அரசியலில் இது வெறும் விவாதம் மட்டுமே. இதற்கு அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. நாங்கள் அவர்களிடம் கேட்ட இன்னும் சில கேள்விகளும் உள்ளன. எல்லா தரப்பினருக்கும் நான் சொன்னது என்னவென்றால், நாங்கள் இப்போது மிகவும் கடினமான சூழ்நிலையில் இருக்கிறோம். அதை வெற்றி கொள்ள அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என்று கூறினேன். அதன்பின்னர் அடுத்த முறை தேர்தலுக்குச் செல்லும்போது, இந்த வளர்ச்சியில் நாம் அனைவரும் அங்கம் வகித்திருக்கிறோம் என்று சொல்லலாம்.

ஆனால் நீங்கள் அனைவரும் அதே பாரம்பரியமான, நியாயமான மாற்று வழி இல்லாமல் விமர்சித்தால், வாக்காளர்கள் உங்களை தூக்கி எறிவார்கள். எனவே அனைவரும் ஒன்றிணைந்து செயற்படக்கூடிய புதிய அரசியல் கலாசாரத்தை ஆரம்பிப்பது மிகவும் நல்லது.

**கேள்வி : மக்களை ஒன்றிணைப்பது பற்றி பேசும் போது, தென்னாபிரிக்க முறையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது நடக்குமா? இது இலங்கைத் தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுமா? போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனரே?**

**பதில் –** உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு அனைவரும் உடன்பட்டுள்ளனர். அதுவும் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிபந்தனைகளில் ஒன்றாகும். நான் ஜனாதிபதியான பின்னர் அவர்களுடன் அது பற்றி விவாதிக்க ஆரம்பித்தேன். நான் ஜனாதிபதி ரமபோசாவை அழைத்து ஆணைக்குழு அமைப்பதற்கு உதவி கேட்டேன். இதைத்தான் நாங்கள் விரும்பினோம். ஒகஸ்ட் மாதத்துக்குள் இதை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவேன். மேலும் செயலகத்தை அமைப்பதற்கான திட்டங்களை ஏற்கனவே செய்து வருகிறோம்.எங்களுக்கு தென்னாப்பிரிக்க ஆதரவு தேவை. நாம் இதுவரை குறிப்பிட்டுள்ள கட்டமைப்புக்குள், பல வெளிநாட்டு பார்வையாளர்கள், சுயாதீனமான பார்வையாளர்கள் இருப்பார்கள்.

**கேள்வி: இதனை எப்போது ஆரம்பிப்பீர்கள்?**

**பதில் –** எனது கருத்துப்படி ஒகஸ்ட் மாதத்துக்குள் சட்டம் நிறைவேற்றப்படும் என்று நினைக்கிறேன்.

**கேள்வி :– தமிழ் மக்களுக்கு அரசியல் சுய உரிமைகளை பெற்றுக்கொடுப்பதாக கூறப்படுகிறது. எது பற்றி என்ன கூற முடியும்?**

**பதில் –** தமிழ் மக்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு குழுக்களாக வாழ்கின்றனர். வடக்கு கிழக்கு தமிழர்கள், மலையகத் தமிழர்கள், அவர்களின் பாரம்பரியம் இந்தியா வரையிலும் நீண்டது. தற்போது அது பற்றிய பிரச்சினைகள் பலவற்றுக்கு நாம் தீர்வு கண்டுள்ளோம். குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் தமிழர்கள் பெரும்பான்மையாகவும் சிங்களவர்கள் சிறுபான்மையாகவும் மாறியுள்ளனர். அவர்களுக்கான வாக்குரிமையும் கிடைத்துள்ளது. வேறு நாடுகளில் அவ்வாறு நடப்பதில்லை. அனைத்து பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்களின் பொருளாதார மற்றும் வாழ்வியல் அம்சங்களை வலுவூட்ட வேண்டும். அவர்கள் அரசியலுடனும் தொடர்புபட்டுள்ளனர். அமைச்சரவையிலும் அங்கத்துவம் வகிக்கின்றனர். வடக்கு கிழக்கு தொடர்பில் அங்குள்ள அரசியல் குழுக்கள் அரசியலமைப்பில் உள்ளவாறு அதிகாரப் பகிர்வை கோருகின்றனர்.

**கேள்வி: அது அவ்வாறு நடக்குமா?**

**பதில் –** அதனை நடைமுறைப்படுத்தியுள்ளோம். மத்திய அரசு அதற்குள் தலையீடு செய்யவில்லை. அதனை உறுதிப்படுத்துவதற்கான சட்டங்களை உருவாக்க வேண்டும். அதற்கமைய வடக்கு கிழக்குக்கு மாத்திரமின்றி நாட்டின் ஒன்பது மாகாணங்களுக்கும் சில அதிகாரங்கள் அவசியம் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கு முன்னாள் மாகாண முதலமைச்சர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர். அது குறித்து மாகாண சபை விடயப் பரப்புக்குள் காணப்படுகின்ற மற்றைய விடயங்கள் பற்றியும் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.


**கேள்வி : 1980, 1990களிலும் இடம்பெற்ற மோதல்களின் போது மீட்கப்பட்ட மனித புதைக்குழிகள் தொடர்பிலான சில பரிசோதனைகளுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் தடை ஏற்படுத்தப்பட்டதாக சில தினங்களுக்கு முன்பாக அறிக்கைகளை காண முடிந்தது. அதனுடன் தொடர்புடைய ஏனையவர்கள் பற்றியும் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டுமா?**
**இல்லாவிட்டால் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு மேற்படி செயற்பாடுகளை கண்டுகொள்ளாமல் விட்டுச் செல்வதற்கான மாற்று வழியாக அமையுமா?**

**பதில் –** உண்மையை கண்டறிவதற்கான ஆணைக்குழுவின் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் அனைத்து முறைப்பாடுகளும் ஆணைக்குழுவின் முன்பாக கொண்டுவரப்பட வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். அதனை விடுத்து அதற்கு நிகரான சோதனைகளை மேற்கொள்ள முயற்சிப்பது ஆணைக்குழுவை நெருக்கடிக்கு உள்ளாக்கும் செயலாகும். எவர் வேண்டுமானாலும் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவில் தங்களுடைய முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம்.

**கேள்வி : அதில் முன்னாள் சிரேஷ்ட உறுப்பினர்களும் பங்குபற்ற முடியுமா?**

**பதில் –** இல்லை. முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரையும் அவர்களினால் அழைக்க முடியும். வெளிநாட்டு கண்காணிப்பாளர்களும் இருக்கின்றமையால் அதனை மறைப்பதாக எவரும் குற்றம்சாட்ட முடியாது.

# ‘இலங்கை இதழியலில் சிவகுருநாதன்’



கலாசூரி சிவகுருநாதன் இருபதாம் ஆண்டு நினைவு நூல்

தமிழ் பேசும் வாசகர்களின் அபிமானத்தைப் பெற்ற தினகரன் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரான கலாசூரி சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத்துறையிலும் தனக்கெனப் பல முத்திரைகளைப் பதித்துக் கொண்டவர்.

தினகரன் பத்திரிகையில் நீண்ட காலமாக ஆசிரியராக பணியாற்றிய கலாசூரி சிவகுருநாதன் மிக இலகுவான மொழியில் எல்லோருக்கும் புரியக்கூடிய வகையில் கருத்துக்களை சொல்வதில் வல்லவர். அவருடைய எழுத்துக்களும் சாதாரண வாசகர்களால் படிக்கக் கூடியவையாகும்.

இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் அவர்களின் இருபதாம் ஆண்டு நினைவாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் இம்மாதம் 16 ஆம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் வெளியிடப்பட உள்ளது.

தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்று வரை எவராலும் மறக்க முடியாததாகும். அவரது ஆளுமை இன்றும் அவரது அபிமானிகளால் நினைவுகூரப்படுகின்றது. அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவாக (08/08/2003) 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூலை ஐங்கரன் விக்கினேஸ்வரா தொகுத்துள்ளார்.

'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூலில் தமிழர்களின் பாரம்பரிய கலாசாரத்தையும், பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாத்த கலாசூரி சிவகுருநாதன் ஆற்றிய பெருங்கடமையை ஊடக, இலக்கிய அறிஞர்களின் திறனாய்வு கட்டுரைகள் அலங்கரிக்கின்றன.

‘ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குக் களம் தந்த தினகரன் சிவகுருநாதன்’ எனும் பகுதியில் அவரைப் பற்றிய வரலாற்றுப் பதிவுகளும், திறனாய்வு ஆக்கங்களும் உள்ளடங்குகின்றன. பல ஊடக ஆளுமையாளர்கள் அவற்றை எழுதியுள்ளனர்.

இரண்டாம் அங்கம் 'பத்திரிகை ஆசிரியர்களுள் மக்கள் திலகம்' எனும் பகுதியாக அவரைப் பற்றிய அரசியல் வல்லுநர்களின் அஞ்சலிகளும், ஆராதனைகளும் இடம்பெற்றுள்ளன. இந்நூலில் 'பூமாலைக்கு ஏன் பாமாலை' எனும் மூன்றாம் பகுதியில் கவிதைகளில் தெரிந்த சிவகுருநாதன் சிந்தனைகளை பல கவிஞர்கள் வடித்துள்ளனர். தினகரனில் ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் கலாசூரி சிவகுருநாதன் பல இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதில் முன்னின்றமைக்கு சாட்சியமாக இக்கவிதைகள் உள்ளன.



ஐங்கரன் விக்கினேஸ்வரா...




# IMF இரண்டாவது கடன் தவணை கிடைப்பதில் சந்தேகம் கிடையாது!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் சந்திப்பு



**சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணையையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லையென வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகள் குறித்து எமக்கு வழங்கிய பேட்டியில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.**

**கே: வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள இராஜதந்திரிகள் பலர் தகுதியற்றவர்கள் என்ற குற்றச்சாட்டு உள்ளது. இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

*பதில்: முக்கியமாக, நாங்கள் வழங்கிய நியமனங்கள் யாவும் தொழில்துறை அதிகாரிகளுக்குரியதாகும். கடந்த ஆண்டை எடுத்துக் கொண்டால் செப்டம்பரில் நாங்கள் பொறுப்பேற்ற பின்னர், ஏறத்தாழ 16 இராஜதந்திரிகள் நியமிக்கப்பட்டார்கள். இவர்களில் 13 பேர் தொழில்துறை அதிகாரிகள். தொழில்துறை அதிகாரிகளுக்கு அப்பால் வெளியில் பிரசித்தி பெற்றவர்களும் சில நாடுகளுக்கு நியமிக்கப்பட்டு வந்தனர். அனைத்து இடங்களுக்கும் தொழில்துறை அதிகாரிகளை நியமிப்பதற்கான ஆளணி இல்லை என்பதால் பிரபல்யமான நபர்களை நியமிக்கின்றோம். அவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் சிறப்பாக செயலாற்றுகின்றனர். எனவே நியாயமான சமநிலையைப் பேண நாம் முயற்சிக்கின்றோம்.*

**கே: ஜப்பான் போன்ற சில நாடுகளுடனான உறவுகள் கடந்த காலத்தில் பாதிக்கப்பட்டிருந்தன. இவற்றைச் சரிசெய்ய என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?**

*பதில்: ஜப்பானைப் பொறுத்தவரை நாங்கள் நிறைய நேர்மறையான விடயங்களைச் செய்துள்ளோம் என நினைக்கின்றேன். ஜனாதிபதி இரண்டு முறை ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ளார். ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரும் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். அவர்கள் கடன் மறுசீரமைப்பில் உதவுவதற்கு முன்னணியில் உள்ளனர். இடைநிறுத்தப்பட்ட 'லைட் ரயில்' திட்டத்தை மீண்டும் தொடங்குவது தொடர்பில் அவர்கள் கவனம் செலுத்தியுள்ளனர். ஜப்பானுடனான உறவில் நாம் நிறைய முன்னேற்றம் அடைய வேண்டும்.*

**'ஏற்கனவே எதிர்க்கட்சிக்குத் தாவியவர்களைத் தவிர பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தின் பக்கம் நின்று வாக்களித்துள்ளனர். அதனால்தான் பெரும்பாலான சட்டங்களை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நிர்வகிக்கவும் நிறைவேற்றவும் அரசினால் முடிந்தது'**

**கே: அமெரிக்கா, கனடா போன்ற பல நாடுகள் இலங்கையின் முன்னாள் அரசியல் தலைவர்கள் மற்றும் இராணுவத் தலைவர்கள் மீது பொருளாதாரத் தடைகளையும் பயணத் தடைகளையும் விதித்துள்ளன. ஒரு சில மேற்கத்தேய நாடுகளின் இத்தகைய பாதகமான முடிவுகளை எதிர்கொள்ள அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கின்றதா?**

*பதில்: எங்கள் எல்லைக்குள் செய்யக் கூடிய அனைத்து விடயங்களையும் நாம் செய்துள்ளோம். வழங்க வேண்டிய விளக்கங்களை அவர்களுக்கு வழங்கியுள்ளோம். உள்ளகரீதியாக அவர்கள் மேற்கொள்ளும் சில நடவடிக்கைகள் இவை. இருந்தாலும் முடிந்தவரை, நாங்கள் அம்முடிவுகளை எப்பொழுதும் எதிர்த்துள்ளோம். மேலும் எங்கள் இராஜதந்திரிகளும் அவற்றுக்குப் பதிலளித்து வருகின்றனர். இருப்பினும், முன்னோக்கிச் செல்வது சவாலான பணியாக இருக்கும்.*

**கே: ஊடகங்கள் மற்றும் பொது சிவில் உரிமைகளை நசுக்குவதன் மூலம் இலங்கை ஜீ .எஸ்.பி பிளஸ் சலுகையை இழக்க நேரிடும் என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. அவ்வாறு ஏதாவது சாத்தியம் உள்ளதா?**

*பதில்: நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம், நாங்கள் ஐரோப்பிய ஒன்றியத்துடன் முழுமையாக ஈடுபாடுகளை மேற்கொண்டுள்ளோம். இந்த ஆண்டு இறுதிக்குள் ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகையைப் பெற முடியும் என நம்புகிறோம். அதில் பெரிய ஆபத்தை நான் பார்க்க மாட்டேன். நிச்சயமாக, சில விடயங்கள்குறித்த அக்கறைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன, அவற்றைத் தீர்ப்பதற்கு நாம் பணியாற்றி வருகின்றோம்.*



**கே: சர்வதேச நாணய நிதியம் வகுத்துள்ள சில நிபந்தனைகளை நிறைவேற்றாததால், அடுத்த கட்டமாக சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தொகையை அரசாங்கம் பெறாமல் போகலாம் என்றும் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. இது பற்றி விளக்க முடியுமா?**

*பதில்: ஆம். 32 விடங்களில், நாங்கள் ஏற்கனவே 29 ஐ பூர்த்தி செய்துவிட்டதாக உணர்கிறேன். மீதமுள்ள மூன்று விடயங்களிலும் நாங்கள் பணியாற்றி வருகிறோம். கடன் கட்டுப்படுத்தும் திட்டம் மற்றும் திட்டத்தையும் சமர்பிப்போம். நிச்சயமாக, சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையையும் பெற முடியும் என்பதில் நாங்கள் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறோம்.*

**கே: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எப்போதும் ஒரு நல்ல சர்வதேச அந்தஸ்தைக் கொண்டிருந்தார். ஜனாதிபதியாக குறுகிய காலத்தில் அவர் உத்தியோகபூர்வமாக பல நாடுகளுக்கு அழைக்கப்பட்டுள்ளார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பிற தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அவர் அடுத்த மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்த விஜயத்தின் முக்கியத்துவம் என்ன?**

*பதில்: இந்தியாவுடனான உறவு எங்களுக்கு மிகவும் முக்கியமானது. எனவே, நாம் அதை உருவாக்க வேண்டும். நாம் ஒருவருக்கொருவர் நம்பிக்கையையும் பரஸ்பர மரியாதையையும் வளர்க்க வேண்டும். எனவே, ஜனாதிபதியின் விஜயம் அதனை நிறைவேற்றுவதற்கு உதவும்.*

**கே: சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளுக்குப் பிறகும், இலங்கையர்கள் விசா இல்லாமல் மிகச் சில நாடுகளுக்கு மட்டுமே செல்ல முடிகின்றது. ஹென்லி மற்றும் பங்குதாரர்கள் குறியீட்டில் இலங்கை கடவுச்சீட்டு 100 ஆவது இடத்தில் உள்ளது. விசா இல்லாத பயணத்திற்காகவும் கடவுச்சீட்டை மிகவும் சக்திவாய்ந்ததாக மாற்றவும் இலங்கை பல நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறதா?**

*பதில்: இல்லை. அது பேச்சுவார்த்தை மூலம் நடக்காது. நமது பொருளாதார பலம் மற்றும் நம் மக்கள் சென்று திரும்பாத வாய்ப்புகள் என்ற அடிப்படையில் அது நடக்க வேண்டும். இலட்சக்கணக்கான மக்கள் சட்டவிரோதமாகச் சென்று அங்கு தங்கி அகதி அந்தஸ்து கோருகின்றனர். பயிற்சிக்கு சென்றவர்களில் சிலர் திரும்பி வருவதில்லை. அரசாங்கத்தால் மட்டும் இந்தப் பிரச்சினைகளில் எதுவும் செய்ய முடியாது. ஒட்டுமொத்தமாக இலங்கையின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து இங்கு அதிக வாய்ப்புகளையும் சிறந்த பொருளாதார நிலையையும் உருவாக்குவதை நாம் பார்க்க வேண்டும். எனவே, நீங்கள் அதை ஒரே இரவில் செய்ய முடியாது.*

**'இந்தியாவுடனான உறவு எங்களுக்கு மிகவும் முக்கியமானது. எனவே, நாம் அதை உருவாக்க வேண்டும். நாம் ஒருவருக்கொருவர் நம்பிக்கையையும் பரஸ்பர மரியாதையையும் வளர்க்க வேண்டும். எனவே, ஜனாதிபதியின் விஜயம் அதனை நிறைவேற்றுவதற்கு உதவும்'**


**கே: பொதுத்தேர்தலையோ அல்லது ஜனாதிபதித் தேர்தலையோ நடத்த அரசாங்கம் தயாராகி வருவதாக ஊகங்கள் பரவி வருகின்றன. இது தொடர்பில் ஏதாவது கூற முடியுமா?**

*பதில்: அதைப் பற்றி என்னால் ஊகிக்க முடியாது. ஆனால் 28 ஆம் திகதி ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் தேர்தல் பற்றி எதுவும் விவாதிக்கப் படப்போவதில்லை. இது சர்வதேச நாணய நிதியத்தின் செயல்முறை மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் எதிர்கால போக்கைப் பற்றியது. அது குறித்த நமது உத்திகள் குறித்து பாராளுமன்றம் மற்றும் அனைவருக்கும் அறிவூட்ட வேண்டும். எனவே, அதற்கும் தேர்தலுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.*

**கே: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பல பிரிவுகளாக பிளவுபட்டுள்ளதாகத் தெரிகிறது. இது எதிர்காலப் பொதுத்தேர்தலில் அக்கட்சியின் வாய்ப்புகளைப் பாதிக்கும் என்று நினைக்கின்றீர்களா?**

*பதில்: நான் அப்படி நினைக்கவில்லை. நிச்சயமாக மற்றைய கட்சிகளைப் போலவே, கருத்து வேறுபாடுகள் உள்ளன, அது பல குடும்பங்களைப் போலவே பொதுவானது. ஆனால், உன்னிப்பாகப் பார்த்தால், ஏற்கனவே எதிர்க்கட்சிக்குத் தாவியவர்களைத் தவிர பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தின் பக்கம் நின்று அரசாங்கத்துடன் வாக்களித்துள்ளனர். அதனால் தான் பெரும்பாலான சட்டங்களை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நிர்வகிக்கவும் நிறைவேற்றவும் முடிந்தது. கடந்த முறை, இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவரை நீக்குவதற்கு 113 வாக்குகளுக்கு மேல் பெற வேண்டியிருந்தது. ஆனால் எங்களால் 125 வாக்குகளுக்கு மேல் பெற முடிந்தது. எனவே, அரசாங்கம் தொடர்ந்தும் சரியான பாதையில் பயணிக்கின்றது என நான் நினைக்கின்றேன்.*

---




# நடுத்தர வர்க்கத்தினருக்கே பாதிப்புகள் அதிகம்!

பொருளாதார நெருக்கடியால் இலங்கையின் வறிய மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். நடுத்தர வர்க்கத்தினர், அதாவது மத்திய தரப்பினர் குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கையில் வறியவர்களை முன்னேற்றுவதற்காக பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக கடுமையான வறுமை ஒழிக்கப்பட்டு நடுத்தர வருமான வர்க்க மட்டம் அதிகரித்துள்ளது. இது குறைவான சேய் மற்றும் தாய் இறப்பு வீதம், உயர் சுகாதார நிலை மற்றும் நல்ல கல்விப் பின்னணியை கொண்ட நாடாக மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆசிய பிராந்தியத்தில் உள்ள மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இது சிறப்பான வாழ்க்கைத் தரத்தில் உள்ளது. இலங்கை ஒரு நடுத்தர வருமானம் பெறும் நாடு என்ற மட்டத்தில் இருந்தது. சமீபத்திய ஆண்டுகளில் உள்ளக மற்றும் வெளிப்பாதிப்புகள் காரணமாக, மக்களின் வாழ்க்கை மீண்டும் சவாலானதாக மாறியுள்ளது. சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் பெரும் அழுத்தத்திற்கு உள்ளாகி, கொந்தளிப்பான நிலையில் உள்ளனர். அன்றாடம் எதிர்கொள்ளும் அதிக வாழ்க்கைச் செலவு மற்றும் சிக்கலான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, முறையான திட்டத்தின்படி முகம்கொடுத்துள்ள பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியது அவசியம்.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார விரிவாக்கம் கேள்வி அதிகரிப்புக்கு வழிவகுத்தது. நீண்டகால நன்மையளிக்கும் திட்டங்களுக்காக உயர்வட்டி வீதத்தில் கடன் பெறப்பட்டுள்ளது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் கொவிட் தொற்று ஆகியவை கடன் சுழற்சியில் இருந்த இலங்கையின் பொருளாதாரத்தை சீர்குலைத்துள்ளன. பெட்ரோலியம், மின்சாரம், எரிவாயு, உரங்கள், மருந்துகள் மற்றும் சில வகையான உணவுகள் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளின் விநியோகம் தடைப்பட்டதோடு, வெளிநாட்டுக் கடன்களை செலுத்துவதும் நிறுத்தப்பட்டது.

அண்மைக்கால வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து மீண்டும் தொடர் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தி வரும் இலங்கை, அதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் கடனையும் தொழில்நுட்ப உதவியையும் பெற்றுள்ளது. தேவைகள் கட்டுப்படுத்தப்பட்டு அரசின் வருமானத்தை அதிகரிக்கும் நடவடிக்கையாக பல புதிய வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. மின்சாரம், எரிபொருள் மற்றும் எரிவாயு உள்ளிட்ட பல துறைகளில் விலைச் சூத்திரங்கள் நடைமுறையில் உள்ளன. முடிவெடுக்கும் நிபுணர்கள் குழு வரவு செலவுத் திட்டத்தை கருத்தில் கொண்டு முடிவுகளை எடுக்கின்றது. ஆனால் மக்கள் எதிர்கொள்ளும் அழுத்தங்களை கவனமாக ஆய்வு செய்ய வேண்டும்.

தற்போது மேற்கொண்டு வரும் பொருளாதார சீர்திருத்தங்கள் ஒவ்வொரு பிரிவினரிலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. நடுத்தர வர்க்கத்தினரும், சமூகத்தின் கீழ்த்தட்டு மக்களும் இந்த அழுத்தத்தை ஏதோவொரு வகையில் தாங்கிக் கொண்டுள்ளனர். தினசரி வருமானம் ஈட்டுபவர்கள் அவர்களின் கூலி வேலைக்குரிய கட்டணம், முச்சக்கரவண்டி கட்டணம் போன்றவற்றை உயர்த்தியுள்ளனர். மேல்தட்டு வர்க்கத்தினரும் தங்கள் வணிகைத்தொழில் கட்டமைப்புகளை மாற்றி வழமைக்குத் திரும்பியுள்ளார்கள். பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப குறுகிய வழிகள் இல்லை. மாற்றங்கள் ஏற்படாவிட்டால், தற்போதைய தற்காலிக நிலை மீண்டும் மாறலாம். வருமானம் ஈட்டும் புதிய திட்டங்களுக்குச் செல்வதோடு சாதாரண மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் சிக்கலான பக்கங்களை கருத்தில் கொண்டு முடிவுகளை எடுப்பது அவசியம்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில், சமூகத்தின் மேல் மற்றும் கீழ் வகுப்பினரிடையே சில நெருக்கம் உள்ளது, ஆனால் நடுத்தர வர்க்கம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு அரசாங்க சலுகைகள் கிடைப்பதில்லை என்பதோடு புதிதாக விதிக்கப்பட்ட வரிகளுக்கும் உட்பட்டுள்ளார்கள். வாய்ப்புத் தேடி நகரங்களுக்கு வரும் இவர்கள் பிள்ளைகளை நல்ல பாடசாலைகளில் சேர்த்து, நிலம் வாங்கி, வீடு கட்டுவதோடு சிலர் வாகனங்களையும் வாங்குகிறார்கள். இந்த நடவடிக்கைகளுக்காக கடன் வாங்குகிறார்கள். சம்பாதித்த பணத்தை சிக்கனமாக கையாளுகிறார்கள். விதிக்கப்பட்ட வருமான வரி மற்றும் வருமானம் குறைவதால், நடுத்தர வருவாய் பிரிவினர் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவது மற்றும் சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்புவது எப்படி? வரவு செலவுத் திட்டத்தை சரிசெய்வதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று கருதப்பட்டாலும் இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி அந்த எல்லைக்கு அப்பாற்பட்டது.

தெற்கு பயங்கரவாதம் அல்லது வடக்கு பயங்கரவாதம் எமக்கு கற்பித்த பாடங்கள் எவை? இந்தப் பிரச்சினைகளை ஆழமாக ஆராய்ந்து, முழுமையான தீர்வை முன்வைப்பதைத் தவிர, கடன் குறைப்பு, வரி அதிகரிப்பு, முதலீட்டை அனுமதித்தல் அல்லது தனியார்மயமாக்கல் போன்ற தனிமைப்படுத்தப்பட்ட சம்பவங்களால் மாத்திரம் ஒரு நாட்டை மாற்ற முடியாது.

அரசு ஊழியர்களின் எண்ணிக்கை தேவைக்கு அதிகமாக உள்ளது. தேவைக்கேற்ப குழுக்களை தயார் செய்து, ஏனையோரை தொழில்முனைவோராக ஆக்குவதற்வதற்கு ஒரு திட்டம் தேவை. பாதுகாப்புப் படைகள் கூட தேவையான தரத்தின்படி வேறு பிரிவுகளுக்கு இணைக்கப்பட வேண்டும். எஞ்சிய ஊழியர்களுக்கு திறமையான சேவை மற்றும் சேவைக்கு ஏற்ற சம்பளம் ஆகியவற்றுக்கான பயிற்சிகளை வழங்குவதும், அந்தச் சம்பளத்தில் அவர்கள் வாழ முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதும் முக்கியமாகும். சமூக நிறுவனங்களும், அரசுடன் நட்புறவு கொண்டவர்களும் அரசு சார்ந்து இருக்கும் முறைகளை உடனடியாக ஒழிக்க வேண்டும். சிறப்புத் திட்டங்களும் சலுகைகளும் இறுதியில் மக்கள் மீது வரிச்சுமையாக இருப்பதைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

அரசியல் சார்புக் குழுக்களின் குறுகிய மனப்பான்மையால் ஏற்படும் அழிவுகள் கொஞ்சநஞ்சமல்ல. அதனை மீட்கக்கூடிய மாற்றங்களைச் செய்வது எளிதல்ல.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐ. எல். எம். றிசானின் மாமியார் காலமானார்

*அட்டாளைச்சேனை 11, மத்திய வீதியைச் சேர்ந்த மர்ஹூம்களான சிக்கந்தர் லெவ்வை, செய்னபு தம்பதியினரின் சிரேஸ்ட புதல்வி சல்மா காலமானார். இவர் மர்ஹூம் ஏ. ஆர். ஏ. நஜீப்பின் மனைவியும், நர்ஜிஸாவின் தாயாரும், அட்டாளைச்சேனை மத்திய நிருபர் ஐ. எல். எம்.றிசானின் (நிதி உதவியாளர் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிமனை) மாமியாரும், ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் எஸ். எல். மன்சூர் மற்றும் எஸ். எல்.பாயிஸ் ஆகியோரின் சகோதரியும், சம்ரி அஹ்மத், சப்கி அஹ்மத், சப்னி அஹ்மத் ஆகியோரின் உம்மம்மாவும் ஆவார். ஜனாசா அட்டாளைச்சேனை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் அஸர் தொழுகையைத் தொடர்ந்து தொழுகை நடாத்தப்பட்டு, 6ஆம்குறிச்சி மையவாடியில் 01.07.2023 நல்லடக்கம் செய்யப்பட்டது.*

## எரிபொருள்...

328 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 365 ரூபாவாக இருக்கும்.

ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 02 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒட்டோ டீசல் இன்று முதல் 308 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 06 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, ஒரு லீற்றர் சுப்பர் டீசல் 346 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளது.

அதேபோல், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 09 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 236 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

இந்த விலை திருத்தம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலைக்கு ஏற்ப லங்கா ஐஓசி தனது எரிபொருள் விலைகளையும் திருத்தம் செய்துள்ளது.

## ஹஜ் கடமையின்....

காலமானார். அவர் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்தார். அவர் குருநாகல், பனகமுவவை வசிப்பிடமாகவும், இப்னகமுவ எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணியாளர்கள் மற்றும் ஜித்தாவிலுள்ள இலங்கை தூதரகம் பிரதிநிதிகள் ஆகியோர் வைத்தியசாலைக்கும் பொலிஸாருக்கும் சென்று சம்பிரதாயங்களை மேற்கொண்டனர். கடந்த 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இஷா தொழுகைக்குப் பிறகு ஜனாஸா மஸ்ஜிதுல் ஹராமுக்கு ஜனாஸா தொழுகைக்காக எடுத்துச் செல்லப்பட்டு மக்காவில் அடக்கம் செய்யப்பட்டதாக முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் தெரிவித்துள்ளது.

## சுவீடனில் எரிக்கப்பட்ட ...

சுவீடனில் வசிக்கும் ஈராக்கியரென கூறப்படும் சல்வான் மோமிகா என்பவர், ஸ்டொக்ஹோமிலுள்ள மத்திய பள்ளிவாசலுக்கு வெளியே இஸ்லாத்தின் புனித நூலின் பிரதியைப் புதன்கிழமை (28) தீ வைத்து எரித்துள்ளார்.

## சிகரெட் விலைகளில்...

அதன்படி, 04 வகைகளின் கீழ் ஒரு சிகரெட்டின் விலை 05 ரூபாய், 15 ரூபாய், 20 ரூபாய், மற்றும் 25 ரூபாயால் உயர்த்தப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு சிகரெட்டின் விலை 25 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக முகவர்களினால் கடைகளுக்கு வழங்கப்படும் சிகரெட்டுகளின் விலை 25 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ள மையால் தாமும் அந்த விலையில் விற்பனை செய்வதாக கடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## விஜயகலா...

புத்தளம், மதுரங்களியில் கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் விஜயகலா மகேஸ்வரன் காயமடைந்து சிலாபம் ஆஸ்பத்திரியின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சிலாபம் வைத்தியசாலையிலிருந்து சிகிச்சை பெற்று அவர் வீடு சென்றதாக தெரிவிக்கப்பட்டது. விஜயகலா தரப்பிலிருந்து இது தொடர்பில் கேட்டபோது அவர் ஆஸ்பத்திரியிலிருந்து கொழும்பிலுள்ள அவரது இல்லத்துக்கு சென்றுவிட்டதாக தெரிவித்தனர்.

விஜயகலா மகேஸ்வரன் பயணித்த வாகன சாரதிக்கு நித்திரை ஏற்பட்டமையினால் வாகனத்தின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமையே விபத்துக்கான காரணமென பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## மதுபானங்களின்...

வகையான மதுபானங்களினதும் 750 மில்லி லீற்றர் போத்தல் ஒன்றின் விலை 300 ரூபாவினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதாக மதுபான உற்பத்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந் நிலையில், பியர் போத்தல் ஒன்றின் விலை 50 ரூபாவினால் அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மின்சாரக் கட்டணம் ....

☐ வீட்டு மின் பாவனையில் 0 முதல் 30 அலகு வரையிலான மாதாந்த நுகர்வு கொண்ட பிரிவுக்கு 65 சதவீத கட்டணக் குறைப்பு. ஒரு அலகு 30 ரூபாவிலிருந்து 10 ரூபாவாக குறைக்கப்படும். மாதாந்த நிலையான கட்டணம் 400 ரூபாவிலிருந்து 150 ரூபாவாக குறைக்கப்படும்.

☐ 61 முதல் 90 அலகு வரையான பிரிவில், ஒரு அலகுக்கான கட்டணம் ரூபா 42ல் இருந்து 32 ரூபாவாகவும், மாதாந்த நிலையான கட்டணம் ரூபா 650 இல் இருந்து 300 ரூபாவாகவும் குறைக்கப்படும்.

☐ 91 மற்றும் 120 அலகு பிரிவுகளுக்கு, ஒரு அலகு 42 ரூபாவிலிருந்து 35 ரூபாயாகவும், மாதாந்த நிலையான கட்டணம் 650 ரூபாயிலிருந்து 400 ரூபாயாகவும் குறைக்கப்படும்.

☐ மத வழிபாட்டுத் தலங்களுக்கு 16 சதவீதம் கட்டணக் குறைப்பு. குறைந்த நுகர்வு கொண்ட வழிபாட்டுத் தலங்களுக்கு ஒரு அலகு 10 ரூபாய். (30 ரூபாவிலிருந்து 10 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது). மத வழிபாட்டுத் தலங்களுக்கு சூரிய சக்தி அமைப்புகளை உடனடியாக நிறுவ மின்சார சபை மற்றும் லங்கா தனியார் மின்சார நிறுவனங்களுக்கு நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன.

☐ ஹோட்டல் துறைக்கு 26.3 சதவீத கட்டணம் குறைப்பு

☐ கைத்தொழில் துறைக்கு 9 சதவீத கட்டண குறைப்பு

☐ வணிக கட்டிடங்களின் மின்சார கட்டணம் 05 சதவீதம் குறைக்கப்படும்

☐ அரச கட்டிடங்களின் மின்சார கட்டணம் ஒரு சதவீதத்தால் குறைக்கப்படுமென்றும் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## மௌனம் சாதிக்கும்...

விலக வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், 57 மில்லியன் வைப்பாளர்கள் சார்பில் அறிக்கை வெளியிட வேண்டுமென தெரிவித்த அவர், அவர்கள் பதவி விலகினால், பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் புதியவர்களை நியமிக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார்.

வங்கிகளில் வைப்பு செய்பவர்களுக்கு அதிக வரி விதிக்க எதிர்க்கட்சி விரும்புகிறதா? என கேள்வி எழுப்பிய வஜிர அபேவர்தன எம்.பி, ஜனாதிபதியிடம் இதனை நேரடியாக கூறினால் அமைச்சரவையில் சமர்பிக்க முடியுமென்றும் தெரிவித்தார்.

## தேசிய கடன்...

புதன்கிழமை சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையின் அனுமதியும் பெறப்பட்டது.

அதனையடுத்து ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு பாராளுமன்ற பொது நிதி தொடர்பான குழுவும் அனுமதி வழங்கியது. இந்நிலையில் தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பான தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்காக கடந்த செவ்வாய்க்கிழமை சபாநாயகரால் விசேட பாராளுமன்ற அமர்வுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

விவாதத்தின் முடிவில் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யுமான லக்ஷ்மன் கிரியெல்ல வாக்கெடுப்பைக் கோரினார். அதனையடுத்து இடம்பெற்ற இலத்திரனியல் முறையிலான வாக்கெடுப்பிலேயே கடன் மறுசீரமைப்பு தீர்மானத்திற்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையிலேயே 60 மேலதிக வாக்குகளினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் 40 எம்.பி.க்கள் பங்கேற்கவில்லை.

அரசின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தீர்மானத்திற்கு ஆதரவாக அரச தரப்புடன் இணைந்து எதிர்கட்சிகளைச் சேர்ந்த வடிவேல் சுரேஷ், அலி சப்ரி ரஹீம், சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே, நிமல் லான்சா, குமார வெல்கம, அதாவுல்லா, பௌசி, ஜோன் செனவிரத்ன, அனுர பிரியதர்சன யாப்பா, பிரியங்கர ஜயரத்ன, துமிந்த திசாநாயக்க ஆகியோர் வாக்களித்தனர்.

இத் தீர்மானத்திற்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி , ஜே .வி.பி., தமிழ் தேசியக்கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகியவை வாக்களித்த நிலையில் நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

இந்நிலையில் கடன் மறுசீரமைப்பு தொடர்பான தீர்மானம் நேற்று பெரும் எதிர்ப்புக்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்குமிடையில் பாராளுமன்றத்தில் சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்தவினால் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான தீர்மானம் மீதான விவாதம் நேற்று காலை 9.30 மணி முதல் இரவு 7.30 மணிவரை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

இத்தீர்மானம் தொடர்பில் ஆளும் கட்சிக்கும் எதிர்கட்சிகளுக்குமிடையில் கடும் தர்க்கம், வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று அதனையடுத்து வாக்களிப்பு இடம்பெற்றது. அந்த வகையில் நேற்றைய தினம் சபை அமர்வு இரவு 7.45 மணி வரை தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோத...



உடனடியாக அகற்றுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இதன்படி, இவ்விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவுடன், விஹராதிபதி உள்ளிட்ட மகா சங்கத்தினர் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

நீதிமன்ற உத்தரவின்படி செயற்படும் போது, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ச ட்ட உத்தியோகத்தர்கள், தற்போதுள்ள சட்டப் பின்னணி தொடர்பில் விளக்கமளித்ததுடன் இங்கு நிர்மாணிக்கப்படவுள்ள கொங்கிறீட் தூண்களின் மேல் அமைக்கப்படவுள்ள அதிவேக வீதியின் நிர்மாணத் திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்காக வெளிநாட்டு கடன் உதவி பெற ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பிலும் சம்பந்தப்பட்ட திட்டங்களில் முழு உடன்பாடு எட்டப்பட்டுள்ளதால் திட்டங்களை மாற்ற வாய்ப்பில்லையென அமைச்சர் மகா சங்கத்தினரிடம் விளக்கினார். அமைச்சர் வழங்கிய விளக்கங்களின்படி, உரிய நீதிமன்ற உத்தரவை மதித்து தேசிய அபிவிருத்தி தேவையாக கருதி விஹாரரையை அகற்றுவதற்கு ஆதரவளிக்க மகா சங்கத்தினரும் விஹாரரையின் அரங்காவலர் சபையின் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்தனர்.

இதன்படி, அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் களவிஜயம் மேற்கொண்டு ஆராய்வதற்கும் பொருத்தமான மாற்று நடவடிக்கையை எடுப்பதற்கும் இரு தரப்பினரும் இணங்கிக் கொண்டனர். அதுவரை சமர்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டுத் தீர்மானம் கிடைக்கப்பெறும் வரை அல்லது மாற்று வேலைத்திட்டம் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படும் வரை இந்தக் கட்டுமானங்கள் அகற்றப்பட மாட்டாதென அமைச்சர் மகாசங்கத்தினரிடம் தெரிவித்தார்.

## செப்டம்பரில் நாடு...

இலங்கை பணிப்பாளர் சபையின் கலந்துரையாடல் ஒன்றின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார். இலங்கையை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கு மாத்திரமின்றி எதிர்காலத்தில் போட்டித்தன்மை மிக்கதொரு பொருளாதாரத்தை கட்டியெழுப்புவற்கும் கடன் நீடிப்பு வேலைத்திட்டம் மிகவும் அவசியமானதென்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்த முயற்சிகளின் பலனாக எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் வங்குரோத்து நிலையிலிருந்து நாடு மீண்டுவிடும் என நம்பிக்கை தெரிவித்த ஜனாதிபதி, அதற்கான வேலைத்திட்டங்களுடன் அனைவரும் ஒன்றுபட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

கடன் நீடிப்பு முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அதுகுறித்து அமைச்சரவை, வங்கியாளர்கள், வணிக சபை உறுப்பினர்கள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

இலங்கையிடம் தற்போது முன்னேற்றத்திற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்று உள்ளமையினால் அதற்காக முதலாவதாக நாம் கடன் மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள முடியும். நாம் இது தொடர்பில் அமைச்சரவையிலும் கலந்தாலோசித்தோம். அதேபோல் வங்கியாளர்கள், வணிகச் சபை உறுப்பினர்கள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளையும் சந்தித்து மேற்படி விடயத்தை தெளிவுபடுத்தியுள்ளோம். அதனால் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் பற்றி உங்களது அமைப்புக்களின் உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்துங்கள். இது இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் முயற்சி என்பதால் இது குறித்து அச்சப்பட வேண்டாமெனவும் அவர்களை அறிவுறுத்துங்கள். தற்போதைய நிலையிலிருந்து நாடு மீண்டு முன்னேற்றம் காண வேண்டியது அவசியம் என்பதோடு, எதிர்காலத்திலும் போட்டித்தன்மை மிக்கதான பொருளாதாரம் ஒன்றை கட்டமைக்க வேண்டியதும் அவசியமாகும்.

அதேபோல் தென்கிழக்கு மற்றும் கிழக்காசிய வர்த்தக கூட்டிணைவான RCEP அமைப்பில் இணைவதற்கான விண்ணப்பத்தை எதிர்வரும் நாட்களில் சமர்பிக்கவுள்ள அதேநேரம், இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளோம். மறுமுனையில் ஐரோப்பிய சங்கத்துடன் வர்த்தக தொடர்புகளை விரிவுபடுத்துவது தொடர்பில் பேசவிருக்கும் நிலையில் அதுவே எமது போட்டித்தன்மை மிக்க பொருளாதாரத்தை கட்டமைப்பதற்கான ஆரம்ப புள்ளியாக அமைந்திருக்கும்." என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அகழ்வுப்பணிகளை...

நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், எச்சங்களை அழிவடையாமல் பாதுகாக்க நீதிமன்றத்தினால் பொலிஸாருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் மத்திய பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பை மேற்கொள்வதற்காக கனரக இயந்திரம் கொண்டு நிலத்தை தோண்டியபோது புதைக்கப்பட்டிருந்த மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த சம்பவத்தை தொடர்ந்து கொக்கிளாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து கொக்கிளாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா இடத்தை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதற்கமைய மனித எச்சங்கள் காணப்படுகின்ற பகுதியில் ஜூலை 06 திகதி அகழ்வு பணிக்கு நீதிபதி உத்தரவிட்டதோடு, அதற்குரிய நபர்களுக்கான உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறும், அதுவரை எச்சங்கள் அழிவடையாமால் பாதுகாக்குமாறும் கொக்கிளாய் பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## ஸ்ரீலங்கன் விமான...

பெற்றவர்களிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படும் என்றும் மிகவும் வெளிப்படைத் தன்மை மிக்கதாக அந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

‘ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரே வழிக்கு’ என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

பல தசப்தங்களுக்கு முன்பு எமக்கான தனித்துவத்துடன் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் விமான சேவை, எமிரேட்ஸ் நிறுவனத்தினால் நிர்வகிக்கப்பட்டபோது 30 மில்லியன் இலாபமீட்டியிருந்தது. அதன் பின்னரான காலப்பகுதியில் எவ்வித இலாபங்களையும் ஈட்டவில்லை என்றும் தெரிவித்தார்.

ஒருநாளும் விமானங்களை கண்டிராத மற்றும் விமானங்களில் காலடி வைக்க முடியாமல் இருக்கும் சாதாரண மக்களின் பணத்தினாலேயே இந்தச் சேவைகள் நடத்தப்படுகின்றன. எமக்கென்ற தனியொரு விமான சேவை இருப்பது பெருமைக்குரியதாக இருந்தாலும் அதனை நடத்திச் செல்வதற்கு வழங்கப்படும் செலவு மிக அதிகமானதாக உள்ளதெனவும் தெரிவித்தார்.

இன்றளவில் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் கடன்பட்டுள்ளது. சர்வதேச பிணைமுறிகளின் கீழ் குத்தகைக்கு பெறப்பட்ட விமானங்களுக்கான கடன் தொகையை உள்நாட்டு வங்கிகள் உள்ளடங்களான சில நிறுவனங்களே செலுத்தியுள்ளன என்றும், எரிபொருள் கடனையும் செலுத்த வேண்டியிருப்பதாகவும் தெரிவித்த அமைச்சர், கடன் நெருக்கடிக்கு மத்தியில் விமானச் சேவையொன்றை நடத்திச் செல்வது சாத்தியமற்றதெனவும் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள வெளிநாட்டு கையிருப்பு போதாமை உள்ளிட்ட பிரச்சினைகளின் காரணமாக முன்பை போன்று அரசாங்கத்தினால் நிதி வழங்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. அவ்வாறு வழங்குவதும் நியாயமற்றது என்பதாலேயே ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி 51 சதவீதத்தினை அரசிடம் தக்கவைத்துக்கொண்டு மிகுதியான 49 சதவீதத்தியையே மறுசீரமைப்புக்கு உட்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை மறுசீரமைக்கும் யோசனைக்கு ஆறு மாதங்களுக்கு முன்பாகவே அமைச்சரவை அனுமதி கிடைத்திருந்தது.

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுனத்தின் கீழான இறங்குதுறை பணிகள் மற்றும் உணவு வழங்கல் நிறுவனம் ஆகியன வருமானம் ஈட்டுகின்றன. இருப்பினும் அதனால் விமானச் சேவையின் நட்டத்தை ஈடு செய்ய முடியாதுள்ளது என்றும் தெரிவித்தார்.

## EPF பாதிக்கப்படாமல்...

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தேசிய கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதன் மூலம் ஊழியர்களின் சேமலாப நிதியத்தியின் மீதான தாக்கம் எவ்வாறு அமையுமென்பது குறித்து ஜனாதிபதி மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கிடையிலான கலந்துரையாடல், ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றதுடன், ஊழியர்களின் EPF நிதிக்கு குறைந்தபட்ச வட்டி வீதத்தை 09 சதவீதமாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

இதனால், ஊழியர் சேமலாப நிதியத்துக்கு குறைந்தபட்ச வட்டியாக 09 சதவீதம் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கான சட்டத்தை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி இதன்போது அமைச்சருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி அடுத்த மூன்று வருடங்களுக்கு ஊழியர் சேமலாப நிதியத்துக்கு குறைந்தபட்ச வட்டி வீதம் 09 சதவீதமாக வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படுமென்று அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டார்.

இதற்கமைவாக ஊழியர் சேமலாப சட்டமூலத்தில் திருத்தத்தை கொண்டு வருவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தை விரைவாக பெற்று அந்த திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமெனவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்தார்.

## எங்கள் கருத்து...

# இலங்கைக்கு அனுகூலத்தை தரும் சிறப்பான வெளியுறவுக் கொள்கை

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் சுமார் பதின்மூன்று வருட காலத்துக்கு மேலாக உள்நாட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறியதே இலங்கை மீதான களங்கம் நீங்காததற்கான காரணமாகிப் போயுள்ளது.

யுத்தம் உருவெடுப்பதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை இலங்கைத் தேசம் தொடர்ந்தும் தாமதப்படுத்துமானால், சர்வதேசத்தில் எமது நாடு மீதான களங்கமும் நீங்கிவிடப் போவதில்லை என்பதே யதார்த்தமாகும். இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படாமல் முன்னெடுக்கப்படுகின்ற எந்தவொரு இணக்கப்பாடுமே நாட்டில் நிரந்தர ஐக்கியத்தைத் தரப்போவதில்லை.

இனப்பிரச்சினைக்கு இறுதியான தீர்வு காணப்பட வேண்டுமென்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதயபூர்வமான உறுதிப்பாட்டைக் கொண்டுள்ளார். அவர் நாட்டின் ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்றதுமே இந்த எண்ணத்தை பலதடவை வெளிப்படுத்தியுமுள்ளார். அதுமாத்திரமன்றி உலகநாடுகளுடன் இணக்கப்பாடான அணுகுமுறைகளைக் கையாண்டு இலங்கைக்கான ஒத்துழைப்பை அதிகரித்துக் கொள்ள வேண்டுமென்பதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடாகும்.

விசேடமாக அயல்தேசமான இந்தியாவுடன் நெருக்கமான நல்லுறவைப் பேண வேண்டுமென்பது அவரது நிலைப்பாடாகும். அந்த எண்ணத்தின் வெளிப்பாடாகவே ஜனாதிபதி இம்மாதம் புதுடில்லிக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். அவ்விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உட்பட முக்கியஸ்தர்கள் பலருடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். சிறப்பான அயலுறவுக் கொள்கையினால் எமது நாட்டுக்கு அனுகூலங்கள் கிடைக்கவிருப்பது இங்கு முக்கியமானதாகும்.

## அரசுக்கு எதிராக...

வங்கிகளுடன் இணைந்து அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு எதிர்க்கட்சி உட்பட அனைவரதும் பூரண ஒத்துழைப்பு அவசியம் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

தேசிய கடன் மறு சீரமைப்பு தொடர்பில் குறுகிய நோக்கங்களுடன் எதிர்க்கட்சி மேற்கொண்ட அத்தனை செயற்பாடுகள் மற்றும் பிரசாரங்களும் தோல்வியடைந்துள்ளதாக சபையில் குறிப்பிட்ட பிரதமர், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களுக்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தேசிய கடன் மறு சீரமைப்பு தொடர்பில் பாராளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கான விவாதத்தில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர்,

எதிர்க்கட்சியானது குறுகிய நோக்கங்களுக்காக செயற்படுவதை விடுத்து தேசிய நெருக்கடி நிலையில் அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு பொறுப்புடன் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.விமர்சனங்களுக்கு நாம் எப்போதும் இடமளித்துள்ளோம். எதிர்க்கட்சி மேற்கொண்ட அனைத்து பிரயத் தனங்களும் தோல்வியடைந்துள்ளன.

57 மில்லியன் வங்கி வாடிக்கையாளர்களை அவர்கள் அச்சத்திற்குள்ளாக்கினார்.

அதற்கான எதிர்க்கட்சியின் முயற்சிகள் சாத்தியப்படவில்லை.வங்கிகளை வங்குரோத்து நிலைக்கு கொண்டு வருவதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுத்தனர் அதுவும் கைகூடவில்லை.

ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தை திசை திருப்பும் அவர்களது திட்டமும் பயனளிக்கவில்லை. அந்த வகையில் அரசாங்கம் என்ற வகையில் நாம் முன்னெடுத்துள்ள இந்த செயற்பாடுகள் சர்வதேச நாணய நிதியம் மற்றும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கும் தேசிய வங்கி கட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும். இந்த நடவடிக்கைகளுக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நாட்டின் பிரதமர் என்ற வகையில் நான் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

தற்போது நாட்டில் மூன்று பில்லியன் டொலராக வெளிநாட்டு கையிருப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.பெருமளவு உல்லாசப்பிரயாணிகள் நாட்டுக்கு வருகை தரும் நிலையில் சுற்றுலாத்துறை மூலமான வருமானம் அதிகரித்துள்ளது.

சர்வதேச சந்தைகளில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் அளவுக்கு எமது வங்கிக் கட்டமைப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எமது வங்கித் துறை சீர்குலைந்திருந்ததை பலரும் மறந்து விட்டனர். எனினும் தற்போது சர்வதேச வங்கிகளுடன் தொடர்புகளை முன்னெடுக்கும் வகையில் அது கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

அதற்கான நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில்சர்வதேச நாணய நிதியம்,உலக வங்கி மற்றும் எமக்கு உதவும் கடன் வழங்குனர்கள் மற்றும் ஏனைய நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி நாம் செயல்படுகின்றோம்.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அவற்றை வெளிப்படையாக ஏற்கனவே அறிவித்துள்ளார்.

நாடு தள்ளப்பட்டிருந்த மோசமான வீழ்ச்சியிலிருந்து அதனை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. மக்களுக்கான வாழ்க்கைச் செலவு அதிகரித்திருந்தாலும் அதற்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொருளாதார மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் உற்பத்தித் துறைகள் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சீர்குலைந்துள்ள சில நிறுவனங்கள் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. அந்த வகையில் கைத்தொழில் துறையில் அரசாங்கத்தின் தலையீடுகள் மேற்கொள்ளப்படும்.

எமது நிதித் துறையில் முக்கிய நிறுவனமாக மத்திய வங்கி செயல்படுகின்றது. கடந்த சில வாரங்களாக அந்த வங்கியை வங்குரோத்து நிலைக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகளை எதிர்க்கட்சி மேற்கொண்டு வருகிறது.

மக்களை திசைதிருப்பும் வகையில் பல்வேறு கூற்றுக்களை அவர்கள் முன் வைத்தனர். வங்கி வாடிக்கையாளர்கள் வங்கிகளிலி ருந்து விலகிவிடுவார்கள் என அவர்கள் எதிர்பார்த்தனர். எதிர்க்கட்சி அவ்வாறு செயற்படுகின்றமை தொடர்பில் நான் கவலையடைகின்றேன்.

நாட்டிலுள்ள 22 மில்லியன் மக்களுக்கு 57 மில்லியன் வங்கிக் கணக்குகள் காணப்படுகின்றன. சிறந்த செயற்பாட்டின் மூலம் அந்த அனைத்து வங்கிக் கணக்குகளுக்குமான நம்பிக்கையை நாம் ஏற்படுத்தியுள்ளோம்.

ஜனாதிபதி,அமைச்சரவை மற்றும் மத்திய வங்கியின் மூலம் அதற்கான உறுதிப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

வங்கி வாடிக்கையாளர்கள் எவரும் சந்தேகம் கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது. போலியாக முன்னெடுக்கப்பட்ட அத்தனை பிரசாரங்களும் காற்றில் அடித்துச் சென்றுவிட்டன. அந்த வகையில் அரச வங்கிகளுக்கு மட்டுமன்றி அனைத்து வங்கிகளுக்கும் அரசாங்கம் அந்த நம்பிக்கையை உறுதி செய்துள்ளது. அந்த வகையில் மக்களின் அனைத்து வங்கிக் கணக்குகள் மற்றும் சொத்துக்களும் முழுமையாக பாதுகாக்கப்படும் என்பதை அரசாங்கம் உறுதிப்படுத்துகிறது.

பல்வேறு கூற்றுக்களை முன்வைத்து ஏமாற்று செயற்பாடுகளை எவர் முன்னெடுத்தாலும் அரசாங்கமானது வங்கி கட்டமைப்புக்கும் டிக்கையாளர்களுக்கும் நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டுள்ளது என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.



# நெருக்கடி வேளைகளில் விரைந்தோடி வந்து இன்னல் களையும் நாடு இந்தியா!




## அயல்தேசத்துடன் நல்லுறவைப் பலப்படுத்துவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூடுதல் அக்கறை!

**இலங்கை பொருளாதார ரீதியில் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்திருந்த இக்கட்டான காலகட்டத்தில் நாட்டைப் பெறுப்பேற்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு உலக நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்துவதில் அக்கறை காண்பித்து வருகின்றார்.**

அண்மையில் பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளுக்குச் சென்றிருந்த அவர், அங்கு நடைபெற்ற சர்வதேச மாநாடுகளில் கலந்து கொண்டது மாத்திரமன்றி, உலகத் தலைவர்கள் பலரையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

கடந்த காலத்தில் பல்வேறு காரணங்களால் இலங்கையுடனான நட்புறவில் விரிசல்கள் ஏற்பட்ட நாடுகளுடன் மீண்டும் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளையும் அவர் எடுத்திருந்தார். இதற்கு சிறந்த உதாரணமாக ஜப்பான் நாட்டைக் குறிப்பிடலாம். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் லைட் ரயில் திட்டத்துக்கான ஒப்பந்தம் தொடர்பில் இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் மனக்கசப்பு ஏற்பட்டிருந்தது.

இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற உடனேயே ஜப்பானுக்குச் சென்று இரு நாட்டுக்கும் இடையிலான நீண்டகால உறவைப் புதுப்பிப்பதற்கு அவர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

இவ்வாறான நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜூலை மாதத்தில் இந்தியாவுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அவர் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயமாக இது அமையவுள்ளது.

ஜூலை 21 ஆம் திகதி அவர் இந்தியாவுக்கு விஜயம் செய்யவிருப்பதாகவும், இந்த விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவின் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரைச் சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவை மேலும் பலப்படுத்துவது தொடர்பில் இந்தச் சந்திப்பில் விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவைப் பொறுத்த வரையில் இலங்கையின் அயல்நாடு மாத்திரமன்றி, இக்கட்டான சந்தர்ப்பங்களில் தோள்கொடுக்கும் உற்ற நட்பு நாடாகவும் காணப்படுகிறது. இலங்கை நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் முதலில் உதவிய நாடாக இந்தியா காணப்படுகிறது.

நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு உடனடியாக 3.5 பில்லியன் அமெரிக்க டொலர் அவசர உதவியை இந்தியா வழங்கியிருந்தது. இந்தக் கடன் உதவியின் அடிப்படையிலேயே கடந்த வருடம் நாடு எதிர்கொண்ட எரிபொருள்தட்டுப்பாடு, எரிவாயுத் தட்டுப்பாடு மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கான பற்றாக்குறைகளை ஓரளவுக்குக் குறைக்க அரசாங்கத்தினால் முடிந்தது.



## இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவை மேலும் பலப்படுத்துவது தொடர்பில் இரு தலைவர்களுக்குமிடையில் விரிவான கலந்துரையாடல்கள்




கடந்த வருடத்தில் மக்கள் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்த சந்தர்ப்பத்தில், இந்தியக் கடன் உதவியில் அந்நாட்டிலிருந்து கிடைத்த எரிபொருட்களே மக்களுக்குப் பெரும் உதவியாக இருந்தன. அது மாத்திரமன்றி, நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களுக்கான அத்தியாவசிய உணவுகளை வழங்குவதற்காக தமிழ்நாட்டிலிருந்து ஒரு தொகை உலர் உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

அத்துடன், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இலங்கை நாடிய சந்தர்ப்பத்தில் இந்தியாவின் உதவி மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். சர்வதேச நாணய நிதியத்தின் முக்கியஸ்தர்களுடன் இலங்கை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்திய சந்தர்ப்பத்தில் இந்தியாவின் நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் இலங்கைக்கு சார்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடியிருந்தார்.

கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட விடயங்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் இந்தியா உறுமொழி அளித்திருந்தது. இவ்வாறான பின்னணியில் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி கிடைப்பதில் இந்தியாவின் பங்களிப்பும் முக்கியமாக இருந்தது.

பொருளாதார நெருக்கடி மாத்திரமன்றி, இதற்கு முன்னர் இலங்கை எதிர்கொண்ட கொவிட் தொற்றுநோய் நெருக்கடி காலத்திலும் முதன் முதலில் உதவிய நாடாக இந்தியா காணப்படுகிறது. தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள இந்தியா உடனடியாக உதவியது. முதல் தொகுதி தடுப்பூசிகள் இந்தியாவிடமிருந்தே பெறப்பட்டன.

இது மாத்திரமன்றி, யுத்தத்தின் பின்னரான அபிவிருத்திச் செயற்பாடுகளில் இந்தியாவின் பங்களிப்புக் கணிசமாக இருந்தது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்கள் மாத்திரமன்றி மலையகத்தைச் சேர்ந்த இந்திய வம்சாவளி மக்களுக்காக 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை இந்தியா முன்னெடுத்திருந்தது. இதனால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நன்மையடைந்தன.

இதுபோன்று பல்வேறு உதவிகளை அவ்வப்போது இந்தியா வழங்கி வந்துள்ளது. இதற்கு முன்னர் சுனாமிப் பேரலை அனர்த்தம் உள்ளிட்ட பல்வேறு சந்தர்ப்பங்களில் முதன் முதலில் ஓடிவந்து இலங்கைக்கு உதவும் நாடாக இந்தியா காணப்பட்டது.

அது மாத்திரமன்றி, இலங்கையில் பல்வேறு அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் முதலீடுகளை இந்தியா மேற்கொண்டுள்ளது. இந்தியாவின் தமிழ்நாட்டுக்கும் வடக்கின் பலாலிக்கும் இடையில் விமானப் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தலைமன்னாருக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் கப்பல் சேவையொன்றை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுபோன்று பல்வேறு திட்டங்களால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் மேலும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

## 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதிப்பாடு

இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம் முக்கியமானதாக அமையும் என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். பொருளாதார நெருக்கடி, இனப்பிரச்சினைத் தீர்வு உள்ளிட்ட விடயங்கள் குறித்து இவ்விஜயத்தின் போது கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா தொடர்ந்தும் அக்கறை காண்பித்து வருகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது குறித்துக் கலந்துரையாடியிருந்தார். இவ்விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளார் என்பது பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

அரசியலமைப்பின் ஊடாகத் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதாக ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் கூட்டிய முதலாவது சர்வகட்சி மாநாட்டில் அவர் கூறியிருந்தார். இதற்கு சில இனவாத சக்திகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தாலும், ஜனாதிபதிக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையில் தொடர்ச்சியாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழிவகைகள் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.


பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை அவசியம் என்ற விடயத்தை ஜனாதிபதி அடிக்கடி வலியுறுத்தி வருகின்றார். எனவே நீண்ட காலமாகத் தீர்க்கப்படாதுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றும், இதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். நல்லிணக்கம் மற்றும் உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக் குழுவொன்றை விரைவில் அமைக்கவிருப்பதாகவும், இது குறித்த சட்டமூலத்தை விரைவில் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் ஏற்கனவே வடக்கு, கிழக்கு தமிழ்ப் பிரதிநிதிகளிடம் கூறியிருந்தார். சர்வதேச அரங்கில் இலங்கை வழங்கிய கடந்தகால உறுதிமொழிகளுக்கு அமைய யுத்தகாலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் விடயங்கள் குறித்து உண்மையைக் கண்டறிய வேண்டிய தேவை காணப்படுகிறது. இதற்கு இவ்வாறு அமைக்கப்படக் கூடிய ஆணைக்குழு உறுதுணையாக அமையும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது. எனவே, ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது இந்த விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்படலாம் என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

## இம்மாதம் புதுடில்லி செல்லவுள்ள ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உட்பட முக்கியஸ்தர்கள் பலருடன் சந்திப்பு



**நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியம் உதவிக்கரம் நீட்டியிருக்கும் சூழ்நிலையில், இலங்கை பெற்ற கடன்களை மறுசீரமைப்புச் செய்ய வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.**



# நெருக்கடியிலிருந்து நாடு மீள்வதாயின் தேசிய கடன் மறுசீரமைப்பு அவசியம்

உலக நாடுகள் மற்றும் சர்வதேச நிதிநிறுவனங்களிடமிருந்து இலங்கை பெற்றுக் கொண்ட கடன்களை மறுசீரமைப்பது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் ஒன்றாக இருந்தது. இதற்கு அமைய சீனா, இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் கடன் மறுசீரமைப்புக்கு பச்சைக்கொடி காட்டியிருந்தன. இந்த விடயத்தில் மத்தியஸ்தராகச் செயற்படுவதற்கு ஜப்பான் முன்வந்திருந்தது.

இது விடயத்தில் நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல தரப்பினருடன் பேச்சுகளை நடத்தியிருந்தார். அவர் மாத்திரமன்றி மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட அரசாங்க உயர்மட்ட அதிகாரிகள் பல சுற்றுக் கலந்துரையாடல்களை உரிய தரப்பினருடன் நடத்தியிருந்தனர்.

இவ்வாறான பின்னணியில் தேசிய ரீதியில் பெற்றுக் கொண்ட கடன்களை மறுசீரமைப்புச் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இது தொடர்பான செய்திகளே கடந்த சில தினங்களாக மக்கள் மத்தியில் பரபரப்பாகப் பேசப்படுகின்றன.

தேசிய கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக கடந்த வெள்ளிக்கிழமை வங்கிகளுக்கு விசேட அனுமதி வழங்கப்படுவதாக மத்திய வங்கியின் ஆளுநர் அறிவித்திருந்தார். தேசிய கடன் மறுசீரமைப்பின் காரணமாக மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுமா என்பது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இருந்தபோதும், வங்கியில் பணத்தை வைப்பில் இட்டவர்களுக்கோ அல்லது ஊழியர் சேமலாப நிதியம் உட்பட்ட எந்தவொரு பொதிநிதியின் அங்கத்துவத்துக்கோ பாதிப்பு ஏற்படாது என்ற உறுதிமொழியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சர் என்ற ரீதியில் வழங்கியுள்ளார். இந்தச் செயற்பாடானது நாட்டின் வங்கிக் கட்டமைப்பு அல்லது நிதி நிறுவனக் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையில் தாக்கம் செலுத்தாது என்றும், 50 மில்லியனுக்கும் அதிகமான வங்கிக் கணக்குகளை வைத்திருக்கும் வைப்பாளர்களின் வைப்புக்களுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும் ஜனாதிபதி அண்மையில் குறிப்பிட்டார்.



**வங்கியில் பணத்தை வைப்பில் இட்டவர்களுக்கோ அல்லது ஊழியர் சேமலாப நிதியம் உட்பட்ட எந்தவொரு பொதிநிதியின் அங்கத்துவத்துக்கோ எதுவிதப் பாதிப்பும் ஏற்படாது**

இது தொடர்பில் விளக்கமளித்த அவர், 2022 ஆம் ஆண்டின் இறுதியில், இலங்கையின் மொத்த அரச கடன் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) 83,700 மில்லியன் டொலர்களாகும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 128.3 வீதமாகும். 2022 ஆம் ஆண்டின் இறுதியில், மொத்த வெளிநாட்டுக் கடன் தொகை 41,500 மில்லியன் அமெரிக்க டொலர்கள். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 63.6 வீதம் ஆகும். அப்போது மொத்த உள்நாட்டுக் கடன் தொகை 42,100 மில்லியன் அமெரிக்க டொலர்கள். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 64.6 வீதம் ஆகும்.

எனவே நாட்டின் கடனை மறுசீரமைக்காமல் பேணினால், 2035ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 100 வீதத்துக்கும் அதிகமான அரச கடன் இருக்கும் எனச் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் கடன் நிலைத்தன்மையை உருவாக்குவதற்கு, கடன் மறுசீரமைப்பு அவசியமானது மற்றும் உள்நாட்டு கடனும் மறுசீரமைக்கப்பட வேண்டும். எதிர்வரும் 5 வருடங்களில் மாத்திரம் 17 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு கடன் வழங்குநர்களிடமிருந்து பெறப்படும் எனவும், அதற்கிணங்க எமது உள்நாட்டு கடன்வழங்குநர்களும் இதற்கு பங்களிக்க வேண்டியிருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் பொருளாதார மீட்சி, வட்டி வீதக் குறைப்பு, அரசாங்கம் இலகுவாக மானியங்கள் வழங்க முடிந்தமை, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள கடன்சுமை அடுத்த 10 வருடங்களில் குறைந்து அதன் மூலம் கிடைக்கும் பலன்களை நாட்டு மக்களுக்கு வழங்க எதிர்பார்த்திருப்பதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், தேசிய கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளின் போது ஊழியர் சேமலாப நிதியத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக் கூடாது எனக் கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மனுவொன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்கு தேசிய கடன் மறுசீரமைப்பு அவசியம் என்பதை கொள்கை ரீதியாக எதிர்க்கட்சிகள் யாவும் ஏற்றுக்கொண்டுள்ளன.

இருந்தபோதும் அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் மக்களையோ அல்லது வங்கிக் கட்டமைப்பையோ பதித்துவிடக் கூடாது என்பதே அவர்களின் சரிசனையாக உள்ளது.

மறுபக்கத்தில், சிலர் தேவையற்ற அச்சங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றனர். இருந்தபோதும், நாட்டை சரியான பாதையில் கொண்டு சென்று அனைவருக்கும் நன்மையைப் பெற்றுக்கொள்வதாயின் சகல தரப்பினரினதும் ஒத்துழைப்பு நிச்சயம் அவசியமாகும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

**மக்களை தேவையற்ற விதத்தில் அச்சத்துக்கு உள்ளாக்கி, அரசியல் இலாபம் தேடுவதற்கு சிலர் முயற்சி!**

இது இவ்விதமிருக்க, நலிவடைந்த சமூகத்தினரின் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் அஸ்வெசும நலன்புரித் திட்டத்தில் எந்தவொரு தரப்பினருக்கும் பாதிப்பை ஏற்படுத்த இடமளிக்கப் போவதில்லையென அரசாங்கம் திட்டவட்டமாகக் கூறியுள்ளது. அஸ்வெசும திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவில் குறைபாடுகள் காணப்படுவதாகக் கூறி நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து கரிசனைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இது விடயத்தில் மேன்முறையீடு செய்வதற்கு ஜூலை மாதம் 10ஆம் திகதி முதல் காலஅவகாசம் வழங்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள், பாதிக்கப்படக் கூடியவர்கள், ஏழைகள் மற்றும் மிகவும் ஏழ்மையானவர்கள் ஆகிய 04 சமூகப் பிரிவுகளின் கீழ், அஸ்வெசும நலன்புரி நன்மைகள் வழங்கப்படுவதுடன், ஊனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு வழமை போன்று உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.


இதற்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

சமுர்த்தி பயனாளிகளில் தகுதியற்ற பலர் இருந்தமையால் புதிய நலன்புரித் திட்டமொன்றை அரசாங்கம் அறிவித்திருந்தது. இதில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் நிவர்த்திக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் மக்களை தேவையற்ற விதத்தில் அச்சத்துக்கு உள்ளாக்கி அரசியல் இலாபம் தேடுவதற்கும் சிலர் முயற்சிக்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடையாக அமையும் என்பதையும் நாம் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**பி.ஹர்ஷன்...**

---

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் மூன்று நாள் அமெரிக்க உத்தியோகபூர்வ விஜயமானது சர்வதேச அளவில் கூர்ந்து கவனிக்கப்படுவதற்குக் காரணம் இருக்கிறது. அமெரிக்கா எந்த அளவுக்கு இந்தியாவுக்கு முக்கியத்துவம் வழங்குகிறது என்பதாக மட்டுமல்லாமல், இரு நாடுகளுக்கும் இடையே இதுநாள் வரை இருந்துவந்த தயக்கம் அகன்று வெளிப்படையான நட்புறவாக மாறியிருப்பதன் அடையாளமாக அதை உலகம் பார்க்கிறது.**



# சர்வதேசத்தினால் உற்றுநோக்கப்படும் பிரதமர் மோடியின் அமெரிக்க விஜயம்!

சாதாரண விஜயத்துக்கும், அமெரிக்காவுக்கான அரசுமுறைப் பயணத்துக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. ஆண்டுதோறும் நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள பிரதமர்கள் போவதும், அமெரிக்க ஜனாதிபதியைச் சந்திப்பதும் போன்றதல்ல அரசுமுறைப் பயணம். இதற்கு முன்னால் இந்திய பிரதமர்களில் டொக்டர் மன்மோகன் சிங்கிற்கு மட்டுமே அந்த கௌரவம் வழங்கப்பட்டது.

ஜனநாயக நாடுகளின் தலைவர்கள் மட்டுமே அமெரிக்காவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர். சிவப்புக் கம்பள வரவேற்பு, வெள்ளை மாளிகை விருந்துக்கு வரும்போது 21 துப்பாக்கிக் குண்டுகள் முழங்க மரியாதை, அமெரிக்க ஜனாதிபதியின் பென்சில்வேனியா விருந்தினர் மாளிகையான 'பிளேர் ஹௌஸ்' இல் தனிப்பட்ட முறையில் ஜனாதிபதியுடன் சந்திப்பு என்பன அதன் சிறப்புகள் ஆகும்.

இதற்கு முன்னர் பிரதமர் நரேந்திர மோடி மேற்கொண்ட 2014, 2016, 2017, 2019 அமெரிக்கப் பயணங்களிலிருந்து இப்போதைய அரசுமுறைப் பயணம் வேறுபடுகிறது, முக்கியத்துவம் பெறுகிறது.

குஜராத்தில் 2005 இல் முதல்வராக இருந்த நரேந்திர மோடிக்கு குஜராத் கலவரத்தைக் காரணம் காட்டி நுழைவு அனுமதி மறுத்த அமெரிக்கா, இப்போது சிவப்புக் கம்பள அரசுமுறைப் பயணத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது. இரண்டாவது முறையாக அமெரிக்க நாடாளுமன்றத்தில் உரையாற்றும் வாய்ப்பையும் வழங்கியிருப்பது, எந்த அளவுக்குப் பிரதமர் நரேந்திர மோடிக்கும், இந்தியாவுக்கும் அமெரிக்கா முக்கியத்துவம் தருகிறது என்பதன் வெளிப்பாடு ஆகும்.

2008 இல் டொக்டர் மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது, இந்தியாவும் அமெரிக்காவும் மேற்கொண்ட அணு எரிசக்தி கூட்டுறவு ஒப்பந்தம்தான், இருநாட்டு உறவுக்குமான அடித்தளத்தை உருவாக்கித் தந்தது.

அப்போது மன்மோகன் சிங் தொடங்கி வைத்த முயற்சி, இப்போது பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சிக் காலத்தில் முழுமை பெற்றிருக்கிறது எனலாம். இந்த இடைவெளியில் அமெரிக்கா நான்கு ஜனாதிபதிகளைச் சந்தித்து விட்டது.

ஜோ பைடன் ஜனாதிபதியான பிறகு, வெள்ளை மாளிகையின் அழைப்பின் பேரில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்ட மூன்றாவது உலகத் தலைவர் பிரதமர் நரேந்திர மோடி. இதற்கு முன்னர் பிரான்ஸ், தென்கொரியா ஜனாதிபதிகளுக்கு மட்டுமே அந்த கௌரவம் வழங்கப்பட்டது.

191 பில்லியன் டொலர் இந்திய_ அமெரிக்க வர்த்தகத்தின் அளவு என்றால், இரு நாடுகளிலும் நிறுவனங்கள் செய்திருக்கும் முதலீடுகள் தலா 40 பில்லியன் டொலரிலும் அதிகம். அமெரிக்காவின் 50 மாநிலங்களிலும் இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்திருக்கின்றன. அமெரிக்க வாழ் இந்தியர்களின் எண்ணிக்கை 49 இலட்சம் என்றால், 2 இலட்சத்துக்கும் அதிகமான இந்திய மாணவர்கள் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் படிக்கிறார்கள்.

**தாக்குதல் நடத்தும் தீவிரவாதக் குழுக்களை நீதியின் முன்பாக நிறுத்த பாகிஸ்தான் முன்வர வேண்டுமென இருநாட்டுத் தலைவர்களும் கூட்டாக வேண்டுகோள். வெள்ளை மாளிகையின் கிழக்கு அறையில் இடம்பெற்ற குவேட் ஒன்றுகூடலில் பைடனால் உரையாற்றுவதற்கு முதலில் அழைக்கப்பட்ட தலைவர் என்னும் பெருமையும் மோடிக்குக் கிடைத்தது. முன்னதாக மோடியுடனான ஒரு மணித்தியாலத்துக்கும் மேற்பட்ட சந்திப்பின்போது பைடன் மோடியை "எனது நண்பர்" என்று கூறி பெருமிதமடைந்தார்**

இவையெல்லாம் மட்டுமல்ல, இந்தியாவுடனான நட்புறவை மேம்படுத்த அமெரிக்கா விரும்புவதற்கான காரணம், இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த அமெரிக்காவுக்கு இந்தியாவின் நட்புறவு அவசியம். இந்தியாவை அகற்றி நிறுத்திவிட்டு எந்தவொரு சர்வதேச பிரச்சினையையும் உலகம் எதிர்கொள்ள முடியாது என்பதை அமெரிக்க நிர்வாகம் புரிந்து கொண்டிருக்கிறது.

சீனாவும் ரஷ்யாவும் கைகோர்க்கும் நிலையில், ஜனநாயக நாடான இந்தியாவும் அமெரிக்காவும் பழைய மனநிலையிலிருந்து வெளியே வந்து இணைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. 2020 கல்வான் பள்ளத்தாக்கு தாக்குதலின்போது, அமெரிக்காவின் தொழில்நுட்ப உதவியும், இராணுவப் பின்புலமும் உறுதிப்படுத்தப்பட்டதால்தான் சீனாவைத் துணிவுடன் இந்தியாவினால் எதிர்கொள்ள முடிந்தது. சீனாவுடன் மோதல் ஏற்பட்டால், ரஷ்யா நடுநிலை வகிக்குமே தவிர, உதவி வழங்க முன்வராது. அதனால், அமெரிக்க நட்புறவு என்பது இந்தியாவுக்கு தவிர்க்க முடியாததாகிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் பொறுப்பேற்றபிறகு, நரேந்திர மோடி முதன் முறையாக அவரைச் சந்தித்ததால், மோடியின் இந்த விஜயம் மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

வெள்ளை மாளிகையின் கிழக்கு அறையில் இடம்பெற்ற குவேட் ஒன்றுகூடலில் பைடனால் உரையாற்றுவதற்கு முதலில் அழைக்கப்பட்ட தலைவர் என்னும் பெருமையும் மோடிக்குக் கிடைத்தது. முன்னதாக மோடியுடனான ஒரு மணித்தியாலத்துக்கும் மேற்பட்ட சந்திப்பின்போது பைடன் மோடியை "எனது நண்பர்" என்று கூறி பெருமிதமடைந்தார்.

**இந்தோ – பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த அமெரிக்காவுக்கு இந்தியாவின் நட்புறவு அவசியம். இந்தியாவை அகற்றி விட்டு எந்தவொரு சர்வதேச பிரச்சினையையும் உலகம் எதிர்கொள்ள முடியாது என்பதை அமெரிக்க நிர்வாகம் புரிந்து கொண்டுள்ளது**

இதேவேளை ஏனைய நாடுகளைத் தாக்கும் தீவிரவாத நடவடிக்கைக்கு பாகிஸ்தான் தனது நாட்டில் இடமளிக்காது என்பதை உறுதிபடத் தெரிவிக்க வேண்டும் எனவும், மும்பை பயங்கரவாதத் தாக்குதல், பதான்கோட் தாக்குதல் மற்றும் இந்திய எல்லையில் அத்துமீறும் தாக்குதல்களை நடத்தும் தீவிரவாதக் குழுக்களைப் பாகிஸ்தான் நீதியின் முன் நிறுத்த வேண்டும் எனவும் இரு நாட்டுத் தலைவர்களும் கூட்டாக கோரிக்கை விடுத்தனர்.

இரு தலைவர்களும் சந்தித்த போது உரையாடிக்கொண்ட முக்கிய விடயம் பாகிஸ்தான் பயங்கரவாதத்திற்கு துணைபோகக் கூடாது என்பதும் இரு நாட்டுக்குமான வர்த்தகத் தொடர்புகளை அதிகரிக்க வேண்டும் என்பதுமாகும்.

இந்தியாவின் கிழக்குப் பகுதியும் மேற்குப் பகுதியும் தீவிரவாத அமைப்புக்களின் தாக்குதலாலும், பாகிஸ்தானின் இராணுவ நடவடிக்கையாலும் அதிக ஆபத்தினை எதிர்நோக்கிவருகின்றன. இதனால் பாகிஸ்தானின் உறுதிப்பாடு இராணுவ, பொருளாதார வளர்ச்சி என்பன இந்தியாவைப் பாதிக்கும் விடயமாக உள்ளன.

இதேசமயம் பாகிஸ்தானின் இராணுவ வளர்ச்சியானது இந்தியாவின் இருப்பினை ஆபத்துக்குள்ளாக்கி விடுமென இந்தியத் தரப்பு அச்சமடைந்துள்ளது.

பாகிஸ்தானுக்கும் சீனாவுக்குமான உறவானது மிக உயர்ந்த நிலையில் உள்ளது. அணுவாயுதப் பரிசோதனையிலிருந்து குவாடர் துறைமுகம் அமைப்பதற்கான நிதி உதவி வரை சீனா பாகிஸ்தானுடன் நெருக்கமடைந்துள்ளது. கொரகொராம் உயர்பாதை ஏறக்குறைய 1300 கி.மீ நீளமுடைய சீன_ பாகிஸ்தான் வர்த்தகப் பாதையாக உள்ளது. இதனூடாக இரு நாட்டுக்குமான வர்த்தக உறவு மட்டுமன்றி மேற்காசியாவில் கொள்வனவு செய்யும் எரிபொருளை பாகிஸ்தானூடாக பரிமாற்றிக் கொள்வதிலும் சீனா பாகிஸ்தானுடன் நெருக்கடைந்துள்ளது.

பாகிஸ்தானின் அணுவாயுதத் தொழில்நுட்பம் தீவிரவாதத்திடம் சென்றுவிட்டால், அதனால் ஏற்படும் பாதிப்பு இந்தியாவுக்கானது என்றே இந்தியா கருதுகிறது.

எனவே பிரதமர் மோடியின் அமெரிக்கப் பயணம் பிராந்திய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் அதிகமான எதிர்பார்ப்பைத் தந்துள்ளது.

அமெரிக்க நிறுவனங்களின் நிர்வாகிகளைச் சந்தித்துப் பேசிய பின்னர், நரேந்திர மோடி இந்திய வம்சாவளியான அமெரிக்கத் துணை அதிபர் கமலா ஹாரிஸைச் சந்தித்துப் பேசினார். அதைத் தொடர்ந்து இருவரும் கூட்டாகச் செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அப்போது பேசிய பிரதமர் மோடி, "இந்தியாவும் அமெரிக்காவும் எப்போதுமே பங்காளிகள்தான். இரு நாடுகளுக்கும் பல்வேறு விஷயங்களில் ஒற்றுமை இருக்கிறது. இந்தியாவும் அமெரிக்காவும் மிகப்பெரிய, மிகப் பழைமையான ஜனநாயக நாடுகள். இரு நாடுகளும் மதிப்புகளைப் பகிர்ந்து கொள்கின்றன. அமெரிக்காவுடனான இந்தியாவின் ஒற்றுமை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது" என்று கூறினார்.

**எஸ்.சாரங்கன்...**

ESOFT
Shaping Lives, Creating Futures.

# இடமிருந்து IT & BUSINESS MANAGEMENT பட்டப்படிப்பு

## அரசாங்கத்தின் வட்டியில்லா கடன் மூலமாக

IFSLS

### 2019, 2020, 2021 உ/த சித்தியெய்திய மாணவர்களுக்கானது

**BACHELOR OF INFORMATION TECHNOLOGY (HONS)** Duration - 4 YEARS

தெரிவு செய்வதற்கான துறைகள்

1. SOFTWARE ENGINEERING
2. INFORMATION SYSTEMS SECURITY
3. COMPUTER NETWORKS
4. ROBOTICS & SMART SYSTEMS

**BACHELOR OF BUSINESS MANAGEMENT (HONS)** Duration - 4 YEARS

தெரிவு செய்வதற்கான துறைகள்

1. LEADERSHIP & CHANGE MANAGEMENT
2. EVENT MANAGEMENT
3. MANAGING INNOVATIONS
4. SUSTAINABILITY & BUSINESS ETHICS
5. KNOWLEDGE MANAGEMENT

**கடன் திட்டத்தின் அனுகூலங்கள்**

- பாடநெறிக்கான முழுக் கட்டணமும் கடனாக வழங்கப்படும்
- 0% வட்டி
- தொழில் புரியும் காலத்தில் கடனை மீள்செலுத்துதல்
- முதல் 5 வருடங்களுக்கு கட்டணம் ஏதுமில்லை
- வாழ்க்கைச் செலவுக்காக மேலதிகமாக ரூ. 300,000 வழங்கப்படும்
- கடனை மீள் செலுத்துவதற்காக 7 வருட கால அவகாசம்

**30** முழுமையான / பகுதியளவிலான புலமைப்பரிசில்கள்

விண்ணப்பிப்பதற்கு : bit.ly/esoft-loans

முழுமையான மற்றும் பகுதியளவிலான புலமைப்பரிசில் பெறுவர்கள் மெரிட் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்




ESOFT இனை ஏன் தெரிவுசெய்ய வேண்டும்?

- உ தாபித கால அசைக்க முடியாத நம்பிக்கை மற்றும் பிரித்தானியப் பட்டப்படிப்புகளை நடாத்திய அனுபவம்
- ESOFT பட்டதாரிகளுக்கு IT துறையில் காணப்படும் உயர் வாய்ப்புக்கள்
- சர்வதேச அங்கீகாரம்
- புகழ்பெற்ற கல்வியலாளர் குழாம்
- IT துறையிலுள்ள முன்னணி நிறுவனங்களில் தொழில் வாய்ப்பு
- உயர் சாதனையாளர்களுக்கு முதுமாணி / கலாநிதி பட்டப்படிப்புக்களுக்கான புலமைப்பரிசில்கள்

மேலதிக விபரங்களுக்கு
ஷர்மினா : 0742 708 324
நிஷாமி : 0764 770 105

அருகிலுள்ள ESOFT கிளையை நாடுங்கள்

esoft.lk/student-loan

## ESOFT METRO CAMPUS

இலங்கையின் பாரிய தனியார் உயர்கல்வி வலையமைப்பு
தலைமை அலுவலகம் : இல 03, டி பொன்சேகா பிளேஸ், கொழும்பு 4. | நாடு முழுவதும் 40 கிளைகள்

உயர்கல்வி அமைச்சினால் அனுமதியளிக்கப்பட்டது | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது

MEMBER OF
The Association of Commonwealth Universities

STRATEGIC PARTNERS
Kingston University London
LONDON METROPOLITAN UNIVERSITY
Pearson | BTEC PLATINUM AWARD WINNER 2017 | 2018 | 2019 | 2020

# கல்வி அமைச்சு

## 7 ஆவது உள்ளீர்ப்புக்கான விண்ணப்பம் கோரல்

# வட்டியில்லா மாணவர் கடன் திட்டம்

IFSLS

கல்வி அமைச்சின் மாணவர் கடன் பிரிவினால், இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நடத்தப்படும் க.பொ.த (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்த இலங்கை மாணவர்களுக்கான வட்டியில்லா மாணவர் கடன் திட்டத்தை (IFSLS) செயல்படுத்துகிறது.
கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களால் நடாத்தப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டப்படிப்புகளைப் பின்பற்ற மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது.

**2019/2020/2021 ஆகிய ஆண்டுகளில் இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் 7 ஆவது மாணவர் உள்ளீர்ப்புக்கு தகுதி பெறுகின்றனர்**

### எவ்வாறு விண்ணப்பிப்பது

தகுதியான விண்ணப்பதாரிகள் www. studentloans.mohe.gov.lk எனும் இணையதளம் ஊடாக நிகழ்நிலையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

### பட்டக் கற்கைநெறிகள்

சகல பட்டக் கற்கைநெறிகளும் ஆங்கிலத்திலேயே மேற்கொள்ளப்படுவதுடன், www. studentloans.mohe.gov.lk எனும் இணையத்தளத்தில் உள்ள மாணவர் கையேட்டின் மூலம் குறிப்பிட்ட பட்ட கற்கைநெறிகளை அணுக முடியும்.

### விண்ணப்பம் சமர்ப்பிக்கும் காலம்

ஆரம்ப திகதி: 2023.07.04
முடிவுத் திகதி: 2023.08.07

### ஆகக்குறைந்த தகைமை தேவைப்பாடுகள்

(i)க.பொ.த(உ/த) பரீட்சையில் அனுமதிக்கப்பட்ட பாடங்கள் 3இல் குறைந்த பட்சம் மூன்று அமர்வுகளுக்கு மேற்படாமல் சாதாரண சித்தி (S) 3 இனை குறைந்த பட்சம் ஒரே அமர்வில் பெற்றிருக்க வேண்டும் மற்றும்
(ii)மேலே (i) குறிப்பிடப்பட்ட ஏதாவதொரு அமர்வில் பொது ஆங்கிலப் பரீட்சையில் 30 க்கும் குறையாத புள்ளிகளைப் பெற்றிருத்தல் மற்றும்
(iii)க.பொ.த (உயர்தர) பரீட்சையில் பொது ஆங்கிலத்தில் சாதாரண (S) சித்தி அல்லது க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் சாதாரண (S) சித்தி மற்றும்
(iv)விண்ணப்பதாரிகளின் வயது 2023 ஆகஸ்ட் 07ஆம் திகதியன்று 26 அல்லது அதற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

### ஏனைய தகைமைகள்

பட்டக் கற்கைநெறிக்கான ஏனைய நுழைவுத் தகைமைகளைத் தெரிந்து கொள்ள www.studentloans.mohe.gov.lk எனும் இணையதளத்தில் மாணவர் கையேட்டைப் பார்வையிடவும்.

### தேர்ந்தெடுப்பதற்கான வரைமுறைகள்

குறித்த பட்ட கற்கைநெறிக்கு கீழ் வரும் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு உள்ளீர்ப்பு நடைபெறும்
i. விண்ணப்பதாரி கொண்டிருக்க வேண்டிய ஆகக் குறைந்த தகைமைகள்
ii.பட்டக் கற்கைநெறிக்கான விண்ணப்பதாரியினால் குறிப்பிடப்பட்ட விருப்புத் தேர்வுகள்
iii.குறிப்பிட்ட அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவகத்தால் அந்தந்தத் துறைகளுக்காக ஒதுக்கப்படும் ஆசனங்களின் எண்ணிக்கை.
iv.குறித்த துறைகளுக்கு அரச சார்பற்ற கல்வி நிறுவனங்களால் ஒதுக்கப்பட்ட ஆசனங்களிலும் பார்க்க கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை அதிகமாய் இருக்கும் பட்சத்தில் விண்ணப்பதாரிகள் க.பொ.த உயர் தரப் பரீட்சையில் பெற்ற Z பெறுமானம் கருத்தில் கொள்ளப்படும்.

### அதி கூடிய கடன் தொகை

4 வருட பட்டக் கற்கைநெறிக்கு ரூபாய் 800,000/=
3 வருட பட்டக் கற்கைநெறிக்கு ரூபாய் 600,000/=
மாணவர் கடனுதவித் தொகை வருடத்துக்கு ரூபாய் 75இ000/=

### மேலதிக தொடர்புகளுக்கு அழையுங்கள்

மாணவர் கடன் பிரிவு
அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவு
கல்வி அமைச்சு, இல 989/4A,
விக்கிரமசிங்க பிளேஸ்,
எதுல்கோட்டே.

E: dsls@mohe.gov.lk
W: www.mohe.gov.lk
T: 070 3555 970 - 979
F: 0112-879 719

### கடனை எவ்வாறு பெறுவது

கல்வி அமைச்சினால் தேர்வுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு கடன் பெற இலங்கை வங்கிக்கு சிபாரிசு செய்யப்படுவதுடன், மாணவர்கள் தமது கடன் விண்ணப்பத்தை, இரண்டு சிபாரிசுதாரர்களுடன் குறிப்பிட்ட வங்கிக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.
(தாய்/தந்தை உடன் மற்றையவர் நெருங்கிய உறவினர் ஒருவர்)

மாணவர்கள் கல்வியில் காண்பிக்கும் முன்னேற்றத்தைப் பொறுத்து, கல்வியமைச்சின் பரிந்துரையில் கட்டணங்கள் தவணை வாரியாக வழங்கப்படும்.

### மாணவர்களின் பொறுப்பு

வட்டியில்லா கடன் திட்டத்தின் கீழ் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களும் கற்கைநெறியின் ஒவ்வொரு பாடத்துக்கும் குறைந்த பட்சம் "C" சித்தியைப் பாடநெறிக் காலத்தினுள் பெறவேண்டும் என்பதோடு, அவர்களது கல்விக் காலத்தில் 80% வருகையை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

### கடனை மீளச் செலுத்தும் முறை

மொத்த கடன் காலமானது 12 வருடங்களாகும்.
கற்கை காலம் மற்றும் ஒருவருட சலுகைக் காலத்தின் பின்னர் கடன் தொகையினை மீளச் செலுத்த ஆரம்பிக்க வேண்டும்.

கடன் மீள் செலுத்துகையானது, 4/3 வருட பாடநெறிகளுக்கான முழுக் கடன் தொகையானது 84/96 தவணைகளில் செலுத்தி முடிக்கப்பட வேண்டும்.

### வட்டியில்லா மாணவர் கடன் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்கள்

CINEC CAMPUS, SIBA CAMPUS, CA, ICBT CAMPUS, KIU, SLTC, saegis, ESOFT Metro Campus, RIC, BCI Campus, Horizon Campus, NIIBS

# "மர்ஹூம் என்.ரீ.பாரூக் வெற்றிக்கிண்ணம்" ஏறாவூர் YSSC வசமானது

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்றின் முன்னனி உதைபந்தாட்ட கழகமான ஏஸ் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவில் அக்கரைப்பற்று உதைபந்தாட்ட சம்மேளனம் நடாத்திய "கோல் கீப்பர் மர்ஹூம் என்.ரீ.பாறூக் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம்" உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் ஏறாவூர் யங் ஸ்டார் விளையாட்டு கழகம் (YSSC ஏறாவூர்) சம்பியனானது.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களை சேர்ந்த 16 முன்னனி உதைபந்தாட்ட அணிகள் கலந்து கொண்ட இத்தொடரின் இறுதிப்போட்டி அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் வெள்ளிக்கிழமை (30) மாலை நடைபெற்றது. இறுதிப்போட்டிக்கு அக்கரைப்பற்று "சூ சுற்றி விளையாட்டு கழகமும், ஏறாவூர் யங் ஸ்டார் விளையாட்டு கழகமும் (YSSC) தெரிவு செய்யப்பட்டது. இறுதிப்போட்டில் ஏறாவூர் யங் ஸ்டார் அணி வீரர்கள் மிகவும் திறமையாக விளையாடி 5:1 என்ற கோல் கணக்கில் அக்கரைப்பற்று சூ சுற்றி அணியினரை தோற்கடித்து வெற்றிக்கிண்ணம் மற்றும் ஐம்பதினாயிரம் ரூபாய் பணப்பரிசையும் பெற்றதோடு, இத்தொடரின் சிறந்த வீரராக யங் ஸ்டார் அணியின் முஹம்மட் முஸ்தாக் தெரிவு செய்யப்பட்டார். ஏஸ் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் ஐம்பது பேருக்கு ஞாபகார்த்த சின்னங்களும் இதன் போது வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.












வாரமஞ்சரி BUDGET aDZ It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

2025 Advanced Level Theory Chemistry English Medium
Online Class Tuesday
Physical Classes
About Tutor

වේයන් මර්ධනයට විසඳුම
FREE INSPECTION
Solution to Get rid of Termites
Pre & Post Construction treatments For Termites
RODENT CONTROL
To Minimize the Pest Attack & Usage of Pesticide Keep Your environment Clean
COCKROACHES, FLIES MOSQUITOES, ANTS BED BUGS, WOOD BORES
Hotline: 074 031 5517
Licence No - RP/PCR/WP/100, Approved by Registrar of Pesticides
Leemaka Industries (Pvt)Ltd. (PV 120625)
No. 374/5, Robert Gunawardana Mw, Battaramulla.
Tel - 0112 785344, Email - Leemakaindustries@gmail.com

අමානෝ වැහිපිලි සහ සෙවිලි
(Zinc Aluminium Sheet)
0777 394 679 | 070 663 33 88

பயாகலவில்
கடற்கரைக்கு முன்னாலுள்ள வெறுங்காணி விற்பனைக்கு.
தயவு செய்து என்ற இலக்கத்தை அழைக்கவும்.
075 7 068 068

HOUSE FOR SALE IN COLOMBO 05
OR PART EXCHANGE WITH A LUXURY APARTMENT WITH CASH
SUPER LUXURY SPACIOUS 4 BEDROOM HOUSE IN COLOMBO 05 WITH GARDEN FOR SALE FOR RS. 200 MILLION OR PART EXCHANGE WITH A LUXURY APARTMENT IN COLOMBO WITH BALANCE CASH.
This house previously occupied by the expatriates. 3000 sq.ft. Three Phase Electricity. All Bedrooms Air Conditioned. One Storeroom, Garage, Servants Toilet, Roller Gates. Highest Offer
INQUIRIES - 071 930 4400, 077 020 5544

HOUSE TO LET OR LEASE
JALIYAGODA- PILIYANDALA
Five Room Fully Tiled upstair House, Spacious Living, Dining area, Attached Bath with Hotwater, Separate Servant's Toilet Facing Colombo- Horana Main Road. Parapet Wall Right Round & Garage. To Let or Lease from July
Contact: 0702 330 970 or 0112 790 147

வாரமஞ்சரி BUDGET aDZ

MAHARA - KADAWATHA, KANDY ROAD
LUXURY HOUSE FOR SALE
5 ROOMED HOUSE ON 24.5 P. LAND.
20 METRES TO COLOMBO - KANDY ROAD.
NEAR MAHARA - KADAWATHA 9TH MILE POST
55.5 MILLION
Contact 0777 881 767

ARIYARATHNE CONSTRUCTIONS
අමානෝ වහල
කාප්ප වහල
වීදුරු වහල
විනිවිද වහල
සහ කැනපි
Warehouse Construction
අත්තිවාරමේ සිට සියලුම නිවාස ඉදිකිරීම
Polycarbonate
අමානෝ පිලි 0.47 (mm)
0777 24 23 19 / 0711 24 23 19
ariyarathneconstruction@yahoo.com
www.ariyarathneconstruction.com
www.facebook.com/ariyarathneconstruction

Tea Manufacturing & Export Company
REQUIRES INVESTORS

| | Amount Required | Profit share monthly % | Profit share monthly Rs. |
|---|---|---|---|
| Manufacturing | 25,000,000.00 | 3% | 750,000.00 |
| Export | 5,000,000.00 | 4% | 200,000.00 |

Minimum Investment 1,000,000/-
- Investment return on monthly basis
- Both factories are Running
- Share tranfer also can be considered

STL International (pvt) Ltd.
Kiyaduwa, Akuressa.
077 533 78 25

SPACE FOR A WAREHOUSE FROM KOTIKAWATTA
FLOOR AREA - 63,051 SQ.FT.
LARGE AREA FOR STORING OR DISTRIBUTION
FACILITIES FOR 40 FT. CONTAINER ACCESS
HIGHEST AND MODERN INFRASTRUCTURE FACILITIES
MODERN OFFICE AND MEETING HALL FACILITIES
FIXED RETURN OF RS. 3.5 MILLION PER MONTH FOR YOUR INVESTMENT
0714 762 249 - 0716 851 555

வாரமஞ்சரி BUDGET aDZ போட்டோ குறும் விளம்பரம்





Mitubishi Montero 2010 KM-xxxx 2nd Registered Owner, Petrol, 3000cc, Company maintained, 179000 km, Sunroof, Leather electric seat, Rockford sound, Line A/C, Dual A/C, Multifunction, Cruise control, New face, 2022 Exchange possible. Beige interior 0773 735 489

kup-01





Toyota Premio 2013 260 - KW xxxx, 2nd owner, Silver Colour, Mileage 77000km, Reports available, excellent condition, Kaduwela 0777-332 715

kuk-01





Toyota Landcruiser V8 2015/2016 CAQ 3XXX pearl white. First owner 57000 km used by a lady Director of an Institution Maintained only by Toyota for sale to the highest offer 0717 119 119

kus-01

VALUIABLE LAND IN KADUWELA TOWN FOR SALE
- 37.15 PERCHES
- 100 METRES AWAY FROM KADUWELA
- WITH A 15000 SQ.FT. STORES
- WITH A TWO STOREY HOUSE
- INTERNATIONAL AND GOVT: SCHOOLS CLOSE BY
- CLEAR DEEDS
35 LAKHS PER PERCH
BANK LOAN FACILITIES
0714 762 249 - 0716 851 555

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com



இந்தியத் தமிழர்கள் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு 200 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்ட எழுச்சி விழா கேகாலையில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்...



கொழும்பு கொட்டாஞ்சேனை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் சுவாமி ஜெகதாத்மானந்தா சரஸ்வதியின் "தியான யோகா விளக்கங்கள் தியானத்தின் வகைகள்" என்னும் கருப்பொருளில் ஆன்மீக சொற்பொழிவும் பயிற்சியளிப்பும் நடைபெற்றது. நிகழ்வில் ஆலய நிர்வாகிகள் சார்பில் விஜயவேல், எஸ். ரி. சிவகுமார் செட்டியார் பொன்னாடை போர்த்தி மலர்மாலை கௌரவம் செய்வதையும் சுவாமியின் சொற்பொழிவு நிகழ்வையும் கலந்துகொண்ட பக்தர்களையும் காணலாம்.



கொழும்பு வடக்கு தொகுதி லுனு பொகுன வாட்டர மேல் புனித சென் அன்ரூஸ் சனசமூக நிலையத்தில் புனரமைக்கப்பட்ட கிராமசேவகர் அலுவலகத்தை, உள்துறை ராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், தேசிய அடையாள அட்டை விண்ணப்பப் படிவத்தினை புதிய கிராம சேவகர் எஸ். சசிதரன், முன்னாள் லுனுபொகுன வட்டார மாநகர சபை உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்கவுக்கு வழங்குவதையும், இந்நிகழ்வில் கலந்து கொண்ட கொழும்பு மாவட்ட செயலாளர் கே.ஜி. விஜயசிரி, மாநகர சபை ஆணையாளர் பத்திரான ஜெயரட்ன, பாராளுமன்ற உறுப்பினர் யாமினி குணவர்த்தன, கொழும்பு வடக்கு பிரதேச செயலாளர் நாலக்க டிஸநாயக்க ஆகியோரையும் படங்களில் காண்க.



பம்பலப்பிட்டிய சென் பீட்டர்ஸ் கல்லூரியின் 100வது ஆண்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வு 30.06.2023 அன்று கல்லூரி முன்றலில் கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ரன்ஜித் ரொட்ரிகோ தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கலந்து கொண்டு ஆராதனை நிகழ்வினையும் நூற்றாண்டு நிகழ்வினை முடித்து வைத்தார்.இந் நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர்கள், பழைய ஆசிரியர்கள் தற்போதைய மாணவர்கள், ஆசிரியர்கள்ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

(படம்: அஷ்ரப் ஏ சமத்)



பழம்பெரும் மேடை நாடக நடிகரும் இலங்கை தமிழ், சிங்கள சினிமா நடிகருமான எம்.கே. சுதாகரின் பிறந்தநாளையொட்டி சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஸ் நேற்று முன்தினம் கொழும்பு 07, பொது நூலக மண்டபத்தில் கேக் வெட்டி பிறந்த நாளை கொண்டாடியபோது பிடிக்கப்பட்ட படம். இதில் ஏனைய சில கலைஞர்களும் கலந்து கொண்டார்கள்.

(படம் : எம். நசார்)



யாழ்.அச்சுவேலி குடியேற்றப்பகுதியில் வறுமை கோட்டின்கீழ் வாழும் குடும்பமொன்றுக்கு வாழ்தார உதவியாக நிலக்கடலை, பொதி செய்யும் இயந்திரம், தராசு போன்றவை வழங்கப்பட்டன. முன்னாள் யாழ். மாநகரசபை முன்னாள் உறுப்பினரும் யாழ். மாவட்ட தேசோதய தலைவருமான லயன் கலாநிதி நா.தனேந்திரன், வைத்தியர் சற்குருநாதன் மற்றும் உறுப்பினர்கள் சகிதம் நேரில் சென்று குடும்பத் தலைவியிடம் இவற்றை கையாளித்தனர்.

(படம் வேலணை குறூப் நிருபர்)



தமிழக அரசு மலேசிய அரசு சிறு குறுந்தொழில் அமைச்சகத்தின் வழிகாட்டலில் பன்னாட்டு சிறு குறுந்தொழில் வர்த்தக மாநாடு மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் கடந்த 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் நடைபெற்றது. உலக தமிழ் வம்சாவளி அமைப்பு மற்றும் உலக தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவருமான ஜெ.செல்வகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மலேசிய நாட்டின் சிறு குறுந்தொழில் வர்த்தக பிரதி அமைச்சர் சரஸ்வதி கந்தசாமி கலந்து கொண்டார். இந்த மாநாட்டில் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளை சேரந்த வர்த்தகர்கள் சுமார் 150 பேர்வரை கலந்து கொண்டனர். இதன்போது இலங்கை குழுவுக்கு உலக தமிழ் வம்சாவளி அமைப்பின் இலங்கைக்கான ஏற்பாட்டாளர் சுப்பிரமணியம் தியாகு தலைமை தாங்கியதுடன் இவருடன் கொழும்பை சேர்ந்த வர்த்தகர்களான பெருமாள் பிரகாஸ், சுப்பையா மோகன்ராஜ், யாழ்ப்பாணத்தை சேர்ந்த ராஜரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

## இலங்கையில் அறிமுகப்படுத்தப்படும்

# மாவட்டங்களை மையப்படுத்திய பிராந்திய அபிவிருத்தித் திட்டங்கள்

**திட்டங்களின் பொறுப்புக் கூறலை அதிகரிப்பது முக்கிய நோக்கம்**

இலங்கையில் அறிமுகப்படுத்தபட்ட பெரும்பாலான பிராந்திய அபிவிருத்தித் திட்டங்கள் மாவட்ட ரீதியிலேயே அறிமுகப்படுத்தபட்டன. இதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தன. திட்டங்களின் பொறுப்புக் கூறுந்தன்மையை உறுதிப்படுத்துவது, வினைத்திறனுள்ள வகையில் திட்டங்களை ஒருங்கிணைப்பது, திட்டம் அங்கீகரிக்கப்படுவதையும் ஏற்றுக்கொள்ளப்படுவதையும் உறுதிப்படுத்தல், திட்டத் தலைமைத்துவத்தை வழங்கல், நிதியை இலகுவில் பரிமாற்ற வசதியாக இருந்தமை மற்றும் திட்டத்தை அமுல்படுத்தத் தேவையான நிர்வாகக் கட்டமைப்புகள் மாவட்ட ரீதியில் ஏற்கெனவே தயாராக இருந்தமை போன்ற பல்வேறு காரணங்களால் திட்டங்களில் பெரும்பாலானவை மாவட்ட ரீதியிலேயே அமுல்படுத்தப்பட்டன.

பிராந்திய அபிவிருத்தியின் பிரதானமான கூறான கைத்தொழில்களை பிராந்திய மட்டத்தில் விஸ்தரிப்பது காணப்பட்டது. இதன் மூலம் கிராமியப் பகுதிகளில் பொருளாதார நடவடிக்கைகளை முன்னேற்றலாம் என எதிர்பார்க்கப்பட்டது. இது தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படுவதை அதிகரிக்கும் எனவும் கைத்தொழில்களை கிராமப்பகுதிகளை நோக்கி கவரவும் முதலீட்டு உட்பாய்ச்சலுக்கும் ஏதுவாகுமெனவும் அதன் மூலம் கிராமப்புறங்களின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தலாம் எனவும் கருதப்பட்டது.

ஆனால் கிராமப்பகுதிகளில் கைத்தொழில்களை ஆரம்பிப்பதில் பல்வேறு தடைகள் காணப்பட்டன. அவற்றுள் கைத்தொழில்களுக்கு பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்வதும் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட இடங்களில் தேவையான உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்துவதும் முக்கிய தடைகளாக இருந்தன. இதனால் நாட்டின் சில இடங்களில் கைத்தொழிற் பேட்டைகள் உருவாக்கப்பட்டு, முதலீட்டாளர்களுக்குத் தேவையான உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க முயற்சிக்கப்பட்டது. கைத்தொழில் அபிவிருத்தியை ஒருங்கிணைக்கும் பொருட்டு கைத்தொழில் அபிவிருத்தி சபை உருவாக்கப்பட்டது. கைத்தொழிற்சாலைகளை உருவாக்கத் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் அடிப்படை உட்கட்டுமானங்களை உருவாக்குதல், பராமரித்தல், ஊக்குவித்தல் மற்றும் விருத்தி செய்தல் இதன் பிரதான நோக்கமாக இருந்தது. கைத்தொழில் முயற்சியாளர்களுக்குத் தேவையான காணிகளை வழங்குதல் அல்லது கட்டப்பட்ட கட்டடங்களை ஒதுக்கீடு செய்தல், அப்பகுதிகளின் பாதைகளை அபிவிருத்தி செய்தல், நீர்வழங்கல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், மின்சார வசதிகளை வழங்குதல், கழிவு நீர் மற்றும் கைத்தொழில் கழிவகற்றல் வசதிகளை வழங்குதல், தொலைத் தொடர்பாடல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், இருபத்து நான்கு மணித்தியாலமும் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பன கைத்தொழில் அபிவிருத்தி சபையின் முக்கிய பணிகளாக இருந்தன.




இவற்றுக்கு அப்பால் 1990களின் ஆரம்பத்தில் கிராமிய மக்களின் வாழ்வாதாரம் தொழில் வாய்ப்பு என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் இரு முக்கிய திட்டங்கள் ஆரம்பிக்கபட்டன. ஒன்று ஜனசவிய எனப்படும் மக்கள் பங்களிப்புடனான மக்கள் போஷாக்கு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுத்திட்டம், இரண்டாவது 200 ஆடை தயாரிப்புத் தொழில்சாலைகளை உருவாக்கும் திட்டம். ரணசிங்க பிரேமதாச அமைச்சராகவும் பிரதமராகவும் செயற்பட்ட காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் மேம்பாட்டுத் திட்டங்கள் பல அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் சாதாரண மனிதனின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தக் கூடிய பல்வேறு திட்டங்களாக விஸ்தரிக்கப்பட்டன. வீடமைப்பு அபிவிருத்தித் திட்டங்கள், குடிநீர் வழங்கல் மற்றும் மின்சார வசதிகளை விஸ்தரிக்கும் திட்டங்கள் மற்றும் வருடாந்த கம் உதாவ கொண்டாட்டங்கள் என்பன அவற்றுள் சிலவாகும். இலவசங்களையும் மானியங்களையும் வழங்குவதே அரசியல்வாதிகளின் பிரதான நடவடிக்கையாக இருந்த நிலைமையினை மாற்ற பிரேமதாச விரும்பினார். கிராமப்புறங்களில் ஆடைத் தொழிற்சாலைகளை ஆரம்பித்து தொழில்வாய்ப்புகளைப் பெருக்கும் நோக்கில் தனியார் முயற்சியாளருக்கு ஊக்குவிப்பு வழங்கப்பட்டது. பின் வந்த காலப்பகுதிகளில் குறிப்பாக 1998இல் பொருளாதார மத்திய நிலையங்களை உருவாக்கி கிராமப் பகுதிகளை நகர்ப்புறச் சந்தைகளுடன் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் முதலாவது நிலையம் தம்புள்ளையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையின் பிராந்திய அபிவிருத்தியில் எந்தவொரு பிரதேசமும் விடுபடக்கூடாது என்பது கொள்கையளவில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், 1983 இலிருந்து தொடர்ந்த உள்நாட்டு யுத்தம் காரணமாக இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசங்கள் இலங்கையின் பிராந்திய அபிவிருத்தியில் நடுவில் விடுபட்ட காலப்பகுதியாகவே கருதப்பட முடியும்.

1987இல் உருவாக்கபட்ட மாகாண சபைகளைத் தொடர்ந்து தற்போது அபிவிருத்தி தொடர்பாக முடிவெடுக்கவல்ல இரண்டு பிரதான மட்டங்கள் காணப்படுகின்றன.

ஒன்று மாகாண சபைகளும் உள்ளூராட்சி அலகுகள். இரண்டு பரவலாக்கப்பட்ட தொழிற்பாடுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகள்.

இவை எதுவுமே புவியில் அடிப்படையிலோ அல்லது பொருளாதார நடவடிக்கையின் அடிப்படையிலோ உருவாக்கப்பட்ட அலகுகளல்ல. மாறாக அவை அரசியல் மற்றும் நிர்வாகக் கட்டுப்பாட்டைப் பேணும் நோக்கில் உருவாக்கப்பட்டவையாகும்.

---



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# தோல்வியில் முடிந்த வோக்னர் படை நகர்வு

## உலகளாவிய போரியல் பரிமாணமும் தோல்வி கண்டதா ?

ரஷ்ய உக்ரைன் போர் பாரிய மாற்றங்களை உலகளாவிய போரியல் அணுகுமுறையிலும் ஏற்படுத்தி வருகிறது. அரசியல் பொருளாதாரத்தை கடந்து இராணுவ உபாயங்களிலும் தந்திரோபாயங்களிலும் அதிக மாற்றங்களை உருவாக்கி வருகிறது. அத்தகைய மாற்றங்கள் உக்ரைனையும் ரஷ்யாவையும் மட்டுமல்ல பிராந்தியங்களைக் கடந்தும் நிகழ்கிறது. ஏவுகணைகள், ஆளில்லா விமானங்கள், வாடகைக்கு அமர்த்தப்படும் போராட்டக் குழுக்கள் என ரஷ்ய உக்ரைன் களம் போரியல் மாற்றங்களை அறிமுகப்படுத்தியும் அடைவுகளை எதிர் கொண்டும் உள்ளது. எஸ்.ரி.எப். என அழைக்கப்படும் அணிகளது போர்க்களமாகவே உக்ரைன் போர்க்களம் காணப்படுகிறது. அதனை நேட்டோ அணியும் பதிலுக்கு ரஷ்யாவும் அத்தகைய அணிகளை மையப்படுத்தியே போரை நகர்த்துகின்றன. இதில் அண்மையில் ரஷ்யாவையும் அந்நாட்டு ஜனாதிபதி புடினையும் அதிக நெருக்கடிக்குள்ளாக்கிய வோக்னர் குழுவினரது நடவடிக்கைகளும் அதன் பின்னாலுள்ள போரியல் பரிமாணத்தையும் தேடுவதாகவே இக்கட்டுரை அமையவுள்ளது.

வோக்னர் தனியார் இராணுவ கம்பனியானது (Wagner private military company) 2014 ஆம் ஆண்டு ரஷ்யாவில் ஆரம்பிக்கப்பட்டது. இது ஆரம்பத்தில் 250 இராணுத்தைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்பத்துக்குப் பின்னால் தற்போதைய ஜனாதிபதி புடினே காணப்பட்டதுடன் ரஷ்யாவின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக செயல்படுவதெனவும் வெளிநாடுகளில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்பாகவும் கட்டப்பட்டது. வோக்னர் தனியார் இராணுவம் 2023 வரை ரஷ்ய இராணுவத்தின் ஆயுதங்களையும் வாகனங்களையும் ஏனைய உட்கட்டுமானங்களையுமே பயன்படுத்தியதாக தெரியவருகிறது. அண்மைய குழப்பம் நிகழும் வரை எத்தகைய கருத்தியலும் கொண்டிராத அமைப்பாகவே இயங்கியது. இதன் ஸ்தாபகராக Dmitry Utkin (Wagner) மற்றும் Yevgeny Prigozhin ஆகியோர் முக்கியமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பீற்ரஸ்பேக்கை தலைமையகமாகக் கொண்டு இயங்கிய வோக்னர் அமைப்பு Blood, Hono r,Homeland,Courage என்பதை மகுடவாக்கியமாகக் கொண்டு இயங்கியது. 2022 டிசம்பரில் ஏறக்குறைய ஐம்பதாயிரம் படைகளைக் கொண்டுள்ள அமைப்பாக காணப்படுகிறது.

இதில் ரஷ்யர்கள் மட்டுமன்றி சிரியர்கள்,லெபனானியர்கள், மற்றும் வேறு நாடுகளில் இயங்கும் தனியார் இராணுவ அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோரும் வோக்னர் படையணியில் உள்ளனர். மூன்று நாட்டு படையினரும் 21 வேறுநாடுகளில் இயங்கும் தனியார் இராணுவ பிரிவுகளின் உறுப்பினர்களும் அடங்குவார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதன் தாக்குதல் கிரிமியாவில் ஆரம்பித்தது. 2014 இல் இருந்து டொன்பாஸில் தாக்குதலை நிகழ்த்திவருகிறது. அத்துடன் சிரியாவில் North Aleppo(2016),Palmyra (2016),Campaign Hama(2017), Northwestern Syria(2017), Khasham Rif Dimashg(2017) ஆகிய பிரதேசங்களில் தற்காப்பு போர்களை மேற்கொண்டுள்ளது. இது மட்டுமல்லாது தென் சூடானியப் படைகளுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கியமை, லிபியாவின் சிவில் போரில் லிபிய இராணுவத்துடன் இயங்கியமை, வெனுசுவெலா இராணுவத்துக்கு பயிற்சி வழங்கியமை மற்றும் மாலி இராணுவ நடவடிக்கைக்கு துணையாக செயல்பட்டமை என பல இராணுவ நகர்வுகளை உக்ரைன் போருக்கு முன்னர் மேற்கொண்டுள்ளது. அதனுடன் எஸ்தோனியா, லித்துவேனியா மற்றும் உக்ரைனில் பயங்கரவாத அமைப்பாகவும் செயல்பட்டுள்ளது. அச்சந்தர்ப்பத்தில் தனது அடையாளத்தை மாற்றிக் கொள்ளும் போக்கினை கொண்ட அமைப்பாகும். ரஷ்யா உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் போது பிரயோகித்த Z அடையாளத்தை வோக்னர் குழுவே பயன்படுத்தியுள்ளது. வோக்னர் குழு வேறுபட்ட சின்னங்களை மாறி மாறி பயன்படுத்தியுள்ளது. உக்ரைன் போரில் முன் அரங்கங்களையும் எதிர்த்துத் தாக்குதலை மேற்கொள்ளும் படையினராகவும் வோக்னர் குழுவே காணப்பட்டது.



இத்தகைய வலிமை படைத்த வோக்னர் குழுவினரது கிளர்ச்சி நடவடிக்கை மொஸ்கோவையும் ஜனாதிபதி புடினையும் அண்மைய வாரங்களில் நெருக்கடிக்கு தள்ளியது. ஆனால் அத்தகைய கிளர்ச்சியானது சிறிது நேரத்திலேயே முடிவுக்கு வந்தது. வோக்னர் குழுவுக்கு தலைமை வகித்த பிறிகோசின் தனது முழுமையான படைகளுடன் வெளியேறியதாக தகவல் இல்லை என்றே தெரிகிறது. அப்படையின் கணிசமானவர்கள் தற்போதும் களத்தில் உள்ளதாகவே தெரியவருகிறது. அது மட்டுமன்றி தமது படைகளுக்கு போதிய ஆயுதங்கள் வழங்கப்படாமை மட்டுமன்றி அண்மைய வாரங்களில் வோக்னர் படையினர் மீது ரஷ்ய இராணுவம் பாரிய தாக்குதல் ஒன்றினை மேற்கொண்டதாகவே கிளர்ச்சிக் குழுவின் தலைமை ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தது. இதுவே கிளர்ச்சிக்கான காரணம் எனவும் தெரியவருகிறது. ஆனால் இக் கிளர்ச்சியை சர்வதேசமயப்படுத்தியதில் மேற்குலக நாடுகள் வெற்றி கண்டுள்ளதாகவே கணிக்கப்படுகிறது. இக்குழுவினது கிளர்ச்சிக்கு உக்ரைனும் நேட்டோ நாடுகளும் காரணம் எனக் குறிப்பிட்டாலும் அவற்றின் பங்களிப்பானது ஊடகப் போராகவே அமைந்துள்ளதைக் கண்டு கொள்ள முடிகிறது. அதாவது கிளர்ச்சி பற்றிய உரையாடல் வெளியான போதே மேற்குலக ஊடகங்கள் உசாரடைந்தனவே அன்றி இக் கிளர்ச்சியை திட்டமிடவில்லை என்பது அவர்களது முடிவிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. கிளர்ச்சிக் குழுக்களை தயார் செய்வதிலும் கிளர்ச்சியை நீடிப்பதிலும் நன்கு அனுபவமுடைய நேட்டோவும் அமெரிக்காவும் வோக்னர் குழுவை கையாளும் திறனற்றதாகவே காணப்பட்டுள்ளது என்பது அதன் முடிவிலிருந்து கண்டு கொள்ள முடிகிறது. அதற்கு காரணம் வோக்னர் முழுமையாக ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலேயே இயங்கியுள்ளது. அதனால் ஒரு ஆர்ப்பாட்டம் செய்ய முடிந்ததே அன்றி அரசுக்கு எதிராக கிளர்ச்சியோ புரட்சியோ செய்ய முடியவில்லை. இதனை கிளர்ச்சியாகவோ புரட்சியாகவோ கொள்ள முடியாதுள்ளது. குறைந்தபட்சம் ரஷ்ய இராணுவத்துக்குள் ஒரு கலகத்தைக் கூட அவர்களால் முழுமையாக மேற்கொள்ள முடியவில்லை. ஆனால் இத்தகைய குழப்பத்தினால் நேட்டோவுக்கும் உக்ரைனுக்கும் அமெரிக்காவுக்கும் சாதகமான விளைவுகள் இராணுவ ரீதியில் ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. அவ்வாறே ரஷ்யாவுக்கும் புடினுக்கும் வோக்னர் நகர்வு விளைவுகளைத் தந்துள்ளது. அவற்றை விரிவாக நோக்குவது அவசியம்.

ஒன்று, ரஷ்யாவின் போர் முன்னரங்கிலிருந்து பலமான போர்ப் படையொன்று அகற்றப்பட்டுள்ளது. அத்தகைய படையே ரஷ்யப் படைகளுக்கு உதவியதுடன் உக்ரைன் நிலப் பரப்பினை நோக்கிய கைப்பற்றல் நகர்வுகளை ரஷ்ய இராணுவத்துடன் சேர்ந்து சாத்தியப்படுத்தியது. உக்ரைனுடனான போரில் அதிக இழப்பீடுகளை உக்ரைன் படைகளுக்கு களத்தில் ஏற்படுத்திய ரஷ்யப் படைகளுக்கு உதவியது மட்டுமல்லாது பயங்கரவாத செயல்களிலும் ஈடுபட்டு அழிவுகளையும் படுகொலைகளையும் உக்ரைன் மக்கள் மீது நிகழ்த்தியதாக தகவல்கள் உண்டு. வோக்னர் பிரிவு ரஷ்ய இராணுவத்துடன் இணைந்து களத்தில் போர்புரிந்தது ஒருபுறம் அமைய, மறுபக்கத்தில் தமது திறத்தை போர்க் களத்தில் வெளிப்படுத்தவும் தவறவில்லை.



அதனால் கைப்பற்றப்படும் பகுதிகளை பாதுகாப்பதும் மேலதிகமான நகர்வுகளை மேற்கொள்வதிலுமே ரஷ்ய இராணுவம் அதிக கவனம் கொள்ள வேண்டிய நிலை தவிர்க்க முடியாது ரஷ்ய இராணுவத்திற்கு ஏற்பட்டிருந்தது. இத்தகைய திறனுடைய தனியார் படையணியொன்றினை மேற்குலகம் களத்திலிருந்து அகற்றியுள்ளது.

இரண்டு, வோக்னர் குழுவின் வெளியேற்றம் ரஷ்ய இராணுவத்துக்கு உளவியல் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்க வாய்ப்பு உள்ளதாக தெரிகிறது. அதனை மேற்குலகம் திட்டமிட்டு மேலும் பலப்படுத்துவதாகவே காணப்படுகிறது. தொடர்ச்சியாக ரஷ்ய மக்களையும் இராணுவத்தையும் குழப்பும் செய்திகளை வெளியிட்டுவருகிறது. உக்ரைனும் ஐரோப்பிய ஒன்றியமும் இணைந்து ரஷ்ய இராணுவத்தை குழப்பும் செய்திகளை தெரிவித்துவருகிறது. உலகளாவிய ஊடகப் பலத்தை கட்டுப்பாட்டில் கொண்டுள்ள மேற்குலகம் அதனை இலகுவில் கையாளும் திறனை கொண்டு செயல்பட்டுவருகிறது. ஆனால் இத்தகைய வலிமை கொண்ட மேற்குலகம் வோக்னர் குழுவை சரியாக பயன்படுத்த முடியவில்லை என்பதே வோக்னர் குழுவுடன் அது கொண்டுள்ள உறவை புரிந்து கொள்ள முடியும்.

மூன்று, வோக்னர் கிளர்ச்சியின் முடிவினைப் பார்க்கும் போது திட்டம் பல வீனமானதா அல்லது திட்டமிட்டவர்கள் புடினது ஆட்சிக்குள் இருந்தவர்களா என்ற சந்தேகத்தை தருகிறது. அதாவது திட்டமிட்டவர்கள் பின்வாங்கியிருக்க வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. அது மட்டுமல்லாது ரஷ்யாவால் உருவான வோக்னர் குழுவானது ரஷ்யாவின் சட்டதிட்டத்திற்குள்ளும் ரஷ்ய ஆயுத தளபாடங்களிலுமே கட்டுப்பட்டிருந்தது. அது மட்டுமல்லாது ரஷ்ய இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இயங்கியது. அதனால் வோக்னர் குழுவின் எல்லை மிகச் சுருங்கியது. தற்போது அக்குழுவின் தலைமை மாற்றப்படுவதாகவும் அதில் வேறு நாட்டு இளைஞர்கள் இணைவதாகவும் தெரியவருகிறது. வோக்னர் குழுவின் தலைமையும் அதன் படைப்பிரிவும் பெலாரஸ் ரஷ்ய இராணுவத்தின் கண்காணிப்பில் பாதுகாப்பாக இருப்பதாகவும் தெரியவருகிறது.

நான்கு, வோக்னர் குழுவின் நடவடிக்கைகளை அரசியலாக்கியுள்ள ரஷ்ய ஜனாதிபதி அடுத்தாண்டுத் தேர்தலுக்கு தயாராவது போல் நகர்வுகள் காணப்படுகின்றன. ரஷ்ய மக்களது ஆதரவு புடினை நோக்கி நகர்வதாக பிபிசி செய்திச் சேவை குறிப்பிடுகிறது. மக்கள் மத்தியில் தோன்றுவது அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது மட்டுமல்லாது மேற்குலகத்தை கிளர்ச்சிக்கு அடிப்படையென குற்றம்சாட்டுவது என பலவிடயங்களை புடின் ஏற்படுத்தி வருகிறார். இது சதிச் செயலெனவும் துரோகம் எனவும் சகோதரப் படுகொலையை மேற்குலகம் ரஷ்யாவில் ஏற்படுத்த விளைவதாகவும் புடின் பொதுவெளியில் உரையாடிவருகிறார். இவை அனைத்தும் 2024 வரவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான முதலீடாகவே பார்க்கப்படுகிறது. எப்போதும் ரஷ்யர்கள் அமெரிக்காவின் எதிரிகளாகவே காட்டப்படுகிறார்கள். அது இருக்கும் வரை புடினது அதிகாரம் பாதுகாக்கப்படும். அமெரிக்காவே தம்மை வீழ்தியதென உணரும் ரஷ்யர்கள் அதிகம். அதற்கு வலுவான நியாயப்பாடும் உண்டு. அதனால் அமெரிக்க எதிர்ப்பு அரசியல் ரஷ்யாவின் ஆட்சியாளரைப் பாதுகாக்கும்.

எனவே வோக்னர் குழுவின் கிளர்ச்சிக்கான அணுகுமுறை மேற்குலகத்தை விட புடினுக்கு அதிக வாய்ப்புக்களை கொடுத்துள்ளதாகவே தெரிகிறது. வோக்னர் குழுவின் நகர்வுக்கு பின்னர் உக்ரைன் போர்க்களமும் அதிக நெருக்கடியை எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளது. மேற்குலகத்தின் ஊடகப் பிரசாரத்தைக் கடந்தும் ரஷ்யாவின் இராணுவ நகர்வுகள் கைவிடப்பட்டதாக தெரியவில்லை. உலகம் தனியார் இராணுவ கம்பனிகளாலும் அதன் இராணுவ நடவடிக்கைகளாலும் இயங்கத் தொடங்கியுள்ள ஒரு போரியல் பரிமாணம் ஆரம்பித்துள்ளது. இதனை முதலில் தொடக்கியவர்கள் இஸ்லாமியர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவர்கள் தங்கள் சகோதரர்களை பாதுகாப்பதற்காக இன்னோர் நாட்டு இராணுவத்துடன் இணைந்து போர் புரிந்தார்கள். இவ்வாறு நேட்டோவும் இஸ்லாமிய நாடுகளும் தனியார் இராணுவ கம்பனிகளை மையப்படுத்தி தமது போரியல் நகர்வுகளை மேற்கொண்டுவருகின்றன.




# தெஹியோவிட்ட கந்தலோயா தோட்டம்;

# வாழ்வாதாரத்துக்கு போராடும் மக்கள் பிள்ளைகளின் கல்விக்கு முன்னுரிமை அளிக்கும் முன்மாதிரி...

மேல் மாகாணத்தை அண்மித்து அபிவிருத்தியிலும் இதர வசிகள் குன்றி மக்கள் வாழ்வது பெருந்தோட்டங்களிலே இந்த உண்மை நிலையை எப்படி சொன்னாலும் ஒன்றும் நகர்ந்தபாடில்லை. ஆனால் கல்வியிலும் அவர்களே அதிகம் பின்தங்கி காணப்படுகின்றனர். அவ்வாறான அவலங்களை நீட்டுவதை விடுத்து சொல்ல வந்த கதையை பார்போம். கொழும்புக்கு அண்மையில் உள்ள அவிசாவளை நகரத்தை ஒட்டியுள்ள தெஹியோவிட்ட கந்தலோயா தோட்டம், பெருந்தோட்ட மக்கள் அபிவிருத்தி சபைக்கு சொந்தமானது. இது நஷ்டத்தில் இயங்கும் தோட்டம் என்பதால், இங்குள்ள மக்களின் பொருளாதாரம், வாழ்வாதாரம் குன்றியே காணப்படுகிறது. எனவே மக்களின் முதல் பிரச்சினையாக பொருளாதார பிரச்சினையே உள்ளது. அவர்கள் அன்றாட வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கே படாதபாடு படுகின்றனர். ஆனால் தற்போது அந்த கட்டமைப்பு உடைக்கப்பட்டு தம் பிள்ளைகளின் கல்விக்கே முக்கியத்துவம் கொடுக்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இங்கு பெற்றோர்கள் இலக்கை நோக்கி பயணிக்க தயாராகி விட்டனர். கல்விக்கு முதன்மையிடம் கொடுக்கின்றனர். பழமை சார் மூடநம்பிக்கையில் இருந்து விடுபடுகின்றனர். பெண்களின் கல்வி உரிமை தொடர்பாக குரல் கொடுக்கின்றனர். மாணவர்கள் இரவு 11 மணி வரை படிப்பதற்கு அனுமதிக்கின்றனர்.

கந்தலோயாவில் ஒரு தோட்ட தொழிலாளியின் வீட்டில், தனது மூன்று பிள்ளைகளும் பல்கலைக்கழகத்தில் பயில்வதானது கந்தலோயா சமூகத்தின் மத்தியில் ஓர் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.



இவ்வாறான மாற்றத்துக்கு இந்த தோட்டத்தில் இயங்கும் பாடசாலையின் செயற்பாடுகளும் துணை நிற்பதாக தோட்ட மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.ஒரு பாடசாலையின் அபிவிருத்தி அங்குள்ள மாணவர்கள்,பொற்றோர்களின் முன்னேற்றமாகும்.அவற்றுக்கான முழு பங்களிப்பை வழங்குவது பாடசாலை அதிபர்.கந்தலோயா தமிழ் மகா வித்தியாலய அதிபர் முனியாண்டி கருணாகரனுடன் தினகரன் நடத்திய கலந்துரையாடலில் இருந்து.

**வளம் குன்றிய கந்தலோயா பாடசாலையில் இவ்வாறான மாற்றங்கள் எப்படி சாத்தியமானது?**

வளம் குன்றிய பாடசாலை என்று ஒன்றும் இல்லை. அங்குள்ள வளங்களை நாம் முழுமையாக பயன்படுத்துகின்றோமா என்பதே கேள்வி. நமக்கு கிடைத்த வளங்களிலிருந்து, நாம் உச்சப் பயனை அடைந்துக்கொள்ள வேண்டும். அதற்கு நம்மிடம் தூர தரிசனம் ஒன்று காணப்பட வேண்டும். ஆசிரியர்களையும், மாணவர்களையும், பாடசாலை சார் சமூகத்தினரையும் ஒருங்கே ஒரு சிந்தனையின் பால் அழைத்துச் செல்லும் திறன் நம்மிடம் காணப்பட வேண்டும். தனது பாடசாலை தொடர்பான ஒரு முதன்மைத் திட்டம்(Master Planning) ) உள்ளத்தில் எப்போதும் காணப்பட வேண்டும்.

**சமூக மாற்றங்களை ஏற்படுத்தும் போது எதிர்ப்புகளும் ஆதரவுகளும் சகஜமானது.உங்கள் பக்கம் இது எவ்வாறு இருந்தது.**

எமக்கு முதன் முதலில் பெற்றோர்களிடமிருந்தே எதிர்ப்புகள் வந்தன. தாங்கள் பின்பற்றி வந்த பழமை வாத கருத்துக்களில் இருந்து உடனடியாக விடுபட தயாராக இருக்கவில்லை. தாங்கள் இவ்வளவு காலம் பின்பற்றி வந்த மரபுகளை தாண்டி ஒரு பாடசாலை இயங்குவதை கண்டு கோபம் கொண்டு எழுந்தார்கள். அடிதடி என்று கூட வந்தார்கள். நாங்கள் கந்தலோயா மக்களை ஒருங்கிணைத்து 'பாடசாலையும் சமூகமும்' என்ற ஒரு முழுநாள் செயலமர்வைச் செய்தோம்.அதில் நவீன கல்வி கொள்கைகள் பற்றிய புரிதல்களை சாதாரண மக்கள் விளங்கும் வகையில் அவர்களுக்கு எடுத்துக் காட்டினோம். சிலவற்றை காணொளி மூலமாகவும் காட்டி அது தொடர்பான ஒரு விமர்சனத்திற்கும் சென்றோம். எங்கெல்லாம் எங்களுக்கு பிரச்சினை ஏற்படுகின்றதோ, அங்கெல்லாம் நாங்களே சுயமாக சென்று எமது நோக்கத்தை தெளிவுபடுத்தி கூறினோம். அது தொடர்பான புரிதலையும் அவர்களுக்கு ஏற்படுத்தச் செய்தோம். இவ்வாறு செயற்பட்ட நேரத்தில் எல்லோரும் எமது செயற்பாட்டை அங்கீகரித்தனர். பெற்றோர்கள் எமது பாடசாலையை நம்பி அவர்களின் பிள்ளைகளே எம்மிடம் ஒப்படைத்தனர். கோட்ட மட்டம், வலய மட்டம், மாகாண மட்டத்தில் உள்ளவர்கள் எம்மை புரிந்து கொண்டனர்.



**கந்தலோயா பாடசாலை வேகமாக பயணிக்கிறது. அதற்காக நீங்கள் செய்த செயற்பாடுகளில் சிலவற்றை குறிப்பிட்டு கூற முடியுமா?**

கந்தலோயா பாடசாலையில் கற்று உயர்தரம் படிக்கும் மாணவர்களின் வீட்டு கதவில் 'இந்த வீட்டில் ஒருவர் ஏ.எல் படிக்கின்றார். பெருமைக்குரிய பெற்றோர்கள்' என்ற வசனத்தை தாங்கிய அட்டை ஒன்றை காட்சிப்படுத்தி உள்ளோம். இது மாணவர்கள் மத்தியிலும், பெற்றோர்கள் மத்தியிலும் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆசிரியர் வீரமலை ரவி மோகன் உதவியுடன் ஒவ்வொரு வருடமும் தலைமைத்துவ பயிற்சியை மாணவர்களுக்கு நடாத்தி வருகின்றோம். உயர்தர மாணவர்களை வரவேற்கும் பொருட்டு குறித்த பெற்றோர்களின் வீட்டுக்கு சென்று அவர்களுக்கு மாலை அணிவித்து பாடசாலைக்கு ஊர்வலமாக அழைத்து வருவோம். இது ஒவ்வொரு வருடமும் நடைபெறும்.

**எதிர்கொண்ட சவால்கள் ?**

கந்தலோயா பாடசாலை ஒரு அரசாங்க பாடசாலை ஆகும். அரசாங்க பாடசாலைக்கென்று ஒரு நோக்கம் இருக்கின்றது. அது எவ்வாறு செயற்பட வேண்டும் என்று சுற்று நிருபங்கள் இருக்கின்றன. இவ்வாறான வேளையில் எமது பாடசாலை வெளி செயற்பாடுகளை அதிகமாக கொண்டு இயங்கும் பொழுது, அதன் அதிர்வுகள் எமது பாடசாலையை சுற்றியுள்ள ஏனைய சமூகங்கள், புலனாய்வு பிரிவினர்கள் மற்றும் கோட்ட மட்ட, வலய மட்ட, மாகாண மட்ட கல்வி நிறுவனங்களின்பால் எதிரொலித்தது. இது எமக்கு பெரும் பிரச்சினையாக இருந்தது.நாங்கள் ஒரு கணம் அதிர்ந்து போனோம். ஆனபோதும் எமது பயணத்தில் தேசிய பாதுகாப்பிற்கு எந்தவித தாக்கத்தையும் எமது பாடசாலை ஏற்படுத்தவில்லை என்ற விடயத்தை மேற் கூறியவர்களுக்கு விளங்கப்படுத்தினோம். பாடசாலை தொடர்பான செயற்பாடுகளை மடிக்கணினியில் உள்வாங்கி குறிப்பிட்ட நபர்கள், நிறுவனங்களை தேடிப்போய் அவர்களுக்கு விளக்கத்தை கொடுத்தோம். கோட்ட மட்ட, வலய மட்ட பணிப்பாளர்களை பாடசாலைக்கு அழைத்து எமது செயற்பாட்டை விளங்கப்படுத்தினோம். எனது பாடசாலையை சூழ உள்ள பெரும்பான்மை சமூகத்திற்கு நாங்கள் செல்லும் நோக்கத்தை எடுத்துக் கூறினோம். தற்போது பெரும்பாலானோர் எமது பாடசாலையை பற்றி நன்கு புரிந்து வைத்துள்ளனர்.

**பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு சென்றுள்ள மாணவர்களின் சமூக செயற்பாட்டு விடயங்கள் பற்றி கூறுங்கள்?**

எமது பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதால் உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் பெறுபேறு வந்து பல்கலைக்கழகம் செல்லும் வரையில் சக மாணவர்களுக்கு இலவசமாக கற்பித்துக் கொடுப்பார்கள். பல்கலைக்கழக மாணவர்கள் விடுமுறையில் கந்தலோயா வந்தால் தங்களின் முழு விடுமுறையையும் கந்தலோயா பாடசாலை மாணவர்களுக்கு கற்பிப்பதில் அர்ப்பணிப்பார்கள். இது எமது வெற்றியில் பிரதான அம்சமாகும்.

**பாடசாலை வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றியவர்கள் தொடர்பில் சில கருத்துக்கள்?**

'உதவி நண்பர்கள்' எமது பாடசாலையில் க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு முன்னின்று உழைத்தவர்கள் ஆவர். லங்கா ஹெல்ப் பவுண்டேசன் நிறுவனத்தின் இலங்கை பொறுப்பாளர் ராமையா ராஜதுரை ஆண் மற்றும் பெண் விடுதிகளை கட்டிக் கொடுத்தார்.

ஜானகி பாலகிருஷ்ணன், அனைத்துலக மருத்துவ அமைப்பும்(IMHO), லங்கா ஹெல்ப் பவுண்டேசன் நிறுவனமும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதி உதவியை வழங்குகின்றனர்.

அத்தோடு கந்தலோயா பாடசாலையில் உயர்தர கலைப் பிரிவு ஆரம்பிக்க ஆசிரியர் சுப்ரமணி சிவசக்தி, ஆசிரியர் சிவசின் தவசின் மற்றும் உயர்தர வர்த்தக பிரிவை ஆரம்பிப்பதற்கு ஆசிரியர் விஸ்வநாதன் புவேந்திரன் சுயமாக முன்வந்தனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். அத்தோடு, அண்மையில் எமது கந்தலோயா பாடசாலைக்கு உதவ முன்வந்த காவேரி கலா மன்றத்தின் நிறுவுனர் வண. பிதா யோசுவா அடிகளாருக்கு விசேட நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**காவேரி கலாமன்றத்துடன் எவ்வாறு இணைப்பை ஏற்படுத்து கொண்டீர்கள்?**

எங்களுக்கு இந்த தொடர்பு எஹெலியாகொட தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் ராசையா தெய்வராஜ் மூலமே கிடைத்தது. அப்பொழுதுதான் காவேரி கலா மன்றத்தின் பணிப்பாளர் வணபிதா யோசுவா அடிகளார் பற்றியும், அவருடைய செயற்பாடுகள் பற்றியும் அறிந்துக் கொண்டோம்.

அவர் இயற்கையை நேசிப்பவர் ஆவார். ஒரு காலத்தில் மலையகத்தான், வடக்கத்தான் என்று பிரதேச அடிப்படையில் வேறுபட்டு இருந்த நம் மத்தியில், அவற்றையெல்லாம் உடைத்து, இவர் கிளிநொச்சிக்கும் அப்பால் மலையகத்தை அதிலும் சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள கந்தலோயா பாடசாலை உட்பட எட்டு பாடசாலைகளை தேர்ந்தெடுத்து பதினைந்து வேலைத்திட்டங்களை முன்னகர்த்தி செல்கின்றார். அதில் முதற்கட்டமாக அதி நவீன திறன் வகுப்பறை (Ultra Modern Smart Classroom) ஒன்றை எமது பாடசாலைக்கு வழங்க உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரிடம் ஒரு தூரநோக்கு இருக்கிறது. மலையக மக்கள் மீது மிகுந்த கரிசனை காட்டுபவர்.



இலக்கிய விடயங்களை மாணவர் மத்தியில் கொண்டு செல்லும் ஒரு நபராகவும் இவர் காணப்படுகின்றார். இவர் உலக பிரசித்தி பெற்ற ரோட்டரிக் கழகத்தின் முன்னாள் தலைவராக இருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்தவர் ஆவார்.

அத்தோடு சப்ரகமுவ மாகாணத்தில் உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவுகளைக் கொண்ட தமிழ் பாடசாலைகள் இல்லாததால், இரத்தினபுரியிலும், கேகாலையிலும் இரு கணித, விஞ்ஞான நிலையங்களை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளனர்.இவர்களின் தொடர்பு கந்தலோயா பாடசாலைக்கு கிடைத்தது பெரும் பாக்கியமே. கந்தலோயா பாடசாலை சார்பாக இவருக்கு எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**'மலையகம் 200' தொடர்பாக குழு செயற்பாட்டில் ஏதும் ஈடுபாடு உண்டா?**

இதற்காக நாம் ஹற்றன் நேரு கருணாகரன், கொட்டகலை சமூகவியலாளர் தேவராஜ் ஸ்டாலின், யாழ்ப்பாண புலேந்திரன் ரெக்னோ ஆகியோரையும் கந்தலோயா பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் விடியல் குழுவை ஒன்றிணைத்து மலையக தேசிய மக்கள் ஒன்றியம் (Upcountry National People's Union) என்ற அமைப்பை உருவாக்கியுள்ளோம். இதன்மூலம் ஆகஸ்ட் மாதம் கந்தலோயாவிலிருந்து ஹற்றன் நகருக்கு சென்று. அங்கு மலையகக் கல்வி தொடர்பாக வீதி நாடகமொன்று செய்து அங்கிருந்து கொழும்பிற்கு சென்று மலையக மக்களுக்கு விசேடமான பத்தாண்டு கல்வித் திட்டத்தை முன்வைக்க வேண்டுமென இலங்கை அரசாங்கத்திற்கு மகஜர் ஒன்றை கையளிக்க இருக்கின்றோம்.

அத்தோடு குறித்த மகஜரை பிரதமர், கல்வி அமைச்சு, எதிர்க்கட்சி, மலையக அரசியல் கட்சிகள் போன்றவற்றுக்கு கையளிக்க இருப்பதோடு, அதற்கான நிதி வளத்தை கொடுத்து உதவுமாறு இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, பிரித்தானியா போன்ற தூதரகங்களுக்கும் ஐக்கிய நாடு சபை காரியாலத்திற்கும் ஒப்படைக்க இருக்கின்றோம்.

**'மலையகம் 200' தொடர்பாக மலையக மக்கள் மத்தியில் எவ்வாறான கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன?**

என்றைக்கும் இல்லாதவாறு இதைப் பற்றி பேசுகிறார்கள். தென்னிந்திய தொலைக்காட்சி தொடர்களையும், வியாபார சினிமா கற்பனை கதைகளையும் பார்த்து சிரித்து, அழுது கொண்டிருந்தவர்கள், தற்போது தங்களைப் நினைத்து சிந்திக்க நேரத்தை ஒதுக்கியுள்ளனர்.

இன்றைய இளைஞர், யுவதிகள் தங்களின் இந்திய பூர்வீகம் எது என்று அவர்களின் பாட்டன், பூட்டனிடம் கேட்டு அறிந்துக்கொள்ள ஆவலாக இருக்கின்றார்கள். சமூக வலைத்தளங்களில் அது தொடர்பாக கருத்தாடல்களை தொடர்ச்சியாக பேசி வருகின்றார்கள். இது ஒரு நல்ல அடையாளம் என்றே கூற வேண்டும். ஆதிலெட்சுமி கப்பலை பற்றி கதைக்கின்றார்கள். ஒப்பாரி கோச்சி பற்றி தெரிந்துக் கொள்கின்றார்கள்.

**அதிபர் தொழிலை விடுத்து, இதர ஈடுபாடுகளின் உங்கள் ஈர்ப்பு தொடர்பில்?**

பாடசாலை மட்டங்களில் தமிழ்மொழித் தின போட்டிகளில் பல்வேறு சமூக நாடகங்களை அகில இலங்கை ரீதியில் கொண்டு சென்று, ஒரு இரண்டாம் இடத்தையும், இரண்டு மூன்றாம் இடங்களையும் சப்ரகமுவ மாகாணத்திற்கு பெற்றுக் கொடுத்துள்ளேன்.

அதுமட்டுமல்லாமல், 'ஒரு தேசம் துயிலெழுகிறது' என்ற நாடகத்தை 2004 ஆம் ஆண்டு தேசிய நாடக விழாவிற்கு கொண்டு சென்று 'சிறந்த பிரதியாக்கம் உட்பட இரண்டு விருதுகளை பெற்றுள்ளேன்.

அத்தோடு, 2007 ஆம் ஆண்டு தேசிய நாடக விழாவில் 'தமிழ்ப்பெண் தடைத் தாண்டுகிறாள்.' என்ற நாடகத்திற்கு 'சிறந்த நாடகம்', 'சிறந்த நெறியாள்கை' உட்பட ஐந்து விருதுகளை பெற்றுள்ளேன். 2008 ஆம் ஆண்டு 'நாங்கள் தலித்துகள் 'என்ற நாடகத்திற்கு சிறப்பு விருதினை பெற்றேன்.

# பசுமை மலையகத்துள் நீண்டகாலமாக படர்ந்துள்ள துயரங்களை நீக்குவது யார்?

## சமூக செயற்பாட்டாளர் கருப்பையா மைதிலி




***'மலையகம் 200' சிலருக்கு மகிழ்ச்சியையும் சிலருக்கு கவலையையும் தரலாம்.'மலையகம் 200' பாரிய கொண்டாட்டங்களும் நடைபெற்றன,நடைபெறவுள்ளன.ஆனால் தோட்டத்தில் பிறந்தவள் என்ற வகையில் தோட்டங்களில் எந்த உரிமையும் இல்லாது மிகவும் கஷ்டத்திற்கு மத்தியில் சொல்லொணா துயரங்களுக்கு மத்தியில் குறிப்பாக 200 வருடமாகியும் ஒரு முகவரி கூட இல்லாது வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம் என்றால் மிகவும் வேதனைகுரியதும் வெட்கப்பட வேண்டியதும் என சமூக செயற்பாட்டாளர் கருப்பையா மைதிலி தெரிவித்துள்ளார்.***

இது தொடர்பில் அவர் தெரிவித்த கருத்துக்கள்...

மலையகத்தை வெளியிலிருந்து பார்ப்பவருக்கும் அதன் பசுமையும் அழகும் தான் புலப்படும். ஆனால் மலையகத்தில் லயத்தில் பிறந்து வளர்ந்து வெளியில் வந்தவர்கள் என்ற வகையில் நாங்கள் சந்தோசப்பட முடியாது. அதற்கு சில முக்கியமான காரணங்கள் இருக்கின்றது. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அவர்களை உச்சம் தலை முதல் உள்ளங்கால்வரை பாதித்துள்ளது. ஒரு தொழிலில் ஈடுபடும் போது அதில் கிடைக்கும் வருமானம் ஓரளவாவது அந்த மனிதனை வாழ வைக்கும் நிலையில் இருக்க வேண்டும். நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக இருப்பது தோட்டத்தொழிலாளர்கள் என்று ஆசை வார்த்தைகளையும் அழகு சொற்தொடர்களை கொண்டு மக்களை ஏமாற்றி வருகின்றனர் ஆனால் அவர்களின் வாழ்க்கை ஒரு இருண்ட யுகமாகத்தான் உள்ளது. உழைப்புக்கேற்ற ஊதியமின்மையால் பிள்ளைகள் முதல் பெற்றோர்களும் போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரம் ரூபா சம்பளத்தை கூட போராடி பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையே காணப்படுகின்றது. இந்த ஆயிரம் ரூபா சம்பளத்தினை வைத்து இன்றுள்ள விலைவாசி அதிகரிப்பால் என்ன செய்ய முடியும்? மூன்று நேரம் சாப்பிட முடியுமா? பிள்ளைகளை படிக்க வைக்க முடியுமா? ஏனைய தேவைகளை பூர்த்தி செய்ய முடியுமா? ஒன்றுமே செய்ய முடியாத நிலையிலேயே இன்று தொழிலாளர்கள் வாழ்ந்து வருகின்றனர். இதனால் மந்த போசனம் அதிகரித்து கல்வி சுகாதாரம் ஆரோக்கியம் உள்ளிட்ட அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளன. இன்று தோட்ட நிர்வாகங்களும் முதலாளிமார்களும் வருமானத்தினை மற்றும் தான் எதிர்ப்பார்க்கின்றனர். காலனித்துவ ஆட்சி காலத்தில் கூட இல்லாத அளவுக்கு தொழிலாளர் துன்பப்படுத்தப்பட்டு வருவதனை காணக்கூடியதாக உள்ளது. தொழிலுக்கு செல்லும் பெண்கள் இன்று பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகின்றனர். அவர்கள் தொடர்பாக எந்தவித கரிசனையும் தோட்ட நிர்வாகங்களோ அரசாங்கமோ அரசியல் தலைவர்களோ காட்டுவதில்லை என்று தான் கூற வேண்டும். மாதவிடாய் காலங்களில் பெண்கள் தங்களுடைய பிரச்சினைகளை யாருக்கும் சொல்ல முடியாதுள்ளது. மேல் அதிகாரிகள் அனைவரும் ஆண்கள். அவர்களுக்கு உடை மாற்றுவதற்கு ஒரு இடம் கிடையாது. சாப்பிடுவதற்கு இட வசதிகள் ஒன்றும் கிடையாது. கொட்டும் மழையில் அடிக்கும் வெளியில் ஒரு பாறை மீதோ அல்லது தேயிலை மலையிலோ நின்று கொண்டு தான் சாப்பிட வேண்டும். நிர்வாகம் அவர்கள் என்ன துன்பப்பட்டாலும் என்ன நிலையில் இருந்தாலும் அவர்களுக்கு வேண்டியது 20 கிலோ தேயிலை கொழுந்து மாத்திரம் தான்.

இவை அனைத்தும் தெரிந்த தொழிற்சங்கங்களும் தொழிலதிபர்களும் இவர்களை பிரித்தாலும் தந்திரத்தினை கையெடுத்து செயற்படுகின்றன. இதனால் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொள்ள முடியாத நிலை உள்ளன. இவர்கள் சிந்தித்து செயற்பட்டு ஒற்றுமைப்பட்டால் ஒரு மாதத்தில் சகல பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு விடலாம் என அவர் தெரிவித்தார்.




# கொதிக்கும் கோடை...!

ஷெல்லிதாசன்
திருகோணமலை



கோடை காலமும் வந்தது இங்கே
கொதிக்கும் அனலாய் எறிக்குது வெய்யில்
வீசும் காற்றும் சுடுகுது நெருப்பாய்
வியர்வையும் ஆறாய் பாயுது உடலில்

ஆற்றுடன் குளங்களும் வரண்டே போயின
அல்லியும் ஆம்பலும் அதற்குள் மடிந்தன
நீரிலே நீந்திய மீனொடு தவளையும்
நித்திய உறக்கத்தில் வீழ்ந்து மறைந்தன

கானம் பாடும் குயிலுடன் மயில்களும்
கலகல பட்சிகள் பறவைகளுடனே
ஆடும் மாடும் அத்தனை உயிர்களும்
அருந்த நீருக்கு அலையுது எங்கும்

வானம் பார்த்த பயிர்களும் மரங்களும்
வனப்பை இழந்து கருகிக் கறுத்தன

பூமியில் நிலமும் பொருகாய் வெடித்து
பொழியுமோர் மழைக்கு தவமும் கிடக்குது

நீங்காப் பொறாமை கொண்ட மனிதனின்
நெஞ்சத்து நெருப்பென எரிகின்ற கோடையே
வாடும் உயிர்கள் மீண்டெழப் பூமியில்
வாழவிடு, சோவென வான்மழை பொழியட்டும்..!



# டெங்கு நுளம்பு

முகம்மது முகைதீன் நௌபீக்
தோப்பூர்

சுய நலத்தின் உச்சந்தொட்ட
சமூகத்திற்காய்
இறைவனின் தண்டணை தான்
அற்ப உயிரியின்
அழிக்க முடியா சோதனை
டெங்கு நுளம்பு

சொந்த காணிக்குள்
குப்பை போடும்
மனித உள்ளம் வாழும்
பொதுநலம் பேசும்
மாந்தர் கூட்டம்
புதுவகை மனிதயினம்
அல்லவா?

டெங்கு பரவும் என்று
பலவருடம் கற்றும்
தான் உண்ட யோகட் கப்பை
கண்ட இடும் வீசும்
மனச்சாட்சியற்ற மானிடா?

சுட்டெரிக்கும் வெயிலில்
தாகம் தீர்க்க
பருகிய இளநீரை
விறகாக்க தெரியாது
வெட்டவெளியில் வீசியதால்
பெய்த மழையில்
சில துளிகள் நீர் தேங்கி
எண்ணிலடங்கா முட்டையிட்டு
டெங்கு நுளம்பை
உற்பத்தி செய்யும்
தொழிற்சாலை நிறுவிய மானிடா
உன் சுய நலத்தில்
சமூகத்தை புதைத்தாயடா?

சமையலறைத் தேவைக்காய்
துருவிய சிறட்டையை
கைப்பணிக்கும்
கல் அடுப்புக்கும்
காசாக்கவும் வாய்ப்பிருந்தும்
கண்டயிடம் பரப்பி
நுளம்புக்கு இருப்பிடம் வழங்கும்
சமூக விரோதம் என்பது
இன்னும் புரியாத மனிதா?

குறைந்த விலையிலே
கண்ணாடி போல் நொருங்கும்
பிளாஸ்டிக் வளவெல்லாம்
அகற்ற மனமில்லாமல்
அனாதை போல் அங்குமிங்கும்

சமைக்க ருசிக்க அவசரமாய்
வெட்டிய ரின் மீனை
கறல்பிடிக்கும் காலமெல்லாம்
காத்து வைக்கும்
கபடமில்லா இரக்க குண
தேவர்கள் நாமெல்லாம்

மானிடா? உன் ஒரு நிமிட
சோம்பலால் நீ மட்டுமல்ல
ஊர் மக்களே அச்சத்தில்
வாழுதடா? உன்னால்
முழு சுகாதார படையும்
போதாமைக்கு முப்படையும்
உதவிக்கு திணைக்களமும்
கண்ணுக்கு புலப்படா
நுளம்பின் பரம்பரையாம்
குடம்பி தேடி நிம்மதி
தொலைக்குதடா?

காலம் எதுவெனினும்
காப்போம் சூழலை
மன நிலையின்
மாற்றத்தால்



அருலானந்தம் ஞா.பிரகாஷ்
கந்தப்பளை

# கனவு கண்மணியே

கண்மூடித்தனமான
காதலால் கவலைகளை
மறந்து கனவுகளை
நினைத்து என் கண்
எதிரே தோன்றி
தொலைந்து போன
என் கண்மணியே?
உன் முகத்தின் அழகை
பார்க்க என் இரு
விழிகள் போதாதோ?
என் கண்ணே?.....
கடலினில் சுதந்திரமாய்
சுற்றி திரிந்த மீனை
பிடித்து கண்ணாடி
பெட்டிக்குள் அடைப்பது போல்
என் காதலும்
என் இதயத்தில்
அடைப்பட்டு
கிடக்கின்றதே?
என் கண்மணியே?......
காலங்கள் கடந்து செல்ல
காதலை சொல்ல முடியாமல்
கனவுகளுடன்
தொடர்கிறதே இந்த
பொல்லாத காதல்....



# எனது வாரிசு

கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர்

வயதொன்றை நிறைவு செய்தாய்
வாழ்தலில் இணைந்து கொண்டாய்
வருவதை எதிகொள் மகனே.

கல்வியில் நன்கு கவனமெடு
கற்றதை மற்றவர்க்கு கற்றுக்கொடு
கனவு காணு நல்லதாய்.

பெற்றோருக்காக எதையும் செய்
பேணிப் பாதுகாத்துக் கொள்
பெருமையாய் புகழ்ந்து பேசு.

உடன் பிறப்புகளுக்கு உண்மையாகு
உறவுகளுக்கு உரமாகி நில்
உண்மையைப் பேசி உயர்வாகு.

கருணை நிறை முகமும்
கருமை நிற முடியும்
கண்களில் ஒளியும் சிறப்பாகுது.

மகனுக்கு மகனாய் பிறந்தாய்
எனக்கு வாரிசாய் மலர்ந்தாய்;
ஏற்றமாய் என்னில் இணைந்தாய்.

ஏடுப்பாய் என்னாளும் வாழ
ஏகனை இரஞ்சுகின்றேன் உனக்காக
எப்போதும் அப்பாவை நினைத்துக்கொள்.

வயது வந்த பின்னர்
முகநூலில் கவிதையைப் பார்
எனக்காக எதையாவது பதிவுசெய்.

இம்மையில் நிறைவான செல்வங்களுடன்
இன்னலின்றி வாழ்ந்து மகிழ
இறைவனிடம் இருகரம் ஏந்துகின்றேன்.

என்றும் உன் நினைவுடன்
எந்நாளும் தினம் தினம்
ஏங்கித் தவிக்கும் அப்பா



# புன்னகை போதும்...

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

ஒரு கோபத்தின் முடிவில்
ஒரு அழுகையின் முடிவில்
ஒரு சண்டையின் முடிவில்
எதையேனும்
தூக்கியெறிந்து உடைத்திட
தூரமாய் தூக்கி போட்டிட
துச்சமாக நினைத்திட
தோன்றும் போதெல்லாம்

இத்தனைக்கும் மாற்றமாய்
புன்னகையொன்று
பதிலாக மாறுதல்
எத்தனை நலம்

கோபத்தின் முடிவில்
சிரிக்கிறாயென யாரேனும்
தலையில் அடித்துக் கொண்டு
திரும்புகையில்
புன்னகையும் இத்தனைக்குமான
பதில் தானென
உணர்த்திட வேண்டும்
அவ்வளவே

அழுகையின் முடிவில் யாரேனும்
புன்னகைப்பார்களாவென
ஐந்தடி தள்ளி நிற்கும்
நண்பி கேட்கையில்

புன்னகையின் போது
துளிர்க்கும் கண்ணீருக்கு
புது உத்வேகம் அதிகமென
தெரியப்படுத்திட வேண்டும்
அவ்வளவே

ஓயாத சண்டையின் முடிவில்
ஓராயிரம் வார்த்தைகளை
கொட்டித் தீர்த்த பின்

உன்னைப் பார்க்கவே
பிடிக்கவில்லையென
முன் நிற்பவர்
எரிந்து விழுகையில்

அத்தனையும் மறந்து
மெல்லமாய் புன்னகைத்தல்
தான் இதயத்துக்கு இதமான
வருடலென உணர்த்திட
வேண்டும் அவ்வளவே

மொத்தத்தில்
எதிலும் கிடைத்திடா பேரமைதி
இதழ் உதிர்க்கும்
புன்னகையில் மனதுக்கு
கிடைத்து விடுகிறது

ஆதலாலேனும்
புன்னகைத்திட வேண்டும்
அடிக்கடி
அனைவர் முன்னிலையிலும்
அச்சமின்றி
அவ்வளவே!

# அழகிய விருந்து

ஏ.எம். கஸ்புள்ளா

கண்ணிறைந்த காட்சியதை ஓவியமாக்கி
கலைத்தெறிந்து விட்டது போல
கொன்றை மரமும் புன்னை மரமும்
பூத்துக் குலுங்கி நிற்கும் மண்ணிறமோ?
பொன்னிறமாய், வெண்ணிறமாய் மாறி நிற்கும்
நன்னிலமாம் நெய்தலெனும் சிறந்தோங்குமூரில்

திருமணம்தான் மெல்லத் தள்ளிப் போவதும்
திங்களது கழிந்து துயருறுவது கண்டும்
பெரும் குறையதாய் பெண்டீர் தூற்ற
பாசத்தலைவியின் உயிர்த்தோழி காதலனிடம்
பொறுப்புடன் நிலையை எடுத்துச் சொல்லிட
பொருந்தித் தன் திருமண ஏற்பாடுகளைச் செய்தான்

ஈழமதை படையெடுப்பது பற்றி
இராமபிரான் படையுடன் ஆலோசிக்கும் போதில்
ஆலமர பறவைகள் ஒலியெழுப்பிவிட
ஆங்கவனின் கையசைவில் அடங்கி விட
காலமதில் தூற்றிய வனிதையரும் வாயது
கட்டியதுபோல அமைதி நிலவ நின்றனரே!

பரதவர்கள் பிடித்த மீன்களை பெருமை
பாராட்டாது பகிர்ந்து கொண்டது போல
பரதத்தலைவன் தன் முயற்சியால் திருமண
பந்தம் கூடியது என்று கூறாது
உறவாக நின்ற யெனையும் பாராட்டினன்
உனக்கினிவிருந்தளிக்க அழைத்துச் செல்வான்



கவிஞர்: அப்துல் லத்தீப்

# பெரும் செல்வம்

மழலைகளின் சிரிப்பைவிட
மனதுக்கு விருந்தில்லை
குழந்தைகளின் குறும்பைவிட
கவலைபோக்கும் மருந்தில்லை
★★★
கல் மனமாய் இருந்தாலும்
கடும் கோபம் வந்தாலும் பிள்ளை
செல்வங்களின் முகம் பார்த்தால்
சோகங்கள் மறைந்துவிடும்
★★★
மழலைகளின் சிரிப்பினிலே
மயங்காதோர் யாருமில்லை
முரட்டுத்தனம் உள்ளோரில்
மனம் உருகாதோருமில்லை
★★★
காசு பணம் சேர்ப்பதிலே
காணாத கண்குளிர்ச்சி
குழந்தைகளின் சிரிப்பினிலே
கண்டிடலாம் பெரும் மகிழ்ச்சி
★★★
பாலகனின் பார்வையிலே
பசி கூட மறந்துவிடும்
பெற்றோரின் உள்ளத்தில்
பாசத்தைத் திறந்துவிடும்
★★★
கள்ளங்கபடம் இல்லாமல்
கலகலப்பாய் சிரிக்கின்ற
பிள்ளை முகம் ஒன்றேதான்
பாரினிலே பெரும் செல்வம்

# அப்பா



எரூர் கவிமாமணி எம்.ரி.எம்.அன்ஸார்

தந்தை என்றதும்
களித்திடும் உள்ளம்
சிந்தை குளிர்ந்தே
இனித்திடும் வெல்லம்
கந்தை ஆடையிலும்
புன்னகை வெள்ளம்
நொந்த வாழ்விலும்
இன்பமே துள்ளும்

உறவுக்காய் வாழ்ந்தே
உன்னதம் வெல்லும்
இரவும் விழித்ததே
நாளையகதை சொல்லும்
பரவும் இலக்கும்
நன்மை கொள்ளும்
வரவும் இன்றியே
செலவும் கொல்லும்

வறுமையை விரட்டப்
போராட்டம் தொடரும்
வெறுமை வாழ்வில்
சலிப்பே படரும்
பொறுமைக்குச் சான்றாய்
வாழ்வே இடரும்
சிறுமையாய்ப் பிறந்ததற்காய்
மறையும் சுடரும்

அப்பாவின் கைபிடித்தால்
அடைந்திடலாம் உயரம்
தப்பாமல் நல்வழியில்
களைந்திடலாம் துயரம்
எப்போதும் அவரின்
வார்த்தையே வைரம்
களிப்பில் ஆழ்த்திடும்
அவரே வரம்..!

# வாழ்ந்து காட்டு!

எஸ். ரவீந்திரன்

உனக்கு துரோகம் செய்தவர்களை
ஒரு மூலையில் வை
உன்னை அவமானப்படுத்தியவர்களை
ஒரு தூசியாக நினை
உன்னைத் தாக்கியவர்களை
தள்ளியே வைத்துவிடு
நடந்தவற்றையெல்லாம்
ஒரு கனவாகப்பார்
நீ நிமிர்ந்து நில்
உலகை உற்றுப்பார்
உனக்கான இடம் இருக்கும்
உன் பணியை நீ செய்
உன்னை தூற்றியவர்களை
உன் காலடிக்கு வர வை
அவர்கள் உன்னை
அண்ணார்ந்து பார்க்கும்படி
நீ வாழ்ந்து காட்டு!

# அநீதி வெக்கையில்

மூதூர் றிஸ்வின்

படைத்தவனை
பார்க்கும்
பக்தன்

படிப்பாளிகளின்
தங்கும் இடம்

தூய்மையை
சலவையாக்கும்
சக்தி

ஆசீர்வதிக்கும்
தங்கக் குடிநீர்

சுவர்க்கம்
விரும்பும்
சுவாசம்

என்று....
நேற்று முந்தினம் வரை
நினைத்தேன்

அவைகள்...

அழகான வாசனையான
நஞ்சுகள்

பிஞ்சு உள்ளம் போன்ற
வேசத்துடன்
மூட்டை பூச்சுகள்

ஏன்?
பழகினேன்
வெக்கம்

பார்க்க
கண்கள் விரும்ப வில்லை

கற்ற
சிறிய பெரிய சுடர்களையும்
நெஞ்சுக் கூடு
தூக்கி வீசியது

இமயமலைக்கு மேலே
மரியாதை கோபுரம்
வைத்த இடத்தில்

மரியானா
ஆழி பிறந்து

அடியில்
ஆழ்துளை சுரங்கம்
குடி இருக்கிறது

எனக்கும்
உங்களுக்கும்
ஒரு
ஒற்றுமை இருக்கிறது

மரணத்துக்கு முன்பு
ஒரு தடவை
மரணித்து விட்டோம்

# வெறுமையாய் கிடக்கிறது எனது தெருக்கள்

ச. இராஜ்குமார்
திருப்பத்தூர் மாவட்டம்

ஒன்றாய் கூடி ஓடியாடி
அம்மாவின் தோள்களில்
பல கதைகள் கற்றோம்
சொந்தங்கள் கூடி
புன்னகைத்த நாட்கள்
எங்கே போனது...
தெருவெங்கும் கூட்டமாக
விளையாடிய சிறுவர்கள்
எங்கே போனது
வெறுமையாய் கிடக்கிறது
எனது தெருக்கள்
தெருவிளக்கில் படித்த
நியாபகங்கள் நெஞ்சில்
இன்னும் பாரமாய்
கண்களில் ஈரமாய்
பிழைப்புக்காக ஊரைவிட்டு
சென்ற சொந்தங்கள்
எத்தனை எத்தனை
நம் மண்ணில்...
பள்ளிகூட பாடம் முடிக்காமல்
அம்மாவிடம் அடிவாங்கிய
நினைவுகள் மறக்குமா...?

# British Council IELTS Prize 2023க்கான விண்ணப்பங்கள் தற்போது ஏற்பு

British Council IELTS Prize 2023க்கான விண்ணப்பங்கள் தற்போது ஏற்கப்படுகின்றன. வருடாந்த போட்டியினூடாக IELTS பரீட்சார்த்திகளுக்கு ஆங்கில மொழி மூல பல்கலைக்கழகங்களில் கற்கை கட்டணங்களில் 5000 ஸ்ரேளிங் பவுண் வரை ஆதரவளிக்கப்படுகின்றது.

இலங்கை, சீனா, ஜப்பான், ஹொங் கொங், இந்தோனேசியா, கொரியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்வான், தாய்லாந்து, வியட்நாம், பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பரீட்சார்த்திகள்,இந்த ஆண்டு IELTS Prize இல் பங்கேற்க முடியும்.




உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் IELTS ஊடாக பட்டப்படிப்பு அல்லது பட்டப்பின்படிப்பு கற்கைகளுக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்களுக்கு இதில் பங்கேற்க முடியும் என்பதுடன், 2023 ஜனவரி முதல் 2024 மார்ச் மாதம் வரை தமது கற்கையை ஆரம்பிப்பவர்களுக்கு பொருந்தும் வகையில் அமைந்திருக்கும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2023 செப்டெம்பர் 15ஆம் திகதி ஆகும்.

போட்டிகரமான விண்ணப்ப தெரிவு முறையினூடாக, இலங்கையிலிருந்து மொத்தம் ஒன்பது வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். அவர்களுக்கு தமது கற்கைகளை தொடர்வதற்கு ஆதரவளிக்கும் வகையில் பணப்பரிசை பெற்றுக் கொள்ள முடியும்.

British Council ஸ்ரீ லங்காவின் இலங்கைக்காக பணிப்பாளர் ஒர்லாண்டோ எட்வர்ட்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையர்களுக்கு இந்த விறுவிறுப்பான போட்டியினூடாக IELTS Prize ஐ வெல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

விண்ணப்பதாரிகளுக்கு பரிசு தொடர்பில் மேலதிக தகவல்களை, விண்ணப்பிக்கும் முறை மற்றும் அடிக்கடி கேட்கப்படும் வினாக்கள் பற்றி அறிந்து கொள்ள விரும்புவோர் https://takeielts.britishcouncil.org/takeielts/studyworkabroad/ieltsprize எனும் இணையத்தளத்தைப் பார்வையிடலாம்.

# கொழும்பில் இன்னொவேஷன் லெப்ஸினை ஆரம்பிக்கும் ஏஎஃப்ஐ கோர்ப்



உலகெங்கிலும் உள்ள பல்வேறு வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்யும் தொழில்நுட்ப தீர்வுகள் நிறுவனமாகிய ஏஎஃப்ஐ கோர்ப் (AFI Corp), அதன் அதிநவீன புத்தாக்க ஆய்வகத்தினை அண்மையில் ஆரம்பித்து வைத்தது.

கொழும்பு 3 இன் வர்த்தக மற்றும் தொழில்நுட்ப மையத்தில் அமைந்துள்ள ஏஎஃப்ஐ கோர்ப் இன்னொவேஷன் லெப்ஸ் (AFI Corp Innovation Labs) ஆனது படைப்பாற்றல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை ஒன்றிணைக்கும் ஒரு அற்புதமான இடமாக அமைக்கப்பட்டுள்ளது.

புதிதாக நிறுவப்பட்ட புத்தாக்க ஆய்வகம் நிறுவனத்தின் பயணத்தில் மற்றொரு மைல்கல்லைக் குறிப்பதுடன் படைப்பாற்றல், ஒத்துழைப்பு மற்றும் புத்தாக்கத்திற்கான மையமாக செயல்படும். 2,400 சதுர அடிக்கு மேல் பரந்து விரிந்து கிடக்கும் இந்த புத்தாக்க வசதி, தொழில்நுட்பத்தின் எல்லைகளைத் தாண்டி, உண்மையான வணிகச் சவால்களுக்கு மாற்றும் தீர்வுகளுடன் கூடிய தீர்வுகளை உருவாக்க, திறன் வாய்ந்தவர்களை ஊக்குவிக்கவும், மேம்படுத்தவும், வடிவமைப்பு நிபுணர்களால் உன்னிப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது மிகவும் பாதுகாப்பான இடமாகும், இது கைரேகை அணுகல் கட்டுப்பாடு, கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் அதிநவீன இணைய பாதுகாப்பு நெறிமுறைகளால் பாதுகாக்கப்படுகிறது.

ஏஎஃப்ஐ கோர்ப் (AFI Corp)இன் இன்னொவேஷன் லெப்ஸ் இலங்கையில் அதிகம் தேடப்படும் திறமையாளர்களை ஒன்றிணைத்து, அதிநவீன தொழில்நுட்பத்துடன் அவர்களுக்கு உதவுவதோடு, பரிசோதனைகளை ஊக்குவிக்கும், யோசனைகள் வளர்க்கப்படும் மற்றும் புவியியல் மற்றும் தொழில்துறைகளில் ஒத்துழைப்பினை சாத்தியமாக்கும் ஒரு வலுவூட்டும் இடமாகச் செயற்படும்.

# பட்டதாரிகளை கௌரவித்த DIMO Academy for Technical Skills



DIMO Academy of Technical Skills (DATS), 2022 ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழாவில் பட்டதாரிகளுக்கு பட்டமளித்து கௌரவிக்கும் முகமாக, சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தனது 31ஆவது பட்டமளிப்பு விழாவை அண்மையில் நடாத்தியிருந்தது. உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட Automobile Mechatronics தொழில்நுட்ப வல்லுநர்களின் மற்றொரு தொகுதியை இலங்கையில் உருவாக்கியுள்ள இந்த விழாவானது, கல்வியகத்திற்கு ஒரு பெருமையான தருணமாகும்.

இவ்விழாவில் German Diploma in Automobile Mechatronics மற்றும் Certificate Course in Automobile Mechatronics கற்கைகளை வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவர்களுக்கு அவர்களுக்கான பட்டங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. Automobile இனை Mechanical, Electrical, Electronics, IT அம்சங்களாக ஒருங்கிணைத்து ஒரே விரிவான திறனுடன் Automobile Mechatronics ஆக வழங்கும் இலங்கையின் முதலாவதும் ஒரேயொரு தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) நிறுவனமாக DATS விளங்குகின்றது.

இப்பட்டமளிப்பு விழாவின் பிரதம அதிதியாக இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் Holger Seubert கலந்து கொண்டார். அத்துடன் இலங்கையிலுள்ள ஜேர்மன் கைத்தொழில் மற்றும் வர்த்தக (AHK) பிரதிநிதிகள் குழுவின் பிரதம பிரதிநிதி Marie Antonia von Schonburg மற்றும் Goethe Institute Colombo நிறுவனத்தின் பணிப்பாளர் Stefan Winkler ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மேலும் 500 கிராமப்புற குடும்பங்களுக்கு பயனளித்துள்ள நெஸ்லே லங்கா



நெஸ்லே லங்காவின் தனித்துவமானதொரு சமூக அபிவிருத்தித் திட்டமான நெஸ்லே தென்னை வளர்ப்புத் திட்டம் அண்மையில் விரிவுபடுத்தப்பட்டு, மத்திய மாகாணத்தில் உள்ள 500 கிராமப்புற குடும்பங்கள் பயனடைவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது. இலங்கை தென்னைப் பயிர்ச்செய்கை சபையுடன் இணைந்து ஏழாவது ஆண்டாக முன்னெடுக்கப்படும் இத்திட்டமானது, இலங்கையில் தென்னைப் பயிர்ச்செய்கையை மேம்படுத்தும் நோக்குடன் தமது வீடுகளில் தென்னைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் 4,500 பேருக்கு கலப்பின தென்னங் கன்றுகள் மற்றும் ஏனைய வளங்களை வழங்குகின்றது. நிக்கவெரட்டிய, கெபித்திகொல்லாவை, அரலகங்வில, ஹொரவப்பொத்தானை, கந்தளாய் மற்றும் அரந்தலாவை ஆகிய இடங்களில் மாதிரி பண்ணைகளை நிறுவி, தென்னைப் பயிர்ச்செய்கையின் சிறந்த நடைமுறைகள் குறித்து பயனாளிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கும் இத்திட்டம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் ஏழாவது மற்றும் சமீபத்திய மாதிரிப் பண்ணை கந்தளமவில் நிறுவப்பட்டுள்ளது.

இந்த அரசதனியார் கூட்டாண்மை குறித்த தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்ட தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைவரான மாதவி ஹேரத், "நெஸ்லே தென்னைப் பயிர்ச்செய்கைத் திட்டத்தை மென்மேலும் கிராமப்புற குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் விரிவுபடுத்துவதில் நான் மிகுந்த பெருமையுடனும், நன்றியுடனும் உள்ளேன்.

இந்த நன்முயற்சியானது கடந்த பல ஆண்டுகளாக, பாரம்பரிய மற்ற தென்னைப் பயிர்ச்செய்கைப் பிரதேசங்களில் தென்னைப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கு வகிப்பதுடன், அறிவைப் பகிர்ந்துகொள்வதற்கான ஒரு தளமாக விளங்குகிறது. " என்று குறிப்பிட்டார்.

# Coca-Cola அறக்கட்டளையிலிருந்து 7,800 வறிய குடும்பங்களுக்கு உதவி

தற்போதைய சூழ்நிலையில் அடிப்படை தேவைகளை கூட பூர்த்தி செய்ய முடியாத சமூகத்தினரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. CocaCola அறக்கட்டளை ("TCCF" Coca Cola Company இன் உலகளாவிய நன்கொடையாளர் பிரிவானது) 7800 பின்தங்கிய வறிய மற்றும் அன்றாட உணவுக்காக கஷ்டப்படும் குடும்பங்களின் நலனுக்காக சேவாலங்கா அறக்கட்டளை மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அண்மையில் நன்கொடைகளை வழங்கியது. "Say We Care" எனும் இத்திட்டத்தின் மூலம் சேவாலங்கா அறக்கட்டளை மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் (SLRCS) இணைந்து உதவி தேவைப்படும் குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து இந்த உதவிகளை வழங்கின.

விலைவாசி உயர்வு, விவசாய உற்பத்தி கட்டுப்பாடுகள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் வறுமை நிலை 25% அதிகரிக்கும் என உலக வங்கி முன்கூட்டியே மதிப்பிட்டிருந்த நிலையில், இதன் விளைவாக, நாட்டில் பல குடும்பங்கள் ஒரு நாளைக்கு உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைக்க வேண்டியிருந்தது. விலை அதிகரிப்பு காரணமாக உணவின் ஊட்டச்சத்து தரத்தையும் குறைத்திருந்ததுடன், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களை மேலும் அசௌகரியப்படுத்தியுள்ளது.

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் உள்ள தன்னார்வ சமூக சேவை அமைப்பான சேவாலங்கா அறக்கட்டளை, TCCF இன் அனுசரணையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 10 மாவட்டங்களை உள்ளடக்கிய 6,000 நிவாரணப் பொதிகளை விநியோகித்தது மற்றும் பிராந்திய செயலகங்கள் மற்றும் கிராம சேவகர்கள் ஊடாக உதவி தேவைப்படும் குடும்பங்களை அடையாளம் கண்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கத்தாரில் இருந்து பணம் அனுப்பும் சேவையின் 20 வருட நிறைவைக் கொண்டாடிய கொமர்ஷல் வங்கி



கத்தாரில் இருந்து பணம் அனுப்பும் சேவையின் 20 வருட நிறைவை கொமர்ஷல் வங்கி அண்மையில் கொண்டாடியது. அங்குள்ள எக்ஸ்சேன்ஜ் ஹவுஸ் முகாமைத்துவ பிரதிநிதிகள், ஊழியர்கள், வங்கியின் பிரதான வாடிக்கையாளர்கள் என பல்வேறு பிரமுகர்கள் கலந்து கொண்ட ஒரு நிகழ்வாக இது அமைந்திருந்தது.

இந்த மைல்கல் நிகழ்வு தோஹாவில் உள்ள அலாவுதி ஹோட்டலில் இடம்பெற்றது. கத்தாரில் உள்ள இலங்கைத் தூதுவர் மபாஸ் மொஹிடீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தார். கொமர்ஷல் வங்கியின் டிஜிட்டல் வங்கிப் பிரிவு உதவிப் பொது முகாமையாளர் பிரதீப் பந்துவன்ஸவின் வரவேற்பு உரையோடு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

வங்கியின் பிரதான செயற்பாட்டு அதிகாரி எஸ்.பிரபாகர் முக்கிய தகவல்களை உள்ளடக்கிய பிரதான உரையை நிகழ்த்தினார்.

பணம் அனுப்பி வைப்பதில் கத்தாரில் உள்ள வங்கியின் பங்காளிகள், தெரிவு செய்யப்பட்ட இலங்கை வாடிக்கையாளர்கள் மற்றும் வங்கி ஊழியர்கள், வங்கியின் சில்லறை வங்கிப் பிரிவு மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு பிரதி பொது முகாமையாளர் ஹஸ்ரத் முனசிங்க, உலகளாவிய பணம் அனுப்பல் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளர் திருமதி. ரங்கிகா சந்திரசேன, கத்தாரில் உள்ள வங்கியின் வர்த்த ஊக்குவிப்பு அதிகாரிகள் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்நிகழ்வை குறிக்கும் வகையில் கேக் வெட்டப்பட்டும் கொண்டாடப்பட்டது.

மேலும் பணம் அனுப்பும் விடயத்தில் வங்கியின் பங்காளிகளாக செயற்படுகின்றவர்களுக்கு வங்கி முகாமைத்துவம் நினைவுப் பரிசுகளையும் வழங்கியது.

# எதிர்கால சந்ததியினரை ஆங்கில மொழி புலமையுடன் வலுவூட்டும் NDB வங்கி



பொறுப்புள்ள ஒரு பெருநிறுவனக் கட்டமைப்பான NDB வங்கியின் மூலோபாயக் குறிக்கோள்களுடன் இணைந்து, நிலைபேறான அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்காக உணர்திறன்மிக்க முயற்சிகளை வங்கி மேற்கொண்டது. எதிர்கால சந்ததியினரை ஊக்குவிக்கும் நீண்டகால முன்னெடுப்புகள் உள்ளடங்களாக, நாட்டின் மேன்மைக்கு குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பாற்றுவதற்கும் இவ்வாறான முயற்சிகளை அது மேற்கொண்டு வருகிறது.

ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதில் NDB வங்கி மற்றும் British Council ஆகியவற்றுக்கு இடையிலான கூட்டிணைவு, கல்வித்துறையில் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய முன்னெடுப்புகளில் ஒன்றாகும்.

முதலாவது செயற்றிட்டம் 2012ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், செயற்றிட்டமானது ஒரு வருடத்திற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. மேலும், வடமேல் மாகாணத்தில் இரண்டாம் நிலை ஆங்கிலப்பாட ஆசிரியர்களின் கற்றல் திறன்களை விருத்தி செய்வதையும் அது நோக்காகக் கொண்டுள்ளது. இவ்வாறே இன்றுவரை 13 வருடங்களாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

முதலாவது முன்னோடித் திட்டமானது, அவர்களுடைய அந்தந்த வலயங்களிலுள்ள 100க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சி நெறியை வழங்குவதற்காக 20க்கும் மேற்பட்ட 'ஆசிரியர் பயிற்றுவிப்பாளர்களை' உள்ளடக்கியிருந்தது. மொழி விருத்தி மற்றும் வகுப்பறை நடைமுறை ஆகிய இரண்டுக்கும் ஒரு புதிய பார்வையை முன்னோடித் திட்டத்தின் தாக்க மதிப்பீடு பரிந்துரைத்துள்ளது. அதனால், English for Teaching 1 என்னும் பயிற்சி நெறி பொருத்தமானதாகத் தேர்வு செய்யப்பட்டு, 2013 முதல் 2018 வரை நடத்தப்பட்டது.

# இலங்கை சந்தைக்கு மின்சார மிதிவண்டி டயர்களை முதல் தடவையாக அறிமுகப்படுத்தும் DSI Tyre

இலங்கையின் முன்னணி மிதிவண்டி (சைக்கிள்) டயர் உற்பத்தி நிறுவனமான DSI Tyre கடந்த காலங்களில் இலங்கையில் பெரிதும் பிரபலமடைந்த மின்சார மிதிவண்டிகளுக்கென தனித்துவமாக உற்பத்தி செய்யப்பட்ட டயர்களை எமது நாட்டு சந்தைக்கு அறிமுகப்படுத்துகிறது. மேற்படி டயர்களை தற்பொழுது சகல டயர் முகவர் நிலையங்களிலும் www.dsityreshop.com இணையதளத்தின் ஊடாகவும் கொள்வனவு செய்ய முடியும். மின்சார மிதிவண்டிகளுக்கு சாதாரண மிதிவண்டி டயர்களை பாவிப்பது பொருத்தமற்றதென்பதோடு அதற்காகவே தனித்துவமாக உற்பத்தி செய்யப்படுகின்ற டயர்களையே பயன்படுத்த வேண்டும். DSI Tyre நிறுவனம் மின்சார மிதிவண்டிகளுக்கென உற்பத்தி செய்யும் டயர்களுக்கு சர்வதேச சந்தையிலும்



நல்ல வரவேற்பு உள்ளது. மின்சார மிதிவண்டிகள் சாதாரண மிதிவண்டிகளை காட்டிலும் வேகமாக பயணிப்பதாலும் அதன் தன்னியக்க பயன்பாடு அதிகம் என்பதாலும் மிதிவண்டியின் இயக்கத்துக்கும் பயணிப்போரின் பாதுகாப்புக்கும் அதற்கென தனித்துவமாக உற்பத்தி செய்யப்பட்ட டயர்களை பாவிக்க வேண்டும்.

மின்சார மிதிவண்டிகள் இலங்கைக்கு புதிய அனுபவமாக இருப்பதால் அவற்றின் சரியான பாவனை தொடர்பாக மக்களுக்கு குறைந்தளவிலான புரிதலே உண்டு. இந்த டயர்கள் சாதாரண டயர்களை விட வலுவானவை. மிதிவண்டியின் வேகத் தடுப்பு மற்றும் வேகக் கட்டுப்பாட்டை இலகுவாக்கும் தொழில்நுட்ப அம்சங்களை கொண்டதாக DSI மின்சார மிதிவண்டி டயர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

# பிரார்த்தனை

பாடசாலை விட்டு வீட்டுக்கு களைப்போடு வந்த மகனுக்கு அவசர அவசரமாக சாப்பாட்டை தயார்ப் படுத்திக் கொண்ட உம்மாவிடம் அன்பாக "என்ன கறி இறைச்சியா? கோழியா?" என்று கேட்டபோது, "அதெல்லாம் கிடையாது சாதாரண சாப்பாடுதான். இந்தக் காலத்தில சாப்பாடு நாங்க நினைச்சமாதிரி கிடைக்காது. இருக்கிறது சாப்பிடுங்க மகன்" என்றாள்.

சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது சற்று அமைதியாக "உம்மா இண்டைக்கு எங்கட வகுப்பு நண்பன் ஒருவருடைய பிறந்தநாளாம் எல்லோருக்கும் இரவுச் சாப்பாடாம். அதில் கலந்து கொண்டு வீட்டுக்கு வர நேரமாகும். எனக்கு சாப்பாடு தேவைப்படாது. நீங்களும் வாப்பாவும் சாப்பிட்டுக் கொள்ளுங்கள்" அன்பாகச் சொன்னான்.

"மகன் போறது சரி வீண் வேலைகள் எதிலும் ஈடுபடாமல் ஒழுங்கா நடந்து கொள்ளோனும். காலம் கெட்டுப் போச்சி, யாரையுமே நம்ப ஏலாம இருக்கு" என்று மகனுக்கு புத்திமதி சொல்லிக் கொண்டாள்.

நண்பர்களின் வரவை எதிர்பார்த்தவன், அவர்களின் வருகை தாமதமானதால் பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்து சிறு தூக்கம் போட்டான். நண்பர்களின் ஆரவாரத்தால் எழுந்து அம்மாவை அழைத்து, "செலவுக்கு காசு இருந்தால் தாங்களேன்" எனக் கேட்டான். மகனின் ஆசையை நிறைவேற்றி மீண்டும், மீண்டும் ஒழுக்க விழுமியங்களை கண்டிப்பாக்கி வழியனுப்பி வைத்தாள்.



இரவு பத்து மணியாகியும் வெளியே போன மகன் வீட்டுக்கு வராத காரணத்தால் பதற்றத்தோடு காணப்பட்டாள் கதீஜா. எங்கே போனான், என்ன ஆனான் என்று தனக்குள் கேட்டுக் கொண்டு வீட்டின் கதவைத் திறந்து வெளியே போய் பார்த்தாள். யாருமே இல்லாமல் வீதி வெறிச்சோடிப்போய்க் கிடந்தது.

வீட்டின் உள்ளே நீட்டி நிமிர்ந்து கட்டிலில் உறங்கிக் கொண்டிருக்கும் கணவனிடம் சென்று "என்னங்க மகன் இன்னும் வரவில்லையே தேடிப் பாருங்களேன்" வினயமாக வேண்டினாள்.

"பேசாம நீயும் போய் படு. போனவனுக்கு வரத் தெரியும். வீட்டுக்கு நேர காலத்தோடு வரவேணும் என்று எத்தனையோ தரம் சொல்லி இருக்கிறன். அதையும் கேட்காம இருக்கிறவனை என்ன செய்வது, அப்படி வளர்ந்து விட்டான்".

வீட்டின் வெளிக்கதவில் யாரோ தட்டுகின்ற சத்தம் கேட்டு விரைந்து சென்று கதவைத் திறந்தபோது மகனுக்குப் பதிலாக வேறு ஒருவர் நின்று கொண்டிருப்பதைக் கண்டு, "என்ன வேணும் நீங்க யாரு?" என்று கேட்டாள்.

"கோபித்துக் கொள்ளாதீங்க புள்ள. என்ர மகன் இவ்வளவு நேரமாகியும் வீட்டுக்கு வரவில்லை. என் மகன்ர கூட்டாளி உங்கள் மகனாம். ஒருவேளை உங்க வீட்டுக்கு வந்திருப்பானோ என்று கேட்கத்தான் கதவைத் தட்டினேன். கோபித்துக்கொள்ளாதீங்க" என்று மீண்டும் கூறினாள்.

"நாங்களும் எங்களுடைய மகனுக்காகத்தான் காத்திருக்கிறம். அவனும் இன்னும் வரவில்லை எங்கே போனான் என்று தெரியவில்லை" என்று சொன்னதும் எதுவுமே பேசாமல் துக்கத்தோடு அந்த இடத்தை விட்டும் விலகி நடைபோட்டாள் மகனைத் தேடி.

கதீஜா திருமணமாகி குழந்தைப் பாக்கியம் இல்லாமல் மூன்று வருடங்களின் பின்னர் கிடைத்த மகன்தான் கரீம். மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டவன். யார் எதைச் சொன்னாலும் மகனின் பக்கமே நின்று வாதிடுவாள். மகனின் வருகை தாமதமாகிக் கொண்டு போனதால் உறக்கமும் கண்களை அமுக்கியது.

"உனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும் பேசாம போய் படுத்துக்க" மனைவியை கோபமாக பேசினான் அவளது கணவன்.

கணவனின் சொல்லை தட்டிக்கழிக்காமல் உறங்கச் சென்ற போது, "உம்மா நான் கரீம் வந்திருக்கன் கதவைத் திறந்து விடுங்க" மகனின் குரலைக் கேட்டவள் பதைபதைத்துக் கதவைத் திறந்த போது அவள் கண்ட காட்சி அவளைத் திகைப்பும் கோபமும் அடையச் செய்தது.

"படிச்சு, படிச்சு எத்தனை முறை சொல்லியும் கேட்காமல் அசட்டை செய்தாயே இப்பவாவது மகனைப் பற்றி புரிஞ்சு கொண்டாயே"என்றான் சலிப்புடன் கணவன்.

கணவன் பேசியதைக் கேட்டு எதுவுமே பேசாமல் அமைதியாக இருந்து விட்டு, மகனை சாப்பிட வருமாறு அழைத்தாள். மகன் தள்ளாடியவாறே எதையோ பேசினான். தாயும் கோப மேலீட்டால் மகனுடைய கன்னத்தில் அறைந்து விட்டாள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த வாப்பா

"இப்படியெல்லாம் செய்வதை காலா காலத்தில் செய்திருந்தா இந்த நிலைக்கு வந்திருக்கமாட்டான். அவன் கேட்டதெல்லாம் கொடுத்து கண், காது தெரியாமல் வளர்ந்துப் போட்டு அடிக்கிறதில வேலை இல்லை. அளவுக்கு அதிகமான நண்பர்களுடன் உறவு வேண்டாம் என்று நான் சொன்னபோது என்னைத் தடுத்தாய். அதற்குரிய பலனை அனுபவிக்கிறாய். வேறு வழிகள் இருந்தால் பாரு. அவன் நல்லவனாகட்டும். போதையில் கிடக்கிறவன் எப்படி சாப்பிடுவான். எப்படித்தான் திணித்தாலும் அவன் சாப்பிட மாட்டான். அவன் உறங்கட்டும் விடு. இவனை எப்பிடி எல்லாம் நம்பி இருந்தம், இவனும் ஒரு மனிசனா?" மனைவியிடம் கோபத்தோடு கேட்டு வேதனைப்பட்ட கணவனை ஒருவாறு சாந்தப்படுத்தினாள்.

மகனை ஒரு நல்ல இடத்துக்குக் கொண்டு வரவேணும் என்பதற்காக நாயாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்து போன கணவனை எண்ணிக் கவலைப்பட்டாள்.

நல்லவங்களோடு சேர்ந்து படிக்க வேணும் என்று சொன்னதையெல்லாம் கேட்காமல் தான் நினைத்தவர்களோடு சேர்ந்து வாழ்க்கையை பாழாக்கிய மகனின் எதிர்காலத்தை எண்ணி அவள் கவலைப்படாத நாள் இல்லை.

வாப்பாவும் உம்மாவும் என்ன பேசிக் கொள்கிறாங்க என்று அறிந்து கொள்ள முடியாத அளவுக்கு போதையில் மூழ்கிக் கிடந்து எதை எதையோ சொல்லி உளறிக் கொண்டிருந்தான் கரீம்.

மகனின் செயலுக்காக மற்றவர்களை கடிவது வீண் வேலை. நம்ம பிள்ளை கவனமாகவும், கண்டிப்பாகவும் இருந்தால் இவ்வாறு நடக்காது. நண்பர்கள் நல்லவர்கள் அல்ல என்று தெரிந்தால், விட்டு விலகினால் போகுது. இதெல்லாம் தெரியாத அளவுக்கு அவன் என்ன சின்னப் பிள்ளையா?

கதீஜாவின் மகனுடைய செயல் பக்கத்து வீட்டாருக்கு வெறும் வாய்க்கு பொரி கிடைத்தாற் போல இருந்தது. வெளியில் சொல்லி வேதனைப்படுவதை விட முளையிலே கிள்ளி எறிந்துவிட எண்ணினார்கள்.

போதைப் பிரியர்களை மாற்றுவது கல்லில் நார் உரிப்பது போல இருக்கும். தங்களது மகன் யாரோ ஒரு பிள்ளையை விரும்பி இருக்கிறான் என்ற செய்திகூட பெற்றோருக்குப் பின்னர் தான் தெரியவந்தது. மகன் போதைக்கு அடிமையாகிவிட்டான் என்பது தெரிந்தால் அந்த திருமணம் என்னவாகுமோ என அவர்கள் பயந்தார்கள்.

அமைதியான சூழலில் அருமையாக வாழ்ந்தவன் முன்மாதிரியாக இருக்காமல் மற்றவர்கள் எள்ளி நகையாடும்படி வாழ்வதை எண்ணி கவலைப்பட்ட பெற்றோர் கண்ணீர் விட்டார்கள். மகனுடைய வாழ்க்கையில் விடிவு ஏற்படாதா என்ற கவலை அவர்களை ஆட்கொண்டது. போதை தெளிந்ததும் பெற்றோர் தன்னை எண்ணி மனம் வருந்துவதை மகன் ஒரு கணம் நினைத்துப் பார்த்தான்.

தன்னோடு படித்த நண்பர்கள் சுற்றி வளைக்கப்பட்டு போதையில் இருக்கும் போது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட செய்தியை அறிந்து திடுக்கிட்டான். பெற்றோரை ஒருகணம் நினைத்துப் பார்த்தான். கடந்த கால நினைவுகள் கண் முன்னே தோன்றின. தன்னை வளர்த்து ஆளாக்க பாடுபட்ட உள்ளங்களை வேதனைப்பட வைத்து விட்டேனே என்று கண்கலங்கினான். கூடாத நட்பின் விளைவை வெறுத்து வருங்காலத்தைப் பற்றி சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தான்.

சுபஹுத் தொழுகைக்கு அதான் சொல்லப்பட்டதைக் கேட்டு உடன் எழுந்த கரிம், "சுபஹுத் தொழ பள்ளி வாசலுக்குப் போகிறேன்" என்றபோது அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மகன் போதையின் பிடியில் இருந்து மீண்டான் என்பதை எண்ணி கண்ணீர் விட்டார்கள். கிழக்கு வானில் கதிரவன் ஒளியைப் பரப்பியது. மகனுக்காக அவர்கள் விட்ட கண்ணீர் பலனளித்ததை எண்ணி அவர்கள் பிரார்த்தித்தார்கள்.

**கலாபூஷணம் மருதமுனை ஏ.எம்.எம்.பாறூக்**

**வாரமஞ்சரியின் மஞ்சரி சிறுகதை பகுதிக்காக கதைகளை அனுப்புவோர், sirukathailakehouse@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்களது கதைகளை அனுப்பி வையுங்கள். தயவுசெய்து கதைகள் 1300 சொற்களுக்கு மேற்படாமல் இருப்பதை உறுதி செய்யுங்கள். (ஆர்)**

# சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலய தேர்த் திருவிழா



யாழ்ப்பாணத்தை தமிழரசர் ஆண்ட காலத்தில் சைவ சமயத்தின் மகத்துவங்களை நிலைநாட்டினார். சண்டிலிப்பாய் கல்வளை விநாயக ஆலயக் கொடியேற்றம் 23.06.2023 இல் ஆரம்பமாகி 02.07.2023 இல் இரதோற்சவம் நடைபெற உள்ளது.

சைவ சமயத்தை நிலைபெறச் செய்த ஆலயங்களில் இதுவும் ஒன்று. ஒல்லாந்தர் இந்த நாட்டை ஆண்டகாலத்தில் வாழ்ந்த பெரியார் வில்லவராய முதலியாரின் புத்திரர் சின்னத் தம்பிப் புலவர், இயற்றியருளிய நூல்கள் நான்கு. அவை மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, கரவை வேலன் கோவை, பறளை விநாயகர் பள்ளு என்பனவாகும். இவற்றில் இரண்டாவதாகக் குறிப்பிட்ட கல்வளையந்தாதி கல்வளை விநாயகரின் பெயரில் பாடப்பட்டிக்கிறது.

இப்புராதன தலமானது முற்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த இராஜகுமாரியான மாருதப்புரவீக வள்ளி என்பவரால் யாழ்ப்பாணப் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட ஏழு விநாயகர் ஆலயங்களுள் ஒன்றென கூறுவார்கள். இதன் மூலம் இப்புண்ணிய தலத்தின் தொன்மையை அறியக்கூடியதாக உள்ளது.

இந்த ஆலயத்தின் திருவூஞ்சல் பாடல்களை யாழ்ப்பாணத் தமிழ் அரச பரம்பரையில் உதித்த அழகாண்மை வல்லவ முதலியார் பாடியுள்ளார். இவர் அரசன் பரநிருபசிங்கனின் மூத்த புதல்வராவார். இவரது தம்பியாரான வெற்றி வேலாயுத முதலியாரின் ஆளுகையின் கீழிருந்த சண்டிலிப்பாயில் அமைந்த கல்வளை விநாயகர் பெயரில் அதிக பக்தியுடையவராகி கல்வளை விநாயகர் திருவூஞ்சல் என்னும் திருவூஞ்சல் பாடல்களைப் பாடி நிலைபெறச் செய்துள்ளார். பல வருடங்களாக ஆலயத்தின் தர்மகர்த்தா சபை செயலாளராக நான் கடமையாற்றினேன். அக்காலத்தில் எமது உறவினரான வீரசிங்கம் (நைஜீரியா) கோவில் முன்னேற்றங்கள் பற்றி என்னுடன் உரையாடுவதுண்டு. ஒருமுறை என்னுடன் கோவில் வாசலில் நின்று தான் என்ன திருப்பணி செய்ய வேண்டும் என வினவினார். ஆலயத்திற்கு தேர் இல்லாத குறையை விளக்கமாகக் கூறினேன். அவர் இன்முகத்துடன் தான் பொறுப்பேற்று செய்விப்பதாகக் கூறினார்.

அதன்படி அழகிய சித்திரத் தேர் செய்யப்பட்டு வெள்ளோட்டமும் நடைபெற்றது. அப்பொழுது நான் இவ் அற்புதத்தைப் பற்றி அடியார்களுக்கு சொற்பொழிவாற்றி மகிழவைக்கக் கூடியதாக இருந்தது. தற்பொழுது தருமகர்த்தா சபையினர் பல அடியார்களின் உதவியுடன் திருப்பணி வேலைகளை செய்விக்கின்றனர்.

**சுவாமிநாதன் தர்மசீலன் (JP)**
**முன்னாள் செயலாளர்**
**ஆலய அறங்காவலர் சபை**

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் மணிமொழி மௌலானா




இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் இம்மாதம் 04ஆம் திகதி (04.07.2023) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியில் மணிமொழி மௌலானா மௌலவி அல்ஹாபிஸ் எம்.ஜே.கலீலுர் ரஹ்மான் பாகவியின் நினைவுகள் பகிர்ந்து கொள்ளப் படவுள்ளன.

இவரோடு நெருக்கமாக பழகும் வாய்ப்பு பெற்ற, கொழும்பு செட்டியார் தெரு மீலாத் இயக்க பொதுச்செயலாளரும், இஸ்லாமிய இலக்கிய கழக தலைவருமான பீ. நிலாமுத்தீன், கலீலுர் ரஹ்மான் ஹஸ்ரத்தின் நெருக்கத்துக்குரிய தோழர், மர்ஹும் "இறையருட் கவிமணி" பேராசிரியர் அப்துல் கபூர் சாஹிப்பின் மகன், ஜமால் முஹம்மத் தமிழகத்திலிருந்து கலந்து கொண்டு அன்னாரின் நினைவுகளை நினைவு கூருகிறார். அத்தோடு சென்னை மாநகரம் அடையாரில் தற்போது வசித்து வரும் கலீலுர் ரஹ்மானின் இளைய புதல்வர், எம்.ஜே.கே.கலீக்குஸ்ஸமான் மூலமாக பெறப்பட்ட தகவல்களும் நிகழ்ச்சியில் பேசப்பட இருக்கின்றன. இன்றைய கருவூர் மாவட்டம் பள்ளப்பட்டியில் 1905ஆம் ஆண்டு பிறந்த, கலீலுர் ரஹ்மான் ஹஸ்ரத், இந்திய சுதந்திரத்துக்காக பல்வேறு பங்களிப்பு செய்தவர். 1941–1945 காலப்பகுதியில் நேத்தாஜி படையின், ஒரு பிரிவின் ஜெனரலாக ஹஸ்ரத் பணியாற்றியமை சிறப்பித்து சொல்லத்தக்கது. 1949ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்தார்.

1950 தொட்டு 1960 காலப்பகுதியில், கொழும்பு 3ஆம் குறுக்குத் தெரு மேமன் ஹனபி பள்ளியில் பிரதான பேஷ் இமாமாக கதீபாக பணியாற்றி உருது, தமிழ் மொழிகளில் குத்பா பிரசங்கம் நடத்தி மக்கள் மனங்களில் தனியானதொரு இடத்தினை தக்கவைத்துக் கொண்டார்.

இன்னும் இலங்கை நாட்டின் பல பாகங்களுக்கும் பயணித்து பெருமளவில் சன்மார்க்க பணியாற்றி இலங்கை மக்களின் நன்மதிப்புக்குரிய உலமாவாக திகழ்ந்தார்.

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 76



திரு/திருமதி.செல்வி ............................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ............................................
............................................
............................................
திகதி ........................ கையொப்பம் ........................

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 76
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 76

**இடமிருந்து வலம்**

1. அனர்த்தத்தால் பாதிக்கப்படுபவர்களுக்கு வழங்கப்படும் உதவி
5. பணம்
7. உடலில் தோலுக்குக் கீழுள்ள பகுதி
8. ஆற்றுக்கு மேலாக போக்குவரத்துக்காக அமைக்கப்படும் பாதை
10. மனிதர்கள் கூட்டமாக இணைந்திருப்பது
11. ஒரு வாத்தியக் கருவி
13, பதவிநிலைப் பணி
15, பனையோலையால் பின்னப்பட்ட பெரிய பெட்டி(குழம்பியுள்ளது)
17. சந்திரன்
18. ஆகாயம் (திரும்பியுள்ளது)
20. தன்மை இடத்துப் பன்மைச் சொல் (திரும்பியுள்ளது)
22. பூமி
24. அந்திப் பொழுது
26. வீட்டில் வளர்க்கப்படும் பிராணி (திரும்பியுள்ளது)
27. பெண் திரும்பிவிட்டாள்

**மேலிருந்து கீழ்**

1. அமைதி
2. துன்பம்
3, அம்பு (குழம்பியுள்ளது)
4. வலிமை (தலைகீழ்)
6. கடல்வாழ் உயிரினம்
9. பெண்களின் காதணி (குழம்பியுள்ளது)
10. உள்ளுறுப்பு (குழம்பியுள்ளது)
12. பாடல் வகை (தலைகீழ்)
14. உறுதி அல்லது நிலையானது (குழம்பியுள்ளது)
16. ஓர் உறுப்பு
19. ஆகாயக் கப்பல் ஓட்டுநர்
21. ஒருவகைப் புல்
22. உயரமான பகுதி
23. தொடக்கம் (தலைகீழ்)
25. மீன்பிடிக்கவும் பயன்படும் (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 75

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. சுவடு
3. ஐப்பசி
6. வைகை
7. சய
8. வதை
9. சம்பளம்
11. பாதாளம்
13. சிவிகை
15. ரவி
17. விழா
18. குடிகாரன்
21. விமானம்
23. தினை
24. பாம்பு

**மேலிருந்து கீழ்**

1. சுவை
2. வகை
3. ஐயம்
4. பவளவிழா
5. சிதை
7. சம்பா
9. சதா
10. பசி
11. காத்திரம்
12. குளவி
14. கைவிலங்கு
16. கடினம்
19. மான்
20. பாரம்
22. புவி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 75

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ. 500.00 | இரண்டாம் பரிசு ரூ. 350.00 | மூன்றாம் பரிசு ரூ. 150.00 |
|---|---|---|
| **கே.எம்.எம்.பாரூக்,** இல, 16, கும்பியன்கொட மாத்தளை | **சி. அருந்ததி** 241/ 15 ரொக்ஹில், பதுளை | **ஏ.எல்.ஏ. அஸீஸ்** 17/A சிறிமல் மாவத்தை, தெஹிவளை |

### பாராட்டு பெறுவோர்

1. **ஏ.சி. சிறிதரன்** கொழும்பு 06
2. **எம்.ஷமீம்** கொழும்பு 11
3. **ஆர்.ஹலாஹ்** ஹப்புகஸ்தலாவ
4. **என். ஹாபியா,** வெலிகம
5. **எஸ். சந்திரிக்கா** களுவாஞ்சிக்குடி
6. **ஆர். சிவஞானம்** மட்டக்களப்பு
7. **து. ரிஷாம்பவி** மட்டக்களப்பு
8. **ஏ.சி. சிறிதரன்** கொழும்பு 06
9. **ரஜினி புண்ணியமூர்த்தி** மட்டக்களப்பு
10. **எஸ்.எச்.எம்.ஜிப்ரி** கொழும்பு 10

# கேள்விகோரல்

**வணிக வெடிபொருட்கள், சுடுகலன்கள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவு, வெலிசர, ராகமவிற்கு வணிக வெடிபொருட்கள், சுடுகலன், ரவைகளைக் கொள்வனவு செய்தல்**

01. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்து வணிக வெடிபொருட்கள், சுடுகலன்கள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவு (CEFAPUNIT) இற்கு கீழ்க்காணும் வெடி பொருட்களை கொள்வனவு செய்வதற்காக தகைமைகளை பூர்த்தி செய்யக்கூடிய வழங்குநர்களிடமிருந்து மாத்திரம் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

    ஒப்பந்த இலக்கம் : CEFAP/PRT/04/2022-Potassium Chlorate - 150,000 Kgs

    ஒப்பந்த இலக்கம்: CEFAP/PRT/05/2022-Red Phosphors - 10,000 Kgs

02. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களுக்குத் தேவையான மேலதிக தகவல்களை வெலிசர, ராகமவில் அமைந்துள்ள வணிக வெடிபொருட்கள், சுடுகலன் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவில் கொள்வனவு அதிகாரியிடம் தொ.பே இலக்கம் (0112958227/0112955514) இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

2023 ஓகஸ்ட் 17ம் திகதி 1400 மணிக்கு கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் முடிவடையும்.

**பணிப்பாளர்**
**வணிக வெடி பொருட்கள், சுடுகலன்**
**மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவு,**
**அரச வெடிபொருள் களஞ்சியம்**
**வெலிசர, ராகம**

SUNDAY OBSERVER aDZ
தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

## COLOMBO DISTRICT

**AVISSAWELLA** 036-2230446
Famous Bake House, No. 31, Seethawakapura

**ANGODA** 011 3069404
Kotikawatte Junction, Kudabuthgamuwa,

**ATHURUGIRIYA** 011 2760479, 011 4876968
267, Godagama Road,

**BATHTHARAMULLA** 011 2866705, 077 0736770
West Town, Bake House, Sweet House,

**BORALESGAMUWA** 071 6505533, 011 2519954
No. 17, Wewa Rd,

**HANWELLA** 011 4967962, 011 4967960
Sithumina Newspaper Agency, 144, High Level Rd, Pahathgama,

**HOKANDARA** 071 8685437
No. 501, North Hokandara,

**HOMAGAMA** 011 2892262, 077 7304046
"Aradanas", Senanayake Shopping Complex, Station Road,

**KADUWELA** 011 2579609
Nayana Bake House

**KADUWELA** 011 2412291, 011 4443566
375/1, Pahala Bomiriya, Yakkala,

**KALUBOWILA** 077 3551145, 011 2767259
No 195, Hospital Road,

**KESBEWA** 011 2703415
Seedevi Newspaper Office, 19, Horana Rd,

**KIRULAPONE** 071 5439396, 011 2514166
Ramani Book Shop, 27-A High Level Rd,

**KOTTAWA** 011 2842569, 071 2510950
Srisara Groceries, No. 101/2,

**MAHARAGAMA** 077 7686683, 011 2896373
Supermarket Complex, 88, High Level Rd,

**MALABE** 011 2791782
Kumudu Stores,

**MEEGODA** 011 2858290, 011 2831120
Nandana Stores, No. 635/3, Padukka Rd.,

**MORATUWA** 011 2647410, 077 5486719
Wijesekara Stores,

**MORATUWA** 0112 657326, 0114 212989
S.J.M. Fareed, 222, Egoda Uyana, Modera

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## இலங்கை முதலீட்டுச் சபை

# பெறுகை அறிவித்தல்

கீழே குறிப்பிட்டுள்ள பெறுகைக்கான விலைமனுக்களுக்கான அழைப்பானது 2023 ஜூலை 02 ஆம் திகதியன்று ''சண்டே ஒப்சேவர்'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன **www.investsrilanka.com** என்ற இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**INVITATION TO SUBMIT PROPOSALS FOR SELECTION OF A PRODUCTION COMPANY FOR CORPORATE VIDEO OF THE BOARD OF INVESTMENT OF SRI LANKA**

ஒப்பந்த இல.: **BOI/ADMN/Q/063/2023**

இப்பெறுகை தொடர்பான விலைமனுக்கோரல் ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ''சண்டே ஒப்சேவர்'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்திற்கமைவாகவும் **www.investsrilanka.com** என்ற இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்திற்கமைவாகவும் செயற்படலாம்.

விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை நிருவாகத்திற்கான சிரேஷ்ட பிரதி பணிப்பாளரிடமிருந்து 011 2543041/074 1531432 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

# பதவி வெற்றிடங்கள்

**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை**
**(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு)**

**புலனாய்வு அலுவலர் (பணிநியமன அடிப்படையில்)**
**தகைமை மற்றும் அனுபவம்**

உள்ளக திணைக்கள ஆரம்ப விசாரணைகளைக் கையாளுவதில் 8 வருடங்களுக்கு அதிகமான அனுபவம். அரசாங்க துறை நிறுவனமொன்றில் அல்லது அரசாங்க திணைக்களமொன்றில் குற்றவியல் புலன்விசாரணைகள், நீதிமன்ற வழக்குகள், தொழிலாளர் பிரச்சினைகள் போன்ற ஒழுக்காற்றல் விசாரணைகள் தொடர்பான நிகழ்வுகள் (அரச கூட்டுத்தாபனங்கள், அரசாங்க துறை நிறுவனங்களின் நிறைவேற்று/ சிரேஷ்ட மட்ட அல்லது மேற்பார்வை மட்டத்திலிருந்து ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

| | |
|---|---|
| தெரிவு செய்தல் தகவுத்திறன் | : நேர்முகப்பரீட்சையொன்றின் மூலமாக |
| பணக்கொடுப்பனவு முறைமை | : கீழே கூறப்பட்டவாறு பணிநியமன அடிப்படையில் |
| பதிவு செய்தல் சாட்சியம் | : ஒவ்வொரு சாட்சியத்திற்கும் 3,500 ரூபா |
| இடைக்கால அறிக்கைகள் | : ஒவ்வொரு இடைக்கால அறிக்கைக்கும் 5000 ரூபா |
| இறுதி அறிக்கை | : 10,000 ரூபா |

- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்வாதார படிக்கான தகுதியுண்டு.
- கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு வெளியே நடாத்தப்படும் ஆரம்ப விசாரணைகளுக்கு சமுகமளிக்க தேவைப்படின் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.

2023 ஜூலை 16 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையிலுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மனித வளங்கள் முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் ஆகியவற்றிற்கான பிரதி பொது முகாமையாளரை வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனைத்து தொடர்புடைய சான்றுப் பத்திரங்கள், முழுமையான சுயதரவு மற்றும் விண்ணப்பம் ஆகியன அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியானது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும். தொடர்புள்ள சான்றிதழ்களின் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பொது முகாமையாளர்,**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
**ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**

**புத்தசாசனம், கலாசாரம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு**

## தேசிய சுவடிக்கூடத் திணைக்களம்

# விலைக்கோரல் அறிவித்தல்

## அமிலமற்ற 3120 ஆவணப் பாதுகாப்புப் பெட்டிகளைக் கொள்வனவு செய்தல்

1. கொழும்பு 07, பிலிப் குணவர்தன மாவத்தை, இல. 07, தேசிய சுவடிகூடத் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் திணைக்களத்திற்கு அமிலமற்ற 3120 அமிலமற்ற பாதுகாப்புப் பெட்டிகளைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. விலைமனு கேள்விக் கட்டணமாக மீளளிக்கப்படாத 2000.00 ரூபா வைப்பை 2023 ஜூலை 17ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் கொழும்பு 07 தேசிய சுவடிகள் திணைக்களத்தின் நிதிப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. விலைமனுக்களை வேண்டி வியாபாரப் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் மட்டுமே விலைமனுக்கள் வழங்கப்படும்.

   விலைமனுக்களுடன் இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட தேசிய சுவடிகூடத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் முறையான படிவத்தில் வழங்கப்பட்ட 200,000.00 ரூபாவுக்கான மற்றும் 90 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். பிணை முறியின்றி சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

4. விலைக்கோரல் விலைகள் 90 நாட்கள் (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல்) செல்லுபடியாதல் வேண்டும்.

5. இரு நகல்களிலான விலைமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து தேசிய சுவடிகூடத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

6. 2023 ஜூலை 17ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்படும். அதன்பின் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

**தேசிய சுவடிகூடத் திணைக்கள பணிப்பாளர் நாயகம்**

2023 ஜூன் 30ஆம் திகதி,
**கொழும்பு 07, பிலிப் குணவர்தன மாவத்தை,**
**இல. 07ஆம் இலக்கத்தில் உள்ள**
**தேசிய சுவடிகூடத் திணைக்களத்தில்.**

National Lotteries Board — வியாழக்கிழமை 2023.06.29 — www.nlb.lk

| Lottery | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5160 | ரூ. 11,095,287.00 | V 3 8 8 5 7 8 |
| ராசி சுப மலன் | 469 | ரூ. 2,527,706.20 | 06 22 26 41 |
| தன நிதானய | 1190 | ரூ. 97,356,107.60 | Z 04 11 32 49 |
| ஜாதிக சம்பத | 1615 | ரூ. 13,082,173.12 | 4 3 1 3 1 4 |
| Mega Power | 1508 | ரூ. 333,110,646.00 | W 08 11 28 47 49 |
| கொவிசெத | 3402 | ரூ. 66,330,835.20 | S 05 49 51 75 |

# கேள்வி அறிவித்தல்

எமது கீழ் நாடு (காலி மாவட்டம்) மற்றும் மேல் நாடு (நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்கள்) தோட்டங்களின் சீவல்துண்டு இரும்பு, இயந்திராதிகளின் பாகங்கள் மற்றும் பாவனைக்குதவாத அம்சங்களின் விற்பனைக்காக கேள்விச் சபையினால் முத்திரையிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

பாவனைக்குதவாத அம்சங்கள் பின்வரும் தோட்டங்களில் பரீட்சித்தலுக்காக வைக்கப்பட்டுள்ளன: டெவிதுர தோட்டம் - எத்கந்துர (091-4943036) / டன்சினன் தோட்டம் (051-4925001), வேர்னலாண்ட்ஸ் தோட்டம் (051 4925011) மற்றும் ஷீன் தோட்டம் - பூண்டுலோயா (051-4925006) / நாயபென்ன தோட்டம் (081-4945061) மற்றும் நியு பீகொக் தோட்டம்-புசல்லாவ (081-4945056). அத்துடன் நிபந்தனைகள் மற்றும் மீளளிக்கப்படும்/ மீளளிக்கப்படாத வைப்புக்கள் மற்றும் கேள்விப் படிவங்கள் இன்னும் பலவும் தொடர்பான விபரங்களை தலைமை அலுவலகம் அல்லது உரித்தான தோட்டத்திலிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 4 மணிக்குமிடையில் பெற்றுக் கொள்ளலாம்.

எல்பிட்டிய பிளாண்டேசன்ஸ் பிஎல்சி ஆனது எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு முன்வைப்பையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது அனைத்து முன்வைப்புக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

2023 ஜூலை 21 ஆம் திகதியன்று பி.ப. 4 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கேள்வி விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**பிரதான நிறைவேற்று அலுவலர்,**
**எல்பிட்டிய பிளாண்டேசன்ஸ் பிஎல்சி,**
**9 ஆம் மட்டம், அட்கென் ஸ்பென்ஸ் கோபுரம் 01,**
**305, வொக்ஷால் வீதி, கொழும்பு-02.**

**011 4693000**

## கல்வி அமைச்சு

## இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (SLIATE)

SLIATE

# 18 ஆவது டிப்ளோமா சான்றிதழ் வழங்கல் நிகழ்வு

கீழ்க்காணும் பாடநெறிகளுக்கான இ.உ.தொ. நிறுவனத்தின் 18 ஆவது டிப்ளோமா சான்றிதழ் வழங்கல் நிகழ்வு கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) 2023 ஒக்டோபர் 20, 21, 22ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

1. **கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா**
2. **வியாபார நிர்வாகம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா**
3. **வியாபார நிதி பற்றிய உயர் தேசிய டிப்ளோமா**
4. **நிருமாண சேவைகள் பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா**
5. **பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (சிவில்)**
6. **பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (இயந்திரவியல்)**
7. **பொறியியல் - பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (மின்னியல் மற்றும் இலத்திரனியல்)**
8. **ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா**
9. **உணவுத் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா**
10. **தகவல் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா**
11. **முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா**
12. **தொகைக் கணக்கெடுப்பு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா**
13. **தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (விவசாயம்)**
14. **சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா**
15. **செயற்றிட்ட முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா**
16. **நுகர்வோர் அறிவியல் மற்றும் தயாரிப்பு தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா**

2020ஆம் கல்வியாண்டின் உயர் தேசிய டிப்ளோமாவை வெற்றிகரமாக பூர்த்தி செய்த மாணவர்கள் அவர்களது விண்ணப்பங்களை பணிப்பாளர் அல்லது சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களின் கல்வி இணைப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் மூடப்படும் திகதி**
**மூடப்படும் திகதி (தண்டம் இன்றி) - 2023 ஜூலை 17 ரூ. 6000.00**
**மூடப்படும் திகதி (தண்டத்துடன்) - 2023 ஜூலை 24 ரூ. 8000.00**

**வங்கி விவரங்கள் பின்வருமாறு:**
**வங்கியின் பெயர்- மக்கள் வங்கி**
**கிளை - ஹைட்பார்க் கிளை, கொழும்பு - 02**
**கணக்கு எண் - 025-1001-3-3397613**
sliate இன் இணையதளம் **www. sliate.ac.lk** இலிருந்து தயவு செய்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்,**
**"ஜனவத்து பியச", இல.320, டீ.பீ.ஜெயா மாவத்தை**
**கொழும்பு -10**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பொது மக்களுக்கான அரச சேவை



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர், வரி &
முகாமைத்துவ ஆலோசகர்




பொது மக்களுக்கான அரச சேவை' என்பது நாட்டின் குடிமக்களின் தேவைகள் மற்றும் நலனைப் பூர்த்தி செய்வதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் முன்முயற்சிகளைக் குறிக்கிறது. இந்த சேவைகள் ஒட்டுமொத்த மக்களின் நல்வாழ்வு, பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

பொது மக்களுக்கான அரசாங்க சேவையின் சில முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

1. பொது உட்கட்டமைப்பு
2. சமூக சேவைகள்
3. சட்டம் மற்றும் ஒழுங்கு
4. கல்வி
5. பொதுச் சுகாதாரம்
6. நுகர்வோர் பாதுகாப்பு
7. பொது ஈடுபாடு மற்றும் பங்கேற்பு

அரசாங்கங்கள் வழங்கும் குறிப்பிட்ட சேவைகள், நாடுகளிலும் பிராந்தியங்களிலும் அவற்றின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார சூழல்களின் அடிப்படையில் மாறுபடும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். எவ்வாறாயினும், பொது மக்களுக்கு சேவை செய்வதும், சமுதாயத்தின் நல்வாழ்வை மேம்படுத்துவதும் ஒட்டுமொத்த நோக்கமாக உள்ளது.

பொதுச் சேவைகளை வழங்குவதில் இலங்கை அரச துறையில் பல பலவீனங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சில:

அதிகாரத்துவம் மற்றும் கடினமான முறைமை: அரசாங்கத் துறையில் அதிகாரத்துவ அமைப்பு பெரும்பாலும் தாமதங்கள், திறமையின்மை மற்றும் அதிகப்படியான காகிதப்பணிகளுக்கு வழிவகுக்கிறது. இது சேவை இழுத்தடிப்பு மற்றும் சிக்கலான செயல்முறைகளை விளைவிக்கலாம். மக்கள் பொதுச் சேவைகளை சரியான நேரத்தில் அணுகுவதைக் கடினமாக்குகிறது.

வெளிப்படைத்தன்மை இல்லாமை: பொறுப்புக்கூறல் மற்றும் நல்லாட்சிக்கு வெளிப்படைத்தன்மை மிகவும் முக்கியமானது. எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கத் துறை பெரும்பாலும் வெளிப்படைத்தன்மையைக் கொண்டிருக்கவில்லை. இதனால் தீர்மானங்கள் எவ்வாறு எடுக்கப்படுகின்றன? அல்லது பொது வளங்கள் எங்கு ஒதுக்கப்படுகின்றன? என்பதைப் புரிந்துகொள்வது குடிமக்களுக்குக் கடினமாக உள்ளது. இது ஊழல் மற்றும் அந்த அமைப்பின் மீது நம்பிக்கையின்மைக்கு வழிவகுக்கும்.

போதிய உட்கட்டமைப்பு இன்மை: இலங்கையின் அரசாங்கத் துறையானது பொதுச் சேவைகளை ஆதரிப்பதற்குப் போதுமான உட்கட்டமைப்புகளை வழங்குவதில் சில சமயங்களில் போராடுகிறது. போக்குவரத்து, சுகாதார வசதிகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பயன்பாடுகள் போன்ற பகுதிகள் இதில் அடங்கும். போதிய உட்கட்டமைப்பு இல்லாமை பொதுமக்களுக்குச் சேவைகளை திறம்பட வழங்குவதில் தடையாக இருக்கும்.

வரையறுக்கப்பட்ட மனித வளங்கள் மற்றும் திறன்: திறமையான மற்றும் தகுதிவாய்ந்த பணியாளர்களைப் பணியமர்த்துதல் மற்றும் தக்கவைத்துக்கொள்வதில் அரசாங்கத்துறையானது பெரும் சவால்களை எதிர்கொள்கின்றது. இது பயிற்சி பெற்ற நிபுணர்களின் பற்றாக்குறையை விளைவிக்கும், திறமையின்மை மற்றும் தரமற்ற சேவை வழங்கலுக்கு வழிவகுக்கும். இதனால் தற்போதுள்ள அரச ஊழியர்களுக்கு தொடர்ந்து பயிற்சி மற்றும் தொழில்முறை மேம்பாட்டு வாய்ப்புகள் இல்லாதிருக்கலாம், குறைவாகக் காணப்படலாம்.

அரசியல் தலையீடு: அரசாங்கத் துறையின் சுதந்திரத்தையும் செயற்திறனையும் அரசியல் தலையீடு குழிபறிக்கும். பக்கச்சார்பு, சுயநலப் போக்கு மற்றும் ஊழல் ஆகியவை முடிவெடுக்கும் செயல்முறைகள் மற்றும் வளங்களை ஒதுக்கீடு செய்வதில் செல்வாக்கு செலுத்தி பொதுச் சேவைகளின் தரம் மற்றும் நேர்மையைப் பாதிப்படையச் செய்யலாம்.

நிதி மற்றும் வரவு செலவுக் கட்டுப்பாடுகள்: அரசுத் துறைக்கு ஒதுக்கப்படும் வரையறுக்கப்பட்ட நிதி ஆதாரங்கள் தரமான பொதுச் சேவைகளை வழங்குவதில் தடையாக இருக்கும். போதிய நிதியில்லாததால் உட்கட்டமைப்பு, தொழிநுட்பம் மற்றும் மனித வளங்களில் முதலீடு இல்லாததால் பொதுமக்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கான துறையின் திறனைத் தடுக்கின்றமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

சேவை வழங்குவதில் திறமையின்மை: பல சந்தர்ப்பங்களில் பொதுச் சேவைகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பதில் திறமையின்மை காணப்படுகின்றது. நீண்ட காத்திருப்பு நேரங்கள், சிக்கலான நடைமுறைகள் மற்றும் அரசாங்கத் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு இல்லாமை ஆகியவை குடிமக்களை விரக்தியடையச் செய்து, சேவைகளைத் திறம்பட அணுகுவதைச் சவாலாக மாற்றுகின்றது.

வரையறுக்கப்பட்ட குடிமக்களின் ஈடுபாடு மற்றும் பங்கேற்பு: பயனுள்ள நிர்வாகத்திற்கு பொது மக்களின் பங்கேற்பு மற்றும் குடிமக்கள் ஈடுபாடு அவசியம். எவ்வாறாயினும், இலங்கையில் உள்ள அரசாங்கத் துறையானது குடிமக்கள் முடிவெடுக்கும் செயல்முறைகளில் பங்கேற்க அல்லது பொது சேவைகள் பற்றிய கருத்துக்களை வழங்குவதற்குப் போதுமான வாய்ப்புகள் குறைவாகக் காணப்படுகின்றது. இது உரிமை மற்றும் பொறுப்புக்கூறலின் பற்றாக்குறைக்கு வழிவகுக்கின்றது.

பொதுச் சேவைகளை வழங்கும்போது இலங்கை அரசாங்கத் துறையில் உள்ள பலவீனங்களைச் சமாளிப்பதற்கு பல்வேறு அம்சங்களைக் கையாளும் ஒரு விரிவான அணுகுமுறை தேவைப்படுகிறது. பொதுச் சேவை வழங்கலின் திறன் மற்றும் செயற்றிறனை மேம்படுத்த எடுக்கப்படக்கூடிய சில படிகள் பின்வருமாறு:

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துதல்: பொதுச் சேவைகள் தொடர்பான தகவல்கள் குடிமக்களுக்கு உடனடியாகக் கிடைப்பதை உறுதி செய்வதன் மூலம் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல். இணைய முகப்பு (ஆன்லைன் போர்டல்கள்), உதவி எண்கள் (ஹெல்ப்லைன்கள்) மற்றும் பொது விசாரணைகள் போன்ற வழிமுறைகளைச் செயல்படுத்தி கருத்துக்களைச் சேகரிக்கவும், குறைகளை நிவர்த்தி செய்வது முக்கியமாகும். பொது அதிகாரிகளுக்குத் தெளிவான செயற்றிறன் குறிகாட்டிகள் மற்றும் பொறுப்புக்கூறல் கட்டமைப்புகளை நிறுவுதலின் வாயிலாக மேலும் இதனை மேம்படுதலாம்.

திறன் மற்றும் பயிற்சியை வலுப்படுத்துதல்: பொதுச் சேவை வழங்கலில் ஈடுபட்டுள்ள அரசு அதிகாரிகளின் திறன் மற்றும் அறிவை மேம்படுத்த பயிற்சித் திட்டங்களில் முதலீடு செய்வது மிகவும் அவசியம். திட்ட மேலாண்மை, தகவல் தொடர்புத் திறன், வாடிக்கையாளர் சேவை மற்றும் தொழில்நுட்பத்தைத் திறம்படப் பயன்படுத்துதல் போன்ற பகுதிகள் இதில் அடங்கும். தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற செயற்திட்டங்கள் அதிகாரிகளுக்கு சிறந்த நடைமுறைகளுடன் புதுப்பிக்க உதவும்.

நிர்வாக நடைமுறைகளை நெறிப்படுத்துதல்: அதிகாரத்துவ செயல்முறைகளை எளிமையாக்கி, அதாவது தேவையற்ற கடினமான முறைமையினைக் குறைக்க வேண்டும். ஏற்கனவே உள்ள நடைமுறைகளை முழுமையாக மதிப்பாய்வு செய்வதன் மூலம் இடையூறுகளைக் கண்டறிந்து அகற்றுவதற்கு மேலும் உதவுகின்றது. மின் ஆளுமைத் தீர்வுகளைச் செயற்படுத்துவதன் வாயிலாக செயல்முறைகளைத் தானியக்கமாக்குவதற்கும், காகிதப் பணிகளைக் குறைப்பதற்கும், சேவை வழங்கலின் செயற்திறனை மேம்படுத்துவதற்கும் பெரிதும் உதவுகின்றது.

சிறந்த சேவைக் கலாச்சாரத்தை வளர்ப்பது: வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையை அரசாங்கத் துறையில் உருவாக்குதல் அவசியமாகின்றது. அரச அதிகாரிகள் குடிமக்களுக்கு உடனடி, மரியாதையான மற்றும் திறமையான சேவைகளை வழங்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது மிகவும் விரும்பத்தக்கது. முன்மாதிரியான செயற்றிறனை அங்கீகரித்து வெகுமதி அளிப்பதுடன், சேவை தரத்திற்கு முன்னுரிமை அளிக்க அதிகாரிகளுக்கு ஊக்கத்தொகையை உருவாக்குவதன் மூலம் அடையவேண்டிய நோக்கத்தினை இலகுவாக அடையமுடியும்.

தொழில்நுட்பத்தை முழுமையாகத் தழுவுதல்: சேவை வழங்கலை நவீனப்படுத்தப் பொருத்தமான தொழில்நுட்பங்களில் முதலீடு செய்ய வேண்டும். குடிமக்கள் ஈடுபாடு, சேவை கோரிக்கைகள் மற்றும் கருத்துக்கான சமூகவலைத் தளங்களை முழுமையாகச் செயற்படுத்த வேண்டும். மேம்பாட்டிற்கான பகுதிகளைக் கண்டறிந்து சேவை செயற்றிறனைக் கண்காணிக்க தரவுப் பகுப்பாய்வுகளைப் பயன்படுத்துவது சிறந்தது. தொலைபேசி (மொபைல்) தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவதன் வாயிலாக பரந்தளவில் மக்களை அடைவதுடன், கிராம நகர்ப்புற வேறுபாட்டினைக் குறைக்கமுடியும்.

பொதுதனியார் கூட்டாண்மைகளை ஊக்குவித்தல்: சேவை வழங்கலை மேம்படுத்துவதில் அவர்களின் நிபுணத்துவம் மற்றும் வளங்களைப் பயன்படுத்த தனியார்த் துறை மற்றும் சிவில் சமூக அமைப்புகளுடன் ஒத்துழைத்து செயலாற்றலாம். புதுமை, செயல்திறன் மற்றும் பொறுப்புணர்வை ஊக்குவிக்கும் கூட்டாண்மைகளை வளர்த்தல் கூடுதலான அனுகூலங்களினை ஏற்படுத்தும்.

உட்கட்டுப்பாடுகள் மற்றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துதல்: ஊழலைத் தடுக்கவும், அரசாங்கத் துறையில் நேர்மையை மேம்படுத்தவும் வலுவான அமைப்புகளைச் செயல்படுத்துதல் வேண்டும். ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள், வழக்கமான தணிக்கைகள் மற்றும் பயனுள்ள தகவல் தருபவர்கள் பாதுகாப்பு வழிமுறைகளைக் கடுமையாக அமுலாக்குதல் ஆகியவை இதில் அடங்கும்.


(20 ஆம் பக்கம் பார்க்க)




# பட்டப்பகலில் சிறைச்சாலை அதிகாரியின் உடையில் தப்பியோடிய கைதி!!

## ரயிலில் தப்பிச்செல்ல முற்படுகையில் பிடிக்கப்பட்டார்





'கைவிலங்குகள் கல்லறைக் கற்களை விட கனமானவை' என்றொரு கவிவரி உண்டு. அந்தளவுக்கு சிறைத்தண்டனை கொடூரமானது.

சிறைச்சாலைகள், குற்றவாளி தம் தவறுக்கு தனிமையில் வருந்தி, மனம் திருந்திட வழிவகுக்கும் இடமாக இருந்தாலும் அங்கு சுதந்திரம் என்ற ஒன்று முழுமையாக பறிக்கப்பட்டிருக்கும்.

மணி அடித்தால் சாப்பாடு, கதவைத் திறந்துவிடுவதற்கும் மூடுவதற்கும் ஆட்கள், நோய் நொடியென்றால் உடனே மருத்துவ உதவியென வசதிகள் இருந்தாலும், இங்கு விருப்பம் போல் வாழமுடியாது. இதனால் அனேகர் சிறைச்சாலைகளிலிருந்து உயிரை பணயம் வைத்து பல வழிகளில் சுதந்திரத்தை தேடி வெளியில் தப்பிச் செல்ல முயற்சிக்கின்றனர்.

சிறைச்சாலைகளில் பலத்த பாதுகாப்புடன் முற்கம்பி வளையங்கள் பொருத்தப்பட்டு சிறைச்சாலைக் கட்டடத்தின் வலது பக்கம் தொடங்கி இடதுபக்கம் வரை மூன்று ஆள் உயரத்தில் மதிற்சுவர் அமைக்கப்பட்டிருக்கும். எனினும் இவற்றையெல்லாம் தாண்டி சூப்பர் ஹீரோக்கள், சூப்பர் மேன் போல் கைதிகள் தப்பித்தும் விடுகின்றனர்.

சிறைச்சாலைகளிலிருந்து கைதிகள் எத்தகைய வழிகளில் தப்பிச் செல்கின்றனரென்பதை திரைப்படங்களில் நாம் அதிகளவில் கண்டிருப்போம். இலங்கையில் சிறைக் கைதிகள் அதிகளவில் வைத்திய சாலைகளில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்படும் போதே தப்பிச் செல்கின்றனர். அவ்வாறு சென்றவர்களில் அதிகளவானவர்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அவர்கள் வெளியில் சுதந்திரமாக நடமாடுகின்றனர்.

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்த தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த கமல் என்ற சிறைக்கைதி திடீர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அங்கிருந்து தப்பிச் சென்றார். அவர் தற்சமயம் வெளிநாட்டில் இருப்பதாக தகவல்.

அதேபோல் ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த போதைப்பொருள் கடத்தல்காரரான குடு திலான் என்பவர் அங்கிருந்து தப்பித்து வெளிநாட்டுக்கு சென்ற சம்பவங்களை இங்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

அதேபோல் சிறைச்சாலை அதிகாரிகளால் கூட நினைத்தும் பார்க்கமுடியாத வகையில் கைதிகள் மதில் சுவரை தாண்டி தப்பிக்கும் சம்பவங்களும் இலங்கையில் அதிகளவில் பதிவாகியுள்ளன. அடுத்ததாக குப்பைகள் அள்ளிச் செல்லும் லொறிகள், கழிவு நீர் வெளியேறும் கால்வாய்கள் என்பவற்றில் புகுந்து சிறைச்சாலைகளிலிருந்து தப்பிச்செல்லும் சம்பவங்களும் உண்டு.

2014ஆம் ஆண்டு காலி சிறைச்சாலையில் கைதியொருவர் குப்பைகளுக்குள் மறைந்திருந்து சிறைச்சாலையிலிருந்து தப்பியோடினார்.

எனினும் சிறைச்சாலை உத்தியோகத்தரின் சீருடையணிந்து சிறைச்சாலையின் பிரதான நுழைவாயில் வழியாகவே கைதியொருவர் தப்பிச் சென்றதாக இதுவரை கேள்விப்பட்டதில்லை. அப்படியொரு நிகழ்வு சிறைச்சாலைகளில் நடந்ததாக எந்தவொரு பதிவுமில்லை.

ஆனால் அத்தகையதொரு சம்பவம் கடந்த மாதம் 25ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் இடம் பெற்றது. மரணதண்டனை விதிக்கப்பட்டு சிறைத்தண்டனையை அனுபவித்துக்கொண்டிருந்த சுஜித் குமார என்ற கைதி நீண்டகாலமாக திட்டமிட்டு சிறைச்சாலை உத்தியோகத்தர் போன்று சீருடையணிந்து தப்பிச் சென்றுள்ளார்.

பன்னல பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய சுஜித் குமாரவுக்கு 2015ஆம் ஆண்டு கம்பஹா மாவட்ட நீதிமன்றத்தால் மனித படுகொலை வழக்கில் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அவர் வெலிக்கடை சிறைச்சாலை கைதியானார். வெலிக்கடை சிறைச்சாலையில் மரணதண்டனை கைதிகளுக்கான தனியான சிறைக்கூடத்திலேயே அவர் அடைக்கப்பட்டிருந்தார்.

பொதுவாக சிறைத்தண்டனைகள் சாதாரண குறுகிய கால தண்டனை, மரணதண்டனை, ஆயுள் தண்டனை என பல வகைப்படுத்தப்படும். அவரவர் குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப தண்டனைகள் வேறுபடும்.

(20 ஆம் பக்கம் பார்க்க)



வசந்தா அருள்ரட்ணம்


தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை


Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk



102 பதியப்படாத வாகனங்கள் விற்பனைக்கு

வெளிநாட்டு முதலீட்டிற்காக 2015 இற்கு பின் உற்பத்தி செய்யப்பட்ட லாண்ட் குருசியர் பிராடோ 2015 இற்கு பின் உற்பத்தி செய்யப்பட்ட லாண்ட் குருசியர் YB ஆகியன தேவைப்படுகின்றன. தருஷி ருவர்ஸ் அண்ட் ட்ரவல் பிவிடி எல்டீடி. 0779431207. 039963



118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு

அரிதாக பாவிக்கப்பட்ட முழுமையாக பராமரிக்கப்பட்ட சிவில் பொறியியலாளருக்கு சொந்தமான YOM 2001 FREE LANDER TD-4 லாண்ட்ரோவர், FIVE MODEL WIT H WIENCH FU LLY AUTO. தொ லைபேசி 0761259904. 039958








207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

0777438169 கண்டியில் ஹோட்டல் தோட்டம் வீடு, வெற்றுக் காணி வியாபாரஸ்தலம் கொள்வனவு செய்யவும் + விற்பதற்கும் 0777282147 034906






312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

நுகேகொட நகரின் மத்தியில் அமைந்துள்ள புகழ்வாய்ந்த நிறுவனமொன்றிற்கு அனுபவமுள்ள TV பழுது பார்க்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்கு வெற்றிடங்கள் உண்டு. முன்னணியிலுள்ள நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட சான்றிதழ்கள்/ டிப்ளோமா சேர்க்கப்பட்ட தகைமையாகும். விபரங்களுக்கு 0777949777 என்ற இலக்கத்தை அழைக்கவும். குறைந்த அனுபவமுள்ள தொழில்நுட்பவியலாளர்களும் விண்ணப்பிக்கலாம். 039661

மின் தூக்கியாளர் தேவை. சம்பளம் மாதாந்தம் 22,000 ரூபா, போக்குவரத்து மாதாந்தம் 2500 ரூபா, தினசரி உணவிற்கு நாளொன்றிற்கு 300 ரூபா, முறைமாற்றி அடிப்படையில் வேலை செய்தல் இல 26, கோல்பேஸ் கோட் 2, கொழும்பு 3 இற்கு விண்ணப்பிக்கவும். தொடர்பிலக்கம் 0112327975/ 011 2323760. தொலைநகல் இலக்கம் 0112320198. 039733



320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

இந்திய உணவு சமையற்காரர் (Cook) வத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு தங்கி வேலை செய்யக்கூடிய (10 நபர்களுக்கு) இந்திய உணவு வகைகள் சமைக்கக்கூடிய சமையற்காரர் (Cook) உடனடியாக தேவை. மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும். இல.18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொ.பே 0766 2 0 0300. 040234

எமது ஹோட்டலுக்கு திறமையான சிற்றுண்டி அப்பம் செய்பவர்கள் உடனடியாக தேவை. ஆசிரி பேக்கரிய, கம்பஹா. 076803 9890. 040474

கண்டியில் உல்லாசத்துறை ஹோட்டலில் உடனடி பதவி வெற்றிடங்கள். வரவேற்பாளர் (வயது 18 40 ஆங்கில அறிவும் சிறந்த கணனி அறிவும் வேண்டும்.) சுத்தம் செய்பவர்கள், அறை பையன்கள், சமையற்காரர் (வயது 20 45) கண்டி சரணங்கர வீதியின் 32ஆம் இலக்கத்திற்கு ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னராக விருப்பார்வ நேர்முகப் பரீட்சைக்கு. சான்றிதழ்களுடன் தயவு செய்து வரவும். தொடர்பிலக்கம் 0773123135. 039387

திறமையான சிற்றுண்டிகளுக்கான ஊழியர் தேவை. சம்பளம் நாளொன்றிற்கு 3500 ரூபா. சமுத்ரா பேக்கரிய, கனேமுல்ல. 077640 4791. 040473






607 எஸ்டேட் விற்பனைக்கு

ஹெட்டிபொல 1 ஏக்கர் 8 பேர்ச் தென்னந்தோட்டம் விற்பனைக்கு. 3 வழி மின்சாரம், நீர், இடத்தை சுற்றி வீதியுண்டு. ஹெட்டிபொல நகருக்கு மற்றும் குருநாகல் சிலாப பிரதான வீதிக்கு வசதியாக உடனடியாக செல்லலாம். வாங்குபவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும். 0712270017. 040454

615 வீடு சொத்து சேவைகள்

அப்ப லங்கா லாண்ட் விற்பனை நிலையமானது 15 வருட நேர்மையான ஊழியர்களை கொண்டுள்ளது. எனவே, நாடு முழுவதுமுள்ள உங்களின் சொத்துக்களை தகைமையும், அனுபவமுள்ளதுமான விலை மதிப்பீட்டாளர்களின் கீழ் மதிப்பீடு செய்து அதியுயர் விலைக்கு விரைவில் விற்பனை செய்வதற்காக கையேற்கப்படும். அழைக்கவும் 0773799939, 0703857617. 040471

616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கொத்தட்டுவ புதிய நகரத்தில் காணி மற்றும் வீடு விற்பனைக்கு உண்டு. IDH - மொரவில பாதை. பேர்ச் 14.8. 0760314112, 0774543746. 039887

கொழும்பு 10 மாளிகாவத்த N.H.S.FLATS இல் பிரதான வீதிக்கு அருகாமையில் PARKING வசதிகளுடன் கூடிய 4 அறைகளுள்ள கீழ் வீடு உடனடி விற்பனைக்கு. தொடர்பு இலக்கங்கள் 0774952181, 0777565666. 040332

பேலியகொட ஸ்வஸ்ரிக்க பூங்கா 26ஆம் இலக்கத்தில் வீடொன்று குத்தகைக்கு, வாடகைக்குண்டு. 0718391873, 0272 246292, 0723 333357. 039982

பொரளை பேஸ்லைன் வீதிக்கு அருகாமையில் இருமாடி வீடொன்று விற்பனைக்குண்டு. வெஸ்லி பாடசாலைக்கு அருகில். தொலைபேசி 0776241011. 040287

621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

கண்டி கட்டுகஸ்தொட்டை KFC இற்கு அண்மையில் 19 பேர்ச் காணி உடன் விற்பனைக்கு. வங்கி வசதிகள் உண்டு. 0773260893 034613

622 வீடு சொத்து மாத்தளை மாவட்டம் விற்பனைக்கு

தம்புள்ள கப்புவத்தை 1 ½ ஏக்கர் காணி விற்பனைக்கு. 0773260893 034609

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்திற் கண்மையில் 27 பேர்ச் களஞ்சியசாலை உடன் விற்பனைக்கு. வங்கி வசதிகள் உண்டு. 0773260893 034586

தம்புள்ள லியா ஹோட்டலுக்கு அண்மையில் குளத்தின் முன்னால் 1½ ஏக்கர் காணி விற்பனைக்கு. 0773260893 034581

தம்புள்ள A9 ஹோட்டல உடன் விற்பனைக்கு வங்கி வசதி கள் உண்டு. 0773260893 034590

623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

அம்பேவல, ரேந்தபொல வீதிக்கு முகப்பாக ஹக்கல அரச காணிக்கு எல்லையாக அழகான இயற்கை சூழலில் மாற்றக்கூடிய உறுதியுடைய பல காணி துண்டுகள் வங்கி கடன் பெறக்கூடியவை விற்பனைக்கு. 0705990048, 0716282307. 040417

மலைத்தொடரினால் சூழப்பட்ட அழகான அரசாங்க காணிக்கு எல்லையாக அமைதியான சூழலில் மட்டமான மாற்றக்கூடிய உறுதியுள்ள பல எண்ணிக்கையான காணித்துண்டுகள் நுவரெலியா வங்கியில் கடன் பெறக்கூடியவை விற்பனைக்கு. 0705990048 சிந்தக்க, 0716282307 ருமேஷ். 040414

ஹக்கல அரச காணிக்கு எல்லையாக அபிவிருத்தி செய்யப்பட்ட விற்பனைக்கான காணித்துண்டுகள் நுவரெலிய வங்கியில் கடன் பெறக்கூடியவை விற்பனைக்கு. 0705990048 சிந்தக்க, 0716282307 ருமேஷ். 040412

631 வீடு சொத்து மாத்தறை மாவட்டம் விற்பனைக்கு

புவக்வத்த மாத்தறை 1.33 ஏக்கர் காணி பகுதிகளாக அல்லது முழுமையாக விற்பனைக்கு. வங்கி வசதிகள் உண்டு. 0773260893 034605

தினகரன் வாரமஞ்சரி

## சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk



## பெறுகை அறிவித்தல்

### இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் - மிகிந்தலை

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் இந்தப் பல்கலைக்கழகத்தின் பின்வரும் சிற்றுண்டிச்சாலைகளை நடாத்திக்கொண்டு செல்லுதல் (காலை/பகல்/இரவு உணவு வழங்குவதற்கு இயலுமானவர்கள்) தொடர்பில் குறைந்தபட்சம் மூன்று வருடகால அனுபவத்தைக் கொண்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. முகாமைத்துவ பீடத்தின் சிற்றுண்டிச்சாலை - (மிகிந்தலை வளாகம்)

02. மருத்துவ மற்றும் சமாந்தர விஞ்ஞான பீடத்தின் சிற்றுண்டிச்சாலை - (சாலியபுர வளாகம்)

மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 5000.00 ரூபா தொகை மற்றும் மீளளிக்கப்படும் 3000.00 கேள்விக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023-07-02ஆம் திகதி முதல் பொதுவான அலுவலக நேரங்களில் பல்கலைக்கழகத்தின் மாணவர் சேவை பிரிவிலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல்கள் சமர்ப்பிக்கப்படும் விடயத்தை தெளிவாக கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். அனுபவத்தை உறுதி செய்வதற்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் கேள்விதாரரின் புகைப்படமொன்றை சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பதிவாளர், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிகிந்தலை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

2023-07-18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கேள்விப் படிவங்களைக் கிடைக்கச் செய்தல் வேண்டும் என்பதுடன் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு கேள்விப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மிகிந்தலை இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அலுவலகத்தில் 2023-07-18ஆம் திகதி பி.ப. 2.15 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது தெளிவுபடுத்திக்கொள்ளல் தேவையாயின் இந்த பல்கலைக்கழகத்தின் மாணவர் சேவை பிரிவின் உதவிப் பதிவாளர் (மாணவர் சேவை) அவர்களிடமிருந்து பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 025-2266577) இந்த விடயம் தொடர்பில் பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**பதிவாளர்,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிகிந்தலை.**
**2023-07-02.**

* Trusted Marketplace of Classified Advertisers...

SUNDAY OBSERVER adz it's what you want Classified

Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk

Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377

## கட்டுமான கைவினைஞர்களுக்கான தேசிய கைவினை அடையாள அட்டை வழங்குதல் மற்றும் திறமையான கைவினைஞராக கட்டுமானத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்தல்.

2014 இலக்கம் 33 கீழ் கட்டுமானத் தொழில் அபிவிருத்தி சட்டத்தின் படி திறமையான கட்டுமானத் தொழிலாளர்களின் அறிவு, திறன்கள் மற்றும் தொழில்முறை அணுகுமுறைகளைப் பரிசீலனைசெய்து கைவினைஞர் அடையாள அட்டையை வழங்குதல் மற்றும் அவர்களின் தகவல்களை பராமரிக்கும் நோக்கத்துடன், திறமையான கட்டுமானத் தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் 27 துறைகளின் வகைப்படுத்தப்படுகிறார்கள் "பிரதான கட்டுமான கைவினைஞர்கள்" மற்றும் "கட்டுமானத் கைவினைஞர்கள்" என 2 முக்கிய பிரிவுகளின் கீழ் தனித்தனியாக பின்வரும் திறன் தரத்திற்காக தொழில்நுட்ப அடையாள அட்டை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| கட்டுமானத் கைவினைஞர்கள் | | கட்டுமான இயந்திரங்களை இயக்குபவர் | |
|---|---|---|---|
| MSN | கட்டுமானத் கைவினைஞர் (கொத்தனார்) (Construction Craftsman (Masonry)) | LE | இலகு கட்டுமான இயந்திரம் இயக்குபவர் (Light Equipment Operator) |
| WCB | தச்சவேலை (கட்டிடம்) (Wood Craftsman (Buildings)) | T | ட்ரக்டர் இயக்குபவர் (Tractor Operator) |
| WCF | தச்சவேலை (தளபாடம்) (Wood Craftsman (Furniture)) | SFVR | தன்னியக்க அதிர்வு உருளை இயந்திரம் இயக்குபவர் (Self-propelled Vibrator Roller Operator) |
| TIL | டைல் இடுபவர் (Tile Layer) | BL | பெக்ஹோலோடர் இயந்திரம் இயக்குபவர் (Backhoe Loader Operator) |
| PNT | வர்ண பூசுபவர் (கட்டிடம்) (Painter (Buildings)) | WL | வீல்லோடர் இயந்திரம் இயக்குபவர் (Wheel Loader Operator) |
| ELC | மின் வல்லுநர் (Electrician) | HE | ஹைட்ரோலிக் இயந்திரம் இயக்குபவர் (Hydraulic Excavator Operator) |
| PLB | குழாய் பணியாளர் (Plumber) | MG | மோட்டர் கிரேடர் இயக்குபவர் (Motor Grader Operator) |
| BBD | கம்பி வளைக்கும் வல்லுநர் (Bar Bender) | CT | கிரவல் ட்ரக் இயக்குபவர் (Crawler Tractor Operator) |
| WLD | ஒட்டுனர் (Welder) | MC | நடமாடும் கிரேன் இயக்குபவர் (Mobile Crane Operator) |
| ALF | அலுமினியம் கட்டமைத்தல் (Aluminum Fabricator) | DT | டம்ப் ட்ரக் இயக்குபவர் (Dump Truck Operator) |
| OTH | வேறு (Other) | FLT | போர்க்லிப்ட் ட்ரக் இயக்குபவர் (Forklift Truck Operator) |
| **கட்டுமான இயந்திர தொழில்நுட்ப வல்லுநர்கள்** | | PT | இயந்திரங்களை இடமாற்றும் இயக்குனர் (Plant Transporter Operator) |
| CEM | கட்டுமான இயந்திர வல்லுநர் (Construction Equipment Mechanic) | SSL | ஸ்கிட் ஸ்டியர் லோடர் (Skid Steer Loader Operator) |
| | | TMC | ட்ரக் இணைப்பு கிரேன் இயக்குபவர் (Truck Mounted Crane Operator) |
| | | OTH | வேறு (Other) |

### திறமையான கட்டுமான கைவினைஞர்களாகப் பதிவு செய்யும் உங்களுக்காக

- உலகளாவிய தேவைகளுக்கு ஏற்ப வலுவூட்டல் மூலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை அணுகுதல்.
- திறமையான கைவினைஞராக சமூக அங்கீகாரம் பெறுதல்.
- தொழில்முறை தரத்தை மேம்படுத்துதல்.
- அதிக உற்பத்தி மற்றும் தரம் வாய்ந்த திறமையான பணியாளர்களின் ஒரு அங்கம் வகிப்பதற்கான வாய்ப்பு.

### பதிவுக்காக விண்ணப்பிக்க தேவையான தகைமைகள்

- 18 வயதுக்கு அதிகமாக இருத்தல் வேண்டும்.
- ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
- தேசிய தொழில் திறன் தகுதி (NVQ) சான்றிதழ் மற்றும் அனுபவம். (NVQ இல்லாத கைவினைஞர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.)
- அரச/தனியார் நிறுவனங்களில் அல்லது சுயமாக கட்டுமானத் துறையில் பணிபுரிபவர்கள்.

### தேர்வு செய்யப்படும் முறை

விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு அடிப்படைத் தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர், உங்கள் துறைத் திறன்களை மதிப்பிடுவதற்கான திறன் பரீட்சைக்கு (Skills Test) உட்படுத்தப்படுவீர்கள்.

### அனுகூலங்கள்

- உங்கள் அனுபவம் மற்றும் அனைத்து தகவல்களுடன் QR குறியீட்டுடன் தேசிய கட்டுமான கைவினைஞர் அடையாள அட்டையை வழங்குதல்.
- கட்டுமானத் துறையில் உங்களைப் பற்றிய தொழில்முறைத் திறனை அங்கீகாரத்தை அபிவிருத்தி செய்தல்.
- உங்கள் பதிவு தொடர்பான தகவலை CIDA இணையதளத்தில் உள்ளிடுவதன் மூலம், உங்கள் சேவையைப் பெற விரும்பும் தரப்பினர் உங்களை நேரடியாகத் தொடர்பு கொள்ள உதவுகிறது.
- பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் கைவினைஞர்களை அடையாளம் கண்டு கட்டுமானப் பணிகளில் ஈடுபடுவதை உறுதி செய்தல்.

### NVQ சான்றிதழ் பெற்றுக்கொடுத்தல்

NVQ சான்றிதழ்கள் இல்லாத கைவினைஞர்களுக்காக முன் அறிவுடன் சான்றளிக்கப்பட்ட RPL (Recognition of prior learning) முறையின் கீழ் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

விசாரணைகள் ஏ.ஏ. லத்தீப் அவர்கள் : 011-3119002 / 070-2731990

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA)
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

"செவ்சிரிபாய" இல-123, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி : 011-2699801, 011-2695965, 011-2686092 பெக்ஸ் : 011-2699737
மின்னஞ்சல் : cidatraining@gmail.com இணையம் : www.cida.gov.lk



## அமெரிக்க தூதரகம், கொழும்பு

### எலக்ட்ரீஷியன் [ஆண் / பெண்]

இந்த பதவிக்கு விண்ணப்பிக்குமாறு நாம் ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிக்கின்றோம். இன, நிற, மத, பால் நிலை அல்லது தேசியம், அரசியல் தொடர்புகள், பால்நிலை மாற்றங்கள், திருமணம் உறவு என்பனவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டாது அனைவருக்கும் சமமான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான பன்மைத்துவ தொழிற்படை ஒன்றை அமெரிக்க தூதரகம் எதிர்பார்க்கின்றது. உங்களது மனிதாபிமானம் மற்றும் கருணை என்பன தலையாய முக்கியத்துவம் வாய்ந்தவை. உங்களது பாலினம், மதம், அரசியல் அபிமானங்கள் தொடர்பில் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. இலங்கையிலுள்ள எந்தவொரு நபரை விடவும் சிறந்த முறையில் தொழில் செய்வதற்கு உங்களுக்கு இருக்கும் திறமைகளை மாத்திரமே நாம் கவனத்திற்கொள்வோம்.

பதவி நிலையை வகிப்பவர் வசதிகள் முகாமைத்துவ அலுவலகத்திலுள்ள இயந்திரவியல் பொறியியலாளருக்கு நேரடியாக அறிக்கையிடல் வேண்டும். மேலும், அவர்/அவள் தூதரகத்தின் பல்வேறு வளாகங்களில் அலுவலக கட்டிடங்கள், வைத்தியசாலைகள், வெளிப்புற கட்டிடங்கள், துணை கட்டுமானங்கள் மற்றும் தவிர்ப்பு/குத்தகை முறையின் கீழ் உள்ள கட்டிடங்கள் உள்ளிட்ட பல்வேறு வளாகங்களில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்ளக்கூடிய பயிற்சி பெற்ற எலக்ட்ரீஷியனாக பணியாற்ற வேண்டும்.

**பதவி நிலைக்கான வேலை நேரம் - முழு நேரம் - வாரத்திற்கு 40 மணித்தியாலங்கள்**
**பதவி நிலைக்கான மாதாந்த மொத்த சம்பளம் 464.16 அமெரிக்க டொலர்கள்**

காரியாலய குழுவின் ஊதியம் அமெரிக்க டொலர் நாணய பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஊதியம் வழங்கப்படும் காலவரையறையில் காணப்படும் நாணய மாற்று விகிதத்திற்கமைய இலங்கை ரூபாவில் ஊதிய கொடுப்பனவுகள் செலுத்தப்படும். 2023 ஜூன் 16 அன்றைய நாணய மாற்று விகிதம் அமெரிக்க டொலர் 1 = ரூபா 305.00 ஆகும். இது தூதரக காரியாலயத்தின் தற்காலிக மதிப்பீடு என்பதுடன் கட்டாய உறுதியாக கருதப்படமாட்டாது.

**தேவைப்படும் தகுதிகள்:**

1. **கல்வி:** க.பொ.த. சாதாரண தரத்தைப் பூர்த்தி செய்திருத்தல் (கணிதம் உட்பட குறைந்தபட்சம் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் இதில் குறைந்தபட்சம் 3 பாடங்களில் விசேட அல்லது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்) மற்றும்/அல்லது அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் மின்சார வல்லுனர் பிரிவில் பயிற்சி மட்டத்திலான நிபுணர்களுக்கான தொழிற்பயிற்சி பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல். அத்துடன், பதவி நிலையை வகிப்பவர் காரியாலய மற்றும் வதிவிட கட்டிடங்களில் நேரடியாக /மாற்று மின்னோட்ட சுற்றுகள், மின்சக்தியை பகிர்தல், கட்டுப்பாட்டு மின்சுற்று வரைபு, மின்சுற்று கொள்ளளவு உட்பட பாதுகாப்பான மின்சுற்று கட்டமைப்புகளை வரைவது தொடர்பான அடிப்படை அறிவைக் கொண்டிருத்தல். மின்மானி, கண்காணிப்பு உபகரணங்கள் பயன்பாடு தொடர்பிலும், மின் பிறப்பாக்கி மற்றும் விநியோகம் உள்ளிட்ட கட்டிட மின் விநியோக வரைபுகளின் தரநிலைகள் தொடர்பிலும் அறிவைக் கொண்டிருத்தல். **(உரிய சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)**

2. **பூரண தொழில் அனுபவம்:** கட்டுப்பாட்டு சுற்றமைப்பு, நிலக்கீழ் அமைப்பு, மின் பிறப்பாக்கி மற்றும் விநியோக கட்டமைப்பு, மின் உபகரண பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு என்பன தொடர்பிலும் துறைசார் மட்டத்தில் குறைந்தபட்சம் 3 வருடகால அனுபவம் அவசியமாகும். இதில் குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் சாதாரண மட்டத்திலான உபகரணங்களின் உட்கட்டமைப்பு மற்றும் கட்டமைப்பு என்பன தொடர்பில் சிக்கலான நிலைமைகளுடன் அதிக வேலைகளை செய்த அனுபவத்தைப் பெற்றிருத்தல். அத்துடன் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது சர்வதேச கட்டிட சட்ட தரநிலைகள் உட்பட ஏனைய கட்டிட, மின், இயந்திரம் மற்றும் தீ பாதுகாப்பு தரநிலைகளை பயன்படுத்தும் திறனைக் கொண்டிருத்தல். **(உரிய சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)**

3. **மொழித் திறன்:** மட்டம் II (ஆகக்குறைந்த அறிவு) ஆங்கிலம் வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசுதல் அவசியம். **(இவை பரிசோதிக்கப்படும்).**
மட்டம் III (சிறந்த தொழில் அறிவு) சிங்களம் மற்றும்/அல்லது தமிழ் மொழி வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசுதல் அவசியம்.

4. **தொழில் அறிவு:**
   - ஏற்றம் மற்றும் பொலிபேஸ் கட்டமைப்புகளில் ஆழி பலகை மற்றும் கட்டுப்பாட்டு கருவியுடன் தொடர்புடைய மின்சக்தி மற்றும் ஒளி சுற்றுக்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு திறன்.
   - மோட்டார், ஜெனரேட்டர், கட்டுப்பாடு மற்றும் பதிவுகளை குறிக்கும் உபகரணங்களின் சிறிய கூறுகளை மாற்றுதல் மற்றும் பழுதுபார்க்கும் திறன்.
   - ஐக்கிய இராச்சியத்தின் சுற்றுநிருபங்களுக்கமைய மேற்பார்வை செய்தல், கோளாறுகளை அடையாளம் காணுதல், கொள்ளளவு, காப்பு எதிர்ப்பு, மின்தடை உள்ளிட்ட கட்டுப்பாட்டு சுற்றுகளில் உரிய சோதனைகளை மேற்கொள்ளும் திறன்.

5. **திறன்கள் மற்றும் ஆற்றல்கள்:** ஏற்றுக்கொள்ளப்பட்ட "B" (இதற்கு முன்னர் C, C1) விண்ணப்பங்களில் குறிப்பிட்ட வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் அனுபவம். **(வாகன அனுமதிப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).**

**விண்ணப்பிக்கும் முறை**

மேலதிக விபரங்களுக்கு **https://lk.usembassy.gov/embassy/jobs/** என்ற எமது இணையத்தளத்தை பார்வையிடவும், உங்கள் விண்ணப்பங்களை **இணையத்தளத்தின் ஊடாக மின்னணு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு [ERA]** மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியும். நீங்கள் விண்ணப்பிப்பதற்கு முன்னர் எமது இணையத் தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும்.

**தேவைப்படும் ஆவணங்கள்:**

விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் ஆவணங்களை மின்னணு பிரதிகளுடன் இலத்திரனியல் ஆட்சேர்ப்பு விண்ணப்பப் பத்திரம் மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். அவ்விதம் சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- பொருத்தமான கல்விச் சான்றிதழ்கள்
- தொழில்சார் பாடநெறி சான்றிதழ்
- பொருத்தமான சேவை/தொழில் அனுபவ சான்றிதழ்கள்
- குடியுரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் (தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு மற்றும்/ அல்லது தொழில் அனுமதிப்பத்திரம்)
- வாகன அனுமதிப்பத்திரம்

**நீங்கள் அனுப்பும் கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

உங்கள் விண்ணப்பம் **ஜூலை 12, 2023** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் எங்களுக்குக்கிடைக்கப்பெற வேண்டும். தயவு செய்து கவனிக்கவும். தகுதியானவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளப்படுவார்கள்.

# இரு மொழி வல்லுநர்கள் நம் சமூகத்தில் மிகக் குறைவு

## அரச கரும மொழிகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் பிரின்ஸ் சேனாதீர



ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ள மொழியொன்று தேவை. தொடர்பாடல் செயல்பாடு சரியாக மேற்கொள்ளப்படாத போது ஒருவரையொருவர் தவறாகப் புரிந்துகொள்வது பல்வேறு பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். அதன் விளைவுகளை எமது நாடு சந்தித்துள்ளது. இது எமக்கு மிகவும் தெளிவாகப் புரியும். பல மொழிகளைத் தெரிந்துகொள்வதால் அறிவு பெருகுவதுடன், அதிகமான மக்களுடன் தொடர்பும் கொள்ள முடியும். மக்களின் மொழி அறிவை அதிகரிக்க நமது நாட்டின் அரச கரும மொழிகள் திணைக்களம் பல்வேறு பணிகளை செய்து வருகிறது. அதன்படி, அரச மொழி வாரம் பெயரிடப்பட்டு, அவ் வாரத்தில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது பற்றி மேலும் விடயங்களை அறிய நாங்கள் அரச கரும மொழிகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் பிரின்ஸ் சேனாதீரவை சந்தித்தோம்.

**கேள்வி: அரச மொழி வாரத்தை நடத்துவதன் நோக்கம் என்ன?**

ஒவ்வொரு ஆண்டும் ஜுலை 01 முதல் 05 வரை அரச மொழி வாரமாகக் கொண்டாடப்படுகிறது. இவ் வாரத்தில் இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. அதற்காக நாம் விரிவான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம். இங்கு நாம் அரச மொழி தொடர்பாக சமூகத்தின் பல்வேறு தரப்பினரின் கவனத்தை ஈர்க்கவுள்ளோம். மற்றும் இலங்கையில் நடைமுறையில் உள்ள அரச மொழிக் கொள்கையைப் பற்றி மக்களுக்குத் தெளிவுப்படுத்தவும் உள்ளோம். உலகில் ஏறக்குறைய ஏழாயிரம் மொழிகள் உள்ளன. நம் நாட்டில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி உலகின் புதிய போக்குகளுடன் மாற்றமடைய வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், இந்த இரண்டு மொழிகளும் உலகின் பல மொழிகளைப் போலவே இறந்த மொழிகளாக மாறும்.

அதனால், இது தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்த, அரச மொழிகளைப் பாதுகாத்து, காலத்தின் தேவைக்கேற்ப அவற்றை மேம்படுத்த இந்த அரச மொழி வாரத்தில் மேலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக இந்த வாரத்தில் அரச மொழித் திணைக்களம் விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் அதற்காக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளப்படும். இங்கு நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று மொழி உரிமை என்பது குடிமக்களின் உரிமையாகும். அதாவது நாட்டின் எந்தவொரு குடிமகனுக்கும் இரண்டு அரச மொழிகளில் விருப்பமான மொழியில் சேவைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய உரிமை உண்டு. அதை மறுக்க அரசு ஊழியருக்கு உரிமை இல்லை. அதிகாரபூர்வ மொழி வாரத்தின் கடைசி நாளில் இது பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் செயல்படுத்தப்படும்.

**கேள்வி: அரச மொழிகளை கற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தை விளக்கினால்....**

ஆரம்பத்தில், 1956ஆம் ஆண்டின் உத்தியோகபூர்வ மொழிச் சட்டத்தின் கீழ், சிங்களம் மட்டுமே உத்தியோகபூர்வ மொழியாக அங்கீகரிக்கப்பட்டது. ஆனாலும் 1958இல் வந்த தமிழ் சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் வடகிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழி தமிழாகக் கருதப்படுகிறது. ஆனால் 1978இல் அரசியலமைப்பில் செய்யப்பட்ட 13வது திருத்தத்துடன் தமிழ் ஆட்சி மொழியானது, இதுவரை தமிழ் மக்கள் தமக்கான சேவைகளை ஒரு நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதில் நிறைய சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்பதை நாங்கள் அறிவோம். சுமார் 30 வருடங்கள் இரத்தத்தாலும் இரும்பினாலும் தீர்வு காண முயன்று யுத்தம் செய்து பாதிப்புக்கு உள்ளானார்கள்.குறிப்பாக வடக்கு கிழக்கில் சிங்கள மொழிப் பாட நெறிகள் அரச மொழித் திணைக்களத்தால் அதிகளவு நடத்தப்படுகிறன. தெற்கிலும் அதிக எண்ணிக்கையிலான தமிழ் மொழி பாடநெறிகளையும் வழங்குகிறோம். இதன் மூலம் இரு இனத்தாரிடமும் ஏதேனும் இடைவெளி, ஒருவருக்கொருவர் தொடர்பாடல்களை மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்பட்டால் அத் தடைகளை வெற்றி கொள்ளவே முயற்சி செய்கின்றோம். இந்த இரு இன மக்களும் மாற்று மொழியை நன்றாக கற்று சரியான முறையில் தொடர்பாடலை மேற்கொண்டால் அனைவருக்கும் இருப்பது ஒரே மாதிரியான பிரச்சினைகள் என்பதை இருதரப்பாரும் புரிந்து கொள்வார்கள் என எண்ணுகிறோம். அவ்வாறு நடந்தால் அவர்களுக்கு இடையேயுள்ள விரிசல் முடிவுக்கு வரும். அதற்காக நாம் அடுத்த வருடத்திலிருந்து புதிய திட்டங்களை தயாரித்துள்ளோம். அத்திட்டத்தில் நாம் தமிழ் மொழி பாடநெறியை கற்கும் 100 பேரை ரயிலில் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் சென்று அங்கு சிங்கள மொழியில் பாடநெறியை கற்கும் 100 மாணவர்களின் வீடுகளில் ஒரு வாரம் தங்க வைக்க எண்ணியுள்ளோம். இங்கு தங்களுடைய வீடுகளில் தங்குபவர்களின் செலவை அவ்வீட்டாரை பொறுப்பேற்பர், ஆனால் அவர்கள் அங்கு தமிழில் மாத்திரமே கதைக்க வேண்டும் அதன் பின்னர் நாம் தமிழ் மாணவர்கள் 100 பேரை சிங்கள மாணவர்களின் வீடுகளில் ஒரு வாரம் தங்க வைக்கவுள்ளோம். அங்கு அவர்கள் சிங்களத்திலேயே கதைக்க வேண்டும். இதன் மூலம் நாம் மொழிப் பிரயோக பயன்பாட்டிற்கு அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை பெற்று கொடுக்கவுள்ளோம். அதன் பின்னர் இவர்களை ஒரே வட்சப் குழுவில் இணைத்து அறிமுகம் செய்யவுள்ளோம். இங்கு மொழியை அறிமுகம் செய்வது மாத்திரமல்ல ஒவ்வொருவரினதும் கலாசாரத்தையும் அறிந்து கொள்ள அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

(மிகுதி அடுத்தவாரம்)

அயந்தி உடுகம்பொல
தமிழில் வீ.ஆர். வயலட்

80 வருட பூர்த்தியை கொண்டாடும்

# ஆசியாவின் மிகவும் அழகான பேராதனைப் பல்கலைக்கழகம்



இலங்கையில் இருக்கின்ற 12 பல்கலைக்கழகங்களில் மிகவும் அழகான மனோரம்யமான சூழலில் அமைந்துள்ள ஒரே பல்கலைக்கழகம் பேராதனை பல்கலைக்கழகமாகும். 1943ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை பல்கலைக்கழகமே பின்னர் பேராதனை பல்கலைக்கழகம் என்ற பெயர் மாற்றம் பெற்று 2023ஆம் ஆண்டு ஜுலை மாதம் 80 வருட நிறைவை கொண்டாடுகின்றது .

அதனை முன்னிட்டு 2023 ஜுலை 01 ஆம் திகதி பொதுமக்களுக்கான தினமாக அறிவிக்கப்பட்டு அந்த பல்கலைக்கழகத்தின் பெறுமதியையும் மதிப்பையும் மக்கள் நேரடியாக பார்த்து அறிந்துகொள்ளவும் பல்கலைக்கழகம் அமைந்துள்ள அழகிய மனோரம்யமான சூழலின் அழகை நேரடியாக ரசிக்கவும் சந்தர்ப்பத்தை பல்கலைக்கழக நிர்வாகம் மக்களுக்கு திறந்து விட்டிருக்கின்றது .

சல சல என்று பாய்ந்தோடும் மகாவலி நதிக்கரையில் எழில்கொஞ்சும் அழகிய சூழலில் சுமார் 1800 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த பல்கலைக்கழகம் இங்கிலாந்தில் அமைந்துள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தை போன்று அமைக்கப்பட்டிருப்பது அதன் சர்வதேச புகழுக்கும் கீர்த்திக்கும் காரணமாக அமைகின்றது. அப்படிப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டதாரி என்ற வகையில் நானும் பெருமைப்படுகின்றேன். அதனாலே அதன் பெருமை கூற விளைகின்றேன்.

சுமார் 10க்கும் மேற்பட்ட பீடங்களை கொண்டுள்ள இந்த பல்கலைக்கழகத்தில் 35000 மாணவர்கள் அளவில் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றனர். இங்கு கலைப்பீடத்தில் அமைந்துள்ள பிரதான நூலகம் சர்வதேச பிரசித்தி பெற்ற நூலகமாகும். இந்த நூலகம் 1921ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். சுமார் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட விலை மதிக்க முடியாத நூல்கள் இந்த நூலகத்தில் அறிவுப் பொக்கிஷங்களாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில் வெளியிடப்படுகின்ற தேடற்கரிய நூல்களை பக்குவமாக பாதுகாக்க சிலோன் ரூம் என்று CEYLON ROOM என்று தனியான ஒரு பிரிவு இருக்கின்றமை இந்த நூலகத்தின் சிறப்பம்சமாகும். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துக்கு அடுத்தபடியாக ஒரே நேரத்தில் ஆகக் கூடுதலான மாணவர்கள் அமர்ந்து சுயமான கற்றலில் ஈடுபடவும் வாசிக்கவும் இந்த நூலகத்தில் வசதி செய்யப்பட்டிருக்கின்றது. இந்த பல்கலைக்கழக சூழல் மேடும் பள்ளமுமாக இருக்கக் காரணம் இலங்கையில் மலை நாட்டில் பரீட்சார்த்தமாக 1830ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரித்தானியரால் இங்கு தேயிலை பயிரிடப்பட்டிருக்கின்றது. இங்கிருந்தே தேயிலை பயிரிடல் நுவரெலிய மாவட்டம் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது. அத்தகைய ஒரு நிலப்பரப்பைத்தான் 1920ஆம் ஆண்டுக் காலப்



பகுதியில் பல்கலைக்கழகம் அமைக்க சேர் ஐவர் ஜெனிங்ஸ் (Sir Jennings) தேர்ந்தெடுத்துள்ளார். இந்த இடத்தில் பல்கலைக்கழகம் அமைப்பதில் கட்டிடக் கலைஞர் ஜெப்ரி பாவா அரும் பங்காற்றியுள்ளார். முன்னாள் ஆங்கில மொழித்துறை பேராசியராக இருந்த பேராசிரியர் ஹல்பே, நான் இப்பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்த காலத்தில் பல்கலைக்கழக சூழல் வடிவமைப்பு பற்றி விபரிக்கையில் இங்கு நடப்பட்டுள்ள மரங்கள் எப்படி அமைய வேண்டும் என்று அவர்தான் ஆலோசனை வழங்கியதாக என்னிடம் தெரிவித்தார். அதன்படி மாதம் தோறும் வருடத்தில் 12 மாதங்களும் மலர்களை தந்து பூத்துக்குலுங்கும் வண்ண வண்ண நிறங்கள் கொண்ட பூக்கும் மரங்கள் நடப்பட்டதாக அவர் சொன்னார்.

இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலும் மரங்கள் நடப்பட்டிருப்பது அப்படியான ஒரு பின்னணியிலாகும். இங்கு இன்னுமொரு சிறப்பம்சம் 3000 பேர் ஒரே நேரத்தில் அமர்ந்து ரசிக்கக்கூடிய திறந்தவெளி நாடக அரங்கம் இருக்கின்றது. சரத் சந்திர திறந்தவெளி அரங்கம் என்று அதற்கு பெயர்.

எந்த வகையிலும் பாரபட்சமோ, வேறுபாடோ இல்லாத முறையில் எல்லா இனங்களையும் சேர்ந்த மாணவர்கள் மிகவும் ஒற்றுமையாக அறிவை தேடும் ஒரு சூழல் காணப்படுகின்றது. தனித்தனியான இடங்களில் தேவாலயம் பள்ளிவாசல், கோயில் மற்றும் பௌத்த விகாரை என்று எல்லா இனங்களுக்குமான மத வழிபாட்டு தலங்களும் அமைத்து கொடுக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன் மாணவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய ஒரு பல்கலைக்கழக கிராமமாக இந்த பேராதனை பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆரம்ப காலப் பகுதியில் மத்திய மலைநாட்டு பிரதேசத்தில் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்க வேண்டும் என்று காணி தேடப்பட்டுக் கொண்டிருந்த போது கண்டி வீதியில் மாவனல்லைக்கு அடுத்ததாக அமைந்துள்ள மொலகொடை பிரதேசமே தெரிவு செய்யப்பட்டதாகவும் பின்னர் கட்டிடக் கலைஞர் ஜெப்ரி பாவா அந்த பிரதேசம் பொருத்தமற்றது என்று தெரிவித்து தேயிலை பயிரிடப்பட்டிருந்த பேராதனை பூங்காவுக்கு அண்மித்ததாக தற்போதைய பல்கலைக்கழகம் அமைந்துள்ள பிரதேசத்தை தேர்ந்தெடுத்ததாகவும் பேராசிரியர் ஹல்பே (Prof. Halphe) கூறினார் மருத்துவ பீடம், பல்லறுவை மருத்துவ பீடம், விவசாயம், விஞ்ஞானம், பொறியியல், கலை, வர்த்தகம் என்று பல பீடங்களைக்கொண்ட இப்பல்கலைக்கழகத்தில் பேராதனை நகரத்தை கடந்தவுடன் கம்பளை வீதியூடாக பொறியியல் பீடமும் காலகா வீதியில் நுழைவாயிலில் மருத்துவ பீடமும் அடுத்ததாக விவசாயம் விஞ்ஞானம், காலை பீடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி கற்று பட்டம் பெறும் வாய்ப்பு கிடைக்காவிட்டாலும் அதன் அழகையும் பெறுமதியையும் பார்த்து உணரும் வாய்ப்பு கிடைப்பது ஒரு வரப்பிரசாதமே என்று கூறலாம்.



அமீர் ஹுசைன்

# சியாராலியோனில் சர்வதேச தேர்தல் அவதானிப்பாளர்களாக நீதிபதி ரோஹினி மாரசிங்க, உயர்ஸ்தானிகர் கணநாதன்



சியாராலியோன் நாட்டின் ஜனாதிபதி, பாராளுமன்றம் மற்றும் ஏனைய உள்ளூர் பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் பொதுத் தேர்தலை கண்காணிப்பதற்கும், மதிப்பிடுவதற்கும் தேர்தலில் சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர் பணிக்குழுவுடன் இரு புகழ்பெற்ற இலங்கையர்களும் இணைந்துகொள்கின்றனர். நைஜீரிய குடியரசின் முன்னாள் துணை ஜனாதிபதி பேராசிரியர் எமி ஒசின்பாஜோ தலைமையிலான 11 உறுப்பினர் பொதுநலவாய தேர்தல் காண்காணிப்பு குழுவின் பாகம் ஒன்றாக நீதிபதி ரோஹினி மாரசிங்க இருந்ததுடன் உயர் ஸ்தானிகர் வேலுப்பிள்ளை கணநாதன் ஆபிரிக்காவில் நன்கு அறிந்தவரென்பதுடன் சர்வதேச கண்காணிப்பு பணிக்குழுவில் இணைந்து கொள்வதற்கு சியாராலியோன் தேர்தல் ஆணைக்குழுவினால் அழைக்கப்பட்டிருந்தார். இலங்கையைச் சேரந்த 02 உறுப்பினர்கள் ஆபிரிக்க நாடொன்றில் சர்வதேச தேர்தல் கண்காணிப்பு குழுவில் உள்ளடக்கப்பட்டமை தனித்துவமிக்க நிகழ்வொன்றாகும்.

உயர் ஸ்தானிகர் கணநாதன் கென்யா மற்றும் நைஜீரியா நாடுகளில் அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் தேர்தல் அவதானிப்பாளராக ஏற்கனவே ஈடுபட்டிருந்தார்.

சியாராலியோனிற்கான விஜயத்தின் போது ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தற்போதைய தலைவருமான நீதிபதி ரோஹினி மாரசிங்க, அடுத்த வார ஆரம்பத்தில் சியராலியோனின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுத் தலைவர் பேராயர் கலாநிதி ஜோசப் ஹம்ருடனான சந்திப்பினை நடாத்துவதற்கு உத்தேசித்துள்ளார்.

# பிரம்மியா சண்முகராஜாவின் கனதி சிறுகதை நூல் வெளியீடு




இலக்குமி பிரசுராலய வெளியீட்டில் எழுத்தாளர் பிரம்மியா சண்முகராஜாவின் கனதி சிறுகதை நூல் வெளியீடு,நாளை திங்கள் கிழமை காலை 9.30 க்கு திருகோணமலை நகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் எண்ணம் போல் வாழ்க்கை அமைப்பின் தலைவர் கனக.தீபகாந்தன் தலைமையில் நடைபெற்றவுள்ளது.

இன் நிகழ்வில் பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சூ. பார்த்திபனும், கௌரவ விருந்தினர்களாக மூத்த எழுத்தாளர் கேணிப்பித்தன் ச.அருளானந்தமும், திருகோணமலை புனித மரியாள் கல்லூரியின் ஆசிரியர் க.ராஜனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூலின் வெளியீட்டு உரையை இலக்குமி பிரசுராலய இயக்குனர் கரவை மு.தயாளனும், நூல் விமர்சனத்தை வ.முரளிதரனும் வழங்க, நூல் வெளியீட்டினை கவிஞர் ஷெல்லிதாசன் ஆரம்பித்து வைக்க, ஏற்புரையினை நூலாசிரியர் வழங்குவார்.

# ஆடி மகோற்சவத்தை முன்னிட்டு நூல் படையல்

நாளை 03 ஆம் திகதி கதிர்காமத் திருத்தலத்தின் வருடாந்த ஆடி மகோற்சவத்தை முன்னிட்டு கலாபூஷணம் மாத்தளை பெ. வடிவேலன் எழுதிய 'கதிர்காம முருகன் திருப்பள்ளியெழுச்சி' எனும் நூலும் கலாபூஷணம் இ.சியாமளாதேவி வடிவேலன் எழுதிய 'கதிர்காமம் முருகன் திருவடி போற்றி – 1008' எனும் இரு நூல்களும் ஆலயத்தில் விசேட 'நூல் படையல்' செய்யப்பட்டு வெளியிடப்படவுள்ளது.

முற்பகல் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆலய கப்புறாளைமார்களும், பிள்ளையார் ஆலய, வள்ளியம்மை ஆலய அர்ச்சகர்கள், தெய்வானையம்மன் மடத்தின் பிரமுகர்கள் உட்பட ஆலய அறங்காவலர்கள், சைவ பெரியார்கள் பலர் கலந்து கொள்கின்றனர்.

இந்நூல் இந்துசமய ஆலயங்களுக்கும் அறநெறி பாடசாலைகளுக்கும், இந்துசமய நிறுவனங்களுக்கும் அன்பளிப்பாக வழங்கப்படும்.

## பட்டப்பகலில்... (18 ஆம் பக்கத் தொடர்)

இதில் மரணத்தண்டனை கைதிகள் எந்நேரமும் அதிகாரிகளின் சிறப்பு கண்காணிப்பில் இருப்பர். பொதுவாக தண்ணீர் குடிப்பது, கழிவறை செல்வது இவற்றை தவிர மற்ற செயல்கள் அதிகாரிகளால் கண்காணிக்கப்படும்.

சிறைச்சாலைக்குள் இரவு, பகல் நேரங்களில் நடமாடுவதற்கான சந்தர்ப்பம் மரணதண்டனை கைதிகளுக்கு கிடையாது. ஒரு குறுகிய நேரம் மாத்திரமே சிறைக் கூடங்களை விட்டு வெளியில் நிற்பதற்கு அனுமதி வழங்கப்படும். அதாவது ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் என்ற அடிப்படையில் சிறைக்கூடத்தை விட்டு வெளியில் செல்ல அனுமதி வழங்கப்படும். அப்போதுதான் சூரிய ஒளியை கூட அவர்களால் காணமுடியும். இதுதவிர ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் மரணத்தண்டனை கைதிகளுக்கான அறநெறி வகுப்புகளுக்கு சிறைக்கூடங்களை விட்டு வெளியே அழைத்துவரப்படுவர்.

சிறைச்சாலையில் பௌத்தர்களுக்கு அறநெறி வகுப்புகளும் கத்தோலிக்கர்களுக்கு தனியாக மறைக்கல்வி வகுப்புகளும் நடைபெறுவது வழமை. அந்தவகையில் சுஜித் குமார, மரணதண்டனை கைதியென்பதால் பௌத்த அறநெறி வகுப்புகளில் பங்குபற்றும் வாய்ப்பு கிடைத்தது. இதனால் தான் சுஜித் குமார, இந்த சந்தர்ப்பத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்தி சிறைச்சாலையிலிருந்து தப்பிக்க வலுவான திட்டமொன்றை தீட்டினார்.

அதன்படி அன்று 25ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை. அதிகாலையிலேயே எழுந்து முகத்தை கழுவி காலை உணவையும் சாப்பிட்டு விட்டு மற்ற கைதிகளுடன் அறநெறி வகுப்புகளுக்கு சென்றார். அறநெறி வகுப்பில் எல்லோரும் கண்களை மூடி தியானம் செய்யும் போது சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்திகொண்டு மலசலக்கூடத்துக்கு செல்வதாக கூறி அங்கிருந்து வெளியேறினார். அதிகாரிகள் எவரும் இதனை அவதானிக்கவில்லை.

அறநெறி வகுப்பு முடிந்து கைதிகளை சிறைக்கூடங்களுக்குள் அடைக்கும் போதே, சுஜித் குமாரவை காணவில்லையென்பது தெரியவந்துள்ளது. இதனையடுத்து அதிகாரிகள் சிறைச்சாலையின் மூலைமூடுக்கெல்லாம் தேடி அலைந்தனர். எனினும் சுஜித் குமார பற்றிய எந்த வித தகவல்களும் கிடைக்கவில்லை.

இதனிடையே சிறைச்சாலையின் நுழைவாயிலில் நிற்கும் காவலாளியிடமிருந்து சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் பிரதான நுழைவாயில் கதவை திறந்து வெளியில் சென்றதாக தகவல் கிடைத்துள்ளது. அதனைதொடர்ந்து சி.சி.ரி.வி காட்சிகளை அதிகாரிகள் சோதனையிட்ட போதே அதிகாரி போன்று வெளியே சென்றவர் தப்பியோடிய சிறைக்கைதியென தெரிய வந்துள்ளது.

அன்றைய தினம் நாடு முழுவதுமுள்ள சிறைச்சாலைகளிலிருந்து கைதிகளை வெலிக்கடை சிறைச்சாலைக்கு கொண்டு வரும் நாளாகும். இதனால் அவர்களை அழைத்துவரும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் வருவர். இவர்கள் பெரிதாக ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக் கொள்வதில்லை. அப்படியே அறிமுகப் படுத்திக் கொண்டாலும் பெரும்பாலும் சிறைச்சாலையின் பெயரை சொல்லியே அறிமுகப்படுத்திக் கொள்வார்கள். எனவே சுஜித் குமார அன்றைய தினம் சிறைச்சாலை உத்தியோகத்தரின் சீருடையை அணிந்து தன்னை ஒரு உத்தியோகத்தரை போல் காட்டிக்கொண்டு 'நான் பல்லேகலை சிறைச்சால' என நுழைவாயிலில் நின்றுக்கொண்டிருந்த காவலாளியிடம் கூறிவிட்டு தைரியமாக வெளியில் சென்றுள்ளார். அதுமட்டுமின்றி சிறைச்சாலை உத்தியோகத்தரின் சீருடையிலிருந்த சுஜித் குமாரவை சிறைச்சாலை உயரதிகாரி கூட கண்டுபிடிக்கவில்லை. தப்பிச்செல்ல முற்படுகையில் வழியில் சிறைச்சாலை உயரதிகாரியை கூட சந்தித்து சுஜித் குமார மரியாதை செய்துள்ளார்.

சி.சி.ரி.டி.வி காட்சிகளை பார்த்த போதே சிறைச்சாலை உயரதிகாரிக்கு அது தப்பியோடிய கைதியென தெரியவருகின்றது. இதனையடுத்து சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் மூன்று பிரிவினராக சென்று தப்பியோடிய சிறைக் கைதி சுஜித் குமாரவை தேடினர்.

வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து தப்பிச்சென்ற சுஜித் குமார, பேஸ்லைன் வீதிக்குச் சென்று அங்கிருந்து புஞ்சி பொரளை நோக்கிச் சென்றதாக தகவல் கிடைத்தது. அதற்கமைய முச்சக்கரவண்டி சாரதி, பஸ் நடத்துனர், லொத்தர் சீட்டு விற்பனையாளர் ஆகியோரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் வழங்கிய தகவலுக்கமைய கொழும்பு மத்திய பஸ் நிலையம், தனியார் பஸ் நிலையம், கொழும்பு ரயில் நிலையமென மூன்று பிரிவினராக சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தேடுதலில் ஈடுபட்டனர். இதன்போது கொழும்பு ரயில் நிலையத்தில் தேடுதலில் ஈடுபட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு ரம்புக்கனை நோக்கிச் செல்லும் ரயிலில் சீருடை நிற உடையணிந்த ஒருவர் சென்றதாக தகவல் கிடைத்துள்ளது. எனினும் அந்த நேரம் ரயில் புறப்பட்டிருந்தது. எனவே மற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு உடனடியாக மருதானை ரயில் நிலையத்துக்கு சென்று சோதனையில் ஈடுபடுமாறு பணித்துள்ளனர்.

அதற்கமைய மருதானை ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயிலுக்குள்ளிருந்து தப்பியோடிய கைதி சுஜித் குமார சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் பிடிக்கப்பட்டார். இதனையடுத்து இனிமேலும் வெலிக்கடை சிறைச்சாலையில் சுஜித் குமாரவை வைத்திருப்பது பாதுகாப்பற்றதென அதிகாரிகள் கருதியமையால் அவர் வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து பூஸா சிறைச்சாலைக்கு தற்சமயம் மாற்றப்பட்டுள்ளார். அங்கு அவரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீண்டகாலம் சிறைச்சாலைகளிலுள்ள நடைமுறைகள், சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் நடை உடை பாவனை, அவர்கள் பழகும் விதம் என்பவற்றை உன்னிப்பாக அவதானித்து சிறப்பாக திட்டமிட்டே சுஜித் குமார என்ற கைதி தப்பியோடியுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சிறைச்சாலை உத்தியோகத்தரின் சீருடையை எங்கு சுஜித் குமார பெற்றுக் கொண்டார் என்பது தொடர்பில் சரியான தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. மற்றைய சிறைச்சாலை கைதிகளின் உதவியுடனே சீருடை பெற்றுக் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## பொது மக்களுக்கான... (18 ஆம் பக்கத் தொடர்)

மக்கள் பங்கேற்பை ஊக்குவித்தல்: முடிவெடுக்கும் செயல்முறைகள், மற்றும் கொள்கை மேம்பாட்டில் குடிமக்களை ஈடுபடுத்த சந்தர்ப்பம் வழங்கவேண்டும். குடிமக்களின் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளுடன் பொதுச் சேவைகள் சீரமைக்கப்படுவதை உறுதிப்படுத்த குடிமக்கள் ஆலோசனைக் குழுக்கள், பொது ஆலோசனைகள் மற்றும் பங்கேற்பு வரவு செலவுத் திட்டம் (பட்ஜெட்) போன்ற வழிமுறைகளை நிறுவுதல் என்பவற்றை மேற்கொள்ளலாம். செயற்றிறனைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்: அரசு நிறுவனங்கள் மற்றும் சேவை வழங்கல் பிரிவுகளின் செயற்றிறனைத் தொடர்ந்து மதிப்பீடு செய்தல் முறைமையினை முழுமையாக அமுல்படுத்துதல். செயற்றிறனை அளவிடவும், மற்றும் முன்னேற்றத்திற்கான பகுதிகளை அடையாளம் காணவும் முக்கிய செயற்றிறன் குறிகாட்டிகள், குடிமக்கள் கருத்து மற்றும் சுயாதீன மதிப்பீடுகளைப் பயன்படுத்த வேண்டும். காலத்திற்குக் காலம் செயற்றிறன் அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை வளர்க்கக்கூடியதாக இருக்கும். தொடர்ச்சியான கற்றல் மற்றும் தழுவல்: அரசாங்கத் துறையில் கற்றல் மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்தின் கலாச்சாரத்தை வளர்க்க ஆவன செய்தல் வேண்டும். உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் வெற்றிகரமான முயற்சிகளில் இருந்து கற்றுக்கொள்ள அதிகாரிகளை ஊக்குவிக்க வேண்டும். வளர்ந்து வரும் சிறந்த நடைமுறைகள், மற்றும் கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை தொடர்ந்து புதுப்பிக்க சந்தர்ப்பம் வழக்க வேண்டும். இந்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தின் நிலையான அர்ப்பணிப்பு, மற்றும் பல்வேறு பிரிவினர்களின் ஒத்துழைப்பும் தேவைப்படும். பலவீனங்களை நிவர்த்தி செய்வதன் மூலமும், பொதுச் சேவை வழங்கலை மேம்படுத்துவதன் மூலமும் அரசாங்கம் குடிமக்களின் திருப்தி, நம்பிக்கை மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்த முடியும்.

## வலுவான பா.ஜ.க.... (03 ஆம் பக்கத் தொடர்)

எதிர்க்கட்சிகள் அவற்றைத் தூக்கிப் பிடிக்கலாம். அதேசமயம், இன்னும் பெயர் சூட்டப்படாத இந்த எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு மதச்சார்பற்றது. மதச் சிறுபான்மை சமூகங்கள், பழங்குடிகள், கீழ்ப்படி நிலை சாதியினர் என்போர் இக்கூட்டமைப்புக்கு ஆதரவு தருவார்கள்.

எனினும் இக்கூட்டணி வெற்றி பெற்றால் யார் பிரதமர் என்பதை முடிவு செய்வதில் கடும் பிரச்சினைகள் எழும். அமைச்சரவையில் என்ன சதவீதத்தில் பல்வேறு கட்சிகளின் எம்.பி.மாரை உள்வாங்குவது, ஒரு மாநிலத்தில் போட்டியிடும் போது அம் மாநிலத்தில் செல்வாக்கான கட்சியுடன் எவ்வாறான உடன்பாடு செய்து கொள்வது என்று பல பிரச்சினைகளை 'இந்த பாட்னா கூட்டணி' கடந்து வரவேண்டும். முழு இந்தியாவுக்கான தேர்தல் பிரசாரம் எவ்வாறு அமைய வேண்டும்; மாநிலங்களில் எவற்றை முன்னிலைப்படுத்துவது என்பனவெல்லாம் பேசித் தீர்க்கப்பட வேண்டும். இதே சமயம் மம்தா பெனர்ஜிக்கும் பிரதமர் கனவு உண்டு;

பாட்னா கூட்டத்தில் கலந்து கொண்ட அர்விந்த் கெஜ்ரிவால், ஊடக சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை. அவருக்கு காங்கிரஸ் மீது கடும் அதிருப்தி உள்ளது. டில்லியிலும் பஞ்சாப்பிலும் நடைபெற்ற தேர்தல்களில் ஆம்ஆத்மி காங்கிரசை கடுமையாக விமர்சித்தே தன் வெற்றிகளை உறுதி செய்தது.

இரண்டாவதாக நீதிமன்ற தீர்ப்பின் வழியாக தனக்குக் கிடைத்த அதிகாரிகளை பதவிகளில் நியமிக்கும் அதிகாரத்தை அவசர கட்டளைச் சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வந்ததன் மூலம் பா.ஜ.க. அரசு தட்டிப் பறித்ததை அனேகமாக இந்தியாவின் எல்லா பிரதான கட்சிகளும் எதிர்த்த போதிலும் இம்முக்கியமான விடயத்தில் காங்கிரஸ் இன்றுவரை மௌனம் காத்தே வருகிறது.

இக்கட்டளைச் சட்டம் தவறாது என்று காங்கிரஸ் அறிவிக்காவிட்டால் இக் கூட்டணி முயற்சிகளில் இருந்து தான் ஒதுங்கிக் கொள்வதாக கெஜ்ரிவால் தெளிவாகவே தெரிவித்துவிட்டார். எனவே இம் மாதம் சிம்லாவில் நடைபெறப்போகும் இரண்டாவது ஆலோசனைக் கூட்டத்தில் கெஜ்ரிவால் கலந்து கொள்வாரா என்பது காங்கிரசின் கைகளிலேயே தங்கியுள்ளது.

எனவே முழு இந்தியாவையும் தழுவிய இம் மெகா கூட்டணி, ஏகப்பட்ட பிரச்சினைகளைத் தாண்டித்தான் ஒரு அரசியல் சக்தியாக வடிவெடுக்க வேண்டும். இந்திரா காந்தி என்ற பொது எதிரியை முன்நிறுத்தித்தான் ஜெயபிரகாஷ் நாராயணன் ஜனதா கட்சியை உருவாக்கி, சாதித்தும் காட்டினார்.

ஆனால் இரண்டாண்டுகளில் அக்கட்சி நொருங்கிப் போனது. இக் கூட்டணியும் முரண்பாடுகளைத் தாண்டி ஆட்சியை கைப்பற்றினாலும் ஜனதா கட்சிக்கு ஏற்பட்ட நிலை இதற்கும் நேரலாம். எதிர்ப்பக்கம் பார்த்தால் பா.ஜ.க. ஆழமான கட்டமைப்புகள் கொண்டது. அதன் தலைவர் நாடறிந்தவர், தெளிவாகவும் சாதகமாகவும் பேசக்கூடிய உறுதிமிக்கவர்.

எனவே, எதிர்க்கட்சிகள் அமைக்கப்போகும் இக் கூட்டணியின் அச்சு, பா.ஜ.க.விலேயே தங்கியிருக்கிறது. அதனால்தான் முன்னாள் காங்கிரஸ் அமைச்சர் கபில் சிபல், பா.ஜ.க. எதிர்ப்பை முன்நிறுத்தித்தான் பிளவுகளை மறந்து இக்கட்சிகள் ஒன்றுபட்டாக வேண்டும் என்றார். மம்தா பெனர்ஜி, மூன்றாவது முறையும் பா.ஜ.க. ஆட்சி அமைக்குமானால் நாடு நலிவுறும்; தேர்தலே இனி நடக்காது என்ற கோஷத்தை அலற விட்டிருக்கிறார்!



# வாரபலன்

02.07.2023 - 08.07.2023

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)

இராசிநாதன் செவ்வாய் நீசம். ஆனாலும் குருவின் கேந்திரத்தில் இருப்பதால் பலம் பெறுகிறார். தனாதிபதி சுக்கிரன்கூட இருக்கின்றார். புதன் ஆட்சி பெற்று இருக்கிறார். மாணவர்களுக்கு கேட்ட துறை கிடைக்கும். ஆசிரியர்கள், ஜோதிடர்கள், கணக்காளர்கள் நல்ல வாய்ப்பைப் பெறுவார்கள். வீடு கட்ட அரசாங்க கடன் கேட்டிருந்தால் கிடைத்துவிடும். சனி வலிமையாக இருப்பதால் தொழில் இலாபம் முதலியவற்றைச் சம்பாதிக்கலாம்.

இராசிநாதன் செவ்வாய் நீசம் பெற்றிருக்கிறார்.

## ரிஷபம்

(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )

இராசிநாதன் சுக்கிரன் 3 இல் இருக்கிறார். செவ்வாயோடு இணைந்து இருக்கிறார். சுக்கிரமங்கள யோகம் பெறுகின்றார். செவ்வாய் நீசகதியில் இருப்பினும் அவர் இடப இராசிக்கு 12ஆம் அதிபதி அல்லவா. 2 இல் சூரியன் புதன். அதிலே புதன் ஆட்சி பெற்று இருக்கிறார். அவர் வலுப்பெற்று இருப்பதால் குடும்ப உறவுகள் நன்றாக இருக்கும். தொழில் ஸ்தானத்தில் சனி ஆட்சி பெறுவதால் தொழில் நன்றாக நடக்கும். 6 இல் கேது. பலருடைய உதவி கிடைக்கும். பிரச்சினைகள் நீங்கும்.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)

இராசிநாதன் புதன் ஆட்சியில் இருக்கிறார். சூரியன் அவரோடு இணைகிறார். 7ஆம் இடம் வலுப்பெறுகிறது. குரு 11இல் இருக்க 2 இல் இலாபாதிபதி செவ்வாய் சுக்கிரன் இணைந்து சுக்கிரமங்கள யோகத்தை ஏற்படுத்துகிறார்கள். ஏதாவது ஒரு இடத்தில் இருந்து உதவிகள் வந்து கொண்டிருக்கும். புதிய முயற்சிகள் வெற்றி பெறும். கல்வி, தொழில்நுட்பம், பத்திரிகை முதலிய தொழில்களில் உள்ளவர்களுக்கு புதிய திருப்பங்கள் ஏற்படும். 9இல் பலம் பெற்ற சனியின் ஆதரவு உங்களுக்கு இருக்கிறது. பஞ்சமாதிபதி இரண்டில் இருப்பதும், அவரோடு சகோதர உறவுக்காரன் சேர்ந்து இருப்பதும் நல்லது. ஆடை ஆபரணச் சேர்க்கை ஏற்படும்.,தந்தையின் உடல்நிலை பாதிக்கலாம். சேமிப்புக்கு வழி இல்லை.

## கடகம்

(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

இராசிநாதன் நிலை ஓரளவு திருப்தியாக இருக்கிறது. இராசியில் இலாபாதிபதி சுக்கிரனும் பஞ்சமாதிபதி செவ்வாயும் இணைந்து யோகத்தைத் தருகிறார்கள். சகோதர உதவிகள் உங்களுக்குக் கிடைக்கும். பெண்களால் ஆதாயம் உண்டு. குருவின் பார்வை உங்கள் தனஸ்தானத்திலும் சுகஸ்தானத்திலும் வருவதால் பணப் புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். மேற்படிப்பு முதலிய விஷயங்கள் நன்றாக இருக்கும். செயலில் ஊக்கமும் முயற்சியும் அதிகரிக்கும். நீச செவ்வாய் எட்டில் உள்ள சனியைப் பார்ப்பது சில சிரமங்களையும், தடுமாற்றத்ததையும் தரும். ஒவ்வொரு முறையும் ஏதேனும் ஒரு பின்னடைவைச் சந்தித்த பின்தான் உங்களால் மேற்கொண்டு தொடர முடியும்.

## சிம்மம்

(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)

இராசிநாதன் சூரியன் 11 இல் இருக்கிறார். கூட தன இலாபாதிபதி புதன் ஆட்சியில் இருக்கிறார். சுக்கிரன் 12 இல் இருக்கிறார். அது அவருக்கு நல்ல இடம். ஒன்பதில் இருந்து குரு இராசியைப் பார்க்கிறார். நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். சந்திரனுடைய நிலையும் பரவாயில்லை. தொந்தரவு இல்லாத நிலை. அமைதி நிலவும். 3இல் கேது இருப்பதால் அனைத்து காரியங்களும் வெற்றியை நோக்கி நகரும். தொழில் சிறக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள். நினைத்த துறையில் இடம் கிடைக்கும். அரசாங்க உதவிகளும் கிடைக்கும். ஸ்காலர்ஷிப் போன்றவை நிச்சயமாக கிடைக்கும். உங்கள் மன எண்ணங்கள் பூர்த்தியாகும். விருந்தினர் வருகை உண்டு. சம்பள உயர்வு உண்டு.

## கன்னி

(உத்தரம் 2 ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2ஆம் பாதம்)

இராசிநாதன் புதன் கேந்திரத்தில் இருக்கின்றார். அது அவருக்கு ஆட்சி வீடு. சூரியனோடும் இணைவது சிறப்பு. புதஆதித்ய யோகம் பெறுகின்றார்கள். 4ஆம் இடத்தை அவர்கள் பார்வையிடுவதும் சிறப்பு. குரு நான்காம் இடத்திற்கு 5ஆம் இடம். அதாவது இராசிக்கு 8ஆம் இடத்தில் இருப்பதும் ஒரு வகையில் சிறப்புத்தான். சில நல்ல வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும். குரு பார்வை இரண்டாம் இடத்தில் விழுவதால் குடும்பத்தில் புதிய வரவு உண்டு. நிதிநிலை பரவாயில்லை. கேதுவினால் வரும் இடர்ப்பாடு குருவின் பார்வையால் கட்டுப்படுத்தப்படும். அரசு சார்பான விஷயங்கள் அனுகூலமாகும். மேலதிகாரி பாராட்டு கிடைக்கும்.

## துலாம்

(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)

இராசியில் கேது இருப்பினும், இராசிநாதன் தசம கேந்திரத்தில் பலம் பெற்று இருக்கிறார். சூரியன் புதன் பாக்கியஸ்தானத்தில் இருக்கிறார்கள். அதில் புதன் அதே இடத்தில் ஆட்சியும் பெற்று இருக்கிறார். தைரிய ஸ்தானத்தை பார்வையிடுகிறார். தொழில் வளர்ச்சி நன்றாக இருக்கும். புதிய முதலீடுகள் செய்ய வாய்ப்புண்டு. எண்ணங்கள் கூடி வரும். நண்பர்களால் உதவி கிடைக்கும். முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். வெளிநாட்டு வேலைவாய்ப்பு தேடுபவர்களுக்கு சாத்தியப்படும். பத்திரிகை, ஊடகத்துறை நண்பர்கள் நல்ல வாய்ப்பு பெறுவார்கள். கலைஞர்களுக்கும் இந்த வாரம் நல்லது.

## விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

இராசிநாதன் நீசமாயினும் பாக்கியஸ்தானத்தில் இருக்க அவரோடு இணைந்த சுக்கிரன் 7ஆம் பார்வையாக பார்வையிடுகிறார். எனவே பொருளாதார பின்னடைவு பெரிதாக இருக்காது. ஆயினும் வரவேண்டிய கடன் பாக்கிகள் சீக்கிரம் வந்துவிடாது. கொடுக்க வேண்டிய தவணைகளும் தள்ளிப் போகும். தொழில் சீராக இருக்கும். பெரிய வித்தியாசம் இருக்காது. எல்லா விசயங்களிலும் பெரிய முன்னேற்றமோ பெரிய பின்னடைவோ இன்றி சராசரியாக நடந்து கொண்டிருக்கும். 7இல் புதன் இருப்பினும் கஷ்டங்கள் வராது. மறைந்த புதன் தானே. நிறைந்து தருவார். புதிய ஒப்பந்தம் கிடைக்க வாய்ப்புண்டு. மேலதிகாரிகளால் ஊக்கப்படுத்தப்படுவீர்கள்.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

இராசிநாதன் பஞ்சம திருகோணம் ஏறி இராசியைப் பார்க்கிறார். பாக்கியஸ்தானம், இலாப ஸ்தானங்களைப் பார்வையிடுகிறார். விருப்பங்களை நிறைவேற்றும் அமைப்பு இது. ஆனால், அவரோடு இணைந்துள்ள ராகு அதில் தடைகளைத் தரவே செய்வார். எனவே, எதிலும் அதிகம் முயற்சி தேவைப்படும். பணப்புழக்கம் பரவாயில்லை. அதிகாரிகள் அதிக பணிகளைக் கொடுப்பார்கள். ஆனாலும், பாராட்டுவார்கள். ஊக்கப்படுத்துவார்கள். சூரியன் புதன் இணைந்து களத்திர இராசியில் இருந்து இராசியைப் பார்க்கிறார்கள். அது புதனுடைய ஆட்சி வீடு என்பதால் மனம் சுகம் பெறும். நட்பு விஷயங்கள் உதவும். தொழில் நன்றாக இருக்கும். தாய் வழி உறவுகள் கைகொடுக்கும். விருந்து மகிழ்ச்சி என உற்சாகம் இருக்கும்.

## மகரம்

(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)

இராசிநாதன் சனி ஏழரையில் இருந்தாலும் அஷ்டமச் சனியாக இருப்பினும் மகர இராசிக்கு பெரும் பாதகம் செய்ய மாட்டார். உங்கள் அனுபவம் அதிகரித்துக் கொண்டே இருக்கும். சொந்த அனுபவ பலத்தால் வெற்றி பெற வேண்டும். எதிர்பார்த்தது கிடைக்காது. ஆனால் எதிர்பாராத சில விஷயங்கள் நன்மையாக நடைபெறும். 7இல் செவ்வாய் சுக்கிரன் இணைந்து ராசியைப் பார்ப்பதால் குடும்பத்தில் பெரிய அளவு சச்சரவு இருக்காது. எதுவும் கட்டுக்குள் இருக்கும். நிதி நிலைமை பரவாயில்லை. கலைஞர்கள் நல்வாய்ப்புகளைப் பெறுவார்கள். சகோதர உதவியும் கைகொடுக்கும். நன்கு யோசித்து மாற்று வழிகளோடு செயல்களைச் செய்ய வேண்டும்.

## கும்பம்

( அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)

இராசிநாதன் சனி வக்ரகதியில் செல்லப் போகிறார். இது சில சங்கடங்களைத் தவிர்க்கச் செய்யும். பஞ்சமஸ்தானத்தில் புதன் ஆட்சி பெற்று சூரியனோடு இணைவு என்பதால், தெய்வ பலமும் பெரியவர்கள் ஆசியும் புண்ணிய பலன்களும் கூடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்காலம் பற்றிய திட்டங்கள் உருவாகும். 9இல் உள்ள கேது உங்கள் தெய்வ வழிபாட்டுக்கு உதவும். சுபகாரியத் தடைகள் விலகி சாதகமான பதில் கிடைக்கும். பொதுவாகவே பெரிய ஏற்றம் இறக்கம் இல்லாமல் இருக்கும். சேமிப்பு இருப்பது கடினம். இராசிநாதன் வக்கிரம் பெற செலவுகள் கூடும்.

## மீனம்

(புரட்டாதி 4ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)

இராசிநாதனுக்கு தன குடும்ப ஸ்தானத்தில் குரு இருப்பது நல்லது. அவர் ராகுவோடு சற்று பலக் குறைவோடு இருந்தாலும்கூட பெரிய துன்பங்கள் தரமாட்டார். புதனும் சூரியனும் சதுர்த்த கேந்திரத்தில் இருக்க, சுகங்கள் வசப்படும். மகிழ்ச்சி அதிகரிக்கும். சந்தோஷமான செய்திகள் வந்து சேரும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு சூரிய பலத்தால் சில பதவிகள் பொறுப்புகள் வந்து சேரும். தாய் வழி உறவுகள் கை கொடுக்கும். அவ்வப்பொழுது ஆயாசமும் இயலாமையும் வெளிப்படும் ‘‘என்னால் ஏன் முடியவில்லை. நன்றாகத்தானே இருந்தேன். ஏன் இப்படி ஆகிவிட்டது?’’ என்று உங்களுக்கு நீங்களே சொல்லிக் கொள்வீர்கள்.

---

# கலைக்கு அழிவென்பது கிடையாது

**நுகர்வுக் கலாசாரச் சூழலின் பண்பாட்டு மேலாதிக்கம் வேகமாக நம்மீது திணிக்கப்பட்டு வரும் நிலையில், எம்மத்தியில் காணப்பட்ட பல தனித்துவமான பாரம்பரியக் கலைகள் இல்லாதொழிக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களின் பல பாரம்பரியக் கலைகள் அழிவடைந்து வந்தாலும் ஆங்காங்கே இருக்கும் நம் மூத்தகுடிகள் சிலர் அவற்றைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கடத்த வேண்டுமென்ற ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றனர். அவ்வாறு கூத்துக் கலையை தன் உயிரிலும் மேலாகவும் நேசிக்கும் பெண் அண்ணாவியார் செபஸ்ரியாம்பிள்ளை இராஜேஸ்வரியுடனான நேர்காணல்....**





அண்ணாவியார் செபஸ்ரியாம்பிள்ளை இராஜேஸ்வரி

**முதலில் உங்களைப் பற்றிய அறிமுகம்......**

எனது பெயர் செபஸ்ரியாம் பிள்ளை இராஜேஸ்வரி. எனது பெற்றோரின் பெயர் மிக்கேல் மனுவல், மனுவல் அன்னம்மா(பாக்கிய ராசாத்தி). எனக்கு ஏழு பிள்ளைகள் உள்ளனர். பெருமைகளையும் திறமைகளையும் கொண்டாடும் பாஷையூர் எனது சொந்த ஊராகும். நான் 30 வருட காலமாக மதனிகா நாடக மன்றத்தை நடத்தி வருகின்றேன்.

**கூத்துக்கலையில் உங்களுக்கு ஆர்வம் ஏற்படக் காரணம் என்ன?**

சிறுவயதிலிருந்தே எனக்கு கலைத் துறையில் ஆர்வம் இருந்தது. அதற்குக் காரணம் எனது தாய் தான். அவருக்கு கலைத்துறையில் இருந்த ஈடுபாடே நானும் இக் கலையில் ஆர்வம் கொள்ளத் தூண்டுதலாக இருந்தது. சொல்லப்போனால் எனது உறவினர்கள் அனைவருமே கலைத் துறையில் நெருங்கிய பிணைப்புக் கொண்டிருப்பதால் கலைத்துறை ஆர்வமானது பரம்பரை வழியாகவே எனக்குக் கடத்தப்பட்டது.

**உங்களுடைய முதல் கலைப்படைப்புப் பற்றி கூற முடியுமா?**

1991ஆம் ஆண்டு என்னுடைய முதல் நாடகம் அரங்கேற்றப்பட்டது. தொடரும் வெற்றி எனும் இசை நாடகத்தை சென் செபஸ்ரியன் அரங்கில் மேடையேற்றியுள்ளேன்.

**எவ்வாறான பாத்திரங்களை நீங்கள் ஏற்று நடிப்பீர்கள்?**

நான் பெரிதும் பாத்திரங்கள் ஏற்று நடிப்பதில்லை. ஒரு நாடகத்தை நெறியாள்கை செய்வதே எனது பணி. யாரும் வர முடியாத இக்கட்டான சூழல் அமையும் பட்சத்தில் மட்டுமே அந்த கதாபாத்திரத்தை நான் ஏற்று நடிப்பேன்.

**இதுவரையில் நீங்கள் உருவாக்கிய கலைப் படைப்புக்கள் எவை?**

1991இல் இருந்தே எனது கலைப்பயணம் ஆரம்பித்துவிட்டது. அந்தவகையில் இசை நாடகங்கள், நாட்டுக் கூத்து உள்ளடங்கலாக இதுவரையில் 20 கலைப் படைப்புக்களை உருவாக்கியுள்ளேன். தொடரும் வெற்றி, தியாகச் சுடர், தேவ மைந்தன், கொல்லி மலைக் குருடன் போன்ற இசை நாடகங்களையும் வெற்றி மேல் வெற்றி, பாவ மன்னிப்பு, மன வுறுதி, விக்கிரமாதித்தன், மன்னன் வலகம்பா, சமர்க்கள வீரன் சந்தியோ குமையேர், டென்மார்க் மன்னன் ஹாம்லெத், பாலைவனப் புதல்வன், கவிவீரராகவன் போன்ற நாட்டுக் கூத்துகளையும் உருவாக்கியுள்ளேன்.

இவற்றுள் 10 படைப்புக்கள் அரங்கேற்றம் செய்யப்பட்டுவிட்டன. ஏனையவற்றையும் அரங்கேற்றம் செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறேன். இவற்றோடு கவிதை, கட்டுரை, கும்மி, கோலாட்டம், வீதி நாடகங்கள் போன்றவற்றையும் எழுதியுள்ளேன்.

**நீங்கள் எழுதி அரங்கேற்றிய நாடகங்களில் உங்களை மிகவும் கவர்ந்த நாடகம் எது?**

விக்கிரமாதித்தன் எனக்கு மிகவும் பிடிக்கும். இது 1994ஆம் ஆண்டு அரங்கேற்றம் செய்யப்பட்டது. கோர்வையான வரலாற்றைக் கொண்ட ஒரு நாடகமாக இது அமைந்தது. பல்வகைப்பட்ட விமர்சனங்களையும் இந்த நாடகம் பெற்றிருந்தது.

**கூத்துக்களின் எந்த வடிவத்தைக் கையாளுகிறீர்கள்?**

யாழ்ப்பாணத்தில் வடமோடி தென்மோடி மரபு வகையைச் சார்ந்த கூத்து வடிவங்கள் வழக்கிலுள்ளன. நான் பெரிதும் தென்மோடி முறையைத் தான் விரும்புவேன். ஆனால் ஒரு நாடகத்தை எழுதும் போது தென்மோடி, வடமோடி என்றில்லை.

நடிக்கும் முறையில் தான் தென்மோடி, வடமோடி என்று வேறுபடும். தென்மோடி என்பது ஆரம்பகாலத்தில் வாளை கையில் ஓங்கியவாறு நடந்து கொண்டுதான் பாடுவார்கள்.

தற்போது வடமோடியைப் போன்ற நடையுடன் கொஞ்சம் வேகமான அசைவுகளையும் தென்மோடியில் கையாளுகிறார்கள். மேலும் இவர்களின் ஆடையமைப்பிலும் வேறுபாடுண்டு.

**இதுவரையில் நீங்கள் பெற்ற விருதுகள் கௌரவிப்புக்கள் பற்றி....**

2004 ஆம் ஆண்டில் “மரபுக்கலைச் சுடர்” பட்டம், 2012 இல் “சாம சிறி கலாயோதி விருது”, 2014 இல் யாழ் பிரதேச கலாசார விழாவில் “யாழ் ரத்னா விருது” 2015 இல் பாஷையூர் கலையகத்தால் “பாஷையூர் கலாயோதி” பட்டம் 2017 இல் “கலை மாமணி” கௌரவப் பட்டம், “கலைக்குருசில்” பட்டம், 2018 இல் குபேரகா கலை மன்றத்தின் “வடஜோதி” விருது, 2019 இல் யாழ் திருமறைக் கலா மனறத்தின் “கூத்துக்கலை மாமணி” பட்டமும், பிரதேச செயலகத்தால் “கலைஞர் சுவதம்” விருதும் 2021 இல் கலாபூஷணம் விருது என அடுக்கிக் கொண்டே போகலாம்.

**அண்ணாவியார் என அழைப்பதற்கான காரணம் என்ன?**

கூத்துக் கலையை குற்றமறத் தெரிந்து அதனை பழக்கி நெறிப்படுத்தி மேடையேற்றுபவர்களையே அண்ணாவியார் என அழைப்பர். கூத்துக்கலையைப் பொறுத்தவரையில் அதன் உயிராக இருப்பவர்கள் அதனைப் பயிற்றுவிக்கின்ற அண்ணாவிமார் தான். நடிகர்கள் எவ்வாறு நடிக்க வேண்டும் வசனங்கள் எவ்வாறு பேசப்பட வேண்டும், பாடல்கள் எவ்வாறு பாடப்பட வேண்டும், ஒலியை எவ்வாறு கூட்டிக் குறைக்க வேண்டும் போன்றவற்றை அவரே தீர்மானிப்பார். குறிப்பாக ஒரு நாடகக் கலையின் முதுகெலும்பாக அண்ணாவிமார்களே காணப்படுவர். அண்ணாவி என்பவர் நினைத்தவுடன் தோன்றி விட முடியாது.

**பெண் அண்ணாவியாரான உங்களுக்கு ஆண் அண்ணாவிமாருடைய ஒத்துழைப்புக் கிடைக்கிறதா?**

ஆணாதிக்கம் நிறைந்துள்ள ஒரு சமூகத்தில் அவற்றை எதிர்பார்ப்பது முட்டாள் தனமானது. பெண் எதைச் செய்தாலுமே அவற்றை இளக்காரமாகப் பார்க்கும் ஆண்களுக்கு மத்தியில் அவர்களின் ஒத்துழைப்பை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

ஆனாலும் சில ஆண்கள் அவ்வாறான பிற்போக்கான எண்ணங்களிலிருந்து விலகி பெண்களையும் சமமாக கருதி வாழ்கின்றனர். எனினும் நான் தனிக் காட்டு ராணியாகவே வலம் வர விரும்புவேன். அதனால் ஆண்களின் உதவியை பெரிதும் நாடுவதில்லை. ஆண்களின் உதவி தேவைப்படும் சூழல் அமையும் போது எனது உறவினர்களாக உள்ள அண்ணாவிமாரின் உதவியை நாடுவேன்.

**கூத்துக் கலையில் ஈடுபடுவர்களை சமூகம் எவ்வாறு நோக்குகிறது?**

பலவிதமான குணாதிசியங்களை கொண்ட மனிதர்களை உள்ளடக்கிய கட்டமைப்புத்தான் சமூகம். அவ்வாறான சமூகத்திலுள்ளவர்களுடன் எதுவித தொடர்பும் இல்லாமல் எம்மால் வாழ முடியாது. அந்தவகையில் சிலர் கலையை நேசிப்பவர்களாக இருக்கின்றனர். ஆனால் இன்னும் சில இடங்களில் காலைத்தூக்கி வைக்கும் ஒவ்வொரு அடியிலும் மற்றவர்களை எப்படி கீழே வீழ்த்தலாம் என காத்துக் கொண்டிக்கிறார்கள். ஒவ்வொருவருடைய பார்வையும் வேறுபட்டது என்பதற்கமைய கலையை இழிவாகப் பார்ப்பவர்களும் இருக்கிறார்கள். இழிவாகப் பார்க்குமளவுக்கு கலையென்பது அசிங்கமல்ல. அது நம் அடையாளம்.

**யாழ்ப்பாணத்தில் பாரம்பரியக் கலைகளின் வளர்ச்சி எவ்வாறு உள்ளது?**

யாழ்ப்பாணம் தமிழர்கள் செறிந்து வாழும் ஒரு பகுதி. ஆரம்பகாலத்தில் யாழ்ப்பாணம் என்ற பெயரைக் கேட்டாலே பாரம்பரியத்தின் பாதுகாவலன் என்று கூறுவார்கள்.

ஆனால் தற்காலத்தில் அந்நிலை மாறிவிட்டது. எல்லோரும் நுகர்வுக் கலாசாரத்தின் போர்வைக்குள் வலிந்திழுக்கப்பட்டு விட்டனர். குறிப்பாக நம்முடைய வரலாறு பற்றி அறிய ஆர்வம் காட்டாத மக்கள் இந்தியத் தொடர் நாடகங்களுக்கும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளுக்கும் அடிமைப்பட்டு வாழத் தலைப்படுகின்றனர். இதுவே இன்றைய யாழ்ப்பாணத்தின் நிலையாகக் காணப்படுகிறது.

**உங்களுடைய கூத்துக்கள் மூலமாக சமூகக் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றனவா?**

சமூகக் கருத்துக்களை முன்வைக்க எத்தனையோ வழிமுறைகள் உள்ளன. அவற்றில் ஒரு பாகம் தான் கூத்து. என்னுடைய கூத்துக்கள் மூலமாக சமூகக் கருத்துக்கள் பெரிதும் முன்வைக்கப்படுவதில்லை. நான் பெரும்பாலும் வரலாற்று நிகழ்வுகளையே கூத்துவடிவமாக வழங்குவேன். ஏனெனில் இந்தத் தலைமுறையினர் பலருக்கு எமது வரலாறு தெரிவதில்லை. அதற்காக நான் சமூக வரலாறுகளையே கூத்து வடிவமாக்குவேன். கூத்துக்கள் மூலமாகவும் சமூகக் கருத்துக்கள் விதைக்கப்படுகின்றன. ஆனால் மக்கள் அவற்றை ஏற்றுக் கொள்வதில்லை. வெகுஜன ஊடகப் பாணியில் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுக்கும் தொடர் நாடகங்களுக்கும் அடிமையாகியுள்ள மக்கள் மத்தியில் யார் வந்து எத்தகைய சமூகக் கருத்துக்களைக் கூறினாலும் அவர்கள் அவற்றை உள்வாங்க மாட்டார்கள்.



துசியந்தி பரமேஸ்வரன்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

# படித்ததும் பகர்வதும் 149



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### அநாதைகளை அரவணைப்போம்!

தந்தையை அல்லது தாய் தந்தையர் இருவரையும் இழந்தவர்களை அநாதைகள் என்று பொதுவாகக் குறிப்பிடுகின்றனர். இவர்களது நலன்களில் விஷேட கவனம் செலுத்தப்படுவது அவசியமாகும். சில குடும்பங்களின் தந்தை இறந்திருந்தாலும் தாய் வசதி படைத்தவராக அல்லது உழைத்து வாழ்பவராக இருக்கும் போது அத்தகையவர்களது பிள்ளைகள் பெரும்பாலும் பெரிதாகப் பிரச்சனைகளின்றி சிறந்த முறையிலேயே பராமரிக்கப்படுகின்றனர்.

இதே போன்று, மற்றும் சில குடும்பங்களில் இறந்த தந்தையினது, அல்லது வாழ்கின்ற தாயின் குடும்பத்தவர்களது, குறிப்பாக அவரது சகோதர சகோதரிகள், இறந்தவரின் பிள்ளைகளின் பரா



மரிப்பில் கூடிய பங்களிப்பு செய்வதாலும் அத்தகையவர்களின் பிள்ளைகளும் பிரச்சினைகளுக்கு உள்ளாவது குறைவு.

இத்தகைய வாய்புகள் இல்லாத, வறுமைக் கோட்டின் கீழ் உள்ள அநாதைப் பிள்ளைகளின் நலன்களை கவனிப்பது குடும்பத்தவர்கள், சமூகத்தவர்கள், ஊரார்களது கடமையாக இருக்கிறது என்பதே தார்மீக நிலைப்பாடாகும். சமூக சேவை அமைப்புகளும் இவ்விடயத்தில் கூடிய கரிசனை எடுத்தல் வேண்டும். அத்துடன் இத்தகைய அநாதைகளை ஆதரிப்பதற்கு ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையிலும் விஷேட கவனம் எடுத்து முன் வந்து செயல்பட வேண்டும். இன்றைய காலத்தில் பல்வேறு இடங்களில் அநாதைகளைப் பராமரிக்கின்ற நிலையங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒரு சில முறையற்று நடந்து கொள்வதாக விமர்சனங்கள் வைக்கப்பட்டாலும், பெரும்பாலானவை போற்றத்தக்க பணிகளையே ஆற்றி வருகின்றமை ஆறுதலுக்குரிய விடயமாகும்.

அநாதைகளின் தேவைகளை கவனிக்க முக்கியத்துவம் அளிக்கும் அதேவேளை, அவர்களை அன்போடு அரவணைத்துக் கொள்ளவும் முயற்சித்தல் வேண்டும். அவர்களுடன் அன்பாக கதைத்தல், ஆறுதல் கூறுதல், அவர்களது விருப்பங்களை அறிந்து கொண்டு நிறைவேற்ற முயற்சித்தல், தேவைகளை உணர்ந்து நிறைவேற்றுதல் போன்ற முறைகளில் அநாதைகளின் மனதில் "நாம் அநாதைகள்" என்ற எண்ணத்தை தோற்றுவிக்காமல் சாதாரண வாழ்க்கையை மேற்கொள்ள வழி செய்தல் அவசியம்..

அநாதைகளை பராமரிக்கின்ற நிலையங்களை நடத்துபவர்கள், தமது பொறுப்பிலுள்ள பிள்ளைகளை தமது சொந்தப் பிள்ளைகளைப் போல் கருதி, அவர்களை அரவணைத்து அவர்களது வாழ்வை வளப்படுத்த வேண்டும். ஏனையோர் இத்தகைய அநாதைகளை ஆதரிக்கும் நிலையங்கள் சிறப்பாகவும் முறையாகவும் செயல்பட ஆலோசனைகள், வழிகாட்டல்கள், பண உதவிகள், பொருளுதவிகள், பொருளாதார உதவிகள் என வேறுபட்ட விதத்தில் தமது பங்களிப்புகளை செய்திட முன்வர வேண்டும்.

அநாதைகளை 'தாம் அநாதைகள்' என்ற எண்ணம் அவர்களது உள்ளத்தில் தோன்றாத வகையில் முறையாக, சரியாக, நேர்மையாக, அவர்களை பராமரிப்பதே யாவரும் செய்ய வேண்டிய நற்பணியாகும்.

## நெஞ்சுக்கு நீதி

***தந்தையை தாயை இழந்த அநாதைப் பிள்ளைகள்***
***தவிப்பின்றி மகிழ்ந்திட அரவணைக்கும் கரங்கள்***
***சிந்தையில் கருணையால் செய்திடும் நற்பணிகள்***
***நிச்சயம் நிறைத்திடுமும் கணக்கினில் நன்மைகள்***

## புது வரவு

### நூறுருல் அயின் தரும் "பூஞ்செண்டு"

'பண் பாடும் பெண்', 'மின்னும் தாரகைகள்', 'திதுளன தாரகா' எனும் மூன்று நூல்களைத் தந்த கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் வெளியிட்டுள்ள நாலாவது நூல் "பூஞ் செண்டு "(கவிதைத் தொகுதி).

காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன், நூலாசிரியரைப் பற்றி இந்நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்,

"நூறுல்ஜன் ஈழத்துக் கவிதை வானில்
ஏற்றமுறு பெண்கவிஞர் எடுத்துக் கூறின்
பேரறிஞர் எஸ்.டி. சிவநாயகத்தின்
பண்ணையிலே வளர்ந்தவொரு ஊடகப்பெண்
பேர்பெறுநற் பண்புடைய பெண்ணாள்
யார்க்கும் புண்ணுரவே வார்த்தை
சொலாநல்லநங்கை காரழிந்து
சமுதாய உயற்சிகாணக் கவி சொல்லும்
ஆற்றல் மிகு கவிதைக்காரி".

'அல்லாஹ்வின் அருள் மழை', தொடங்கி 'மலையகப் பெண்கள் மனம் மகிழ்வதெப்போது', 'முகவரியை இழக்காதே பெண்ணே!', 'நாட்டுக்கு நல்லது செய்திடு தம்பி', 'நானிலம் போற்றிட வாழ்ந்திடு', 'வாக்குத் தவறாத நாக்கு', உட்பட 'பெண் குலம் பேணிய பெருமானே' வரை பல்வேறு தலைப்புகளிலே முப்பத்தொரு அழகுறு கவிதைகள் இந்நூலை அலங்கரித்துள்ளன.



'பூஞ்செண்டு' தந்துள்ள கவிதைகள் பற்றி, சத்திய எழுத்தாளன், கலாபூஷணம் எஸ். ஐ. நாகூர் கனி, "பூஞ்செண்டில் இன்பியல், துன்பியல் மூத்தோரைப் பாராட்டும் விரிமனசின் விசாலம் என்பன இவரது கவிதா விலாசங்களாகத் திகழ்கின்றன. இவற்றில் தீந்தமிழ் மணம் கமழ்கின்றன." என்று குறிப்பிட்டுள்ளார்.

'பூஞ்செண்டில் மணம் வீசும் கவி வரிகளில் நான்கு இப்படி அமைந்திருக்கிறது.

உதவிட கரங்களை நீட்டு
உள்ளத்தை திறந்து காட்டு!
உறங்கும் உன் சமூகத்து வீட்டு
கதவுகளை திறந்து நீ காட்டு!

நூல்: 'பூஞ்செண்டு' (கவிதைத் தொகுதி), ஆசிரியர்: கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், பக்கங்கள்: 114, விலை: ரூபா. 450/00, வெளியீடு: சல்மா பதிப்பகம், இலக்கம். 3, ரிச்சட் டீ சொய்சா வீடமைப்புத் திட்டம், பத்தரமுல்லை. தொடர்புகளுக்கு: 0768098727, 0714842169

## பாடிப் பறந்த பறவை 08

### "இளம்பிறை"

1970களின் ஆரம்பத்தில் இலங்கையில் வெளிவந்த சஞ்சிகை "இளம்பிறை". இலக்கிய ஆர்வலர் எம். ஏ. ரஹ்மான் ஆசிரியராக இருந்து இதனை வெளியிட்டார். கொழும்பு திருப்பள்ளித்தெரு, இலக்கம் 231ல் அலுவலகத்தைக் கொண்டு சிறந்த முறையில் இளம்பிறை வெளிவந்தது. பிற்காலத்தில் இதன் ஆசிரியர் "இளம்பிறை எம். ஏ. ரஹ்மான்" என்று அழைக்கப்பட்டதே இச்சஞ்சிகையின் பிரபல்யத்துக்கும், வெற்றிக்கும் சிறந்த சான்றாக கொள்ள முடியும்.



மிகவும் பிரபலம் பெற்ற "எஸ். பொ". வ. அ. இராசரத்தினம், எஸ். எம். கமாலுத்தீன், அண்ணல் போன்ற பலர் 'இளம்பிறை'யில் தொடர்ச்சியாக எழுதினார்கள். சிறுகதை, கவிதை, வரலாறு, நாட்டு நடப்புகள், விமர்சனம் போன்ற பல விடயங்கள் 'இளம்பிறை' சஞ்சிகையில் இடம்பெற்றாலும் இலக்கியம் சார்ந்த விடயங்களுக்கே இதில் கூடுதலான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

அண்மைக் காலத்தில் டொமினிக் ஜீவா வெளியிட்ட "மல்லிகை", அந்தனி ஜீவாவின் "கொழுந்து", டாக்டர் தி. ஞானசேகரன் வெளியிடும் "ஞானம்", போன்ற தனி மனித முயற்சியினால் வெளிவந்த, வெளிவருகின்ற சஞ்சிகைகள் போன்று, அந்த காலத்தில் எம். ஏ. ரஹ்மான் என்ற தனி மனிதரின் முயற்சியினால் 'இளம்பிறை' வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. அந்த காலத்தில் இதன் விலை 'ஐம்பது சதம்' என்பது இக்கால சந்ததியினர் வினோதமாக, அதிசயமாக நோக்கும் விலையாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கையின் இலக்கிய வரலாற்றில், குறிப்பாக இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாற்றில் 'இளம்பிறை' சஞ்சிகையின் பங்களிப்பு தனியாகவும், விசேடமாகவும் குறிப்பிடப்படும் என்பதில் சந்தேகமில்லை.

## சிந்தனை செய் மனமே

### உண்மையான அன்பு!

ஒரு ஞானியின் மனைவி இறந்து விட்டார். ஊரே துக்கம் விசாரிக்க திரண்டு வந்திருந்தது. எல்லோரது முகத்திலும் வருத்தம். சிலர் கண்ணீர்விட்டு அழுதனர். ஆனால் ஞானியோ சர்வசாதாரணமாக, உட்கார்ந்து ஏதோ பாடலை முணுமுணுத்துக் கொண்டிருந்தார். வந்தவர்களில் பலருக்கு இது அதிர்ச்சியாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. ஆனால் யாரும் அவரிடம் இதைப்பற்றி எதையும் கேட்கவில்லை.



ஒருவன் மட்டும் துணிந்து, ''குருவே, நீங்களே இப்படி செய்வது நியாயமா? என்ன இருந்தாலும், இவ்வளவு காலம் உங்களுடன் வாழ்ந்த உங்கள் மனைவி இறந்திருக்கும்போது, நீங்கள் கவலையின்றி பாடிக் கொண்டிருக்கிறீர்களே?" என்று கேட்டான்,

ஞானி மிக அமைதியாகச் சொன்னார், ''ஒருவரது பிறப்பில் சிரிக்கவோ, அல்லது இறப்பில் அழுவதற்கோ என்ன இருக்கிறது? பிறப்பும் இறப்பும் நம் கையில் இல்லை. அது இயற்கையின் நியதி."

"என் மனைவிக்கு முன்பு உடலோ, உயிரோ இல்லை. பிறகு உயிரும் உடலும் வந்தன. இப்போது இரண்டும் போய் விட்டன. இடையில் வந்தவை இடையில் போயின இதில் வருத்தப்படுவதற்கு என்ன இருக்கிறது?''

"ஆனால் சமூகத்தில் பலர் மற்றவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகவே அழுது புலம்பி நடிக்கிறார்கள். உயிருடன் இருக்கும் போது மனைவி, பிள்ளைகள், தந்தை, தாய் போன்றோரை நன்கு கவனிக்க மாட்டார்கள்.. ஆனால் இறந்ததும் ஏதோ அழுது பாசாங்கு செய்வார்கள்."

ஞானி சொன்னது தத்துவ வார்த்தைகள் போலிருந்தாலும் அதில் சிந்தனைக்கு நிறைய இருக்கிறதல்லவா? உங்களுக்கு எவர்மீதேனும் உண்மையான அன்பு இரக்கம் இருக்குமானால், அவர்கள் உயிருடன் இருக்கும்போதே அதனை வெளிக்காட்டுங்கள்.

## நலமே வாழ்வோம்

### மீண்டும் மலேரியா!

உலகில் மலேரியாவை ஒழித்த நாடுகளில் ஒன்றாக இலங்கை, 2016ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. அது முதல் மலேரியா இல்லாத நாடாக இலங்கை திகழ்ந்தது. ஆனால் இலங்கையில் மீண்டும் மலேரியா பரவி வருவதாக வைத்தியர்கள் எச்சரிக்கின்றனர்.



இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில், நாட்டின் பல பகுதிகளில் 20 மலேரியா நோயாளர்கள் பதிவாகியுள்ளளனர். இவர்களில் மூன்று வெளிநாட்டவர்கள் அடங்குகின்றனர்.

ஏனைய 17 பேர் இலங்கையர்கள் எனவும், அவர்கள் ருவாண்டா, தெற்கு சூடான், உகண்டா, தான்சானியா, சியராலியோன், கினியா ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்தவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனவே மலேரியா பற்றி கூடிய எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டுமென பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மலேரியா நோய்த் தொற்றுள்ள நுளம்பு கடித்த 3 முதல் 10 நாட்களில் மலேரியாவின் அறிகுறிகள் தெரியத் தொடங்கும். ஆரம்பத்தில் அதிக காய்ச்சல் மற்றும் உடல் வலி இருக்கும். இதில் தலைவலி, குளிர், காய்ச்சல், மஞ்சள் காமாலை, வாந்தி, மூட்டு வலி, வலிப்பு, விழித்திரை பாதிப்பு, நடுக்கம், சிறுநீரில் ஹீமோகுளோபின் இருத்தல் போன்ற அறிகுறிகளும் அடங்கும். பெரியவர்களைவிட குழந்தைகளிடையே மலேரியா அறிகுறிகள் உயிருக்கே ஆபத்தானவையாக இருக்கும்.


சிலருக்கு மற்றவர்களை விட மலேரியா அறிகுறிகள் அதிக தீவிரமாக இருக்கும். இதில் பி. ஃபல்சிபுரம் என்பது ஒரு வகை. இது ஒருவர் உயிர் வாழ்வதையே மிகவும் பாதிப்பதாக இருக்கும் அல்லது நரம்பு மண்டலத்தை மிகவும் பாதிக்கும். இதில் சுவாசக் கோளாறுகள், பக்கவாதம் மற்றும் இறப்பு போன்ற சிக்கல்களும் இருக்கின்றன. இத்தகைய அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடி சிகிச்சை பெறுவதே சிறந்தது.

மலேரியா தொடர்பான சந்தேகங்களுக்கும், அவசியமான விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும் 24 மணி நேரமும் 071 284 1767, 0117 626626 என்ற எண்களுக்குத் தொடர்பு கொள்ள முடியுமென தேசிய மலேரியா ஒழிப்பு இயக்கம் பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளது.

## தகவல் களஞ்சியம்

### மனித மூளையில் மைக்ரோ சிப்!

உலக பணக்காரரான எலான் மஸ்க்கின் 'நியூரோலிங்க்' நிறுவனம், மனித மூளையில் "சிப்"பை பொருத்தி, கணனியுடன் இணைத்து, நரம்பியல் தொடர்பான நோய்களுக்கு தொழில்நுட்பம் மூலம் மருத்துவ உதவிகளை வழங்க ஆய்வு நடத்தி வருகிறது.



நரம்பியல் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களும், பக்கவாதம், பார்வை குறைபாடு உள்ளவர்களும் ஸ்மார்ட் போன் கணினி போன்ற ஸ்மார்ட் டிவைஸ்களை எளிதாக பயன்படுத்தும் நோக்கத்துடன் அவர்களது மூளையில் மைக்ரோ சிப்பை பொருத்தும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. இதன் மூலம் கண் பார்வை, பக்கவாதம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சித்து வருகிறது.

இதில் பல கட்ட சோதனையில் குரங்குகளின் மூளையில் 'சிப்'பை பொருத்தி நடத்தப்பட்ட பரிசோதனை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இது தொர்பான ஆய்வறிக்கைகளை அமெரிக்க உணவு மற்றும் மருந்துகள் நிர்வாகத் திடம் நியூராலிங்க் நிறுவனம் சமர்ப்பித்து அடுத்த கட்டமாக மனிதர்களிடம் ஆய்வு மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டது. இதற்கு அமெரிக்க அரசு அனுமதி வழங்கி உள்ளது.

இது தொடர்பாக நியூராலிங்க்' நிறுவனம் தனது டுவிட்டர் பக்கத்தில், "ஒருநாள் எங்கள் தொழில்நுட்பம் ஏராளமானோருக்கு உதவி செய்ய போவதன் முக்கிய முதல்படிதான் இது". என்று குறிப்பிட்டுள்ளது



திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் 46



கே. பத்மானந்தன்

# திருவள்ளுவத்தில் நிதிமுகாமைத்துவம்

நிறுவனமொன்றில் வரவு செலவுத் திட்டமிடல் என்பது நிறுவனத்தின் வருமான வழிகளையும் செலவீன வழிகளையும் அறிக்கைப் படுத்துவதாகும். இவ்வாறு திட்டமிடும்போது நிறுவனத்திற்கு வருமானம் குறைந்தால் காரியமில்லை ஆனால் நிறுவனத்தின் செலவு வருமானத்தை மிஞ்சாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழுமாயின் அதாவது செலவு வருமானத்தை விடக் கூடுமாயின் முகாமைத்துவம் செலவைக் குறைக்க பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நிர்வாகச் செலவுகளைக் குறைத்தல், உற்பத்திச் செலவுகளைக் குறைத்தல், ஆட் குறைப்புச் செய்தல், உற்பத்திப் பொருட்களின் விலைகளை இயலுமான வரையில் வியாபாரத்தை பாதிக்காத வகையில் கூட்டல், போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அரசாங்கமாயின் வரிகளைக் கூட்டலாம், வட்டி வீதங்களை மாற்றி அமைக்கலாம், வங்கிக் கட்டமைப்புகளை மறுசீரமைப்புச் செய்யலாம், நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்யலாம். இக்கருத்துக்களை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக விளக்குகின்றார்.

**"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை**
**போகாறு அகலாக் கடை".(குறள் 478)**

அதாவது பொருள் வரும் வழியாகிய வருவாய் சிறியதாக இருந்தாலும், போகும் வழியாகிய செலவு விரிவுபடாவிட்டால் அதனால் தீங்கு இல்லை. எல்லை கடந்த செலவு இல்லாமல் இருக்குமேயானால் வரவு குறைவாக இருந்தாலும் எந்தக் கேடும் விளைவதில்லை என்கிறார் திருவள்ளுவர். இங்கு ஆகு ஆறு என்று வரவையும் போகு ஆறு என்று செலவையும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். எனவே நிறுவனத்தின் செலவை வரவுக்குள் கொண்டுவந்துவிட்டால் நிறுவனத்தின் வருவாய் சிறிதானாலும் கேடு உண்டாகாது. அதாவது ஒரு நிறுவனத்திற்கு வருகின்ற வருவாயை விடச் செலவு குறைவாக இருக்கும் வரை எந்தக் கேடும் இல்லை.

நிதியின் வரையறை என்பது நிதி நிர்வாகத்துடன் தொடர்புடையது. நிதி வருவாய் என்பது நிறுவனத்தின் வருமானம் மற்றும் அரசாங்கத்தைப் பொறுத்தவரை, அது வரி வசூல் வடிவத்தில் உருவாக்கப்படும் பணம். மொத்த செலவினங்கள் அது உருவாக்கும் வருவாயை விட அதிகமாக இருக்கும்போது நிதிப் பற்றாக்குறை ஏற்படுகிறது. ஒரு சமநிலை வரவுசெலவுத் திட்டம் என்பது வரவு செலவுகளுக்கு சமமாக இருக்கும் வரவுசெலவுத் திட்டத்தைக் குறிக்கிறது. எனவே சமநிலை வரவுசெலவுத் திட்டம் என்பது பற்றாக்குறையாகவோ அல்லது உபரியாகவோ இருக்காது.

இவ்வாறே செலவினங்களில் ஒரு அளவுகோல் அல்லது வரையறைகள் வைத்துக் கொண்டு கட்டுப்படுத்தாவிட்டால் நிறுவனத்தின் நிலைத்த தன்மை உறுதியாகக் கெடும். தமது நிறுவனத்தின் நிதி நிலையை முகாமையாளர் ஒருவர் தொடர்ந்து கண்காணித்துகொண்டு, திட்டமிட்டு வரவுக்குள் செலவு செய்து நிறுவனத்தை இயக்க வேண்டும் என்பதனை திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். பொதுவாக நிறுவனத்தின் வரவு செலவினைத் திட்டமிடும்போது முகாமையாளரிடம் தனது நிறுவனத்தின் நிதி நிலை என்ன என்ற அறிவுடன் அங்கு இருக்கும் செல்வத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்குரிய சேமிப்புச் சிந்தனையும் அதனை அடைவதற்கு உரிய நோக்கமும் இருக்க வேண்டும் என்பது திருவள்ளுவரின் சிந்தனை. இக்கருத்தினை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாக விளக்குகின்றார்.

**"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்" ( குறள் 479)**

அதாவது பொருளின் அளவு அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை (பல வளமும்) இருப்பது போல் தோன்றி இல்லாமல் மறைந்து கெட்டு விடும். எனவே முகாமையாளர் ஒருவர் தன்னுடைய நிறுவனத்தின் நிதி நிலைமையினை நன்கு அறிந்த பின்பே அதேகேற்ப செலவுகளை மேற்கொள்ள வேண்டும். தனது நிறுவனத்தின் வருவாய் என்ன? செலவுநிலை என்ன? என்பதை உணர்ந்து கொள்ளாத முகாமையாளரையே திருவள்ளுவர் இங்கு அளவறிந்து வாழாதான் எனக் குறிப்பிடுகிறார். உண்மையில்



தனது நிறுவனத்தின் வருவாயை இழக்க நேரிடும்போதோ அல்லது அது குறையும் போதோ அதைக் கண்டறிய முடியாத முகாமையாளரும் அளவறியாதவன்தான். நாட்டின் அல்லது நிறுவனத்தின் பொருளாதார நிலை என்பது மாறும் தன்மை கொண்டது என்பதனை முகாமையாளர் விளங்கிக்கொள்ள வேண்டும். இங்கு வருமானத்திற்கு மேல் செலவில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் எனச் சொல்லப்படுகிறது. அதாவது நிறுவனத்தில் உள்ள நிதிநிலை அளவினை அறிந்து அதற்கு ஏற்ப நிறுவனத்தினை முகாமை செய்யாது விடும்போது நிறுவனம் முதலில் வளம் பலவும் அமைந்துள்ளன போலத் தோன்றினாலும் காலப்போக்கில் ஒரு காலத்திலும் மீளவும் மீண்டு எழும்பமுடியாத வாறு அடியோடு அழிந்துவிடும் என்கிறார் திருவள்ளுவர். எனவே நிறுவனமொன்றின் முகாமையாளர் குறிப்பாக பொருளாதார மந்தநிலை நாட்டிலும், நிறுவனத்திலும் நிலவும் போது நிறுவனத்தின் செலவைக் குறைத்து வரவைக் கூட்டும் வழிகளை சிந்தித்து செயல்படுத்த வேண்டும். அப்போதுதான் நிறுவனத்தை இலாபகரமானதாக, வெற்றிகரமானதாக நடத்த முடியும்.

ஒரே வகையான பொருளாதார நிலை எப்போதும் தொடரும் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை ஆதலால் நாட்டின் பொருளாதார நிலை சவாலுக்கு உள்ளாகும்போது அல்லது எதிர்பாராத இடர் நிலை ஏற்படும்போது முற்காப்பு நடவடிக்கை ஏதும் எடுக்காமல் அல்லது இக் காரணங்களால் குறைந்து வரும் தனது நிறுவனத்தின் நிதிநிலையையும் பொருட்படுத்தாமல் வழக்கமான முறையில் நிறுவனத்தின் வரவு செலவுத்திட்டத்தை ஒரு முகாமையாளர் செய்வாராயின் அந்த நிறுவனம் சவாலுக்கு உள்ளாகும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.

பெரிய மாளிகை போன்ற வீட்டில் வாழ்ந்து கொண்டு விலை உயர்ந்த வாகனங்களைப் பயன்படுத்திக்கொண்டு ஆடம்பரமாக வாழுகின்ற ஒருவரை வசதியானவர், வளமானவர் என்றே பார்ப்பவர்கள் நினைப்பார்கள். ஆனால் அவரின் மேலே சொல்லப்பட்ட சொத்துகள் எல்லாம் அவர் வாங்கிய கடனுக்காக வங்கிகளிலோ அல்லது பிறரிடமோ அடைவு வைக்கப்பட்டு இருக்கலாம். அப்படியானவர் சரியான நிதி முகாமைத்துவத்தை முறையாகச் செய்யாவிட்டால் அவர் கடனை மீளச் செலுத்த முடியாமல் தனது அடைவு வைத்த சொத்துக்கள் எல்லாவற்றையும் இழக்கின்ற ஒரு நிலைமை வரலாம். எனவே அவர் நன்றாக இருப்பது போலத் தெரிந்தாலும் ஈற்றில் நட்டமடைந்து விடுவார்.

இத்தகைய நிலமையினையே திருவள்ளுவர் உளபோல இல்லாகி என்று உரைக்கின்றார். எனவே கடன் வாங்காமல் இருந்தாலும் கூட முறையான நிதி முகாமைத்துவம் இல்லாமல் விட்டால் அந்த நிறுவனத்தின் நிதி நிலைமைக்கு ஏற்ப செலவுகள் இருக்குமாயின் அந்த நிறுவனத்தின் செல்வங்கள் எல்லாம் காலப்போக்கில் இல்லாமல் போய்விடும் என்பது திருவள்ளுவரின் வாதமாகும். இதே கருத்தினைத் திருவள்ளுவர் கீழ் வரும் ஈரடியிலும் விளக்குகின்றார்.

**"ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்**
**போற்றி வழங்கும் நெறி" (குறள்477)**

அதாவது தக்க வழியில் பிறர்க்குக் கொடுக்கும் போது அளவறிந்து பொருளைக் கொடுக்க வேண்டும் அதுவே பொருளைப் போற்றி வாழும் வழியாகும் என்கிறார் திருவள்ளுவர். அதாவது நிறுவனம் ஒன்றின் முகாமையாளர் தனது நிறுவனத்தின் வருவாய் அளவு தெரிந்து செலவு செய்யும் போதுதான் அந்த நிறுவனத்தில் இருக்கும் செல்வத்தைக் காத்து வைத்து இருப்பதுடன் தேவைக்கு ஏற்ப செலவுகளைத் தடைப்படாமல் மேற்கொள்தற்கு வழிவகைகளைச் செய்ய முடியும்.

நிறுவனம் ஒன்றின் செல்வம் கூடும்போது அதன் வலிமையையும் கூடும். அந்த வலிமையைத் தக்க வைத்துக்கொள்ளும் வகையில் நிறுவனத்தின் வரவு செலவு அமைய வேண்டும். அதாவது இருக்கும் நிதி நிலைமைக்கு ஏற்ப செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். அப்போதுதான் நிறுவனத்தின் நிதியினைப் பாதுகாத்துக் கொண்டு நிறுவனத்தை நிலை நிறுத்த முடியும். நிறுவனத்தின் மூலதனத்தில் செலவுக்காகக் கை வைக்காத வரையில் நிறுவனத்தின் நிதி நிலைமை வலிமையாக இருக்கும். இவ்வாறு ஒரு முகாமையாளர் நிறுவனத்தில் இருக்கும் நிதி வளத்தினைப் போற்றிப் பாதுகாத்து செலவுகளை முறைப்படுத்தி நிதி முகாமைத்துவம் செய்வதனையே திருவள்ளுவர் போற்றி வழங்கு நெறி என்கிறார். அதாவது போற்றி வழங்கு நெறி என்பது நிறுவனத்தின் செல்வத்தைக் காத்துப் பின்னர் செலவு செய்வது என்பதாகும்.

ஆற்றின் அளவு அறிந்து என்று குறிப்பிடுவதன் மூலம் திருவள்ளுவர் நிறுவனத்தின் வருவாய் அளவறிந்து அல்லது நிறுவனத்தில் உள்ள பொருளின் அளவறிந்து அல்லது நிறுவனத்தின் பொருளாதாரத்தின் அளவை அறிந்து செலவு செய்ய வேண்டும் என்ற உயரிய நிதி முகாமைத்துவச் சிந்தனையைக் கூறுகின்றார். இன்னொரு விதத்தில் சொல்வதாக இருந்தால் ஆற்றின் அளவு என்பது நிறுவனத்தின் வருவாயாகும். அந்த வருவாய்க்கு ஏற்ற விதத்திலேயே நிறுவனத்தின் செலவுகள் இருக்க வேண்டும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும். எனவே முகாமையாளர் ஒருவர் செலவு செய்யும்போது நிறுவனத்தின் வருமானத்தின் அளவை மனத்தில் இருத்திக் கொள்ளவேண்டும். இதனையே நம் முன்னோர்கள் ஆற்றில் போடுவதாயினும் அளந்து போட வேண்டும் என்று சொல்லி உள்ளார்கள்.

*(தொடரும்)*

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 69

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | ✱ | 05 |
| 06 | ✱ | 07 | ✱ | ✱ | 08 |
| ✱ | 09 | 10 | ✱ | 11 | 12 |
| 13 | 14 | ✱ | 15 | 16 | ✱ |
| 17 | ✱ | ✱ | 18 | ✱ | 19 |
| ✱ | 20 | 21 | 22 | | 24 |

பெயர் ..................................................
வகுப்பு ..................................................
தொலைபேசி இல ..................................................
பாடசாலை பெயர் ..................................................
வதிவிட முகவரி ..................................................
..................................................
............................ ..........................................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) ஒளிஉட்புகக்கூடியதும்,நொருங்கும்தன்மையுடையதுமான திண்மப் பொருள். நாம் அன்றாடம் பயன்படுத்துகின்ற ஏராளமான பொருட்கள் இப்பதார்த்தத்தினால் ஆனவை.
(9) பன்னிரண்டு அங்குலங்கள் கொண்ட ஒரு அலகு இது. பிரித்தானிய நீட்டலளவையில் ஒரு அலகு. (தலைகீழான சொல்)
(11) காய் பழுமாகிய பின்னர் இதுதான் பருவம். (தலைகீழான சொல்)
(13) இவர் மிகவும் பயந்த சுபாவம் உள்ளவர். மனத்துணிச்சல் இல்லாத ஒருவரைக் குறிக்கும் பொதுப்பாற் சொல். (தலைகீழான சொல்)
(15) உணவுப் பொருட்களை வெட்டியும், அரைத்தும் உண்பதற்கு உதவும் உடல் அங்கம். (தலைகீழான சொல்)
(20) தரையில் பயணம் செய்யும் வாகனங்களின் நகர்வுக்கு உதவுவது. இது சுழல்வதனாலேயே வாகனம் நகர்கின்றது.

**மேலிருந்து கீழ்**

(1) ஆடுகளில் ஆண் இனத்தைக் குறிக்கும் மரபுச் சொல்.
(3) மூத்த தமையனைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)
(5) வீட்டுக்குள் பிரவேசிப்பதற்கான வழி இதுதான். ஆனால் நாம் வீட்டில் இல்லாத வேளைகளில் இதனைப் பூட்டி வைக்க வேண்டும். (தலைகீழான சொல்)
(9) இலட்சத்தின் நூறு மடங்கு. (தலைகீழான சொல்)
(11) மழை போன்று இதுவும் குளிர் தருவது. வருடத்தின் சில குறிப்பிட்ட காலத்தில் இதன் குளிரை நாம் உணர முடியும். (தலைகீழான சொல்)
(13) நிலம் குளிராகவும், பயிர்கள் செழித்து வளரவும் அவசியம். ஆனால் அளவுடன் இருக்க வேண்டும். அதிகமானால் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டு விடும். (தலைகீழான சொல்)
(15) புவியின் சுமார் முக்காற்பங்கு மேற்பரப்பை ஆக்கிரமித்திருப்பது. (தலைகீழான சொல்)
(19) தன்மை, பன்மை பெயர்ச்சொல்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 68

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தயிர் 04. அணை 07. ஏழை 10. தரு
12. மயில் 19. கைதி 21. மகுடம்

**மேலிருந்து கீழ்**

01. தந்தம் 03. ஏர் 05. அணில் 08. மழை
13. கைகேயி 16. கொக்கு 20, மதி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 67

### பாராட்டு பெறுவோர்

**1. 8. எம். அப்லல் அஹமத்**
தரம் 05, நாங்கல்ல மு.ம.வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**2. நவாப் பாத்திமா நக்ஷா**
தரம் 12, அல் - அமான் மு.ம.கல்லூரி,
கல்லொலுவ, மினுவாங்கொடை.

**3. வண. எம். ஆர்யசாந்த**
தரம் 05, தர்மபால பிரிவென,
பெல்லன, அகலவத்தை.

**4. ஆதிப் முனசிர்**
தரம் 07, அல் - கசாலி மத்திய கல்லூரி,
அட்டுலுகம, பண்டாரகம.

**5. பஹ்மா**
தரம் 09A, பென்ஹில் கல்லூரி,
இல. 12/22A, இளவதுறை, கம்பளை.

**6. ஜலான் நளீப்**
தரம் 05, நாங்கல்லை, மு.வித்தியாலயம்,
இல. 325, நாங்கல்லை, துல்ஹிரிய.


**7. பஹ்மா**
தரம் 09A, பென்ஹில் கல்லூரி,
இல. 12/22A, இளவதுறை, கம்பளை.

**8. தி. சயந்தவி**
தரம் 06, மட்/ வின்சன்ட் ம.உ. தேசிய பாடசாலை,
இல. 07, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

**9. ஹம்தா மர்யம் முஜாஹித்**
தரம் 03, தாருல் உலூர் ம.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரீமலுவ, ரம்புக்கண.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 69
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**பழைமை: பழைமை எனப்படுவ தியாதெனின் யாதும் கிழமையைக் கீழ்ந்திடா நட்பு**

*தெளிவுரை :*
*பழைமை என்று சொல்லப்படுவது எது என்று வினாவினால் அது பழகியவர் உரிமைப் பற்றிச் செய்யும் செயலைக் கீழ்ப்படுத்தாமல் ஏற்கும் நட்பாகும்.*

## மர்மங்களை அடக்கி வைத்துள்ள

# லண்டன் கோபுரம்



லண்டன் கோபுரம் என்றதும், ஈபிள் கோபுரம் போல இருக்கும் என நினைத்து விடாதீர்கள்! கோட்டை, அரண்மனை, சிறை மூன்றும் ஒரே இடத்தில் அமைந்துள்ள இடத்துக்கு தான் லண்டன் கோபுரம் என்று பெயர்.

பிரான்ஸ் நாட்டு முதலாம் வில்லியம் (William the Conqueror) 1070களில் இங்கிலாந்தின் மீது படையெடுத்து வெற்றிகொண்டார். தனக்கு எதிராக கலவரங்கள் வெடிக்கலாம் என பதறி, தன் அதிகாரத்தை பாதுகாக்கவும் பிற அரசுகளுக்கு அறிவிக்கவும், லண்டன் மக்களின் இதயத்தில் இடம் பிடிக்கவும் கற்களால் மிகப்பெரிய கோட்டையை கட்டினார். 20 ஆண்டுகள் இதற்கான வேலை நடந்தது. அப்போது கட்டப்பட்ட செயிண்ட் ஜான் கோவிலில் இப்போதும் வழிபாடுகள் நடக்கின்றன.

அரசர்கள் மூன்றாம் ஹென்றி (121672) மற்றும் முதலாம் எட்வர்ட் (12721307) சிறு சிறு கோபுரங்களுடன் கோட்டைச் சுவர்களை பெரிதாக்கினர். குறிப்பாக, முதலாம் எட்வர்ட் காலத்தில், தேம்ஸ் நதி நீரில் மர அடுக்குகளையும் மண்ணையும் போட்டு அடித்தளம் அமைத்ததை, 1959 இல் தாமஸ் கோபுரத்துக்கு வெளியில் நடந்த அகழாய்வு நிரூபிக்கிறது.



லண்டன் கோபுரத்தில் அரசர்களும் அரசிகளும் ஏகபோக வாழ்வு வாழ்ந்தனர்; ஆட்சி அதிகாரத்தால் நாட்டிலும், உலகிலும் முத்திரை பதித்தனர். அதேவேளையில், ரோஸ் போரின் போது (The Wars of Roses) ஆறாம் ஹென்றி இங்குதான் 1471 இல் கொலை செய்யப்பட்டார்.

நான்காம் எட்வர்டின் குழந்தைகளான இளவரசர்கள் இருவரும் இங்குதான் காணாமல் போயினர். 1674இல் கிடைத்த இரண்டு எலும்பு கூடுகளை 1933இல் மறுபரிசோதனை செய்தபோது அவை 12 மற்றும் 10 வயது சிறுவர்களின் எலும்புக்கூடுகள் என கண்டறியப்பட்டது. இளவரசர்கள் காணாமல் போனது அந்த வயதில்தான்.

தன் மனைவி ஆன் பொலீன் முடிசூட்டு விழாவுக்கென இங்கே தனி அறை தயார் செய்தார் எட்டாம் ஹென்றி. விருந்து கொண்டாட்டம் முடிந்து வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனைக்கு வெற்றிப் பவனி சென்றார் ஆன். 3 ஆண்டுகளுக்குப் பிறகு, விபசாரம் மற்றும் தேச துரோக குற்றச்சாட்டின் பேரில் இதே கோபுரத்துக்கு அழைத்து வரப்பட்டார். வாளுக்கு இரையானார்.

நதி வழியாக கோபுரத்துக்குச் செல்லும் நுழைவாயில், துரோகியின் வாயில் எழுதப்பட்டிருந்தது. இந்த நதி வாயில் வழியாக முக்கிய கைதிகள் கோபுரத்துக்கு உள்ளேயும், நதி வழியாக வெஸ்ட்மின்ஸ்டர் நீதிமன்றத்துக்கு விசாரணைக்காகவும் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள்.

'சித்திரவதை கோபுரம்' இங்கிலாந்தின் கொடூர முகத்தை நாம் அறியக் கூடாது என்பதற்காக நுழைவாயிலிலேயே, 'இங்கிலாந்தில், சித்திரவதை செய்வதற்கு சட்ட அனுமதி கிடையாது. புள்ளிவிவரங்கள் முழுமையாக இல்லாவிட்டாலும், 81 கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டதற்கான தரவுகளே கிடைத்துள்ளன. அதில், 48 இந்த கோபுரத்தில் நடந்தது. ஆவணப்படுத்தப்பட்ட இந்த வழக்குகள், 1540 -1640 காலகட்டத்தில் நிகழ்ந்ததாகும். சித்திரவதை, அதிகாரப்பூர்வமாக இங்கிலாந்து சட்டத்தின் ஒரு பகுதியாக இருந்ததேயில்லை. பெரும்பாலும், கொலை, கொள்ளை உள்ளிட்ட கடுமையான குற்றங்களை விசாரிக்கும்போதுதான் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர். குறிப்பாக, 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் 17ஆம் நூற்றாண்டில் அரசியல் கைதிகள் மற்றும் தேச துரோக குற்றவாளிகள் மீது சித்திரவதை நிகழ்த்தப்பட்டது, என எழுதப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் பல்வேறு அரசர்களும் பயன்படுத்திய ஆயுதங்கள், கவசங்கள், குதிரைகளின் மாதிரிகள் காலவரிசைப்படி பிரமாண்டமாக காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. 1660 முதல், அரசர்களும் அரசிகளும் சூடிய அரச கிரீடங்களும், கோஹினூர் வைரமும் இங்குதான் உள்ளது. இருள் சூழ்ந்த அறையில், கிரீடங்களில் மட்டும் வெளிச்சம் படுகிறது.

## அறிந்து கொள்வோம்

* இலங்கையின் தேசிய பறவை எது? தீக் கோழி
* இலங்கையில் முதன் முதலில் எப்போது முத்திரை வெளியிடப்பட்டது? 1857 ஏப்ரல் 01ஆம் திகதி
* வளர்ந்த ஒரு மனிதனுக்கு எத்தனை பற்கள் இருக்க வேண்டும்? 32 பற்கள்
* சோவியத் ரஷ்யாவின் தந்தை என்று கருதப்படுபவர் யார்? வி.ஐ. லெனின்
* நெதர்லாந்தின் தலை நகரம்? ஆம்ஸ்டர்டம்
* எவரெஸ்ட் மலையில் கால் பதித்த முதல் பெண்மணி யார்? ஜன்கோ டுபெய்

**கே.எல். ஹில்மி...**
தேசிய பாடசாலை
சம்மாந்துறை 10

## இவ்வார மழலை



**சாத்விக்**

தயாபரன்/ துர்கா
முல்லேரியா






**நி. ஷைனி,**
தரம் 02B, கொ/ சைவமங்கையர் வித்தியாலயம்,
கொழும்பு 06.



**ப. யதுசிகாமதுஷானி**
தரம் 4, யாழ்/நல்லூர் சென் பேனடிற் (றோ.க) வித்தியாலயம்.



1930இல் எடுக்கப்பட்ட, பயணிகள் விமானத்தின் உட்புற தோற்றத்தின் புகைப்படம்.



## சிட்டெறும்புக் கூட்டம் நாம்

சிட் டெறும்புக் கூட்டம் நாம்
படை யெடுத்து வருகிறோம்
சுற்றி மொய்ப்போம் நிலத்தினில்
உணவு வளம் சேர்க்கவே

சிவப்பு நிறக் கோலத்தில்
அழகைக் காட்டி மகிழ்வுறும்
சின்னஞ்சிறிய பூச்சியாய்
அணி திரண்டு வருகிறோம்.

பூத்துக் குலுங்கும் பூவிலும்
சுவைத்துத் தேனைப் பருகுவோம்
வாடி நிற்கும் மரத்திலும்
ஊர்ந்து உயரச் செல்லுவோம்.

ஊசி போல ஓட்டைகள்
எங்கள் வீடு வாசல்கள்
மழைகள் பொழியும் முன்னரே
ஓடி ஒதுங்கிக் கொள்ளுவோம்.


சின்னப் பிள்ளை விரும்பியே
உண்ணும் சீனிப் பாவையும்
சிறுக சிறுகச் சேர்த்து நாம்
மாடி வீடு கட்டுவோம்.

வீட்டுக்குள் கூடு கட்டியே
வீட்டார்கள் கூடி மகிழவே
அன்பு பொங்க யாவரும்
ஓர் அணியில் கூடுவோம்.

**இக்பால் அலி...**

## கண்டுபிடிப்பாளர்கள்

# கணினியின் தந்தை சார்லஸ் பேபேஜ்





கணினியின் தந்தை என்று போற்றப்படும், உலகப் புகழ்பெற்ற பிரிட்டிஷ் கண்டுபிடிப்பாளர் சார்லஸ் பேபேஜ் (Charles Babbage) 1791ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி லண்டனில் பிறந்தவர். பொற்கொல்லராக இருந்த தந்தை, பின்னர் வியாபாரி, வங்கியாளராக உயர்ந்தவர். சிறுவயதில் மோசமான உடல்நிலை காரணமாக சார்லஸால் பள்ளிக்குப் போக முடியவில்லை. வீட்டுக்கே ஆசிரியர்களை வரவழைத்து கல்வி கற்பித்தனர்.

ஹோம்வுட் எகடமியில் சிறிது காலம் பயின்றார். அங்கு நூலகத்தில் இருந்த நூல்கள், இவரிடம் கணித ஆர்வத்தை தூண்டின. வானியல் ஆராய்ச்சிகளில் ஆர்வம் கொண்ட பள்ளி ஆசிரியரால் இவருக்கு அறிவியலிலும் ஆர்வம் அதிகரித்தது.

அல்ஜீப்ராவை ஆர்வத்துடன் கற்றார். 1810இல் கேம்ப்ரிட்ஜ் ட்ரினிட்டி கல்லூரியில் சேர்ந்தார். ஏற்கெனவே பல மேதைகளின் நூல்களைப் பயின்று சுயமாக கணிதத்தில் தேர்ச்சி பெற்றிருந்த இவருக்கு அங்கு கற்பிக்கப்படும் கணிதம் ஏமாற்றம் அளித்தது.

நண்பர்கள் ஜே.ஹெர்ஷல், ஜி.பீகாக் உள்ளிட்ட பலருடன் இணைந்து 'அனலிட்டிகல் சொசைட்டி' என்ற அமைப்பை 1812இல் தொடங்கினார். கேம்ப்ரிட்ஜில் பாரம்பரிய கற்பித்தல் முறையை மாற்றி, நவீன கணித முறைகளை அறிமுகம் செய்வதுதான் இதன் நோக்கம். இந்த அமைப்பு விரைவில் பிரபலமடைந்தது.

சிறந்த கணித வல்லுநராக உயர்ந்ததால், தேர்வு இல்லாமலேயே 1814ல் இவருக்குப் பட்டம் வழங்கப்பட்டது. கேம்ப்ரிட்ஜில் பேராசிரியர் பதவிக்கு 3 முறை விண்ணப்பித்தும் நிராகரிக்கப்பட்டார். 1827இல் தந்தையின் சொத்துகள் இவருக்கு வந்தன. அதன் பின்னர் ஐரோப்பா முழுவதும் பயணம் மேற்கொண்டார். அதுவரை மறுக்கப்பட்ட பேராசிரியர் பணி தேடி வந்தது.

வானியலிலும் சிறந்து விளங்கினார். ரோயல் கல்வி நிறுவனத்தில் வானியல் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். ரோயல் சொசைட்டியின் ஃபெல்லோவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இங்கிலாந்தின் முன்னணி கணித வல்லுநர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். உலகப் புகழ்பெற்ற வானியலாளர் ஹெர்சலுடன் இணைந்து மின்காந்தவியல் குறித்து ஆராய்ந்தார்.

1820ல் வானியல் கழகம் தொடங்கப்பட உறுதுணையாக இருந்தார். கணிதம், வானியல் தொடர்பான கணிப்புகளை மேற்கொள்ள, புரோகிராம் செய்யக்கூடிய இயந்திரத்தை உருவாக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். இறுதியாக 1835இல் இப்படிப்பட்ட ஒரு சாதனத்தை (அனலிட்டிகல் இன்ஜின்) உருவாக்கினார்.

இதில் மில், ஸ்டோர் என்ற 2 பகுதிகள் இருந்தன. மில் என்பது தற்போதைய கணினிகளின் 'சிபியூ'வுக்கு இணையானதாகவும், 'ஸ்டோர்' தற்போதைய கணினியின் மெமரி பகுதியாகவும் செயல்பட்டன. இதுவே இன்றைய கணினியின் முன்னோடியாக கருதப்படுகிறது. வானியல் கணிப்புகளுக்கும் இது பயன்படுத்தப்பட்டது.

இதற்காக இவருக்கு வானியல் கழகத்தின் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது. அனலிட்டிகல் இன்ஜின் அடிப்படையில் 'செகண்ட் டிஃபரென்ஸ்' என்ற இன்ஜினைக் கண்டறிந்தார். மேலும் பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு, ரயில் பாதையை அளவிடும் கருவி, சீரான அஞ்சல் கட்டண முறைக்கான கருவி, கிரீன்விச் ரேகைக் குறியீடு, சூரிய ஒளியைக் கொண்டு கண்களைச் சோதிக்கும் கருவி உள்ளிட்ட இயந்திரங்களைக் கண்டறிந்தார்.

பல நூல்களை எழுதினார். இவரைப் பற்றி நூல்கள், நாவல்களும் எழுதப்பட்டன. திரைப்படங்கள், ஆவணப் படங்களும் தயாரிக்கப்பட்டன. கணிதம், கண்டுபிடிப்பு, பகுப்பாய்வு, தத்துவம் இயந்திரப் பொறியியல் எனப் பல்வேறு களங்களில் முத்திரை பதித்த சார்லஸ் பேபேஜ் தனது 80 ஆவது வயதில் (1871) காலமானார்.

# மஞ்சரி விளையாட்டு

## தடைகள் நீங்குவது





# எப்போது?

**இலங்கை கால்பந்து மற்றும் ரக்பி மீதான சர்வதேச தடை எந்த தலையீடுகளும் இன்றி தொடர்கிறது. இந்தியாவில் நடைபெறும் தெற்காசிய கால்பந்து சம்பியன்சிப் போட்டியில் இலங்கை இல்லாதது பற்றி யாரும் பெரிதாக கரிசனை காட்டுவதாக தெரியவில்லை.**

ஐந்து மாதங்களுக்கு முன் சர்வதேச கால்பந்து சம்மேளனம் இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு விதித்த தடை தொடக்கம் அந்த நிலையில் இருந்து ஒரு படி கூட நகராமல் இலங்கை கால்பந்து ஸ்தம்பித்துவிட்டது. இலங்கை ரக்பியின் கதையும் இதே தான்.

இலங்கை கால்பந்து மற்றும் ரக்பி நிர்வாகங்கள் ஒருபக்கம் கயிறிழுக்க விளையாட்டுத் துறை அமைச்சு மற்றும் அது சார்ந்த நிர்வாகங்கள் மறுபக்கம் கயிறிழுக்கின்றன.

விளையாட்டுத் துறை அமைச்சை பொறுத்தவரை அது தற்போது சர்வதேச கால்பந்து சம்மேளனம் மற்றும் உலக ரக்பி அமைப்புடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்த முயல்கிறது. இந்த உலக அமைப்புகளுக்கு தேசிய சம்மேளனங்கள் பொய் தகவல்களை கூறி வருவதே இந்தத் தடை நீடிப்பதற்குக் காரணம் என்பது விளையாட்டு அமைச்சின் நிலைப்பாடு.

“கால்பந்து மற்றும் ரக்பியின் உள்நாட்டு நிர்வாகங்களே உலக அமைப்புகளிடம் அரசியல் தலையீடு இருப்பதாக பொய்யான தகவல்களை கூறி வருகின்றன. இப்போது நாம் உலக அமைப்புகளுடன் தொடர்பை ஏற்படுத்தி உண்மையான




நிலைமை குறித்து அந்த அமைப்புகளை அறிவுறுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்” என்று விளையாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய விளையாட்டு சபையின் தலைவர் அர்ஜுன ரணதுங்க அண்மையில் நடந்த ஊடக சந்திப்பு ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இதனாலேயே விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க கடந்த வாரம் சுவிட்சர்லாந்தின் சூரிச் நகருக்குச் சென்றிருந்தார். அங்கே தான் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் அதாவது பிஃபா தலைமையகம் இருக்கிறது.

அங்கு அவர் பிஃபா அதிகாரிகளை சந்தித்து தடை பற்றி பேசி இருப்பதாக இன்னும் உறுதி செய்யப்படாத செய்தி வெளியாகி இருக்கிறது. இதன்போது அவர் இலங்கை கால்பந்து சம்மேளனம் தொடர்பில் முன்னாள் உயர் நீதி




மன்ற நீதியரசர் குசலா சரோஜினி தலைமையில் வெளியான அறிக்கையையும் பிஃபாவிடம் கையளிக்கவிருந்ததாக கூறப்பட்டது.

இந்த அறிக்கையில் இலங்கை கால்பந்தில் நடந்த ஊழல்கள் பற்றிய தகவல்கள் விரவிக் கிடக்கின்றன.

கடந்த ஜனவரியில் நடந்த இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தேர்தலில் அப்போதைய தலைவராக இருந்த உமர் ஜஸ்வர் போட்டியிடுவதை அமைச்சர் தடுத்ததே தற்போதைய பிரச்சினை பூதாகாரமாக வெடிக்கக் காரணமானது. இதனைத் தொடர்ந்தே இலங்கை கால்பந்து மீதான அரசியல் தலையீடு பற்றிக் கூறி பிஃபா தடை விதித்தது.

இலங்கையால் இப்போது சர்வதேச போட்டிகளில் பங்கேற்க முடியவில்லை, இலங்கை கால்பந்துக்கு உயிரூட்டும் பிஃபா நிதிகள் கிடைப்பதில்லை என்பது தெரிந்ததே. என்றாலும் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு எந்தத் தரப்பு ஆரோக்கியமான நகர்வொன்றை இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை.

இலங்கை ரக்பியின் கதையிலும் பெரிதாக மாற்றமில்லை. அடிப்படையில் அரசியல் தலையீட்டை கூறியே இலங்கை ரக்பி மீது உலக ரக்பி அமைப்பு கடந்த மே நடுப் பகுதியில் தடை விதித்தது.

என்றாலும் கால்பந்தைப் போலன்றி இலங்கை ரக்பி உள்நாட்டில் அது தொடர்ந்து இயங்க முடிந்திருக்கிறது. அது தேசிய ஒலிம்பிக் குழு கொடியின் கீழ் ஏசியன் 7 தொடரை பிரதிநிதித்துவப்படுத்தியது. எப்படி இருந்தபோதும் இந்தத் தடை ரக்பி விளையாட்டை பாதித்திருப்பதை மறுத்துவிட முடியாது.

இந்த நிலையில் உலக ரக்பி அமைப்பின் தலைமை சர்வதேச உறவுகள் மற்றும் பங்கேற்பு அதிகாரியான டேவிட் கரிகி கடந்த ஜூன் 21 ஆம் திகதி இலங்கை ரக்பியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹசன் சிங்ஹவன்சவுக்கு கடிதம் ஒன்றை எழுதி இருந்தார்.

“ஜூலை ஆரம்பத்தில் நாம் இலங்கைக்கு வரவுள்ளோம் என்பதை மகிச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். ஜூலை 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை நாம் அங்கு வந்தடைவோம். ஜூலை 5 பி.ப 2மணிக்கு இலங்கை ரக்பி சபையை சந்திக்க நாம் விரும்புகிறோம். இலங்கை ரக்பியின் நலனுக்காக உங்களுடனும் மற்ற பங்குதாரர்களுடனும் பணியாற்ற இலங்கை ரக்பி எதிர்பார்க்கிறது” என்று அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

உலக ரக்பி அதிகாரிகள் இலங்கை வருவதை விளையாட்டுத் துறை அமைச்சு உறுதி செய்திருக்கிறது. இதன்போது தேசிய ஒலிம்பிக் குழு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு அதிகாரிகளையும் உலக ரக்பி பிரதிநிதிகள் சந்திக்கவுள்ளனர். இந்த சந்திப்புகள் தடைக்கு தீர்வாக அமையுமா? என்பதை உறுதியாகக் கூற முடியாது.

ஏனென்றால் தடைக்கு காரணமான உள்நாட்டு தரப்புகள் இடையே இன்னும் சுமூகமான உறவு அல்லது தீர்வு ஒன்று கிட்டதா நிலையில் உலக ரக்பி பிரதிநிதிகளை சந்திப்பதால் திடுதிடுப்பென்று பிரச்சினைகள் தீரும் என்று எதிர்பார்க்க முடியாது.

கடந்த ஏப்ரல் 1 ஆம் திகதி விளையாட்டு அமைச்சு வெளியிட்ட வர்த்தமானியில், விளையாட்டு சட்டத்தின் கீழ் இலங்கை ரக்பியின் பதிவை இடைநிறுத்துவதாக அறிவித்தது. இதற்கு எதிராக இலங்கை ரக்பி நீதிமன்றம் சென்றது. இந்த வர்த்தமானியை வாபஸ் பெறுவதாக அமைச்சு அண்மையில் உறுதி அளித்திருந்தது.

என்றாலும் விளையாட்டுத் துறை அமைச்சு வெளியிட்ட மற்றொரு வர்த்தமானியில், இலங்கை ரக்பியை இடைநிறுத்தியதோடு இலங்கை ரக்பிக்கு இடைக்கால குழு ஒன்றை அமைத்தது. இதற்கு எதிராக இலங்கை ரக்பி மேன்முறையீட்டு நீதிமன்றம் சென்றது. இது தொடர்பிலான தீர்ப்பு எதிர்வரும் ஜூலை 14 ஆம் திகதி வழங்கப்படவிருக்கிறது.

இதேநேரம் தேசிய ஒலிம்பிக் குழு கடந்த மே 3 ஆம் திகதி உலக ரக்பி தலைவருக்கு எழுதிய கடிதத்தில், தேசிய விளையாட்டு சம்மேளனம் ஒன்றின் முறையாக தேர்வு செய்யப்பட்ட குழுவை மாத்திரம் அங்கீகரிக்கும்படி அறிவுறுத்தியது. இதன்படி இலங்கை ரக்பியின் தேர்தல் மூலம் தேர்வு செய்யப்பட்ட தலைவர் ரிஸ்லி இல்யாஸை ஏற்கும்படியும் விளையாட்டு சட்டத்தின் அடிப்படையில் விளையாட்டு அமைச்சினால் நியமிக்கப்பட்ட இடைக்கால குழுவையோ அல்லது வேறு எந்த இடைக்கால ஏற்பாடுகளையும் அங்கீகரிக்க வேண்டாம் என்று அந்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

அதாவது உலக ரக்பியால் அங்கீகரிக்கப்பட்ட யாப்புக்கு அமைய விளையாட்டு சம்மேளனத்தின் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவுக்கு மாத்திரமே தேசிய ஒலிம்பிக் குழு ஒப்புதல் அளித்திருக்கிறது.

இந்த குழப்பத்திற்கு மத்தியிலேயே கடந்த மே 17 ஆம் திகதி உலக ரக்பியின் அதிரடி அறிவிப்பு வெளியானது. மே 11 ஆம் திகதி இடம்பெற்ற சபை கூட்டத்தில் இலங்கை ரக்பி தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதாகவும், விளையாட்டு அமைச்சு நியமித்த இடைக்காலக் குழு உலக ரக்பி யாப்புக்கு முரணானது என்றும் இலங்கை ரக்பியை அது அறிவுறுத்தியது.

அதன்படியே அரசியல் தலையீட்டுடன் தொடர்புபட்ட ரக்பி யாப்பை மீறியதாகக் கூறி இலங்கை ரக்பிக்கு உலக ரக்பி அமைப்பு தடையை அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து கடந்த மே 23 ஆம் திகதி விளையாட்டு அமைச்சர் உலக ரக்பிக்கு கடிதம் ஒன்றை எழுதியதோடு அதற்கு உலக ரக்பி மே 29 ஆம் திகதி பதில் கடிதம் அனுப்பியது. அதில் அமைச்சருடன் இணைந்து பணியாற்ற உலக ரக்பி எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டிருந்தது.

இதில் இலங்கை ரக்பி நிர்வாகம் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் பற்றி கவலையை வெளியிட்ட உலக ரக்பி அமைப்பு, இந்த விளையாட்டை பாதுகாப்பதற்கு பிரச்சினைகளை தீர்க்க வேண்டி உள்ளது என்றும் வலியுறுத்தியது.

எவ்வாறாயினும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உலக அமைப்பை சந்திப்பதற்கு முன் உள்ளூர் மட்டத்தில் தீர்வுகளை எட்டுவது அவசியமாக இருக்கிறது. இது ரக்பிக்கு மாத்திரமல்ல கால்பந்துக்கும் பொருந்தும்.

**எஸ். பிர்தௌஸ்**

## உலக கிண்ணத்திற்கு இன்னும் ஒரு வெற்றி தேவை



இலங்கை அணி உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறுவதற்கு இன்னும் ஒரே ஒரு வெற்றி தான் தேவையாக இருக்கிறது. இந்த சூழலில் உலகக் கிண்ண தகுதிகாண் தொடரின் இரண்டாவது சுப்பர் சிக்ஸ் போட்டியில் இலங்கை அணி இன்று (02) சிம்பாப்வேயை எதிர்கொள்ளவுள்ளது.

போட்டியை நடத்தும் சிம்பாப்வேயுக்கு எதிராக புலவாயோவில் நடைபெறும் இந்தப் போட்டி இலங்கையை போன்றே சிம்பாப்வேயுக்கும் முக்கியமானது. இதுவரை எந்தப் போட்டியிலும் தோல்வியுறாத அணிகளாகவே இன்றைய போட்டியில் இரு அணிகளும் களமிறங்குகின்றன.

இதன்படி சுப்பர் சிக்ஸ் சுற்றில் தலா ஆறு புள்ளிகளை பெற்றிருக்கும் இரு அணிகளில் இன்றைய போட்டியில் வெற்றியீட்டும் அணி உலகக் கிண்ண தகுதியை உறுதி செய்துவிடும்.

சிம்பாப்வே அணி தனது சொந்த நாட்டில் ஆடும் சாதகமான சூழலுடன் இந்தத் தொடரில் சிறப்பாக செயற்பட்டு வருகிறது. தொடர் முழுவதும் தடுமாற்றம் இன்றி வெற்றிகளை பெற்று வருகிறது.

சீன் வில்லியம்சன் இந்தத் தொடரில் அதிக ஓட்டங்களை பெற்றவராக அபாரமாக துடுப்பெடுத்தாடி வருகிறார். பந்துவீச்சில் இடது கை வேகப் பந்து வீச்சாளர் ரிச்சர்ட் நிகராவா எதிரணி துடுப்பாட்ட வீரர்களுக்கு சவாலாக உள்ளார். இவர்களை சுற்றி ஒட்டுமொத்த சிம்பாப்வே அணியும் உத்வேகத்தோடு ஆடி வருகிறது.

மறுபுறம் இலங்கை அணி ஆரம்பத்தில் வலுவான துடுப்பாட்டம், பந்துவீச்சுடன் ஸ்திரமாக ஆடியபோதும் கடந்த இரண்டு போட்டிகளிலும் சற்றுத் தடுமாற்றத்துடனேயே வெற்றிகளை பெற்றது.

அதிலும், நெதர்லாந்துக்கு எதிரான தனது முதல் சுப்பர் சிக்ஸ் போட்டியில் இலங்கை அணியின் துடுப்பாட்டம் தடுமாற்றம் கண்டதோடு கடைசியில் இறுதி வரை போராடியே வெற்றியை உறுதி செய்ய முடிந்தது.

முன்னதாக ஸ்கொட்லாந்துக்கு எதிரான போட்டியிலும் இலங்கை அணி 245 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. நெதர்லாந்துக்கு எதிரான துடுப்பாட்டத்தில் ஆரம்பத்தில் இலங்கை அணி அதிரடியாக ஆட முயன்று அநாவசியமாகவே விக்கெட்டுகளை பறிகொடுத்தது.



களத்தில் இருந்த துடுப்பாட்ட வீரர்களும் பந்துகளுக்கு ஒன்று, இரண்டு ஓட்டங்கள் என அதிகரிப்பதற்கு தவறிய நிலையில் ஓட்ட வேகத்தை அதிகரிக்க வேகமாக துடுப்பெடுத்தாட முயன்று விக்கெட்டுகளை தாரைவார்த்தனர்.

குறிப்பாக பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட குசல் மெண்டிஸ் தொடர்ந்து சோபிக்கத் தவறி வருகிறார். ஆரம்ப வீரர் பத்தும் நிசங்க ஸ்திரமான ஆட்டத்தை வெளிப்படுத்த தவறி வருகிறார். அணித் தலைவர் தசுன் ஷானக்கவும் ஓட்டங்கள் குவிப்பதில்லை.

நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் தனஞ்சய டி சில்வாவின் ஆட்டத்தை தவிர்த்து இலங்கை அணியின் துடுப்பாட்டம் முழுமையாக தோல்வி கண்டிருக்கிறது.

எனினும் பந்துவீச்சின் உதவியாலேயே இலங்கை அணி கடந்த இரண்டு போட்டிகளிலும் வெற்றியீட்டியது. குறிப்பாக சுழற்பந்து வீச்சாளர்களான வனிந்து ஹசரங்க மற்றும் மஹீஷ் தீக்ஷன இன்றியமையாதவர்களாக உள்ளனர்.

முன்னணி வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர உபாதையால் அணியில் இருந்து வெளியேறியபோதும் அது அணிக்கு இதுவரை பெரிய தாக்கத்தை செலுத்தவில்லை. அவருக்கு பதில் அணியில் சேர்க்கப்பட்டிருக்கும் டில்ஷான் மதுசங்க நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் ஒரு விக்கெட்டை வீழ்த்தியதோடு மற்ற வேகப்பந்து வீச்சாளரான லஹிரு குமாரவும் போதுமான அளவு திறமையை வெளிப்படுத்துகிறார்.

இதுவரை நடந்த உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில் இலங்கை அணி எதிரணிகளை 200க்கும் குறைவான ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்தி இருப்பது நல்ல செய்தியாகும்.

இன்றைய போட்டியுடன் இலங்கை அணிக்கு சுப்பர் சிக்ஸ் சுற்றில் இன்னும் இரண்டு போட்டிகள் எஞ்சி இருக்கின்றன. இந்தத் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறி உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற இந்த இரண்டு போட்டிகளில் ஒன்றில் வெற்றி பெற்றால் போதுமானது.

என்றாலும் அந்த இரண்டு போட்டிகளும் இதுவரை ஆடிய அணிகளில் வலுவான அணிகளான சிம்பாப்வே மற்றும் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராகவே உள்ளது. எனவே கடந்த போட்டிகளில் வெளிப்படுத்திய சிறிய தவறுகள் கூட இந்தப் போட்டியில் பெரிதாகத் தெரியும் அச்சுறுத்தல் இருக்கிறது.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூலை மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
# செந்தூரம்

2023 ஜூலை 2 ஞாயிற்றுக்கிழமை




இன்னிசை மாலை நிகழ்வு 05



சங்கவி பிலிம்ஸின் முப்பெரும் விழா 07




சர்வதேச ராஜதந்திரிகள் மாநாடு 11



# தேனீக்கள் இல்லையேல் மனிதன் இல்லை



உலகில் இருந்து தேனீக்கள் முற்றாக அழிந்து விட்டால் அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் அனைத்து மனிதர்களும் இறந்து விடுவார்கள். இது என்ன மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கு முடிச்சுப் போடுவது போல் இருக்கிறதே என்று தோன்றலாம். ஆனால் இதனை கூறியவர் சாதாரணப்பட்டவர் அல்ல, ஆல்பட் ஐன்ஸ்டீன். ஆனால் இயற்கையை புரிந்து கொண்ட இதன் உண்மையை தெரிந்துகொள்ள ஐன்ஸ்டீன் வந்து பாடம் நடத்த வேண்டிய தேவை இருக்காது.

தேனீக்களானது உலகின் 90 வீதமான உணவுத் தேவைக்கான சுமார் 100 இல் 70 பயிரினங்களின் மகரந்த சேர்க்கையில் ஈடுபடுகின்றன. அதாவது ஆண்டுக்கு 30 பில்லியன் டொலர் பயிர்ச்செய்கைக்கு காரணமே தேனீக்கள்தான். தேனீக்கள் காணாமல்போனால் அந்த தவாரங்களை சாப்பிடும் விலங்குகளுக்கான உணவு நின்று உணவுச் சங்கிலியே ஸ்தம்பித்துவிடும். அது உலகின் 8 பில்லியன் மனிதர்களுக்கு தேவையான உணவுகளை பெற முடியாமல்போய்விடும். கடைகளில் மரக்கறிகள் மற்றும் பழங்கள் பாதியாக குறையும்.

இப்போதே பயமுறுத்தும் அளவுக்கு தேனீக்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. பசும்புல்வெளிகளின் மலர் தோட்டங்கள் காணாமல்போய் வருகின்றன, காலநிலை மாற்றம், பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்துவது தேனீக்கள் அழிவதற்கு காரணமாகி வருகிறது.



## குறும்புக்கார பிரதமர்

ரொபர்ட் முல்டூன் நியூசிலாந்தில் 1975 தொடக்கம் 1984 வரை 31 ஆவது பிரதமராக இருந்தவர். சற்றுக் குறும்புக்காரரும் கூட. பாராளுமன்றத்தில் 4 ஆசனங்களால் தான் அவரது அரசுக்கு பெரும்பான்மை இருந்தது. நாட்டின் பொருளாதாரமும் பின்னடைவை சந்தித்திருந்தது. தனது சொந்த கட்சியின் பின்வரிசை எம்.பிக்களிடம் அவருக்கு எதிரான முணுமுணுப்புகள் கேட்டன. கோபத்தில் இருந்த முல்டூன் ஒருநாள் குடிபோதையில் இருந்தபோது அதிர்ச்சி தரும் முடிவை எடுத்தார். திடீரென்று பொதுத் தேர்தலை அறிவித்தார். கடைசியில் தேர்தலில் தோற்று வீட்டுக்கு போக வேண்டியதாயிற்று.

# உலகப் பணக்காரரின் எளிய வீடு

அமெரிக்க வர்த்தகரான வொர்ரன் பப்பட் இன்றைய திகதியில் உலகின் மிகப்பெரிய செல்வந்தர்களில் ஒருவர். பெர்கஷர் ஹதவே நிறுவனத்தின் நிறுவுனரும் நிறைவேற்று அதிகாரியுமான 87 வயது பப்பட்டின் சொத்து மாதிப்பு 84 பில்லியன் டொலர்கள். ஆனால் அவரது வீட்டை பார்த்தால் இவரா உலகப் பணக்காரர் என்று நினைக்கத் தோன்றும். நெப்ரஸ்கா மாநிலத்தில் ஓமஹா நகரின் அமைதியான இடத்தில் அந்த வீடு இருக்கிறது. பெரிய ஆடம்பர வீடு அல்ல, 1958ஆம் ஆண்டு அவர் 31,500 டொலருக்கு அந்த வீட்டை வாங்கினார். இன்றைய மதிப்பு 652,619 டொலர்களை தாண்டாது. அதாவது பப்பட்டின் மொத்த சொத்து மதிப்பில் அவர் வசிக்கும் விட்டின் மதிப்பு .001 சதவீதம் மாத்திரமே.



ஐந்து படுக்கை அறைகள், இரண்டு குளியலறைகள், வீட்டுக்கு முன்னால் ஒரு தோட்டம் அவ்வளவே அந்த வீடு. ஏன் இதனை விடவும் வசதியான வீடொன்றுக்கு மாறவில்லை என்று பி.பி.சி தொலைக்காட்சி ஒருமுறை கோட்டபோது, “நான் இங்கே மகிழ்ச்சியாக இருக்கிறேன். வேறு எங்காவது மகிழ்ச்சி இருப்பதாக இருந்தால் நான் அங்கே செல்கிறேன்” என்றார்.

# எமக்கு தெரியாத மேரி கியூரி

மேரி கியூரியை போலந்து நாட்டின் புகழ் பெற்ற இரசாயனவியலாளர் மற்றும் பௌதீகவியலாளர் ஆவார். இரண்டு முறை நோபல் விருது வென்ற முதலாமவர் என்று கூட இந்த பெண் பிரபலம் பெற்றவர். இந்த வழக்கமான கதைகளுக்கு அப்பால் இவரது ஆவணங்கள் மற்றும் குறிப்புப் புத்தகங்களை இன்றும் கூட சாதாரணமாக யாராலும் பார்க்க முடியாது.



அப்படி பார்க்க வேண்டுமானால் உயிரை துச்சமாக மதித்து உறுதிப் பத்திரத்தில் கைச்சாத்திட்டு விட்டே அணுக முடியும். ஏனென்றால் அந்த உடைமைகளில் பயங்கர கதிர்வீச்சு இன்றும் கூட படிந்திருக்கிறது. ரேடியம், பொலோனியம் போன்ற கதிர்வீச்சு மூலகங்களை கண்டுபிடித்த மேரி கியூரி பல ஆண்டுகால கதிரியக்க வெளிப்பாட்டோடு பழகியதால் 1934 ஆம் ஆண்டு மிக அரிதான இரத்த சோகையால் பாதிக்கப்பட்டே உயிரிழந்தார். அவரது உடைமைகளில் இருக்கும் கதிரியக்கம் அடுத்த 1500 ஆண்டுகளுக்கு நீடிக்கும்.

## வேற்றுக்கிரக வாசிகள் எங்கே?



தற்போதைய கணக்குப்படி எமது பால்வீதி மண்டலத்தில் 400 பில்லியன் நட்சத்திரங்கள் வரை இருக்கின்றன. அதில் 50 பில்லியன் கிரகங்கள் வரை இருக்கலாம் என்பது ஒரு குத்துமதிப்பான கணிப்பு. இதனை விட அதிகம் இருக்கவும் கூடும். இதிலே ஒரு விதமான கிரகங்கள் தனது நட்சத்திரத்திற்கு நெருக்கமாகவோ அல்லது தூரமாகவோ இல்லாத பொருத்தமான இடத்தில் இருப்பதாக வைத்தால் கூட எமது பால்வெளி மண்டலத்தில் உயிர்வாழ சாத்தியம் கொண்ட 500 மில்லியன் கிரகங்கள் வரை இருக்க வேண்டும். இதில் ஒரு கிரகத்திலாவது வேற்றுக் கிரக வாசிகள் இருப்பார்களா என்பதுவே ஆய்வாளர்களை குடைந்தெடுக்கும் கேள்வி.



நண்பன் 1 : எங்க அப்பா சம்பாதிச்ச எல்லாத்தையும் குடிலயே அழிச்சுட்டாரு டா.
நண்பன் 2 : அடப்பாவமே! உனக்கு எதுவுமே வைக்கலயா?
நண்பன் 1 : ஒரு சொட்டுகூட வைக்கல.



ஒருவர் : என்னங்க பொண்ணையே கண்ல காண்பிக்க மாட்டேங்கிறாங்க?
மற்றவர் : நாங்க தான் சொன்னோம் ல. பொண்ணு இருக்கிற எடமே தெரியாதுன்னு!



அப்பா : டேய், இன்னைக்கு உங்க ஸ்கூல்ல நடந்த ரன்னிங் ரேஸ்ல கலந்துகிட்டியே, பரிசு கெடச்சுதா ?
மகன் : போங்கப்பா, எல்லாரும் எனக்குப் பயந்துட்டு முன்னாடி ஓடிட்டாங்கப்பா !

மனைவி : ஷில்பா யாருங்க?
கணவன் : முழிச்சிக்கிட்டே,அது குதிரை ரேஸ்ல நான் பந்தியம் கட்டும் குதிரையின் பெயர், ஏன் கேட்குற?
மனைவி : அப்படியாங்க, அந்த பந்தய குதிரை இன்னைக்கு மதியம் உங்களுக்கு கால் பண்ணுச்சிங்க.. அதாங்க கேட்டன்.






கனவன் : அநாவசியமா! எனக்குள்ள தூங்கிகிட்டு இருக்கிற மிருகத்தை எழுப்பாத! தாங்க மாட்ட!.
மனைவி : பூனைக்குட்டிக்கு எல்லாம் நான் பயப்பட மாட்டேன்!.



ராமன்: என் மனைவி என்னை தெய்வமா மதிக்கிறாங்க.
தாமன்: அப்ப உங்களை மனுஷனாவே மதிக்கறதில்லைன்னு சொல்லுங்க



ஆசிரியர் : கணக்குப் பரீட்சைல எல்லாக் கேள்விக்கும் ஏணிப்படியை வரைஞ்சு வச்சிருக்கியே, ஏண்டா?
மாணவன் : கணக்குல ஸ்டெப்புக்குத்தான் மார்க்குன்னு நீங்கதானே சார் சொன்னீங்க!

ஆசிரியர் : ?????????



நண்பன் 1: என் பொண்டாட்டி கையால விஷத்தக் கொடுத்தாக்கூட குடிச்சிடுவேன்டா.
நண்பன் 2 : உன் பொண்டாட்டி மேல அவ்வளவு பிரியமா?
நண்பன் 1: நீ வேற.. அவக்கூட வாழறதை விட, விஷத்தக் குடிச்சிட்டு சாகறது மேல்..



நண்பன் 1 : அந்த ஜோசியர் கல்யாணம் பண்ணிக்கிட்டா தோஷம் எல்லாம் போயிடும்னு சொல்றாரே......
நண்பன் 2 : அவர நம்பாத.. அவர் சொல்ற தோஷம், சந்தோஷம்.

# லூசி திரைப்பட முன்னோட்ட காட்சியின் போது













# ஆழி மகன் தவேந்திரன் மதுசிகன்

இன்றைய நிலையில் அபூர்வமாகவும் அதிசயமாகவும் அங்கொன்று இங்கொன்றாக சில இளைஞர்கள் எழுந்து வருகிறார்கள். அப்படியான ஒரு நம்பிக்கை நட்சத்திரமே மட்டக்களப்பைச் சேர்ந்த தவேந்திரன் மதுசிகன். க.பொ.த. உயர்தரப்பரீட்சை எழுதி விட்டுக் காத்திருக்கிறார் மதுசிகன். சரியாகச் சொன்னால் பரீட்சை எழுதி விட்டு அவர் பெறுபேற்றுக்காகக் காத்திருக்கவில்லை. பரீட்சை முடிவு எப்படி வந்தாலென்ன? அதற்கப்பால் மதுசிகனுக்கு ஆயிரம் வாசல்கள். ஆயிரமாயிரம் பாதைகள். அவர் தேர்ந்த பாதைகளா அல்லது அவர் தானாகவே உருவாக்கிய பாதைகளா என்று தெரியாது. அல்லது இரண்டுமாக இருக்கலாம். இன்று அவர் ஒரு சாதனையாளர். வயது 21தான். இந்த வயதில் அவருடைய சாதனையும் சிந்தனையும் மிகப் பெரிதாக உள்ளது. ஆச்சரியங்களைத் தருகிறது.

இந்த வயதில் மதுசிகன், பாக்குநீரிணையை நீந்திக் கடந்திருக்கிறார். மிக இளைய வயதில் பாக்குநீரிணையைக் கடந்த நீச்சலாளர் என்ற பெயரை எடுத்திருக்கிறார்.

இது எப்படி ஏற்பட்டது?

மதுசிகனே சொல்கிறார் –

"எனக்குப் பதின்னான்கு வயதிருக்கும்போதே நீச்சலில் ஈடுபட வேணும் என்ற எண்ணம் வந்தது. அதற்குக் காரணம், நாங்கள் இருந்த மட்டக்களப்பு – கல்லடிக் கடலில் பலர் அவ்வப்போது மாண்டு போவார்கள். நீச்சல் சரியாகத் தெரியாமல் கடலில் இறங்குவதே இதற்குக் காரணம். இதனால் நான் நீச்சல் பழக வேணும் என்று யோசித்தேன். அதற்குப் பிறகு வீட்டில் குளிப்பதை விடக் கடலில் குளிப்பதே என்னுடைய வழமையாகியது. ஆனால், இதைப்பற்றி அப்பொழுது வீட்டுக்குத் தெரியாது. நண்பர்களுடன் கடலில் விளையாடத் தொடங்கினேன். கடலுக்கும் எனக்குமான உறவு வளரத் தொடங்கியது. கடற்கரையிலேயே என்னுடைய பெரும்பாலான பொழுதுகள் கழிந்தன. நண்பர்கள் எனக்கு உதவியாக, ஊக்கமாக இருந்தார்கள். 17, 18 வயதில் கடலுக்கும் எனக்கும் நெருக்கம் கூடியது. அப்பொழுது நான் என்னுடைய பாடசாலையான சென் மைக்கல் கல்லூரியின் சாரணர் இயக்கத்திலும் இணைந்திருந்தேன். சாரணர் பயிற்சிப் பாசறையில் ஆர்வத்தோடு கலந்து கொண்டேன். அதில் திறமையாகச் செயற்பட்டதற்காக மாகாண மட்டத்தில் சாதனையாளர் விருது கிடைத்தது. கோல்ட் மெடல், சில்வர் மெடல் எல்லாவற்றையும் பெற்றேன். எனக்கு ஊக்கமாக சீனியரான சஞ்சீவன் அமலநாதன் உதவினார்.

என்னுடைய நீந்தும் ஆர்வத்தைப் பற்றியும் நான் கடலில் நீந்துவதைப் பற்றியும் வீட்டாருக்குத் தெரிய வந்தது. ஆனாலும் அவர்கள் தடுக்கவில்லை. படிப்பைக் கெடுத்துக் கொள்ளாமல் உன்னுடைய நீச்சலைத் தொடர்ந்து கொள் என்று அப்பாவும் அம்மாவும் சொன்னார்கள். அவர்களுடைய விருப்பத்துக்காகவும் அதில் உள்ள நியாயத்துக்காகவும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையை எழுதும்வரை நீச்சலை மட்டுப்படுத்தி வந்தேன். ஆனாலும் கடல் என்னுடைய மனதில் நிறைந்துபோய் கிடந்தது. நித்திரையில் கூட கடலின் குளிர்மையை உணர்ந்தேன். அதனுடைய அசைவையும் ஓசையும் கேட்டுக்கொண்டேயிருந்தேன்.

பரீட்சை முடிந்த கையோடு கொழும்புக்குச் சென்று, கல்கிசைக் கடலில் பயிற்சி பெற்றேன். இதற்கு அப்பாவும் அம்மாவும் உதவினார்கள். சஞ்சீவன் அண்ணா நல்ல தொடர்புகளை எடுத்துத் தந்து கொண்டிருந்தார்.

**கருணாகரன்**

பாடசாலையும் ஊக்கப்படுத்தியது. நண்பர்கள் ஆதவாக இருந்தார்கள். கல்கிசைக் கடலில் றொஸான் அபேயசுந்தர (Roshan Abayasundara) என்ற நீச்சலாளர் எனக்குப் பயிற்சியளித்தார். அவர் இலங்கை விமானப்படையில் பணியாற்றியவர். 2021 இல் பாக்குநீரிணையை நீந்திக்கடந்தவர். ஆறு மாதப் பயிற்சியில் எனக்கு நல்ல நம்பிக்கை ஏற்பட்டது, நானும் பாக்குநீரிணையை நீந்திக் கடப்பேன் என்று. ஆனாலும் என் நண்பர்களுக்கும் வீட்டாருக்கும் இதில் சற்று தயக்கம் உண்டென உணர்ந்தேன். என்றாலும் என்னுடைய ஆர்வத்தையும் ஊக்கத்தையும் நம்பிக்கையையும் அவர்கள் மதித்தனர். இதற்கிடையில் நான் இன்னொன்றையும் சொல்ல



வேணும். கடலில் நான் நீந்தத் தொடங்கும்போது இந்தக் கடலுக்கு நான் எதையாவது செய்ய வேண்டும் என்று விரும்பினேன். நான் இயங்கிய சாரணர் இயக்கத்திலும் சமூகச் செயற்பாட்டில் ஈடுபட வேண்டிய பொறுப்பிருந்தது. அப்படிச் செயற்பட்டால்தான் ஜனாதிபதி விருதைப் பெற முடியும். ஆகவே பிளாஸ்டிக் இல்லாத கடலை (plasticfree ocean) உருவாக்க வேண்டும் என விரும்பினேன். ஆனால் அதை நான் மட்டும் செய்ய முடியாது. அதைப்பற்றிய விழிப்புணர்வை மீனவர்களிடத்திலும் மக்களுக்கும் உருவாக்க முயற்சித்தேன். என்றாலும் நான் எதிர்பார்த்த அளவுக்கு அது நிறைவேறவில்லை. இந்தச் சின்னப் பையன் என்ன சொல்கிறான் என்று அவர்கள் யோசித்திருக்கக் கூடும். அப்படியென்றால் நான் சொல்வதை ஏற்கக் கூடிய அளவுக்கு நான் ஒரு சாதனையாளனாக இருக்க வேண்டும். எனக்கான தகுதியை உருவாக்க வேண்டும். அப்படி ஒரு அடையாளம் எனக்கு ஏற்பட்ட பிறகு சொன்னால், ஓரளவாவது கேட்பார்கள் என்று எண்ணினேன். இந்த எண்ணத்தோடு எனக்கு வேறு சில ஐடியாக்களும் வந்தது. 1. பிளாஸ்டிக் இல்லாத கடலை (plasticfree ocean) உருவாக்க வேண்டும். 2. என்னுடைய பாடசாலையான சென் மைக்கல் கல்லூரியின் 150 ஆவது ஆண்டுக்கு நான் ஒரு அடையாளத்த உருவாக்க வேண்டும். 3. இன்றைய இளைஞர்கள் எதிர்கால இலக்கின்றி போதைப்பொருளுக்கு அடிமையாதல், கைத்தொலைபேசியில் தம்மைத் தொலைத்தல், குடும்பங்களிலும் வெளியிலும் ஏற்படுகின்ற சின்னச் சின்னப் பிரச்சினைகளுக்காகத் தற்கொலை செய்தல் போன்றவற்றிலிருந்து விடுபட்டு, தமக்குப் பிடித்ததை, தமக்கு விருப்பமானதைத் தெரிவு செய்து சாதனை செய்யலாம் என்ற நம்பிக்கையை உருவாக்குதல் என எண்ணினேன்.

எனவே ஆறுமாதக் கடுமையான பயிற்சியின் பிறகு பாக்குநீரிணைக் கடலை நீந்திக் கடக்கும் முடிவுக்கு வந்தேன். இதற்கான ஏற்பாட்டை நண்பர்களும் என்னுடைய பெற்றோரும் செய்தனர். இதைப்பற்றி இந்தியாவுக்கும் அறிவிக்கப்பட்டது. 2023 மே 28 அன்று பாக்குநீரிணையை நீந்திக் கடந்தேன். இதற்கு எனக்கு 12.53 நிமிடங்கள் தேவைப்பட்டது. அன்று கடற்காற்று – எதிர்காற்றுச் சற்றுக் கூடுதலாக இருந்தது. ஆனாலும் இதை நான் மறுபடியும் நீந்திக் கடப்பேன். இதை விடக் குறைந்த நேரத்தில் நீந்திக் கடக்க வேண்டும். அதை விட இருவழியாக பாக்குநீரிணையில் நீந்திப் போய் திரும்பி நீந்தி வர வேண்டும். அப்போதுதான் எனக்கு முன்னர் செய்யப்பட்ட சாதனையை முறியடிக்கலாம். அப்படி முறியடிப்பேன் என்று நம்புகிறேன்.

(11 ஆம் பக்கம் பார்க்க)


















IDM Nations Campus I n ternational அனுசரணையில் கவிக்கமல், பாசில், ரஜினி இணைந்து வழங்கிய “அக்ஷரா” “வீனஸ்” இசைக்குழுவினர்களின் “ இனிய இசையில் இலங்கையின் முன்னணி பாடக பாடகிகளான கவிக்கமல், பாசில், நித்தியகலா, கோபி, கீதா, சான், ஜெயமோகன், டாக்டர் ஜமீல் கலந்து சிறப்பித்த “தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள் “ இன்னிசை மாலை நிகழ்வு பொது நூலக மண்டபத்தில் மிக கோலாகலமாக நடைபெற்றது. கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் விஷேட அதிதியாக கலந்து சிறப்பித்த இந்த இசைநிகழ்வை, இலக்கிய புரவலர் ஹாசிம் உமர், S.H.Colour House உரிமையாளரும், சமூக சேவையாளருமான ஜனாப் சாஜஹான் தலைமை ஏற்று நடத்தினார். இந்நிகழ்வில் நடிகர் DISCO RAJA , IDM. Nations Campus International தலைவர் கலாநிதி விநாயமூர்த்தி ஜனகன், அதிவணக்கத்திற்குரிய பிதா அருட்கலாநிதி சந்ரு பெர்ன்ணான்டோ, தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.



மருதமுனை எம்.ஏ.சி.சஜீத் அஹமட், சம்றூத் சவாட் தம்பதியின் புதல்வர் அபூபக்கர் சித்தீக் 2023–06–23 ஆம் திகதி தனது முதலாவது பிறந்தநாளை சவூ–தியரேபியா தமாம் நகரில் கொண்டாடினார்.



P.Suthanthira , Wattala

# இலக்கிய மேம்பாட்டுக்காவும் சமூக மேம்பாட்டுக்காகவும் பங்காற்றி வரும் புகழ்பெற்ற கலைஞர் எஸ். தஸ்தகீர்

***உங்களுடைய ஆரம்ப கால இலக்கியம் பற்றி ?***

நான் சுகாதாரத் திணைக்களத்தின் ஓய்வு பெற்ற பிராந்திய உணவு மருந்துகள் பரிசோதகர். எனினும் நான் ஆரம்பத்தில் இருந்து கவிதை, கட்டுரை, நாடகம், பாட்டு, பொல்லடி போன்ற கலை இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபாடுடையவனாக இருந்து வருகின்றேன். அதேவேளை வளர்ந்துவரும் இளைஞர் யுவதிகளுக்கும், மாணவர்களுக்கும் பயிற்சிப் பட்டறைகள், கவியரங்குகள், பேச்சுப் போட்டிகள் நடாத்துதல் மூலம் இளந்த லைமுறையினரின் கலை, இலக்கிய மேம்பாடுகளுக்குப் பங்களிப்பு செய்து வருபவன்.



இந்த தேசத்திற்காக', 'சிலைகளும் சிரிக்க வைக்கும்' , 'நீதிக்குப் பின் தான் பாசம்', 'பள்ளிக்கூடம்', 'வைத்தியம்' போன்ற நாடகங்கள் பிரபல்யம் பெற்றன. சுகாதார மேம்பாட்டை ஊக்குவிப்பனதாக கட்டுரைகள் எழுதி இலங்கை லக்ஸ்மி மீடியா நெற்வேர்க்ஸ் இன் ஆரம்பகால அங்கத்தவரும் தற்போது நிர்வாகக் குழு உறுப்பினருமாக கடமையாற்றிய வருகிறேன். இந் நிறுவனத்தினால் நடாத்தப்பட்டுவரும் இலக்கிய மற்றும் ஊடகப் பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகளில் பிரதான வளவாளராகவும், வருடாவருடம். கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகளை ஒழுங்கு படுத்தும் முக்கிய செயற்பாட்டாளராகவும் இருந்து வருகிறேன்.

கிழக்கிலங்கையின் பிரபல்யமிக்க ஒரு இலக்கிய முதுமை கல்முனை தஸ்தகீர் கிழக்கு மாகாணத்தில் இலக்கியப் பரப்பில் சாய்ந்தமருது கொடிகட்டிப் பறந்த காலத்தில் இவ்வூரில் இலக்கியம் ஊற்றெடுத்த ஒரு பழமை வாய்ந்த குடும்பமாக மருதூர் குடும்பத்தைக் குறிப்பிடலாம். இக்குடும்பத்தில் பல் நூலாசிரியர் உலகறிந்த இலக்கியவாதி மணிப் புலவர் மருதூர் ஏ. மஜீத் மற்றும் கலா பூசணம் ஏ.பீர்முஹம்மது மர்ஹூம் மருதூர் அலிகான், மருதூர் அக்பர் அலி, மருதூர் ஏ. ஏ.ஹசன் ஆகியோர் தத்தமது ஆளுமைக்கேற்ப இலக்கியத்தை வளர்த்து நாடறியச் செய்தனர்

இவர்களின் ஒன்றுவிட்ட சகோதரன் நான். கல்முனை இக்குடும்ப இலக்கியத்தில் இரண்டறக் கலந்து இப்பாசறையில் பயிற்றுவிக்கப் பட்டு தன்னையும் ஓர் கவிஞராக, கலைஞராக, எழுத்தாளராக அறிமுகமானேன்.

எனது குடும்பம் ஒரு இலக்கிய குடும்பமாகும். மூத்த சகோதரர் செய்யது முஹம்மது (அதிபர்) தனது சொந்த சர்ப்பனாவினால் பாடல்களுக்கு இசையமைத்தவர். இரண்டாவது சகோதரர் எஸ்.அப்துல் ஜப்பார் பாடல்களை தானே இயற்றி இசையமைத்து பாடுபவர். மூத்த புதல்வர் ரி. முஹம்மத் அகில இலங்கை ரீதியில் கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றவர். இவரது கனிஷ்ட புதல்வி ரி. பாத்திமா ஹப்ஷா இவர் பாடசாலை மட்டத்தில் 'எதிர்நீச்சல்' எனும் நாடகத்தில் தாயாக நடித்தார். இந் நாடகம் இலங்கை ரூபவாஹினியில் 45 நிமிடங்கள் ஒளிபரப்பப்பட்டது. மேலும் 'முன்னேற்றம்' எனும் மேடை நாடகத்திலும் மகளாக நடித்து பலரின் பாராட்டுக்களைப்பெற்றார். மூத்த சகோதரியின் மகன் எஸ் அஷரப் கான் சிரேஷ்ட ஊடகவியலாளர் பல துறைகளில் தனது ஆக்கங்களை எழுதி வருகிறார். ஒரு பலம் வாய்ந்த இலக்கிய குடும்பம் எனலாம்.

***உங்களது கால கட்டத்தில் இடம்பெற்ற கலை இலக்கிய நிகழ்வுகள் குறித்து ஞாபகப்படுத்த முடியுமா?***

பாடசாலை காலங்களில் மறைந்த பிரபல இலக்கிய ஜாம்பவான் தெணியானின் சகோதரரான க.நவம் எழுதிய 'இந்த தேசத்துக்காக' எனும் நாடகம் தேசிய மட்ட தமிழ் தின விழா போட்டி 1973 இல் தங்கப்பதக்கம் வென்றது. இந்நாடகக் குழுவில் ஒருவராக நடித்தேன். இக் குழுவில் ஏ.அப்துல் றஸாக், ஏ.அக்பர் அலி, எம்.ஐ.எம். சித்தீக், எஸ்.யூ.அன்வர் சித்தீக் ஆகியோரும் இடம்பெற்றனர்.

எனது முதலாவது கவிதை தான் கல்வி கற்ற கல்முனை சாகிறாவினால் வெளியிடப்பட்ட 'சாஹிறா' சஞ்சிகையில் 1978 ஆம் ஆண்டு 'நோன்பாமே நோன்பு' என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டது. இக்கவிதை பலரின் பாராட்டுக்களையும் பெற்றது குறிப்பிடத்தக்கது. இச்சஞ்சிகையின் உப பத்திராதிபராகவும் இருந்தேன். இதிலிருந்து இலக்கிய உலகில் சஞ்சரித்து பல கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதி உலகிற்கு வெளிக்கொணர்ந்தேன்.

***நீங்கள் சுகாதாரப் பரிசோதகராக கடமையாற்றிய போது மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி கூறுவீர்களா?***

1982 ஆம் ஆண்டு களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனத்தில் முழு நேர டிப்ளோமா பயிற்சி நெறியை பூர்த்திசெய்த பின் சுகாதாரத் திணைக் களத்தின் பொது சுகாதாரப் பரிசோதகராகவும் பின் மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகராகவும் பல வருடங்கள் கடமையாற்றினேன். பின் சுகாதாரத் திணைக்களத்தின் உணவு மருந்துகள் பரிசோதகர் பதவிக்கான போட்டிப் பரீட்சையில் சித்தி அடைந்து விசேட பயிற்சியின் பின் பிராந்திய உணவு மருந்துகள் பரிசோதராக நியமிக்கப்பட்டேன். இப்பதவிகளின் மேலதிக நிபுணத்துவப் பயிற்சிகளை ஜப்பான்,தாய்லாந்து, புதுடில்லி போன்ற நாடுகளில் பெற்றுக் கொண்டேன்.

மட்டக்களப்பு, மாத்தளை, தம்புள்ளை அம்பாறை, கல்முனை போன்ற பிரதேசங்களில் கிட்டத்தட்ட நாற்பது வருடங்கள் இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் சிறப்புச் சேவையாற்றிய பின் ஓய்வு நிலையை அடைந்தேன்..

கடமைக் காலத்தில் பல்லின சமூகங்களுடன் சுகாதார விடயங்களில் நெருங்கிப் பழகியமையால் சமூகத்தில் உள்ள சுகாதாரக் குறைபாடுகளையும், சுகாதாரத் தேவைகளையும் இனம் கண்டு சுகாதாரப் பரப்பில் சமூகங்கள் விழிப்படைய வேண்டும்






என்பதையும், எதிர்காலத்தில் திடகாத்திரமான சமூகம் உருவாக வேண்டும் என்பதையும் கருப்பொருளாகக் கொண்டு எனது கவிதைகளையும் கட்டுரைகளையும் வரைந்துள்ளேன்.

***எத்தகைய வகையிலான ஆக்கங்களை வெளிக்கொணர்ந்துள்ளீர்கள்?***

சுகந்தப் பூக்கள், இன்று தான் திருமணம், நான் ஒரு உயிர் கொல்லி, முனையின் மகுடம், நோய்களின் கேடயம் நோன்பு, சமநிலை, துஆ செய்வோம், மாசடைந்த மானுடம், சுகப்பிரசவம், தாய், சமாதான ஒளியேற்ற, சமிபாடு, யார் ஓவியன்?, கொவிட் பிண வாடை, அதிவலு, காகம், உலக கிட்லர் கொரோனாவே, தாயின் பிம்பம், நடமாடும் கைதிகள் நாம், என்றும் வாழும் ஜிப்ரி, பாவிகள் யார்?, செருப்புச் சோடி, முகக்கவசம் போன்ற கவிதைகளையும் மலேரியா தடுப்பிற்கு புதியதோர் அணுகுமுறை, டெங்கு காய்ச்சல், போதைப் பொருள் பாவனையை இஸ்லாம் முற்றாகத் தடுக்கிறது, முச்சக்கர வண்டிகள் பயணிகள் நலன் கருதி சேவை வழங்க வேண்டும், புகைத்தல் ஒரு சமூகத்துரோகம், கல்விக் கொடை என்றுமே மரணிப்பதில்லை, மக்கள் பணிக்காகவே வாழ்ந்த டாக்டர் ஜமீல், மனித குல ஆரோக்கியத்துக்கு தொற்றா நோய்கள் அச்சுறுத்தல், கோவிட் 19 அச்சுறுத்தல் நிலவும் காலத்தில் பாதுகாப்பான சிகை அலங்காரம் அவசியம், புவியில் உயிரினங்களின் வாழ்வுக்கு பிளாஸ்டிக் பொருட்கள் அச்சுறுத்தல், சிகரெட் மீதான வரியை அதிகரிப்பதன் மூலம் அரசின் வருமானத்தை உயர்த்தலாம், கொரோனா தொற்றுக்காலத்தில் புகைத்தல் மதுபான பாவனை வீழ்ச்சி, கொவிட் 19 தொற்றும் புகைத்தலும், எமது உணவுகளை ஆக்கிரமித்துள்ள நச்சுப்பதார்த்தங்கள், உணவு பற்றாக்குறை உருவெடுப்பதை தவிர்க்க பயிர் செய்கையில் முழுமையாக இறங்குவோம், காடுகளை அழிப்பதால் உயிரினங்களின் எதிர்கால இருப்புக்கு உருவாகி வரும் பேராபத்து, மருதூர் மஜீதுடன் ஆன நேர்காணல், இக்பால் அலி எழுதிய இளம் தலைமைத்துவ ஆளுமை 'நூல் விமர்சனம்' போன்ற ஆக்கங்களை எழுதியுள்ளேன் என்று குறிப்பிடலாம்.

***அப்படியாயின் பாடசாலைக் காலத்தில் நீங்கள் பங்கேற்று நடடித்த நாடகங்கள் இலக்கியத் தொடர்புகள் பற்றி***

கல்முனை பாடசாலைக்கு அப்பால் வெளியுலக இலக்கியத்திலும் ஈடுபட்டுள்ளார். 1977 ஆம் ஆண்டில் கல்முனை இளைஞர் கலை வட்டம் எனும் அமைப்பை உருவாக்கி அதன் பதில் தலைவராக செயல்பட்டேன்.. இந்த அமைப்பின் தலைவராக காலம் சென்ற நாடறிந்த கலைஞர் ஏ. ஆர். எம். ஜிப்ரி அவர்கள் இருந்தார். இம்மன்றத்தினால் பல நாடகங்கள், கவியரங்குகள், பேச்சுப்போட்டிகள் போன்றவைகளையும் நடாத்தப்பட்டன. நாடக இரவுகள், விடியும் வரை, இரவின் மடியில் போன்ற கலை, இலக்கிய நிகழ்வுகளையும் நடாத்தினர். இக்குழுவில் ஏ ஆர் எம் ஜிப்ரி, ஏ. அக்பர் அலி, எம் எம் பாஸில், எம் அப்துல் வஹாப், எம் ஏ.மஜீட், சாந்தூர் சலீம் கான், மீரா பாறுக் ஆகியோருடன் தஸ்தகீர் அவர்களும் அங்கம் பெற்றனர். இக்காலகட்டத்தில் டோமினிக் ஜீவா வின் மாதாந்த இலக்கியச் சஞ்சிகையான 'மல்லிகை' யைத் தொடர்ந்தும் வாசிப்பதில் ஆர்வமாய் இருந்தார்.







**இக்பால் அலி**



சங்கவி பிலிம். சங்கவி தியேட்டர் நிறுவனங்களின் பணிப்பாளர் துரைராசா சுரேஷின் ஏற்பாட்டில் தினகரன். தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையுடன் கொழும்பு பழைய நகர சபை மண்டபத்தில் (25.06.2023) ஏற்பாடு செய்யப்பட்ட முப்பெரும் விழாவின் நிழல் படங்களை காணலாம்.



Krishanthini Nadaraja



Ganeshan



Debo, jenny, divo, jemima



# தமன்னா, சமந்தாவையே ஓரம் கட்டிய மலைவாசி பெண் நடிகை

ஹீரோயின் போல் இல்லையென்றாலும் தங்களது நடிப்பு மூலமாக ரசிகர்களை கவர்ந்து வரும் 5 நடிகைகள் பற்றி தற்போது பார்க்கலாம். நடிகைகள் என்றாலே வெள்ளை நிறத்தில் இருக்க வேண்டும், அவர்களது தலை முதல் கால் வரை மாடல் போல் மெல்லிய தோற்றத்தில் இருக்க வேண்டும் என்பது எழுதப்படாத விதியாக சினிமாவில் உள்ளது. ஆனால் இவற்றை எல்லாம் மாற்றிவிட்டு அழகை காட்டிலும் நடிப்புதான் முக்கியம் என வலம் வந்து சாதித்து கொண்டிருக்கும் 5 நடிகைகளை தற்போது பார்க்கலாம்.

**சாய் பல்லவி:** நடன கலைஞரான சாய்பல்லவி மலையாளத்தில் வெளியாகி ஹிட்டான பிரேமம் படத்தின் மூலம் ஹீரோயினாக அறிமுகமானார். அப்படத்தில் முகம் முழுதும் கன்னங்களில் பருக்கள், மாநிறமான தோல் நிறம் என மேக்கப் இல்லாமல் மலர் டீச்சராக வலம் வந்து இப்படியும் நடிகை இருக்கலாமா என்பதை இந்திய சினிமாவுக்கே புதிதாக உணர்த்தினார். படங்களில் கவர்ச்சி காட்டாமல் தனக்கு முக்கியத்துவம் தரும் படங்களில் நடிக்கும் சாய்பல்லவி முன்னணி நடிகைகளையே ஓரம்கட்டி வருகிறார்.

ஐஸ்வர்யா ராஜேஷ்: பார்க்க நம் பக்கத்து வீட்டு பொண்ணு மாதிரி இருக்கும் இவர், இன்று கோலிவுட்டையே தன் வசப்படுத்தியுள்ளார். ஆரம்பத்தில் இவரது தோற்றத்தை பார்த்து கிராமப்புற கதாபாத்திரங்களில் நடித்த இவர், பின்னாளில் கருப்பாக இருப்பவர்கள் தான் மாடல் உடையில் அழகாக வலம் வர கூடியவர்கள் என்பதை நிரூபித்தவர்.

நித்யா மேனன்: ஹீரோயின் என்றால் உயரமாகவும், மெல்லிய உடலமைப்பில் இருக்க வேண்டும் என்பதை தூக்கியெறிந்த நடிகை என்றே சொல்லலாம். அந்த அளவுக்கு நித்யா மேனன் குள்ளமாகவும், உடல் பருமனாகவும் தான் பல படங்களில் இவர் நடித்து வருகிறார். இன்று வரை தனது கதாபாத்திரத்திற்கு முக்கியத்துவம் தந்து பல படங்களில் நடித்து வருகிறார்.

நந்திதா தாஸ்: ஹீரோயின் என்பதற்கு எந்த ஒரு லட்சணமும் இல்லாமல் இன்று வரை 10 மொழிகளுக்கு மேல் தனது திறமையான நடிப்பின் மூலம் ரசிகர்களை கவர்ந்தவர் தான் நந்திதா தாஸ். தமிழில் இயக்குனர் மணிரத்னம் இயக்கத்தில் வெளியாகி ஹிட்டான கன்னத்தில் முத்தமிட்டால் படத்தின் மூலமாக அறிமுகமான இவர் தொடர்ந்து அழகி உள்ளிட்ட படங்களில் எதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தினார். இப்படங்களை தொடர்ந்து அவருக்கு பாலிவுட், ஹாலிவுட் என பிற மொழிகளில் நடித்து பிரபலமானார்.

லிஜோமோல் ஜோஸ்: மலையாள நடிகையான இவர் ஜி.வி. பிரகாஷ் நடிப்பில் வெளியான சிவப்பு, மஞ்சள், பச்சை படத்தின் மூலமாக தமிழில் அறிமுகமானார். இப்படத்தில் ஜி.வி.பிரகாஷின் அக்காவாக இவரது நடிப்பு பெருமளவில் பேசப்பட்டது. நம் குடும்பத்தில் உள்ள ஒரு பெண் போல இவரது முகப் பாவனை இருந்ததால் தமிழ் ரசிகர்களால் கொண்டாடப்பட்டார். அதே சமயத்தில் சூர்யாவின் ஜெய் பீம் படத்தில் செங்கேணி கதாபாத்திரத்தில் நம்மை கண் கலங்க வைத்திருப்பார்.





# சிம்புவின் 50வது படத்தில் கமல்ஹாசன்?



சிம்புவின் 48வது திரைப்படத்தை தேசிங்கு பெரியசாமி இயக்க இருப்பதாகவும் இந்த படத்தை ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் தயாரிக்க இருப்பதாகவும் வெளியான செய்தியை பார்த்தோம். மேலும் சிம்புவின் 49ஆவது படத்தை இயக்கும் இயக்குனர் குறித்த அறிவிப்பு சிம்பு லண்டனில் இருந்து சென்னை திரும்பியதும் வெளியாகும் என்றும் கூறப்பட்டது. இந்த நிலையில் சிம்புவின் 50வது திரைப்படத்தை இயக்குவது யார் என்ற கேள்வி ரசிகர் மனதில் இருந்த நிலையில் அதற்கு தற்போது விடை கிடைத்துள்ளது. சிம்புவின் 50 வது படத்தை மணிரத்னம் இயக்க இருப்பதாகவும் இந்த படத்தையும் ராஜ்கமல் பிலிம்ஸ் இண்டர்நேஷனல் நிறுவனத்தின் மூலம் கமல்ஹாசன் தயாரிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது. ஏற்கனவே மணிரத்னம் இயக்கத்தில் உருவான 'செக்கச்சிவந்த வானம்' திரைப்படத்தில் சிம்பு ஒரு முக்கிய கேரக்டரில் நடித்திருந்த நிலையில் தற்போது அவரது 50 வது படத்தை மணிரத்னம் இயக்க இருக்கிறார் என்ற தகவல் அவரது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. 'பொன்னியின் செல்வன்' படத்தை அடுத்து கமல்ஹாசனின் 234வது திரைப்படத்தை இயக்கும் ஆரம்பகட்ட பணிகளில் தற்போது மணிரத்னம் இருக்கும் நிலையில் இந்த படத்தை முடித்தவுடன் அவர் சிம்புவின் 50வது படத்தை இயக்குவார் என்று கூறப்படுகிறது.

# 'சந்திரமுகி 2' ரிலீஸ் எப்போது?

ராகவா லாரன்ஸ் நடிப்பில் உருவாகி வரும் 'சந்திரமுகி 2' திரைப்படத்தின் ரிலீஸ் தேதி குறித்த தகவல் வெளியாகியுள்ள நிலையில் இந்த படத்திற்கு இப்போது வரை எந்த போட்டியும் இல்லை என்றும் கூறப்படுகிறது

ராகவா லாரன்ஸ், கங்கனா ரனாவத் நடிப்பில், பி. வாசு இயக்கத்தில், எம்எம் கீரவாணி இசையில் உருவாகி வரும் திரைப்படம் 'சந்திரமுகி 2'. இந்த படத்தின் படப்பிடிப்பு கடந்த சில மாதங்களாக நடைபெற்று வந்த நிலையில் சமீபத்தில் இந்த படப்பிடிப்பு முடிவடைந்தது என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது என்பதும் படப்பிடிப்பு நிறைவு நாளில் பட குழுவினர் எடுத்த குரூப் புகைப்படம் வைரலானது என்பதையும் பார்த்தோம்.



இந்த நிலையில் தற்போது வந்துள்ள தகவலின் படி இந்த படத்தை செப்டம்பர் 15ஆம் தேதி ரிலீஸ் செய்ய படக்குழுவினர் திட்டமிட்டுள்ளதாகவும் இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் கூறப்படுகிறது. இப்போது வரை செப்டம்பர் 15ஆம் தேதி ரிலீஸ் ஆகும் தமிழ் படங்கள் குறித்த எந்த அறிவிப்பும் இல்லை என்பதால் இந்த படம் போட்டியின்றி சோலோவாக ரிலீஸ் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.ராகவா லாரன்ஸ், கங்கனா ரனாவத், லட்சுமி மேனன் உள்பட பலர் நடிப்பில் உருவாகி வரும் 'சந்திரமுகி 2' படம் லைகா நிறுவனத்தின் பிரம்மாண்டமான தயாரிப்பில் உருவாகி வருகிறது. ஆர்டி ராஜசேகர் ஒளிப்பதிவில் தோட்டா தரணி கலை இயக்கத்தில் உருவாகி வரும் பெரும் படம் நல்ல எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.





நடிகர் அர்ஜுன் ஒரு காலகட்டத்தில் கதாநாயகனாக கலக்கி வந்த நிலையில் இப்போது வில்லன் அவதாரம் எடுத்து படங்களில் பட்டையை கிளப்பி வருகிறார். அந்த வகையில் லோகேஷ் இயக்கத்தில் தளபதி விஜய் நடிப்பில் உருவாகி வரும் லியோ படத்தில் வில்லனாக நடித்து வருகிறார். சமீபத்தில் லியோ படத்தில் அவரது கெட்டப் புகைப்படம் வெளியாகி இணையத்தில் ட்ரெண்டானது. அர்ஜுனனின் மூத்த மகளான ஐஸ்வர்யா விஷால் நடிப்பில் வெளியான பட்டத்து யானை படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானார். அதன் பின்பு ஒரு சில படங்களில் நடித்த அவருக்கு எந்த படமும் பெரிய அளவில் கை கொடுக்கவில்லை. இந்நிலையில் ஐஸ்வர்யாவுக்கு விரைவில் திருமணம் நடக்க உள்ள செய்தி வெளியாகி இருக்கிறது. அதுவும் அர்ஜுனுக்கு சம்பந்தியாக உள்ளார் பிரபல காமெடி நடிகர். அதாவது காமெடி, குணச்சித்திரம் என எந்த கதாபாத்திரம் கொடுத்தாலும் பின்னி பெடல் எடுக்கக்கூடியவர் தம்பி ராமையா. மைனா படத்தில் இவரது கதாபாத்திரம் இவர்களை பெரிய அளவில் கவர்ந்தது. இவருடைய மகன் உமாபதி சில படங்களில் கதாநாயகனாக நடித்து வந்தார். இந்நிலையில் ஆக்சன் கிங் அர்ஜுனின் மகள் ஐஸ்வர்யாவை விரைவில் உமாபதி திருமணம் செய்து கொள்ள இருக்கிறாராம். இந்த செய்தி தான் இப்போது கோலிவுட் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. அதாவது உமாபதி ஜீ தமிழில் ஒளிபரப்பான சர்வைவர் என்ற நிகழ்ச்சியில் பங்கு பெற்றார். இந்த நிகழ்ச்சியை அர்ஜுன்தான் தொகுத்து வழங்கி இருந்தார். இந்த பழக்கத்தின் காரணமாக அர்ஜுன் மற்றும் அவரது குடும்பத்துடன் நெருங்கி பழகி வந்துள்ளார் உமாபதி. ஒரு கட்டத்திற்கு மேல் ஐஸ்வர்யா மற்றும் உமாபதி இருவரும் நட்பை தாண்டி காதலர்களாக மாறி உள்ளனர். இப்போது இரு குடும்பத்தினரும் இவர்களுக்கு திருமணத்திற்கு பச்சைக் கொடிகாட்டியுள்ளனர்.ஆகையால் விரைவில் உமாபதி மற்றும் ஐஸ்வர்யா திருமணம் நடக்க உள்ளதாம். இவர்களது திருமண செய்தியை அதிகாரப்பூர்வ அறிவிப்பாக அர்ஜுன் மற்றும் தம்பி ராமையா இருவரும் விரைவில் அறிவிக்க உள்ளனர். மேலும் உமாபதியும் கதாநாயகனாக நல்ல கதைக்காக இயக்குனர்களை அணுகி வருகிறாராம்.

# விரைவில் ஐஸ்வர்யாவுக்கு திருமணம்

# தென்னைக்கு ஆசைப்பட்டு திண்ணையை பறிகொடுத்த நடிகை

என்னதான் நல்ல கதையுள்ள வாய்ப்புகள் வந்தாலும், அந்த கதையை கேட்கும் நடிகர், நடிகைகள் தங்களுக்கு கால்ஷீட் பிரச்சனை, கதை பிடிக்கவில்லை, தங்களுக்கு செட்டாகாது உள்ளிட்ட சொற்ப காரணங்களை கூறி பல ஹிட் படங்களை தவறவிட்ட கதைகள் உண்டு. அப்படி தவறவிடும் படங்களால் அந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்ட பிரபலங்கள் பெரிய வாய்ப்புகளை பெற்று சினிமாவில் வளர்ந்து விடுகிறார்கள். அந்த வகையில் வாய்ப்பை மறுத்த பிரபலங்கள் பின்னாளில் அதைப் பற்றி நினைத்து புலம்பி வருவதுமுண்டு. அப்படி அண்மையில் பிரபல நடிகை ஒருவர் மெகாஹிட் படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தும் நயன்தாராவால் கேரியரையே தொலைத்த சம்பவத்தை கூறியுள்ளார். தமிழில் காதல் கொண்டேன், 7ஜி ரெயின்போ காலனி, மதுர, கோவில் உள்ளிட்ட பல ஹிட் படங்களில் நடித்து பிரபலமானவர்தான் நடிகை சோனியா அகர்வால். இவர் சினிமாவில் வளர்ந்து வரும் சமயத்தில் இயக்குனர் செல்வராகவனை 2006ஆம் ஆண்டு திருமணம் செய்துக்கொண்டு, 2011ஆம் ஆண்டு விவாகரத்து பெற்றார். அதன் பின் பல வருடங்கள் கழித்து தற்போது வெப் தொடர்கள் மற்றும் சில பேட்டிகளில் கலந்துக்கொண்டு தன்னை பற்றியும், தன் தனிப்பட்ட வாழ்வை பற்றியும் வெளிப்படையாக பேசி வருகிறார். அந்த வகையில் தனக்கு வந்த மெகாஹிட் படத்தின் வாய்ப்பை தவறவிட்டதை பற்றி கூறி பலரையும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளனர். 2005 ஆம் ஆண்டு இயக்குனர் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் நடிகர் சூர்யா, அசின் உள்ளிட்டோர் நடிப்பில் மெகாஹிட்டான திரைப்படம்தான் கஜினி. தன் கண்முன்னே காதலியை கொன்றவர்களை பழி வாங்க குறுகிய கால நினைவாற்றலுடன் போராடும் சூர்யா, ஒரு பாதியில் பெரும் பணக்காரராகவும் மற்றொரு பாதியில் ஆக்ரோஷமாகவும், மாஸாக வளம் வருவார். இப்படம் அந்தாண்டின் சிறந்த படமாக ரசிகர்களுக்கு இன்றுவரை பிடித்த படமாக அமைந்த நிலையில் இப்படத்தில் சூர்யாவுக்கு ஜோடிப் போட்டு நடித்த அசினின் கதாபாத்திரத்தில் நடிக்க முதன்முதலில் சோனியா அகர்வாலைத்தான் இயக்குனர் அணுகியுள்ளார். ஆனால் இப்படத்தில் மற்றொரு கதாநாயகியாக வலம் வந்த நயன்தாராவின் கதாபாத்திரத்தில், தான் நடிக்கிறேன் என சோனியா அகர்வால் கூறி அசின் கதாபாத்திரத்தை மறுத்துள்ளார். அதன் பின்புதான் நடிகை அசின் அப்படத்தில் நடித்து பாலிவுட் வரை சென்றார். ஒருவேளை அன்றைக்கு மட்டும் சோனியா அகர்வால் அசினுக்கு பதிலாக கஜினி படத்தில் நடித்திருந்தால், இன்று அவர் மிகப்பெரிய உயரத்திற்கு சென்றிருப்பார். தற்போது இவர் பேசிய இந்த பேட்டி இணையத்தில் வைரலாகி வரும் நிலையில், நல்லவேளை நீங்கள் கஜினி படத்தில் நடிக்கவில்லை என ரசிகர்கள் பெருமூச்சு விட்டு வருகின்றனர்.

# நகுலின் மனைவிக்கு தண்ணீர் தொட்டியில் பிரசவம்



பிரபல தமிழ் நடிகரின் மனைவி தண்ணீர் தொட்டிக்குள் குழந்தை பெற்ற வீடியோவை தனது இன்ஸ்டாகிராமில் பதிவு செய்துள்ள நிலையில் அந்த பதிவை பார்த்து ரசிகர்கள் ஆச்சரியம் மற்றும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். ஷங்கரின் 'பாய்ஸ்' என்ற திரைப்படத்தில் அறிமுகம் ஆகி அதன் பிறகு பல தமிழ் திரைப்படங்களில் நடித்தவர் நடிகர் நகுல். இவர் கடந்த 2016 ஆம் ஆண்டு தனது நீண்ட நாள் காதலியான ஸ்ருதி பாஸ்கர் என்பவரை திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு 2020 ஆம் ஆண்டு அகிரா என்ற மகள் பிறந்த நிலையில் மீண்டும் அவர் கடந்த ஆண்டு கர்ப்பமானார். இந்த நிலையில் தனது இரண்டாவது மகனை அவர் தான் ஏற்கனவே பலமுறை கேள்விப்பட்ட தண்ணீர் தொட்டிக்குள் பிரசவம் என்பதை செய்து பார்க்க வேண்டும் என்று திட்டமிட்டார். அதற்காக அவர் மருத்துவரிடம் தகுந்த ஆலோசனை பெற்று மருத்துவரின் உதவியுடன் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் தேதி ஆண் குழந்தை பெற்றார். இந்த குழந்தைக்கு அமோர் என்று பெயர் வைக்கப்பட்டது. இந்த நிலையில் தனது இரண்டாவது குழந்தையின் பிரசவம் குறித்த வீடியோவை இன்ஸ்டாகிராமில் வெளியிட்டு அதில் உணர்ச்சிகரமாக பதிவு செய்துள்ளார். தனது குழந்தைக்கு ஒரு வயது நிறைவடைந்ததை குறிக்கும் வகையில் அந்த வீடியோவை தற்போது பதிவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். அந்த வீடியோவில் ஸ்ருதி பாஸ்கர், நகுல் அருகே உட்கார்ந்து கொண்டிருக்கும் நிலையில் பெண் மருத்துவர் தண்ணீருக்குள் இருக்கும் அவருக்கு பிரசவம் பார்க்கிறார். இந்த காட்சிகள் பார்ப்பதற்கு பெரும் அதிர்ச்சியாக உள்ளதாக நெட்டிசன்கள் கமெண்ட் பதிவு செய்து வருகின்றனர்.




# பால்நிலைக் கல்வியும் பெண்களும்

பால்நிலைக் கல்வியும் பெண்களும் காலங்கள் மாறினாலும் தொழில் நுட்பம் தடைகளைத் தாண்டி சாதனை படைத்தாலும் தொன்று தொட்டு வந்த கலாச்சாரம் புதுமுகங்களை அங்கீகரித்துக் கொண்டாலும் மனித மனப்பாங்கும் அவனது நடத்தையும் சீராகாதவரை உள்ளங்கள் பண்படாத வரை மனிதம் தொலைத்து மனிதம் தேடித் திரியும் நல்வாழ்வு கிடைப்பதென்பது ஐயம் நிறைந்ததொன்றாகவே காணப்படுகிறது.

அந்தவகையில் இன்று எமது நாட்டில் அதிகரித்து வரும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகக் காணப்படுவது வன்முறைச் சம்பவங்களின் அதிகரிப்பாகும். இவ்வன்முறையானது பால்நிலை ரீதியாக மேலெழுந்து செல்வதைக் காணலாம். இதற்கான முக்கியமான காரணியாகக் காணப்படுவது பால்நிலை ரீதியான அறிவு சமூகத்திலுள்ளவர்களிடம் காணப்படாமையே ஆகும்.

வியறிவு கிடைக்காமையா? அல்லது பால்நிலை ரீதியிலான புரிதல் இல்லாமையா?

தற்காலத்தில் வாழும் பெண்களிடத்தில் கல்வியறிவு கிடைக்கவில்லை என்று கூற முடியாது. ஏனெனில் காலனித்துவ காலத்திலிருந்து பெண்களின் மேம்பாட்டுக்கு கல்வியும், பாடசாலைகளும் பெரும் பங்காற்றியுள்ளன. இதனால் சமூக தளத்தில் பெண்கள் பங்கு கொள்ளும் சூழல் ஓரளவு படிப்படியாக அதிகரித்தது. தொடர்ந்து பின் காலனித்துவச் சூழலில் பெண்களின் சமூகத் தகுதி கல்வியினை அடிப்படையாகக் கொண்டு மேலும் மேலும் மேம்பாடு காணும் கலாசாரமாகவும் மாற்றம் கண்டது.

இருப்பினும் பெண்கள் எப்போதும் ஆண்கள் மீது தங்கியிருப்பதற்கான கல்வியும் விழுமியங்களும் தான் பெண்கள் மீது திணிக்கப்பட்டு வருகின்றன. இன்று எத்தனையோ தொழில்கள் பெண்களால் தனித்து செய்யக் கூடியதாக இருந்ததாலும் அங்கு ஆண்களின் மேற்பார்வை என்பது வலிந்து திணிக்கப்படுகிறது. இதனடிப்படையில் நோக்குவோமாயின் பெண்களுக்கு எங்கு சென்றாலும் வன்முறை நிகழ்த்தப்படுவதற்கு முக்கிய காரணம் அவர்களுக்கு பால்நிலை ரீதியிலான அறிவு பாடசாலைக் கல்வி முறையில் வழங்கப்படாமையே ஆகும்.

இதனடிப்படையில் பால்நிலையும் கல்வியும் தொடர்பான ஆழ்ந்த அறிவினை சமகாலக் கல்வியுலகம் வேண்டி நிற்கிறது. கல்வி நிர்வாகமும் கல்வித் திட்டமிடலும் பால்நிலைச் சமத்துவத்தின் மீது இன்று அதிக கவனம் செலுத்தி வருகின்றது. அந்தவகையில் இலங்கையைப் பொறுத்தவரையில் பாடசாலை பாடத்திட்டத்தில் பாலியல் கல்வியை உள்ளடக்குவது இன்றியமையாதது என இராஜாங்க அமைச்சர் டயனா கமகே அண்மையில் தெரிவித்திருந்தார். இருப்பினும் பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்த வண்ணமே உள்ளது. இதற்கு காரணம் பெண்களுக்கு கல்வியறிவு கிடைக்காமையா? அல்லது பால்நிலை ரீதியிலான புரிதல் இல்லாமையா?

இன்றும் பெரும்பாலும் பாடசாலைக் கல்வியில் பால்நிலை தொடர்பான விளக்கம் வழங்கப்படுவதில்லை என்பதே யதார்த்தமான உண்மையாகும். வெறுமனே ஆரம்பப் பிரிவுக் கல்வியில் நல்ல தொடுகைஇ கெட்ட தொடுகை பற்றி மட்டுமே கற்றுக் கொடுக்கப்படுகிறது. பின் வளர்ந்து வரும் போது பதின்ம வயதுப் பாடத்திட்டத்திலுள்ள பாடங்கள் முறையாகக் கற்பிக்கப்படுவதில்லை. குறிப்பாக பின்தங்கிய கிராமப்புற பாடசாலைகளில் பால்நிலைக் கல்வி தொடர்பான பாடத்திட்டங்கள் தொட்டுக் கூடப் பார்க்கப்படுவதில்லை.

அந்தவகையில் ஆண், பெண் இருவரும் சேர்ந்து படிக்கும் கலவன் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்தப் பாடத்தை எப்படி மாணவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதென்றும்இ ஆண் மாணவர்கள் மட்டும் கற்கும் பாடசாலையில் கற்பிக்கும் பெண் ஆசிரியர் இதனை மாணவர்களுக்கு எப்படிப் புரிய வைப்பதென்றும் அதே போல் பெண்கள் மட்டுமே படிக்கும் பாடசாலையில் கற்பிக்கும ஆண்; ஆசிரியர்கள் இதனை எப்படி பெண் பிள்ளைகளுக்கு கூறுவதென்று குறித்த பாடத்திட்டத்தை கற்பிக்காமலேயே தவிர்த்துவிடுகின்றனர்.

மாணவர்கள் அதனை ஆசிரியரிடம் கேட்கும் போது கூட வீட்டில் உங்கள் பெற்றோரிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள் என்று கூறி தவிர்த்துவிடுகின்றனர். இதனால் பால்நிலை ரீதியான அறிவு மாணவர்களுக்குக் கிடைக்காமலேயே போகிறது. இதனால் பதின்ம வயதுப் பெண் பிள்ளைகள் நாளுக்கு நாள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். நமது சமூகத்தின் இருமைக் கண்ணோட்டத்தில் ஆண்கள் எப்போதும் மேலோங்கியவர்களாகவே காணப்படுகின்றனர். இதனால் பெண்களே எப்போதும் பாதிக்கப்படுபவர்களாகக் காணப்படுகின்றனர்.

மரபுவழியில் வந்த சில சமூகக் கட்டமைப்புக்கள் பெண்கள் மீதான வன்முறையை வலிந்து திணிக்கும் ஒன்றாக் காணப்படுகிறது.

தொடர்ச்சி அடுத்த வாரம்...

# இன்றைய பெண்களும் சம உரிமையின் நிலையும்

ஆரம்பகாலங்களில் பெண்கள் வீட்டுவேலை செய்வதற்கும், திருமணம் முடித்து பிள்ளைகள் பெற்று குடும்பமென வாழ்வதற்கும் மட்டுமே என்கின்ற நிலையில் வைத்திருந்தனர்.

"அடுப்படியில் உள்ள பெண்களுக்கு படிப்பு எதற்கு"? என்று கேட்ட காலமது. அதுமட்டுமில்லாமல் சிறு வயதிலேயே பெண் குழந்தைகளுக்குத் திருமணம் செய்து கொடுத்து விடுவார்கள். அந்தப் பெண் குழந்தைக்கு திருமணம் என்பது யாதென தெரியாமல் விளையாட வேண்டிய வயதில் குடும்ப பாரத்தை சுமந்து வாழவேண்டிய வயதில் இறந்திருந்தனர்.

துணை இறந்துவிட்டால் அந்தப் பெண் தனக்கு என்ன நடந்தது என்று தெரியாமலேயே விதவையாக வீட்டில் வைக்கப்படுவாள். பூவிழந்து, பொட்டு இழந்து நல்ல காரியங்களுக்கு முன் நிற்காமல் ஒதுக்கி வைத்து

வீட்டிலிருந்து வெளியில் சென்றால் கணவன் இல்லாப் பெண்கள் முன்னே வருவது அமங்கலம் என்று பல சவால்களை எதிர் கொண்ட இனமே பெண்ணினம்.(விதவை பெண்களை மங்கள காரியத்தில் ஒதுக்கி வைத்தல், நல்ல காரியங்களுக்கு அழைத்து செல்லாமை என்பனவற்றுக்குக் காரணம் கணவனை இழந்தப் பெண் மனதில் நெருடல் வரக் கூடாது, தன் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே என்று நொந்து விடக்கூடாது என்பதற்காகச் செய்த ஏற்பாடுகள் என்கிற விளக்கம் இருக்கிறது. அதை வேறொரு கட்டுரையில் பார்க்கலாம்.)

காலத்திற்குக் காலம் யாரோ ஒருவர் பெண்களுக்காகக் குரல் கொடுக்க ஆரம்பிக்க சமுதாயத்தில் நிறைய மாற்றங்கள் வந்து விட்டன. பெண்களுக்காகக் குரல் கொடுத்தவர்களின் முயற்சியில் எழுச்சி ஏற்றப்பட்டுள்ளது என்றே கூறலாம்.

ஆரம்ப காலங்களில் ஆண்களுக்கு ஒரு ஊதியமும் பெண்களுக்கு ஒரு ஊதியமும் என இருந்தது. கல்வி கற்றல் பெண்களுக்கு மறுக்கப்பட்டது. சில தொழில்களை ஆண்கள் மட்டுமே செய்யவேண்டும் என்றும், அவை பெண்கள் செய்யத் தகுதியற்றவை என்றும் கணிக்கப்பட்டது.

பெண்களுக்கான வேலைகளை இவை இவையென தனித் தனியாகப் பிரித்து வைத்திருந்தனர். ஆண், பெண் வேறுபாடு அதிகம் இருந்தது.

அதிகம் சிரிக்கக் கூடாது, தனியே போகக் கூடாது, ஆண்களுடன் பேசக் கூடாது, ஆண்களுக்கு எதிரில் நிற்க கூடாது, வீட்டில் ஆண்கள் உணவருந்தியப் பின்னே பெண்கள் உண்ண வேண்டும் என்றெல்லாம் ஏகப்பட்ட கட்டுப்பாடுகள். அப்பப்பா......

சொல்ல முடியாத, இன்று வாசிக்க உடல் நடுங்கும் கட்டுப்பாடுகள் பெண்களுக்கென இருந்தது.

ஆனால் இன்று பெண்கள் நுழையாத துறைகளே இல்லை எனலாம். யாருக்குத் திறமை இருக்கிறதோ, அவர்களுக்கே சந்தர்ப்பம் உண்டு என்று இந்த சமுதாயம் முன்னுரிமை கொடுக்கிறது.

அது போலவே பெண்களின் பங்களிப்பு மிக ஆர்வமாக இருக்கிறது என்றே கூறவேண்டும். கற்றுக் கொள்வது தொடங்கி, தங்களின் உரிமைகளைத் தக்க வைத்துக் கொள்வது வரை பெண்கள் முன்னேறிக்கொண்டு போகிறார்கள்.

பெண்கள் என்றால் போதைப் பொருளாகப் பார்க்கும் கூட்டம் இன்னும் ஒழிந்து விடவில்லை. ஆனாலும் குறைந்துள்ளது.



அக்காலங்களில் பெண் ஆண்களை நிமிர்ந்து நோக்குவது ஒரு கூடாத செயலாகக் கூறப்பட்டது. ஒரு பெண் ஒரு ஆணுடன் நட்போ, காதலோ கொள்ள முடியாது. அப்படி நடந்து விட்டால் பெண்ணைப் பெற்ற குடும்பங்கள் ஒதுக்கி வைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர் அல்லது காலம் முழுவதும் அவமானத்தில் கூனிக் குறுகிப் போயினர்.

இதனால் பெண்பிள்ளைகள் வளர்ப்பதை பெரும் கொடுமையாக, பாரமாக கருதினர்.

பெண் பிள்ளைகள் நல்லொழுக்கத்துடன் வளர்ப்பது அந்தக் குடும்பத்தில் கௌரவமாக மதிக்கப்பட்டது. ஆனால் அதே சமூகம் இன்று நண்பன் என்கிற ஆண் உறவை நம்பிக் கையோடு தங்கள் பெண்பிள்ளைகளுடன் அனுப்பி வைக்கும் ஒரு உறவாக தெரிவு செய்துள்ளது சிறப்பே .

அநேகமாக நகர்ப் புறங்களில் கல்வி, தொழில், நட்பு என்கிற சமத்துவம் ஓரளவு வளர்ந்து விட்டது.

பல கிராமங்களில் இன்னும் பழமையில் இருந்து மாறாமல் இருக்கிறது.



கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...

# சர்வதேச ராஜதந்திரிகள் மாநாடு














*International Diplomats" எனப்படும் சர்வதேச மாதிரி ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச ராஜதந்திரிகள் மாநாடு இம்முறை இந்தியாவின் கோவாவில் இடம்பெற்றது.*

*இதில் "International Diplomats" இன் Head of Ambassadors ஆகவும் Business World International அமைப்பின் Director General ரகு இந்திரகுமார் கலந்து கொண்டு ஜெர்மனி சார்பில் இலங்கையனாக உரையாற்றினார். இதில் பசியின்மை குறித்த விவாதம் நடைபெற்றது. இதில் பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்த இளம் தலைவர்கள் உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.*

*பெரும்பாலான பிரதிநிதிகள் ஆசிய நாடுகளிலிருந்து வருகை தந்திருந்ததோடு சர்வதேச நாடுகளிலிருந்தும் பல பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.*









Sri Lanka Smart Youths அமைப்பினால் நடத்தப்பட்ட "யார் நீ? சாதனையின் தடம்" என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்ட மாபெரும் ஊக்கமளிக்கும் தலைமைத்துவ பயிற்சிப்பட்டறை தினகரன், வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் கொட்டகலை பிரதேசத்தில் அண்மையில் நடாத்தப்பட்டது, இளைஞர்களை சிறந்த தலைமைத்துவ பண்புள்ள பிரஜைகளாகவும் சமூக பொறுப்பு மிக்க தலைவர்களாகவும் மாற்றுவதே இதன் நோக்கமாகும்... இந்நிகழ்வானது அமைப்பின் தலைவர், பணிப்பாளர் சுந்தரம் வினோத் சுந்தர் தலைமையில் இடம்பெற்றது.

## ஆழி மகன்... (04 ஆம் பக்கத் தொடர்)

ஏற்கனவே என்னுடை ய பயிற்சி ஆசிரியரான றொஸான் அபேயசுந்தர இதே பாக்குநீரிணையில் இருவழி நீச்சலை 28 மணித்தியாலயங்கள், 19 நிமிடங்கள், 43 செக்கன்களில் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளார். இதனை நான் முறியடிக்க வேண்டும். அதற்கு முன்பு, ஆழிக்குமரன் ஆனந்தன் 1971 இல் பாக்குநீரிணையை இருவழி நீச்சலில் 51 மணித்தியாலங்கள் எடுத்துச் சாதனை செய்திருந்தார். அந்தச் சாதனை கடந்த 50 ஆண்டுகளாக யாராலும் முறியடிக்கப்படாமல் இருந்தது.அதை றொஸான் முறியடித்தார். ஆரம்பத்தில் மு. நவரத்தினசாமி என்பவர் 1954 மார்ச் 26 இல் பாக்குநீரிணையை நீந்திக் கடந்திருந்தார். அப்பொழுது அவருக்கு வயது 44. அவர் நீச்சலுக்கு எடுத்துக் கொண்ட நேரம், 27 மணித்தியாலங்கள்.


இப்படியே இந்தச் சாதனைப் பட்டியல் உள்ளது. நான் இவர்கள் எல்லோரையும் விட வயதில் சிறியவன். நான் நீந்தி வந்தபோது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா, மன்னார் மாவட்ட சாரணர் இயக்க ஆணையாளர் திரு. ஸ்ரான்லி டிமெல் லம்பேர்ட், வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சார்ள்ஸ் நிமிலநாதன், வினோநோகராதலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் (ஜனா) எனப் பலர் வரவேற்றனர். என்னுடைய இந்தச் சாதனையை அறிந்த என்னுடைய பாடசாலைச் சமூகம் பெரிய மகிழ்ச்சியை அடைந்தது. அவர்கள் பெரிய வரவேற்பைத் தந்தனர். மாவட்ட மக்களும் அப்படித்தான், ஆதரவளித்தனர். உறவினர்கள், ஊடகங்கள் எல்லாம் என்னைப் பெருமைப்படுத்தினார்கள். இப்பொழுது நான் மாசற்ற கடலைப்பற்றி அதிகமாகச் சிந்திக்கிறேன். அதைப்போல நீச்சலில் பல சாதனைகளைச் செய்ய வேண்டும். ஆங்கிலக் கால்வாயையும் நீந்திக் கடக்க வேண்டும். தொடர்ந்து கடல் சம்மந்தமாகவே படிக்க விரும்புகிறேன். நான் படித்தது கணிதத்துறைதான். என்றாலும் கடலில் பல விடயங்களைப் படிக்கலாம் என எண்ணுகிறேன். கடலில் பல சாதனைகள் செய்யலாம். இந்தப் பூமியில் கடல்தான் அதிகம் வியப்பூட்டுவது. பூமியின் பெரும்பகுதியும் கடலாகத்தானே உள்ளது.


## நிறம் தீட்டுங்கள்




## வழிகாட்டுங்கள்






## 5 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



# தென்கிழக்கின் இலக்கியப் பரப்பில் வளர்ந்து வரும் இலக்கிய, ஊடக ஆளுமை மருதமுனை ஹைறுன்னிஸா

தென்கிழக்கின் கலை, இலக்கியப் பரப்பில் வளர்ந்து வரும் இலக்கிய, ஊடக ஆளுமையாக மருதமுனை ஹைறுன்னிஸா முஹம்மது இஸ்மாயில் திகழ்கின்றார். கதை,கவிதை,கட்டுரை,பாடலாக்கம் மற்றும் செய்திகளை எழுதுவதில் ஆற்றல் மிக்கவராக இவர் செயற்படுகின்றார். ஒவ்வொருவரின் வெற்றிக்கு பின் யாரோ ஒருவர் இருப்பது போல் இவரது வெற்றிக்குப் பின் கணவரும் இவரது குடும்பமும் இவருக்கு உறுதுணையாகவும் ஊக்குவிப்பவர்களாகவும் இருந்து வருகின்றார்கள்.இவரது கணவரின் ஒத்துழைப்பினாலேயே இவரது வெற்றிப்பயணம் தொடருகின்றன என்பது குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

முஹம்மது இஸ்மாயில் ஹைறுன்னிஸாவாகிய இவர் நிஸா இஸ்மாயில் எனும் பெயரில் தற்போது ஆக்கங்கள் எழுதி வருகிறார்.மருதமுனை நிஸா என்ற பெயரில் எழுத்து துறையில் அறிமுகமாகிய இவர் சுமார் ஆறு வருடங்களாக கவிதை,கட்டுரை,சிறுகதை,பாடலாக்கம் போன்ற ஆக்கங்களை எழுதி வருகின்றார். அம்பாரை மாவட்டத்தில் கல்முனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மருதமுனை கிராமத்தில் வசித்து வரும் முஹம்மது இஸ்மாயில்,ஹதீஜா தம்பதிக்கு 1987.07.19ஆம் திகதி மூத்த மகளாக பிறந்தவர் ஹைறுன்னிஸா.

இவர் சம்மாந்துறை வீரத்திடல் அல்ஹிதாயா மஹா வித்தியாலயத்தின் பழைய மாணவி.பாடசாலைக்காலத்தில் இருந்தே கலை,இலக்கியத் துறையில் அதிக ஆர்வம் கொண்டவராய் இருந்து வருகின்றார்.இவர் சிறுவயது முதல் நடனத்தில் ஆர்வம் காட்டினார்.. சிறுவயதில் இருந்தே நடனங்கள் ஆடி ரசிகர்களின் கவனததை ஈர்த்து பல பரிசில்களைப் பெற்றுள்ளார். பின்னர் குறிப்பிட்ட காலத்தோடு நடனத்தில் இருந்து விலகி. பாடசாலையில் விளையாட்டுப்போட்டிகளில் தன்னை ஈடுபடுத்தி 100 மீட்டர்,அஞ்சல் ஓட்டம் போன்ற விளையாட்டுக்களில் 19972000 ஆண்டுகள் வரை சிறந்த இடங்களையும் பெற்றுள்ளார்.

அணிவகுப்பு,உடற்பயிற்சி போன்ற விளையாட்டுக்களிலும் 2001ஆம்,2005 ஆம் ஆண்டுகள் வரை தலைமை தாங்கி வழிநடத்துனராகவும் இருந்துள்ளார். (உடற்பயிற்சி நிகழ்ச்சி போட்டியில் திருகோணமலை மாவட்டம் வரை சென்றுள்ளார்) அத்தோடு 2002ஆம்,2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிகளவான பாடல்களையும் பாடியுள்ளார்.



இவரது பாடசாலை கீதம் இவரால் பாடித்தான் ஆரம்பித்து வைக்கப்பட்டது .இன்றுவரை அதே பாடசாலைகீதம்தான் இசைக்கப்பட்டுவருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். பல நாடகங்களில் இவர் நடித்துள்ளதோடு நகைச்சுவை நாடகங்கள்,யதார்த்தமான நாடகங்கள்,ஆங்கீலம்,தமிழ் மொழி மூலமும் நாடகங்களில் நடித்து மாவட்ட மட்டம்,மாகாண மட்டங்களில் சிறந்த பரிசில் வென்றுள்ளார்.

இவரது எழுத்து துறைக்கு ஆரம்பமே 2003 ஆம் ஆண்டு சாதாரண தரம் கற்கும் போது தமிழ் தின போட்டியில் கலந்து கொண்டு கவிதை எழுதி இரண்டாம் இடம் கிடைத்ததைத் தொடர்ந்து சின்ன சின்ன கவிதைகளை எழுதிவந்துள்ளார். தன் பாடசாலையே இவர் கலைக்கு வித்தென்றால் மிகையாகாது. பின்னர் இவர் பாடசாலைக்காலம் முடிந்ததும் எழுத்துறையில் அதிக ஆர்வம் கொண்டமையினால் சிறிது சிறிதாக எழுத ஆரம்பித்துள்ளார்.

இவரது எழுத்துக்கள் இலைமறை காயாக இருந்துள்ளன .ஊடகங்களுக்கு வெளியிட ஆர்வம் இருந்துள்ளமையினை அறிந்த இவரது கணிதப்பாட ஆசிரியர் இவருக்கு ஊக்கமும் வழிகாட்டலும் வழங்கினார். இவரது கன்னிக்கவிதையை அல்ஹஸனாத் மாதாந்த சஞ்சிகையில்'மனமே மாறிவிடு" எனும் பெயரில் 2016 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

மீண்டும் அல்ஹஸனாத்திற்கே எழுதினார். 2018 ஆம் ஆண்டு'இரை தேடும் அந்த நுளம்பு" எனும் இரண்டாவது கவிதை வெளிவந்துள்ளது.பின்னர் இடைவெளி விட்டு மெட்ரோ நியூஸ் பத்திரிகைக்கு எழுதினார்.பத்திரிகைகளில் தன் எழுத்துக்கள் வெளிவந்ததை பார்த்து ஆர்வம் கொண்ட இவர் தொடராக பத்திரிகைக்கு எழுத ஆர்வம் கொண்டார்.அதன் விழைவாக இவரது கவிதைகள்,சிறுகதைகள் பத்திரிகையில் தொடராக வெளிவர சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர் உறுதுணையாகவும்,உதவியாகவும் இருந்ததாகத் தெரிவித்தார். இவது ஆக்கங்கள் நவமணி, தினகரன், விடிவெள்ளி, தமிழன்,எங்கள் தேசம் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அத்துடன் இன்றுவரை இவரது எழுத்துக்கள் பிறை எப்.எம்.வானொலியிலும் ஒலிபரப்பாகியுள்ளமை குறிப்பித்தக்கதாகும். கவிதைகளோடு மட்டும் நின்று விடாமல் சிறுகதைகளையும்,கட்டுரைகளையும் எழுதிவருகின்றார்.புகைப் படங்கள் எடுப்பதிலும் ஆர்வம் கொண்டவர்.

அரச போட்டிகளிலும் பங்குபற்றி பெற்ற வெற்றிகள்.

மாவட்ட மட்ட பாடலாக்கப் போட்டி 2018; முதலாமிடம்.பிரதேச மட்ட சிறுகதை போட்டி 2019, முதலாமிடம், பிரதேச மட்ட கவிதைப் போட்டி 2019இரண்டாமிடம், பிரதேச மட்ட கவிதைப் போட்டி2020இரண்டாமிடம். ஏனைய தனியார் நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளார்.2021புகைப்பட போட்டி முதலாமிடம்,கவிதை இரண்டாமிடம்,சிறுகதை மூன்றாமிடம், 'முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி" நடாத்திய 'போதைவஸ்த்து பற்றி ஊடகங்களுக்கு அறிக்கையிடுதல்"எனும் போட்டியில் சிறுகதையில் முதலாமிடம் பெற்றுள்ளார். இவை தவிர ஊவா சமூக வானொலி 2021,உள்ளீட்ட பல கவியரங்குகளில் பங்குபற்றி கவிதைகளை வாசித்துள்ளார்.இவருக்கு கலாசார திணைக்களத்தின் ஊடாக கல்முனை பிரதேச செயலகத்தால் அரச விருதான "சுவதம் விருது2021"வழங்கப்பட்டுள்ளது.இவர் மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டத்தின் செயலாளராக செயற்படுவதுடன் பல இலக்கிய அமைப்புக்களில் இணைந்து செயற்படுகின்றார்.

ஊடகத்துறையில் உள்ள ஆர்வத்தினால் 2019ஆம் ஆண்டு தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இதழியல் டிப்ளோமா கற்கை நெறியையும் பூர்த்தி செய்துள்ளார்.பத்திரிகைகளுக்க செய்திகளையும் எழுதிவருகின்றார் என்பது குறிப்பித்தக்கது.இப்போது இணையத்தளம் ஒன்றில் உதவி செய்தி ஆசிரியராக வும் பணிபுரிகின்றார்.இவரது கலை, இலக்கியப் பணி தொடர வாழ்த்துகின்றோம்.









**– கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர்**
**(மருதமுனை தினகரன் நிருபர்)**

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

Whatsap: 0714901181

# தமிழ் மொழித்தினப் போட்டி

அகில இலங்கை ரீதியில் கல்வியமைச்சு நடாத்தும் தமிழ் மொழித்தினப் போட்டிகள் பாடசாலைகளிலிருந்து தமிழ் சார் ஆற்றல்களை மேலெழுப்பும் களம்தான்.

சுற்று நிருபத்தினூடாகக் கட்டமைக்கப்படும் போட்டிகள் தமிழின் கலை, இலக்கியம், இசை, உரை போன்ற பல்வேறு துறைகளில் மாணவச் செல்வங்களின் ஆற்றல்களை மதிப்பிடுகிறது. அதுமட்டுமல்லாது அவர்களை அத்துறைகளில் காலூன்றுவதற்கான தளமாகவும் அமைகிறது.

இத்தகைய வாய்ப்பைச் சகல பாடசாலைகளும் சகல மாணாக்கரையும் முன்னிறுத்தி இயங்குகிறதா என்பது பெருங் கேள்வி. அவ்வாறு அரோக்கியமான ஆற்றுப்படுத்துகையொன்று நிகழுமாயின் எதிர்காலத்தில் கலை இலக்கியத் தளம் விரிவடைவதற்கு பாடசாலை மட்ட தமிழ் மொழித்தினப் போட்டிகள் வழிகோலும்.




இதற்கான ஏற்பாடு நிகழ்வுகளை துறைசார் ஆசிரியர்களைக் கொண்டு பாடசாலை நிர்வாகமும் சமூகமும் முன்னெடுக்க வேண்டும். சில பாடசாலைக் களங்கள் இதன் மீது கவனங் குவித்து தேசிய மட்டத்தில் முன்னெழ பல பாடசாலைக் களங்கள் பின்னகர்ந்து விடுகின்றன. இந்நிலை ஆரோக்கியமான பரவலான தமிழ் வளர்ச்சிக்கு ஏற்புடையதல்ல என்பதனை இது சார்ந்தோர் உணர வேண்டும்.

உரையாடல் = ஒத்தாடல் + எதிர்த்தாடல்

உரையாடல் ஆரோக்கியம் நமது இலக்கியப் புலத்தின் விரிதளங்களைக் கண்டடையுமென மறுசொல் நம்புகிறது. உரையாடலொன்றில் நவீன கவிதை வாசகர் மீது வாசிப்பதிகாரத்தைக் கட்டமைக்கிறதா என்கிற எழுவினாவை எழுப்பியிருந்தோம். உண்மையில் அன்றும் இன்றும் படைப்பு வாசகரின் வாசிப்பு மீது எத்தகைய நிலையை அல்லது வாசிப்பு முறைத் தாக்கத்தைச் செலுத்தி வருகிறது என்பது தொடர்பில்



ஒரு பிரதி வாசகர் மீது அதிகாரம் செய்கிறது என அடையாளப்படுத்தப்படுகிறது. ஆனால் அந்த அதிகாரம் ஒரு பிரதி கொண்டிருக்கும். அரசியலுக்கு எதிர் அரசியல் மீதான அதிகாரம். அதனால் தான் இன்றைய யுகத்தில் ஒரு

## உரையாடல் = ஒத்தாடல் + எதிர்த்தாடல்

ஒத்த/ எதிர்த்த கருத்துக்களுண்டு.

மூத்த கவி மேமன்கவி அனுப்பிய குறிப்பொன்றை மறுசொல் நன்றியுடன் பதிவு செய்கிறது.

இன்றைய யுகத்தில் எல்லாமே பிரதிகள்தான். அது ஓர் இசைக்குறிப்பாக இருப்பினும், ஓர் ஓவியமாக இருப்பினும், ஒரு கவிதையாக இருப்பினும் கவிதைப் பிரதி ஒரு சிருஷ்டி பிரதி என்பார்கள். ஆனால் உன்னத நிலையில், தியான நிலையில் ஒரு பிரதியில் பிறக்கிறது என்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. வேண்டுமானால் மின்னலெனப் பிறக்கிறது என்று சொல்லலாம்.

இன்றைய நிலையில் ஒரு படைப்பாளி (பெண்ஆண் இருபாலாரும்) ஏதோ வகையில் ஓர் அரசியலை கொண்டிருக்கின்றார்கள். இங்கு அரசியல் என்று நாம் குறிப்பிடுவது கட்சி அரசியல் அல்ல. பெண்ணிய அரசியல், விளிம்புநிலை மக்களின் அரசியல், சாதிய அரசியல் போன்ற பல அரசியல்கள் இருக்கின்றன என்பதை இளம் வாசிப்பார்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பிரதி ஆயுதமாகுகிறது. அந்த வழியில் ஒரு பிரதி படைக்கப்படுகிறது என்பதை விட, அது தயாரிக்கப்படுகிறது. இந்தத் தயாரிப்பு என்பது பொருளியல் சார்ந்த ஒரு பண்டம் கொண்டிருக்கும் தயாரிப்புத் தன்மை கொண்டது அல்ல.

இன்றைய யுகத்தில் ஒரு படைப்பாளி தனது பிரதியைப் பொது வெளிக்கு வாசிக்க வைக்கும் பொழுது, அப்பிரதிக்கான வாசகியோ, வாசகனோ விமர்சகராக மாறுவார். (வாசக விமர்சனம்). கொடுக்கப்பட்ட பிரதியினூடாக வாசகியோ, வாசகனோ தனக்கான பிரதியை உருவாக்குவார். அந்த உருவாக்கத்தின் பொழுது தான் இறந்து விடும், சாத்தியம் இருக்கிறது என்பதை ஒரு படைப்பாளி நினைவில் நிறுத்திக் கொள்வது நல்லது.


# விதிக்கப்பட்ட கதை 4

எஸ். எல்.எம் என இலக்கியப் புலத்தில் அறியப்பட்டவர் எஸ்.எல்.எம்.ஹனிபா என்கிற எழுத்தாளுமை.

எஸ்.எல்.எம் இன் பெயர் கூறும் போதே ஞாபகத்தில் வந்து அவரது நாமத்துக்கு அடைமொழியாகி விடுவது 'மக்கத்துச் சால்வை''

மக்கத்துச் சால்வை எஸ்.எல்.எம்மின் கதையெழுத்தின் உச்சம்;. அவருக்கேயான எழுத்துப்பாணி; கிராமத்தின் வாசம் குலையாத பெறுமானம்;. காலங்கடந்தும் போற்றப்படும் பண்பாட்டு அடையாளம்.






கிழக்கிலங்கை ஓட்டமாவடியின் மூத்த படைப்பாளுமை எஸ்.எல்.எம். மக்கத்துச் சால்வை, அவளும் ஒரு பாற்கடல், எண்ட சீவியத்தில, உள்ளிட்ட ஆளுமைப் படைப்புகளைத் தந்தவர்.

1991இல் எழுதப்பட்ட மக்கத்துச் சால்வை கதை. ஒரு சமூகத்தின் கலாசாரத்தையும், அதனடியாகத் தோன்றும் அதிகாரத் தனத்தையும், அதன் பிரதிபலிப்பையும், நியாயம் காலங்கடந்தும் வெல்லும் என்கிற தத்துவத்தையும் பேசுகிறது. 'வறுமையாலும் வைராக்கியத்தாலும் என்னை வளர்த்தெடுத்த உம்மாவுக்கும் வாப்பாவுக்கும்'' சமர்ப்பிக்கப்பட்டுள்ள மக்கத்துச் சால்வை தொகுப்பில் தொண்ணூறுகளின் முதற்கூறில் எழுதப்பட்ட மக்கத்துச் சால்வை எஸ்.எல்.எம். அவர்களின் ஆளுமையின் அடையாளம் எனலாம்.

இத்தொகுப்பில் எஸ். பொமுன்னீடு காத்திரமானது 'ஹனிபா தனக்கென ஒரு பார்வையையும், பாணியையும் வகுத்துள்ளார். இவற்றின் மூலம் மட்டக்களப்புக் கதைக்கலையை இன்னொரு வளர்ச்சிக் கட்டத்துக்கு மேம்படுத்தியுள்ளார்'' என்கிறார்.

மக்கத்துச் சால்வை கதையில் பெறும் முக்கியத்துவம் கதாபாத்திரங்களினது உணர்வுகளூடாகவும், முரண்பாடுகள், இணக்கப்பாடுகளூடாகவும் முதன்மையுறுகிறது.

கதையின் தொடக்கமும், அதன் விறுவிறுப்பான போக்கும், கதாசிரியரின் மொழியாடல், பேச்சாடல், கதாபாத்திர வார்ப்பு, உணர்வுத் தெறிப்புகளில் வாசக மனசைப் பற்றுகின்றன.

மம்மனிவா, நூகுத்தம்பி, அகுமது லெவ்வை அண்ணாவியார், விதானையார், மத்திச்செம், அண்ணாவியாரின் மனைவியென கதை மாந்தர்களின் உணர்வுப் பெருக்கமாக மக்கத்துச் சால்வை மணக்கிறது.

சிலம்பு விளையாட்டின் மகிமையை மக்கத்துச் சால்வையால் போர்த்துகிறார் எஸ்.எல்.எம். வலோற்கரமான தர்மாவேசக் கதை சொல்லி ஹனிபா அடிபட்டிட்டு' நானும் மம்மலியும் தான் கூப்போட்டோம். மக்கத்துச் சால்வையில் ஒரு கட்டம். தலையால தெறிச்சதுகள்'' என்ற பட்டத்துடன் தர்மாவேசம் நின்று விடவில்லை. அதன் விடியலுக்கு எத்தனை ஆண்டுகள் காத்திருத்தல் முடியும். நூகுத்தம்பி தோற்கவும் நுட்பம் அப்படித்தான் பிரசார கனிபுகாத நேர்த்தியில் இருவருக்கிடையே வர்க்க முரண்பாடு பிரஸ்தாபிக்கப்படுகிறது என முன்னீடு எழுதுகிறது.


மக்கத்துச் சால்வை கதையோட்டம் 'என்ன தம்பியோசிக்கிறாய்''என்ற நூகுத்தம்பியின் கேள்வியோடு மம்மனிவின் சிந்தனை கலைகிறது.

'எங்கட நாத்தப்பிலாலுக்கு கிலோ நூறு ரூபா டமனெஅடரிசிவிலயக் காட்டிலும் அஞ்சி மடங்கு கூடிற்றா''சமூகத்தட்டின் முரண் கதையில் இத்தனை உணர்வுகளுக்கும் காரணமாகிறது.

'பேராண்மையென்பதறுகண்....'' குறள் பொருளை எஸ்.எல்.எம்.அழகுறக்கையாள்கிற கட்டம் கதையில் மானுடப்பண்பின் உயர்ச்சியை அடிக்கோடிடுகிறது.

முப்பது வருடத்தின் பின் மீண்டும் சிலம்படி போர். நூகுத் தம்பிக்கும் அகுமது லெவ்வை அண்ணாவியாருக்கும். ஒரு கட்டத்தில் அண்ணாவியாரின் கண்ணாடி கழன்று விழுகிறது. 'கண்பார்வை புகைச்சல் போல இவருடன் நான் மோதுவது நீதியில்ல'' என நூகர் எண்ணுவதும், தனக்கு கண்பார்வை தெளிவாகத் தெரிவது இறை பரிசுமென மகிழ்வதும் குறள் பொருளுடையது.

மக்கத்துச் சால்வை எஸ்.எல்.எம். ஹனிபா என்கிற மண்ணும் மணமுமான மனசுக்காரனின் உணர்வெழுத்தின் வாசம்.



## மனம் வஞ்சமுகம்

இளவன் கவிதை

எல்லா முகமும் கடைந்தெடுத்த முகமாகி நின்றது கடுகடுப்பு
எதிர்ப்பின் விஷத்தை வார்த்தைகளில்
கரைத்தெடுத்த கணம்
என் இயல்பு மௌனத்தின் மீது படமெடுத்தது யாரிவர்கள்
தம் சுயத்தின் மீது அம்மணம் பூசும் சேற்றுக் கறைகள்
எதற்குமிவர்கள்
நல்லமைமீது பலி மாலை சூடும் முட்கரங்கள்
எனது மௌனத்தின் நாவு
வரள்வதில்லை
அறியட்டுமவர்கள்
அநியாயங்களின் மிதத்தலென்பதன்
அர்த்தத்தை
அல்லது
சுயத்தை
எல்லா முகமும் ஒன்றான பொழுது கரைந்து
என் காலடியில் துடித்தது

# நீர்க்குமிழியில் அறிமுகமான கே. பாலா

கைலாசம் பாலச்சந்தர் (K. Balachander, கே. பாலச்சந்தர், ஜூலை 9, 1930 டிசம்பர் 23 , 2014) தமிழ்த் திரைப்பட இயக்குனர் ஆவார். கே. பாலசந்தர் எனப் பொதுவாக அழைக்கப்படும் இவர் மேடை நாடகத் துறையில் இருந்து திரைத்துறைக்கு வந்தவர். திரைத்துறையில் 1965ம் ஆண்டு வெளியான நீர்க்குமிழி இவரது முதல் இயக்கமாகும். நாகேஷ் இதில் கதாநாயகனாக நடித்தார். இவருடைய பெரும்பாலான படங்களில், மனித உறவு முறைகளுக்கு இடையிலான சிக்கல்கள், சமூகப் பிரச்சினைகள் ஆகியவையே கருப்பொருளாய் விளங்கின. அபூர்வ ராகங்கள், புன்னகை மன்னன், எதிர் நீச்சல், வறுமையின் நிறம் சிகப்பு, உன்னால் முடியும் தம்பி முதலியன இவர் இயக்கிய சிறந்த படங்களில் சிலவாகும். தமிழ்த் திரையுலகின் முக்கிய நடிகர்களான கமல் ஹாசன் மற்றும் ரஜினி காந்தை அறிமுகம் செய்தவர். 90களுக்குப் பிறகு கையளவு மனசு போன்ற பெரும் வரவேற்பை பெற்ற தொலைக்காட்சித் தொடர்களையும் இயக்கினார்.

இவரது சொந்த ஊர் நன்னிலம் அருகேயுள்ள நல்லமாங்குடி. தந்தை கைலாசம் தாயார் காமாச்சியம்மாள். தந்தைக்கு கிராம முனிசிப் பணி. நன்னிலத்தில் பள்ளிப்படிப்பு. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.எஸ்சி. முடித்தார். இராம. அரங்கண்ணல் இவரது பள்ளித் தோழர். எம். எஸ். உதயமூர்த்தி இவரது கல்லூரித் தோழர். "கவிதாலயா" என்னும் திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தையும் நிறுவினார். இதன் மூலமாக பிற இயக்குனர்களின் கைவண்ணத்தில் பல திரைப்படங்களை அளித்துள்ளார். அவற்றில் நெற்றிக்கண், ராகவேந்தர், சிவா ஆகியவை குறிப்பிடத்தக்கவை.இயக்குனர் கே. பாலசந்தர்



**அறிமுகப்படுத்திய புதுமுகங்கள்**

இயக்குனர் ஸ்ரீதரைப் போலப் பல புதுமுகங்களை அறிமுகம் செய்தவர் பாலச்சந்தர். அவர்களுள் மிக உச்சத்தை அடைந்தவர் ரஜினிகாந்த். கமலஹாசனை கதாநாயகனாக்கியது பாலச்சந்தர் அல்லவெனினும், வரிசையாக அவருக்கு வாய்ப்புக்களை அமைத்துக் கொடுத்தவர் பாலச்சந்தர்.

அவள் ஒரு தொடர்கதை போன்ற சில திரைப்படங்களை முழுக்க முழுக்க புதுமுகங்களை வைத்தே இயக்கியிருந்தார். ஃபடாஃபட் ஜெயலட்சுமி, ஸ்ரீபிரியா விஜயகுமார், ஜெய்கணேஷ் ஆகியோர் அறிமுகமான இது ஒரு வெற்றிப்படமாகவும் அமைந்தது. பட்டினப்பிரவேசம் திரைப்படத்திலும், டெல்லி கணேஷ், சிவச்சந்திரன் போன்றோரை அறிமுகம் செய்தார். இதுவும் ஒரு வெற்றிப்படமே.

மேலும், பிற மொழியிலிருந்தும் சிலரை தமிழில் அறிமுகப்படுத்திய பெருமையும் இவருக்கு உண்டு. அவர்களுள் சுஜாதா (அவள் ஒரு தொடர்கதை), ஷோபா (நிழல் நிஜமாகிறது), சரத்பாபு (நிழல் நிஜமாகிறது), சரிதா (தப்புத்தாளங்கள்), பிரகாஷ்ராஜ் (டூயட்) ஆகியோர் அடங்குவர்.

வறுமையின் நிறம் சிகப்பு படத்தில் அறிமுகமான திலீப் மற்றும் நிழல் நிஜமாகிறது படத்தில் அறிமுகமான அனுமந்து ஆகியோர் எதிர்பார்த்த அளவில் திரையுலகில் முன்னேறவில்லை. பாலச்சந்தர் அவர்களை அறிமுகம் செய்த படத்தில் மிகுந்த அளவில் நற்பெயரைப் பெற்றிருந்தனர். எஸ்.வி. சேகர் (வறுமையின் நிறம் சிகப்பு) மற்றும் மௌலி (நிழல் நிஜமாகிறது) ஒய். ஜி.மகேந்திரன் (நவக்கிரகம்) மற்றும் காத்தாடி இராமமூர்த்தி (பட்டினப்பிரவேசம்) என, முன்னரே நாடக மேடையில் புகழ் பெற்றிருந்த சிலரை திரைக்கு பாலச்சந்தர் அறிமுகப்படுத்தினார். பாலச்சந்தரின் பல படங்களில் நடித்திருந்த மேஜர் சுந்தரராஜன் (மேஜர் சந்திரகாந்த்) இவ்வாறு அறிமுகமானவரே. அவரது இடுபெயரான மேஜர் என்பது இப்படத்திலிருந்தே விளைந்தது.

எம்.ஆர். ராதாவின் மகன் ராதாரவியை அறிமுகப்படுத்தியவர் இவரே.

**சுவையான தகவல்கள்**

தமது இயக்கத்தில் பாலச்சந்தர் அதிகமாகப் பயன்படுத்திய நடிகர்கள் ஜெமினி கணேசன், நாகேஷ், மேஜர் சுந்தரராஜன், கமலஹாசன் முத்துராமன் ஆகியோர். நாகேஷ் இவருக்கு மிக விருப்பமான நடிகர்களில் ஒருவராக இருந்தவர். நடிகையரில் சௌகார் ஜானகி, ஜெயந்தி, சுஜாதா, சரிதா ஆகியோரைக் குறிப்பிடலாம்.

ஸ்ரீதரைப் போல, பாலச்சந்தரும், தமது துவக்க மற்றும் இடைக்காலப் படங்களில் ஜெமினி கணேசனை வெகுவாகப் பயன்படுத்தியிருந்தார். தாமரை நெஞ்சம், இரு கோடுகள், கண்ணா நலமா, புன்னகை, வெள்ளி விழா, நூற்றுக்கு நூறு ஆகியவை அவற்றில் அடங்கும்.

இயக்குனர் ஸ்ரீதர் பல விடயங்களிலும் தமது முன்னோடி என அவர் உரைத்தது மட்டும் அன்றி, தமக்குப் பின்னர் வந்த பாரதிராஜா, மணிரத்னம் போன்றோரையும் அவர் பல நேரங்களில் பாராட்டியுள்ளார். பாரதிராஜாவின் புதிய வார்ப்புகள் திரைப்படத்தின் வெற்றி விழாவில் அவரது பாராட்டுப் பேச்சு ஒரு படைப்பாளியாக உணர்ச்சி வசப்படும் அவரது தன்மையை வெளிப்படுத்திப் பெரும் பரபரப்பை உண்டாக்கியது. 1970ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் அவர் இயக்கிய அரங்கேற்றம் என்னும் திரைப்படம், அதன் கருத்துக்காகவும், கையாளுமைக்காகவும், அது வெளியான காலகட்டத்தில் பெரும் பரபரப்பை உண்டாக்கியது.

சிவாஜி கணேசன் நடிப்பில் பாலச்சந்தர் இயக்கிய ஒரே படம் எதிரொலி. 1971 ஆம் ஆண்டு வெளியான இப்படம் தோல்வியுற்றது. பாலச்சந்தர் வண்ணத்தில் இயக்கிய முதல் படம் நான்கு சுவர்கள். ரவிச்சந்திரன் மற்றும் ஜெய்சங்கர் நடித்து 1971ஆம் ஆண்டு வெளியான இத்திரைப்படம் தோல்வியடைந்தது. இதற்குப் பின்னர், மீண்டும் கருப்பு வெள்ளைக்கே திரும்பி விட்ட பாலச்சந்தர் இயக்கிய அடுத்த வண்ணப்படம் முற்றிலும் புதுமுகங்களையே கொண்டிருந்த பட்டினப் பிரவேசம் மற்றும் அதை அடுத்து கமலஹாசன் கதாநாயகனாக நடித்த மன்மத லீலை. பாலச்சந்தர் இயக்கிய கடைசி கருப்பு வெள்ளைத் திரைப்படம் நிழல் நிஜமாகிறது.

துவக்க காலத்தில் நாடகபாணித் திரைப்படங்களை (மேஜர் சந்திரகாந்த், நீர்க்குமிழி, தாமரை நெஞ்சம்) இயக்கிய பாலச்சந்தர், நகைச்சுவையில் தமது முத்திரையைப் பதித்த படங்கள், அனுபவி ராஜா அனுபவி, பூவா தலையா, பாமா விஜயம் போன்றவை. இவை வெற்றிப்படங்களாக விளங்கிடினும், பிற்காலத்தில் பாலச்சந்தர் இயக்கிய நகைச்சுவைப் படங்களான தில்லு முல்லு (ரஜினிகாந்த் நடித்த இப்படம் இந்தியில் அமோல் பாலேகர் நடித்த கோல்மால் என்னும் படத்தைத் தழுவியது), பொய்க்கால் குதிரை ஆகியவை எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை.

நான்கு சுவர்கள் படுதோல்வி அடைந்து, விமர்சன அளவிலும் ஒதுக்கப்பட்ட அதே கால கட்டத்தில் அவரது நூற்றுக்கு நூறு வெளியாகி பெரும் பாராட்டையும் வெற்றியையும் ஈட்டியது. அரசியல் களத்தைத் தொட்டுப் பார்த்த பாலச்சந்தரின் படங்கள் தண்ணீர் தண்ணீர் (இது கோமல் சுவாமிநாதனின் அதே பெயரைக் கொண்ட நாடகத்திலிருந்து உருவானது; திரைப்படத்தின் வசனத்திற்கும் கோமல் பங்களித்திருந்தார்), அச்சமில்லை அச்சமில்லை போன்றவை.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்—15

எம்.ஜி.ஆரும் எத்தனையோ நாட்கள் தங்கமணிக்காக சைவமே போதும் என்று கூட சொல்லி விடுவார். ஒருநாள் அம்மா எம்.ஜி.ஆரை நோக்கி ராமச்சந்திரா, இன்று உனது மனைவியை அழைத்துக் கொண்டு எங்கேயாவது கோயிலுக்கு சென்று வாருங்கள் என்றார். அதற்கு எம்.ஜி.ஆர். எனக்கு எப்போதுமே கோயில், குளம், சினிமா. கடைவீதி, கடற்கரை அப்படியான இடங்களுக்கு சென்ற பழக்கம் உண்டா? அதனால் நீங்களே தங்கமணியுடன் கோயில், குளம் சென்று வாருங்கள் என்று சிரிப்புடன் கூறினார். சில மாதங்கள் கழிந்தன. எம்.ஜி.ஆர். படப்பிடிப்பு முடித்துவிட்டு வீட்டுக்கு வந்ததும் அம்மா “ராமச்சந்திரா! உனக்கு நான் ஒரு சந்தோஷமான செய்தி சொல்லப் போகிறேன்” என்றார். அதற்கு எம்.ஜி.ஆர். “அப்படியா! என்னம்மா... சொல்லுங்கம்மா....” என்றார். உடனே அம்மா “ராமச்சந்திரா! நீ ஒரு குழந்தைக்கு தகப்பனாக ஆகிவிட்டாய்” என்று மிகவும் மனமகிழ்ச்சியோடு சொன்னார். இதைக் கேட்ட எம்.ஜி.ஆர். முகத்தில் எந்தவிதமான சந்தோஷத்தின் அறிகுறியும் இல்லை. ஆனால், அதை அம்மாவிடம் காட்டிக் கொள்ளாமல் “அம்மா... ரொம்ப சந்தோஷம்” என்று சொல்லிவிட்டு தனது அறைக்கு சென்று விட்டார். அண்ணனுக்கு இரண்டு குழந்தைகள் இந்த நிலையில் இவ்வளவு சீக்கிரத்தில் நமக்கும் குழந்தையா? என்று நினைத்து எம்.ஜி.ஆர். வேதனைப்பட்டார். என்ன செய்வது? எல்லாம் கடவுள் செயல். இனி உழைப்பில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என்று எம்.ஜி.ஆர். தனக்குள் நினைத்தார். எம்.ஜி.ஆர். தனது மனைவி தங்கமணி கர்ப்பமாக இருந்த ஏழாவது மாதத்திலேயே, 'தங்கள் மகள் ஏழு மாத கர்ப்பிணியாக இருக்கிறாள்.



நீங்கள் வந்து முறைப் பிரகாரம் அழைத்து செல்லுங்கள்' என்று தாய் வீட்டுக்கு கடிதம் எழுதினார். கடிதம் கிடைத்ததும் மாமியார் வீட்டார் முறைப் பிரகாரம் செய்ய வேண்டிய முறைகளை செய்து தங்கள் ஊருக்கு மகளை அழைத்து சென்றனர். ஒருமாதம் கழிந்த பின் உங்களது மருமகள் தங்கமணி உடல் நலம் சரியில்லாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறாள். தனது கணவரைப் பார்க்க வேண்டும். உடனடியாக வர சொல்லுங்க... என்று கடிதம் ஒன்று சத்தியபாமாவுக்கு கிடைத்தது. கடிதத்தை பார்த்த சத்தியபாமா தனது மூத்த மருமகளுடன் ஆலோசனை நடத்தி படப்பிடிப்புக்கு சென்ற மகன்கள் இருவரும் வீட்டுக்கு வந்த உடனே பாலக்காட்டுக்கு புறப்படலாம் என்ற முடிவுடன் இருந்தார். அன்றிரவு ஏழு மணிக்கு வீட்டுக்கு வந்த இரு மகன்களிடமும் அந்தக் கடிதத்தைக் காண்பித்து சத்தியபாமா எம்.ஜி.ஆரை நோக்கி மகனே... என்னுடன் உடனே புறப்படு என்று கூறினார். எம்.ஜி.ஆர். கடிதத்தை வாசித்து விட்டு அம்மாவை நோக்கி நாங்கள் மூன்று நாட்களாக தொடர்ந்து படப்பிடிப்புக்கு சென்று கொண்டிருக்கிறோம். உடனே ஊருக்கு புறப்படு என்றால் எப்படி போவது? இன்னும் இரண்டு, மூன்று நாட்களுக்கு தொடர்ந்து படப்பிடிப்பு நடக்கும். எனவே உடனே புறப்படுவது கஷ்டமான காரியம். நீங்கள் உடனே புறப்படுங்க அம்மா... என கூறினார். உடனே அம்மா ஏதும் மறுப்பு சொல்லாமல் புறப்பட்டு விட்டார். கடிதத்தை பார்த்த எம்.ஜி.ஆர். மிகவும் கவலையுடன் காணப்பட்டார். இருந்தாலும் வாழ்க்கையில் தான் எடுத்த லட்சியத்தில் எம்.ஜி.ஆர். மிகவும் உறுதியுடன் இருந்தார். இரவு ஒன்பது மணிக்கு புறப்பட்ட ரயிலில் சத்தியபாமா அடுத்த நாள் மதியம் சம்பந்தி வீட்டுக்கு போய்ச் சேர்ந்தார். அந்த நேரம் தனது மருமகள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதையும் வைத்தியர்கள் வைத்தியம் செய்து பார்த்துக் கொண்டிருப்பதையும் சத்தியபாமா பார்த்து அதிர்ச்சியடைந்து கவலையுடன் காணப்பட்டார். சத்தியபாமாவை கண்ட தங்கமணி அரையும் குறையுமாக அங்கும் இங்கும் பார்த்து விட்டு ஏக்கத்துடன் தனது கணவர் வரவில்லையா? என்று மாமியாரிடம் கேட்டார். உடனே அவர் அதற்கு நாளைக்கு வருவான் என்று ஆறுதல் கூறினார். கடுமையான மூளைக் காய்ச்சலில் படுத்திருந்த தங்கமணிக்கு திடீரென்று பிரசவ வலி ஏற்பட்டதை அடுத்து வைத்தியர் பார்த்தபோது சற்று நேரத்தில் குழந்தை பிறந்து விடும் என்று சொல்லி வைத்தியத்தை தொடர்ந்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த சத்தியபாமாவுக்கு இந்த நேரத்தில் மகன் இல்லையே என்ற கவலை அதிகமாகி விட்டது. இருந்தாலும் ஐந்து பிள்ளைகளை பெற்றெடுத்த சத்தியபாமா மன தைரியத்துடன் நடப்பது நடக்கட்டும் என்று எல்லாம் அந்த மகா காளி கிருபை என்று நினைத்துக் கொண்டு தனது மருமகள் பிரசவ வேதனையால் துடித்துக் கொண்டிருப்பதை பார்த்துக் கொண்டும் அடுத்து மருமகளின் நிலைமை என்னவாகும்? என்பதை கூர்மையாக கவனித்துக் கொண்டும் இருந்தார். சிறிது நேரம் கழித்து எம்.ஜி.ஆர். தங்கமணி தம்பதியினருக்கு ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் குழந்தை உயிருடன் இல்லை. எப்படியோ கடுமையான மூளைக் காய்ச்சலில் இருந்த தங்கமணியின் வயிற்றுக்குள்ளே இருந்து குழந்தை வெளியே வந்தது போதும் என்ற நிலைதான் காணப்பட்டது. குழந்தையை பெற்றெடுத்த தங்கமணியின் உடல்நிலை முன்பு இருந்ததை விட மிகவும் மோசமான நிலையில் இருப்பதை வைத்தியர்கள் அறிந்து கொண்டனர். இதனை அறிந்த தங்கமணியின் தாய், தந்தையரும் மாமியாரும் பத்து மைல் தூரத்திலுள்ள கொல்லம்கோடு என்ற ஊரிலுள்ள மருத்துவமனைக்கு தங்கமணியை கொண்டு போக ஏற்பாடு செய்தார்கள். இம்முயற்சியானது சத்தியபாமாவின் தூண்டுதலின் பேரில் நடந்தது. இருந்தும் தங்கமணியின் நாடித்துடிப்பு மிகவும் மோசமான நிலையில் இருந்ததை வைத்தியர் அறிந்து கொண்டார். (தொடரும்)



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# சாய்ந்தமருதில் களிகம்பு பயிற்சிப் பட்டறை



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் சாய்ந்தமருது பிரதேச செயலகம் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் நடத்திய "களிகம்பு பயிற்சிப் பட்டறை" சாய்ந்தமருது கலாசார உத்தியோகத்தர் எஸ். சுரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்றது. சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பிரதம அதிதியாகவும் உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முஆபிகா கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில், சாய்ந்தமருது கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச்.சபீகா, மற்றும் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே.எம்.றிம்ஸான், பாண்டு (Band) வாத்தியக் குழுக்களின் பயிற்றுவிப்பாளர் எம்.ஐ.எம். அமீர், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.நௌஷாத், கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி சங்க செயலாளர் அஸ்வான் மௌலானா, சாய்ந்தமருது பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. சபானா உட்பட சாய்ந்தமருது முஹம்மதிய்யா கோலாட்ட குழுவின் ஸ்தாபத் தலைவரும் சிரேஷ்ட அண்ணாவியுமான எம்.ஐ.அலாவுதீன், திறமையை அரங்கேற்றிய மாணவர்களான என்.நப்ரின், ஜே.எம்.சாபித், ஏ.ஏ.நதீஸ், ஏ.ஜி.எம்.ஆஸிப், எம்.எப்.எம்.றிஷ்பத், ஏ.எம். ஜப்பார், ஆர்.எம்.ஆஸாத், ஜே.எம்.றிப்காஸ், ஏ.எம்.கிஸாம், என்.எம். இஷாம், எஸ்.எம். அஹ்ஸன், எஸ்.சாமில், ஆர்.எம்.சஹி உட்பட ஊடகவியலாளரும் கலைஞருமான எம்.எஸ்.எம்.ஸாகிர் ஆகிய பொல்லடிக் கலையைப் பயிலும் மாணவர்களுக்கு அவர்களது திறமைகளைப் பாராட்டி வழங்கிய சான்றிதழ்களோடு, படத்தில் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூலை மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.